UNIVERSAL
LIBRARY
OU_208073
UNIVERSAL
LIBRARY

# பதிப்புரை

பெண்கல்வி பெண்மானம் பெண்மதிமா லைகற்க
நண்ணுமொரு நாற்பொருளு நன்கு.

ஒரு நாடு உய்யவேண்டுமானால் அந்நாட்டின் மக்கள் கற்றல் கேட்டல் உடையவராய், உரனும் உழைப்பும் உதவியும் ஒற்றுமையும் உள்ளவராய், அறிவியல் துறையில் புதியது காணும் ஆரா வேட்கையராய் வாழ்தல் வேண்டும்.

இவ்வாழ்வு பெரும்பாலும் 'பெண்கல்வி' யையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. பெண்கள் அன்புநிறை தாயராய், ஆர்வநிறை பிறப்பினராய், நண்பு நிறை துணைவியராய், அறிவு ஆற்றல் அன்பு (ஞானம் கிரியை இச்சை) மூன்றையும் முற்றுவிக்கின்றனர். இவர்கள் கல்வி யுடையராய் இல்லாதவழி ஆடவர்கள் மேன்மை யுறுவது எங்ஙனம்?

நம் தமிழ் நாட்டில் பெண்பாலார் பெரும் புலமை வாய்ந்த திருவினராய்ப் பண்டு திகழ்ந்தனர். அவர்கள் பாடிய அருந்தமிழ்ச் செய்யுட்கள் தொகைநூற்கண் மிக்குக் காணலாம். அச் செய்யுட்கள் அவர்கள் இயல்பாகவே மக்களைக் கையகத் தேந்தி மகிழ்ந்து மகிழ்வுறுத்தும் பான்மைபோன்று மகிழ்வூட்டுவன. மேலும் தாய்மொழி என்று போற்றற்குரிய சீரும் சிறப்பும் வாய்ந்தது, அத் தாய்வழி வருகின்ற மொழியே யாம்.

இடைக்காலத்தில் பெண்கள் கல்வி முற்றும் தடைப்பட்டும், ஆண்கள் கல்வி அரைகுறை நிலையில் முடைப்பட்டும், வேற்றுமொழி மயக்கம் மிகைப்பட்டும் நாடு நலிவுற்றது. இந்நிலையில் தமிழ் நாட்டின் ஆக்கம் ஒன்றே கருதிச் சிறந்த செய்யுள் உரைநடை நூல்கள் பதின் மூன்றுக்குமேல் யாத்து வெளியிட்ட பெரும்புலவர், திரு. ச. வேதநாயகம் பிள்ளை யவர்களாவர்.

அவர்கள், 'பெண் கல்வி, பெண்மானம், பெண்மதி மாலை' என்னும் தலைப்பின்கீழ் பெண்களுக்கு வேண்டிய கல்வி யறிவு ஒழுக்கங்களும், அவர்கள் ஆடவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளும், ஆடவர்கள் அவர்களுக்குச் செய்ய வேண்டிய நன்றிகளும், உரைநடையாலும், இசைப்பாவாலும் நூற்றுக்கு மேற்பட்ட தலைப்புக்களில் நன்காய்ந்து அமைத்துள்ளார்கள். அவைகள் படிக்கப் படிக்க 'நவில்தொறும் நூல்நயம் போலும்' இன்பந் தருவன.

இனிமையும் எளிமையும் ஆற்றொழுக்கும் அமைந்த இந்நூலில் பிறமொழிச் சொற்கள் பெருவாரியாக இருந்தனவாகலின், இப்பதிப்பில் பிறமொழிச் சொற்களை நீக்கித் தமிழ்ச் சொற்களைப் பெய்து கருத்து மாறுபடாமலும் தமிழின் இயற்கையான இன்னோசை மிகுமாறும் செய்து மொழி நடை உயர்த்தப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். யாவரும் வாங்கிக் கற்றுக் கடைப்பிடித்து இன்புற்று எங்களை இத்தகைய செந்தமிழ்த் தொண்டில் ஊக்குமாறு வேண்டுகின்றோம்.

**சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

## AUTHOR'S PREFACE

### FIRST EDITION

At such a time as this when the necessity there is for educating the fair sex of our land, has been fully shown, when the natives of this presidency have been brought to feel the want of such education, when exertions are put forth in various quarters to establish schools for the education of females, and when the Government have made arrangements for establishing a female Normal School, with a view to educate them most effectually, indeed, no apology is needed to publish a book on the training and education of females.

This book consists of two parts, the first being advice to females, written in Tamil metre, on the manner of behaving themselves, with rules and principles to guide them, supplemented by four lyrics on the characteristics of a good wife as compared with those of a bad one, and on the necessity of educating females, and the manifold advantages arising from their education. The whole of this part, with the exception of the lyrics, was originally written for the use of the author's own daughters; and with a view that others also may be benefited by the study of it, he has thought it best to print it as a part of the work now presented to the public. This part is divided into

chapters treating of the following subjects: viz., Piety; Respect due to Priests; Honor due to Parents; Advice; Obedience to Husbands; Chastity; Training of Children; Benevolence; Wisdom; Sin; and good Works.

The second part contains an Essay on Female Education, in writing which, the author endeavoured to draw all illustrations from facts that Hindus are acquainted with, and to show the absurdities of their prejudices and objections in the most agreeable manner possible, without religious bias, and thus to adapt the Essay to the taste of Hindus in general without distinction of class or creed.

One of the crying evils of the land being the degradation to which females are subjected in their domestic and social life, the writer has dwelt at some length on this evil, and has endeavoured to convince the reader, by facts and illustrations, by a reference to the old shastras, &c., of the right that the softer sex of our land have to be treated by their husbands, &c., with greater kindness and regard than what, by the pernicious custom of this country, fall to their lot.

Should this humble production of the author in any way conduce towards raising the social condition of women of India, he will consider himself amply repaid.

MAYAVARAM
12th May, 1869.

S. VEDANAYAKAM PILLAY

*PREFACE TO*

## SECOND EDITION

---

In this edition the second part has been considerably enlarged and a third part on the Social Status of women, the respect due to them, and the manner in which they should be treated, has also been added to the book. The fact that Hindu women are treated almost like slaves by the generality of Hindu men and that they are not allowed either freedom of speech or freedom of action, has struck the author as such a great social evil, that he has added a separate Essay on the subject. The general tone and character of this part are in keeping with those of the second.

MAYAVARAM
1st October, 1870.

S. VEDANAYAKAM PILLAY.

---

# அறிஞர் கருத்துக்கள்

இனிய கவர்ச்சியான தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. புத்தகத்தின் பெயரைப் போலவே யாருடைய முன்னேற்றத்திற்காக எழுதப்பட்டதோ அப்பெண் மக்களுடைய சிந்தனையில் எளிதாகப் படும் வண்ணம் அமைந்துள்ளது. ஆசிரியரின் சொல்லோவியங்கள் இளம் பெண்களின் உள்ளங்களில் உணர்ச்சி யூட்டுவனவாயுள்ளன. அவர்கட்கு அறிவுரை கூறும் முறையானது அவர்களின் ஒழுக்கங்களைச் சீர்படுத்தி, அவர்கள் வாழ்க்கையைச சிறப்படையச் செய்யும்......கல்விப் பயிற்சியூட்டும் தன்மை நிறைந்து விளங்கும் இந்நூல் நல்லொழுக்கங்களின் தன்மைகள் படிய வேண்டிய இளம் பெண் குழந்தைகட்கு அவசியமானதென்பதை குழந்தைகள்பால் அன்புடைய பெற்றோர் யாவரும் கருதவேண்டியதாகும்.

'இந்து' 24-7-1912.

இந்தப் புத்தகங்களைப் படிப்பதால் உலக நடையையும், நல்ல குணங்களையும், நல்ல பழக்கத்தையும் யாவரும் அடையலா மென்று நான் சொல்வது மிகையாகாது.

டாக்டர் உ. வே. சாமிநாதையர்.



முனிசீப்

ச. வேதநாயகம் பிள்ளை அவர்கள்.

**1826—1889.**

# வேதநாயகம் பிள்ளை வரலாறு.

## பிறப்பு

செந்தமிழ் நாடும், பைந்தமிழ் மொழியும், நந்தம் நனி நாகரிகமும் சீரும் சிறப்பும் பெற்று முந்துநிலை எய்த அருளால் வந்து தோன்றிய மாபெரும் புலவர்கள் பலர். அவர்களுள் இப்பெரியாரும் ஒருவர்.

இவர் பிறந்த திருவூர் திருச்சிராப்பள்ளிக்கு அண்மையி லுள்ள குளத்தூர். அங்கு வேளாண் வாழ்க்கையும், தாளாண்மையும், நற்குடிப்பிறப்பும், பழியஞ்சிப் பாத்துண்டலும், வடுவஞ்சி வாய்மொழிதலும், நடுநிலை கோடாமையும், அன்பும் அறனும், இன்பு மீகையும் ஒருங்கமைந்த சவரிமுத்துப்பிள்ளை யென்னும் தக்கார் ஒருவர்க்கும், அவர்தம் கற்பிற் சிறந்த வளத்தக்க வாழ்க்கைத்துணையும், மனைமாண்பும், சோர்வின்மையும், தெய்வ நாட்டமும் வாய்ந்த ஆரோக்கிய மரியம்மாள் என்பவருக்கும் தவப் பேற்றால் உலகுய்ய அருளால் ஓர் ஆண்மகவு தோன்றிற்று. அம்மகவுதான் நம் அருமை வேதநாயகம்பிள்ளை யென்னும் செம்புலச் செல்வர். அவர் தோன்றிய நன்னாள் ஆயிரத்து எண்ணூற்றிருபத்தாறும் ஆண்டு அக்டோபர் பதினொன்காம் நாள்.

## கல்வி

இவர்கள் முன்னோர் கிறித்துவ நெறியைப் பின் பற்றுபவர்கள். ஆயினும், நம் பிள்ளையவர்கள் நெறிப்

பிணக்கின்றி, 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் திருமுறைக் கிணங்கப் பொதுநோக்கு மிக்குடையவர். பழம்பிறப்பின் தொடர்ச்சியால் தம் பதினென் றும் அகவைக்குள் தமிழ்நூற்கள் பெரும்பான்மையும் கற்று வல்லாராயினர்.

இஃது, "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்னும் பொதுமறை அருண்மொழியை விளங்கச் செய்கின்றது. பின் ஆங்கிலங் கற்க அளவிறந்த அவாக் கொண்டனர்.

அஞ்ஞான்று ஆங்கிலம் எல்லா ஊர்களிலும் பள்ளிகளமைத்து மிக்குப் பயிற்றுவிக்கவில்லை. ஆங்கிலம் கற்றார் தொகையும் மிகக் குறைவு. அப்படி யிருந்தும் வழக்கு மன்ற மொழிபெயர்ப்பாளர் திரு. தியாகப்பிள்ளை என்பவர்களிடம் ஆங்கிலம் முறையாகக் கற்றுத் தேர்ந்தார். திரு. தியாகப்பிள்ளை யவர்கள் தமிழிலும் வல்லவராக இருந்தமையால், மற்றும் பல தமிழ் நூல்களும் கற்றுத் தேர்ந்தார்.

அலுவல்

பிள்ளையவர்களின் நற்பண்பும், நுண்மாண் நுழைபுலமும், விடாமுயற்சியும், முறையறிந்து ஒழுகும் திறமையும், 'நகையீகை இன்சொல் இகழாமை' முதலிய சீலமும், பணிவும் இன்சொல்லும், வாய்மையும், தூய்மையும், உலகின ருள்ளத்தைக் கொள்ளைகொண்டன. அவ்வாறே அரசினர் மனத்தையும் கவர்ந்தன. அதனால், அரசினர் திருச்சிராப்பள்ளி வழக்குமன்றம் ஒன்றில் கஅசஅ-ஆம் ஆண்டில் பதிவுப் பொறுப்பாளர் (Record Keeper) என்

னும் அலுவலில் அமர்த்தினர். அவ்வேலையைத் திறம்பட இரண்டாண்டுகள் செய்துவந்தனர். பின் மொழிபெயர்ப் பாளராம் விழுமியநிலை எய்தினர். கஅ௫௭-ஆம் ஆண்டில் தரங்கம்பாடியில் முறைமன்றத்தலைவர் (முன்சிப்) என்னும் நிறைபெறுநிலை எய்தினர். அவ்வேலையை நடுநிலை பிறழா நயத்துடன் உரைமுடிவு கண்டு ஊரும் உலகமும் ஒப்ப வழக்காளர் உளமும் நிறைய முறைசெய்துவருவாராயினர். அங்குநின்றும் சீகாழிக்கு மாற்றப்பெற்றனர்.

## நல்லார் நட்பு

அப்பொழுது இயற்றமிழ் வல்லராய்ச், செந்நாப்புல வராய், நூலாசிரியராய், உளங்கொள நுவலும் ஆசிரிய ராய்ப், பாவன்மையும் நாவன்மையும் ஒருங்கமைந்தவ ராய்க், காட்சிக்கெளிமையும் கடுஞ்சொலின்மையும், கைம் மாறுகருதாச் செம்மையும், தோலாநாவின் மேலாம் பண்பும் வாய்ந்தவராய்ச் செம்பொருட்டுணிவும், சிவநெறி மாண்பும் தம்பெரும் தவமாக் கொண்டொழுகும் சீலராய், மாணுக்கர்களுக்கு உண்டி யுறையுள் உடையும் நல்கிக் கற்பிக்கு நடையினராய்த் திகழ்ந்த மாபெரும்புலவர் "திருசிரபுரம் மகாவித்துவான் திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சீகாழிக்கு எழுந்தருளினர். இருவரும் பொருவரிய நண்பராயினர்.

## நீதி நூல் வெளியிடல்

வேதநாயகம்பிள்ளையவர்கள் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களுடன் 'உணர்ச்சியொத்த' நண்பினராயினமையின், பிள்ளையவர்களைக்கொண்டு சீகாழிக்கு ஒரு கோவை பாடு வித்தனர். அக்கோவைநூல் மிக்கார் கூடிய அவைக்கண் கஅ௫அ-ஆம் ஆண்டில் அரங்கேற்றமும் செய்யப்பட்டது.

வேதநாயகம்பிள்ளையவர்கள் தாம் பாடிய எளிமையும் தெளிவும், இனிமையும், செறிவும், அறிவும், திட்ப நுட்பமும் ஒருங்கு திகழும் 'நீதிநூலை'ப் பிள்ளையவர்களைக் கொண்டு பார்வையிடச் செய்து, அவர்கள் சாற்றுக் கவியுடன் அரங்கேற்றுவித்தனர்.

## சோறு வழங்கல்

பின்பு, திருமயிலாடுதுறை யென்னும் மாயூரத்துக்கு மாற்றப்பட்டனர். அங்கு அமர்ந்திருக்கும் நாளில் கொடிய வற்கடம் வந்தது. வற்கடமாகிய பஞ்சத்தால் மக்கள் உணவின்றி மாண்டனர். அருளுடையார் உள்ளம் மக்கள் உணவின்றி மாள்வதைக் கண்டு வாளாவிராது; மக்களுக்கு எந்த வகையிலும் உணவளித்து மாளாது வாழவைக்க வேண்டுமென்றே துணியும். அம்முறையில் வேதநாயகம் பிள்ளையவர்களும் பெருமுயற்சி செய்து, 'சொல்லாற் சாற்றிச் சோறு' வழங்கி மக்களை உய்வித்தனர். இச் செயல் திருவீழிமிழலையில் அரசும் பிள்ளையாரும் ஆண்டவன் அருளிய படிக்காசால் பஞ்சகாலத்து உணவூட்டி மக்களை உய்வித்த திருவருட் செயலை நினைவூட்டும்.

## பெண்மதிமாலை வெளியிடல்

அகத்து வாழ் பெண்கள் அறிவு நிரம்பியவர்களாக இருந்தாலன்றிப் புறத்துச் செல்லும் ஆடவர்கள் புலமையும் ஆண்மையும் பொருளீட்டலும் அருள்கூட்டலும் நாடும் மொழியும் பீடுற வோங்கப் பாடுபடலும் பிறவும் வாய்ந்து திகழமுடியாதென்பது ஒருதலை. பட்டறை வாய்த்தாலன்றிப் பணி வாயாதல்லவா? துணை வாய்த்தாலன்றிச் சிறப்பு அணையாதல்லவா?

அதனால், பெண்கள் கற்று அகக்கண்கள் உடையராய்த் திகழவேண்டு மென்னும் சீரிய நன்னோக்கம் கொண்டு 'பெண்மதிமாலை' யென்னும் நூலொன்று "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக" இயற்றி, கஅகூகூ-ஆம் ஆண்டில் வெளியிட்டனர். அதன்பின்னரே பெண்ணுலகம் விழித்தெழுந்து நண்ணுங் கல்வி கற்று நலமுற்றது.

## பிரதாப முதலியார் சரித்திரம்

கஅஎகூ-ஆம் ஆண்டில் கற்பனை நுட்பங்கள் பொற்புற அமைய, உலகியல் முறைகள் உள்ளங்கை நெல்லியென நிலவ, அறிவு ஆண்மை முறைமை உதவி செய்நன்றியறிதல் வறுமையிற் செம்மை கற்பு முதலிய பலவும் திகழ, கிளைக்கதைகள் பல செறிய, இன்சுவை நடைத்தாய்ப் பிரதாபமுதலியார் என்னும் பெயர் பொறித்துக் கதைநூல் ஒன்று வெளிப்படுத்தினர். அந்நூல் அனைவர்களாலும் எந்நாளும் போற்றப்பட்டுவருகின்றது. இதன் சிறப்புணர்ந்த பலர் வேண்டுகோளின்படி இதனை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளார்.

## தக்காரினத்தராதல்

மாபெரும் புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் சுப்பிரமணிய தேசிகர், சி. வை. தாமோதரம் பிள்ளை, கோபாலகிருட்டின பாரதியார், சென்னைச் சுப்பராயச் செட்டியார், புதுவை வித்துவான் சவரி ராயலு நாயகர் முதலிய தவலருந் தொல்கேள்வித் தன்மையுடைய தக்காரினத்தராய்த் தாம் ஒழுகினர். இக்காலத்தே மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் வேதநாயகம் பிள்ளையவர்கள்மீது குளத்தூர்க் கோவை என்னும் ஒரு நூல் பாடி நல்கினர்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்த பின்னர், அவர்கள் குடும்பத்தார் வறுமையுற்று வாடி நலிந்தமை கண்டு மனம்பொறாராய்த் திருவாவடு துறை ஆதீனத் தலைவர் அவர்கள் அருட்கொடையால் அவ் வறுமையைப் போக்கி நலமுற்று வாழ வழிசெய் தனர்.

## வேலைவிடுதியும் பொதுநலப்பணியும்

கஅஎ௨-ஆம் ஆண்டில் வேலைவிடுதி பெற்றுப் பொதுநலப் பணியில் ஈடுபாடுற்றுத் தம்மிழப்பாய்த் தொண்டு பல புரிந்தனர். மாயூரம் நகராண்மைக் கழகத் தலைவராய் அமர்ந்து செயற்கருஞ் செயல் பல புரிந்த னர்.

## பேராவியறகை பேறுதல்

கஅஅகூ-ஆம் ஆண்டு, ஜூலைத்திங்கள் ௨க-ஆம் நாள் இரவு இறுதிக்காலத்து எய்தும் அலமரல் ஏதுமின்றி, இறை நினைவுடன் இவ்வுலக வாழ்வை நீத்துச் செம்பொரு ளின் திருவடியிணையைச் சேர்ந் தின்புற்றார்.

மாணவர் நண்பர் புலவர் உலகோர் அனைவரும் சொல்லொணக் கையறுநிலை எய்திப் பாவாலும் நாவா லும் பாடி யுரைத்து வருந்தினர். பின்பு பிள்ளையவர் களின் ஆருயிர் இன்புற எண்ணி இறைவனை வழுத்தி அமைந்தனர்.

## இயற்றிய நூல்கள்

இவர் இயற்றிய நூல்கள்: க. நீதிநூல் ௨. பெண் மதிமாலை ௩. பிரதாப முதலியார் சரித்திரம் ௪. சுகுண

சுந்தரி சரித்திரம் ரு. தேவமாதா அந்தாதி சு. திரு வருள் அந்தாதி எ. திருவருள்மாலை அ. சத்தியவேதக் கீர்த்தனை சு. சருவசமய சமரசக் கீர்த்தனை க0. தேவ தோத்திரமாலை கக. சித்தாந்த சங்கிரகம் கஉ. பெரிய நாயகி அம்மன் பதிகம் கங. பொம்மைக் கலியாணம் எனப் பதின்மூன் றென்ப.

இவையன்றியும் காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ற வாறு அவ்வப்பொழுது ஆக்கிய அளவில்லாத சுவைமிக்க தனிப்பாடல்களும் சிறு சிறு நூற்களும் பலவாம்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| க. | வேதநாயகம் பிள்ளை வரலாறு | 1 |
| உ. | பெண் கல்வி | கூ |
| ரு. | பெண் மானம் | கஉரு |
| ச. | பெண்மதி மாலை | கஙச |

# பெண் கல்வி

## கல்வியறிவின் இன்றியமையாமை

இந்திய நாட்டுப் பெண்கள் கல்வி யில்லாமையினால் அறியாமை இருளில் ஆழ்ந்திருக்கிறார்க ளென்பது யாவருக்கும் தெரிந்த செய்தியாயிருக்கின்றது. பெண்களுக்குக் கல்வி கட்டாய மென்பதைச் சிலர் ஒப்புக்கொண்டாலும், பெண்கள் பலர் படித்து என்ன அலுவல் செய்யப் போகிறார்களென்றும், அவர்கள் படித்தால், ஆடவர்களுக் கடங்கி நடவாமல் கல்விச் செருக்கினால் கெட்டுப்போவார்களென்றும், வீணாக மறுக்கிறார்கள். தெய்வ அன்பும் நல்லறிவும் நற்குணங்களும் உண்டாவதற்காகக் கல்வி கற்பதேயல்லாது அலுவல் பார்ப்பதற்காகவோ? நெல்லுக் கிறைக்கிற தண்ணீர் புல் முதலிய பூண்டுகளுக்கும் பயன்படுவது போலவும், குடிப்பதற்காக வெட்டுகிற குளம் குளித்தல் முதலியவற்றிற்கும் உதவுகிறதுபோலவும், பழத்துக்காக வைக்கும் மரம் நிழல் முதலியவற்றிற்கும் பயன்படுவது போலவும், அறிவின் வளர்ச்சிக்காகப் படிக்கப்படுங் கல்வி அலுவல் முதலியவற்றிற்கும் காரணமாகிறதே தவிரப் படிப்பதற்கு அலுவல் மட்டுங் காரணமென்று சொல்வது குல்லாவுக்குத் தலையேயல்லாமல் தலைக்காகக் குல்லா இல்லை யென்று சொல்வதுபோ லிருக்கின்றது.

உடலுக்கு உணவு எப்படியோ, அப்படியே கல்வியானது அறிவுக்கு மிகவும் இன்றியமையாததா யிருக்கின்

றது. நாளுக்கு நாள் வளர்கின்ற உடலைக் கடவுள் நமக்குக் கொடுத்திருந்தாலும் அதற்குத் தகுந்த உணவுகளைக் கொடுத்து நலனுக்கடுத்த செயல்களை யெல்லாம் நாமே தேடிக்கொள்ளாவிட்டால், எப்படி உடல் வளரமாட்டாதோ அப்படியே, கடவுள் அறியுயிராகப் படைத்திருந்தாலும், நம்முடைய இயற்கையறிவு எவ்வளவும் போதாமலிருப்பதால் கல்வி என்கிற உணவைக் கொடுத்து அறிவை வளரச் செய்யவேண்டியது நம்முடைய கடமையாயிருக்கின்றது.

'செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்' குறள்-௪௧௨

என்று திருவள்ளுவ நாயனாருஞ் சொல்லியிருக்கிறார்.

## உள்ளத்தின் இயல்பு

நம்முடைய மனம் எப்படிப்பட்டதென்றால், ஒரு கணப்பொழுதாயினும் சும்மாவிராமல் மண்ணுலகம் விண்ணுலகம் முழுவதும் சுற்றிக்கொண்டிருக்கின்றது. நாம் சும்மாவிருந்தாலும், வேலைசெய்தாலும், படுத்திருந்தாலும், உறங்கினாலும மனத்தினுடைய அலைச்சலுக்கு எப்போதும் ஓய்வில்லை. தனக்குக் களைப்புமில்லை, இளைப்புமில்லை என்னும் தன்மையது. இப்படிப்பட்ட மனத்திற்குக் கல்வியென்கிற துணைவ னில்லாவிட்டால், கடிவாளமில்லாத குதிரைபோலவும், கண்டபடி திரியுங் குரங்குபோலவும், கரைகடந்த வெள்ளம் போலவும், கட்டுக்கடங்காக் காளை போலவும், அது நாடெல்லாந் திரிந்து நம்மைக் கெட்ட குணமாகிய காட்டிலும் மேட்டிலும், கல்லிலும், முள்ளிலும், இழுத்து முடிவில் அளறு என்கிற கீழுலகத்தில் தள்ளிவிடுமென்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை. இந்தக் காரணத்தைப்பற்றியே ஆண்பிள்ளைகள் அலுவல் பார்க்க விரும்பி

றாலும் விரும்பாவிட்டாலும், அவர்களுக்குப் படிப்பிப்பது வழக்கமாயிருக்கின்றது.

## நல்லொழுக்கத்திற்குக் கல்வியறிவே காரணம்.

பெண்களுடைய மனமும், ஆண்களுடைய மனமும் ஒரே தன்மையாயிருப்பதால், பெண்களுக்குமட்டும் கல்வியைப் போதியாவிட்டால், அவர்களுடைய உள்ளம் எப்படி நல்வழியிலே நிலைகொள்ளும்? 'காசுக்கொரு குதிரையும் வேண்டும்; காற்றைப் போலப் பறக்கவும் வேண்டும்' என்பதுபோலவும், 'புல்லுண்ணாத பசுவும் வேண்டும்; பூரணமாகக் கறக்கவும் வேண்டும்,' என்பதுபோலவும், பெண்கள் படிக்காதவர்களா யிருக்கவும் வேண்டும்; நல்லவர்களாய் நடக்கவும் வேண்டும் என்றால், எப்படி நம்முடைய மனப்போக்கு நிறைவேறும்? மாவுக்கும் ஆசை, பணியாரத்துக்கும் ஆசையா?

## கற்றவர்களும் கல்லாதவர்களும்

'விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்' குறல்-சகo

'மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் எவ்வளவு வேறுபாடோ, அவ்வளவு வேறுபாடுண்டு, கற்றவர்க்குங் கல்லாதவர்க்கும்' என்று திருவள்ளுவநாயனார்சொல்லியதுபோல் ஆண்பிள்ளைகளுக்குள் படித்தவனுக்கும் படியாதவனுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் நாள்தோறும் காண்கிறோம். படித்தவன் கூடியவரையில் தன்னுடைய படிப்புக்குத் தகுந்த அறிவும் நல்லொழுக்கமும் ஒருவிதமான பெருமையமைந்த வாழ்க்கை நடத்தத் தகுந்த திறமையும் உள்ளவனாயிருக்கிறான். படியாதவனோ என்றால், பரமசுண்டனாய் மாடு மேய்க்கவும், விறகு தூக்கவும், மண்

கல் முதலியவைகளை வெட்டிச் சுமக்கவும், மற்றும் பல கடினமான வேலைகள் செய்யவுமே பயன்படுகிறான். மேலும், கொலை, களவு, கன்னம், பெருங்கொள்ளை முதலான குற்றங்களைச் செய்கிறவர்களெல்லாரும் படியாதவர்களே அன்றிப் படித்தவர்கள் அந்தக் குற்றங்களில் ஏதேனும் ஒன்றைச் செய்வது மிகவும் அரிது. ஆடவர்களுக்குள் கற்றவனுக்கும் கல்லாதவனுக்கும் எணிவைத்துப் பார்க்கும்படியான இவ்வளவு ஏற்றத்தாழ்வான மாறுபாடுக ளிருக்கும்போது, பெண்களுக்கு மட்டும் படியாமலே எல்லா நல்லியல்புகளும் உண்டாகுமென்று நினைப்பது வீணே. படியாத மாதர்கள் ஏதோ கடவுளுடைய அருளால் இவ்வளவாவது நல்லவர்களாயிருப்பதற்கு நாம் வியப்படைய வேண்டியதைவிட்டு அவர்களில் சிலர் தீக்குண முள்ளவர்களாயிருப்பதற்கு வியப்படைய இடமே இல்லை. கல்லாத மாதர்கள் அறிவுடையவர்களாயிருப்பது எவ்வளவு வியப்பென்றால், முடவர்கள் ஆடவும், குருடர்கள் அந்த ஆட்டத்தைப் பார்த்து மகிழவும், ஊமைகள் பாடவும், செவிடர்கள் அந்தப் பாட்டைக் கேட்டு மகிழவுங் கண்டால், எவ்வளவு வியப்போ அவ்வளவு வியப்புத்தான்.

பெண்கள் கல்வி கற்பதனால், அவர்களுக்குக் கற்புடைமை முதலிய நற்குணங்களும் மிகுதியாகிக் கணவன் மேல் உண்மையான அன்பும் காதலும் உண்டாகுமேதவிர, அவர்கள் ஒருநாளும் கணவனுக்குத் தீமை செய்பவர்களாக மாட்டார்கள். நாம் இப்படிச் சொல்வது உண்மை என்பதற்கு எல்லாக் கல்வியும் உணர்ந்து கணவர்கள் மேல் மாறாத அன்பும் காதலு முள்ள ஐரோப்பிய மாதர்கள் சான்றுகளா யிருக்கிறார்கள். ஆடவர்களில்

சிலருக்கே கல்வி கற்றும் நற்குண முண்டாகாமல் இருப்பது போல், மாதர்களிலும் சிலர் கல்வியைக் கற்றும் பயனடையாமற் போனாலும் போகலாம். அந்தக் காரணத்தைக் கொண்டு மாதர்களுக்குப் படிப்பிக்கக் கூடாதென்று சொல்வது முற்றும் பொருத்தமில்லாததா யிருக்கிறது.

ஒருவன் தன் மனைவிக்குக் கண்ணிருந்தால் பிற ஆடவர்களைப் பார்ப்பாளென்று எண்ணிக் கண்ணில்லாத குருடியைத் திருமணம் செய்துகொள்ள உடன்படுவானா? சில சமயங்களில் பிள்ளைக்குத் தாய்ப்பால் கொடுக்கும் போது பால் புரையேறிப் பிள்ளை இறந்துபோவதினால் பிள்ளைக்குப் பால் கொடுக்கக்கூடாதென்று சொல்லலாமா? எல்லா உயிர்த்தொகைகளுக்கும் உயிர்ப்பற்றுக்கோடா யிருக்கும் மழை, வெயில், காற்று முதலியவைகள் சில சமயங்களில் சிலருக்கு அழிவை உண்டுபண்ணுவதினால், மழை, வெயில், காற்று முதலியவைகள் வேண்டாவென்று விலக்கலாமா? அப்படியே கல்விப் பயிற்சியினால் ஆயிரத்திலொரு பெண் ஆணவங்கொண்டு கெட்டுப்போனாலும், அதனால் மற்ற மாதர்களையும் படிக்கக்கூடாதென்று விலக்குவது ஏற்றதன்று. நண்பகல் வெயில் மஞ்சள் நிறமாகத் தோன்றுவது, காமாலைக் கண்ணின் குற்றமேயல்லாது, வெய்யிலின் குற்றம் அன்று. சர்க்கரை கசப்பது வாய்க் குற்றமே அல்லது, சர்க்கரையின் குற்றமில்லையே. குறுணி மையிட்டாலும் குருட்டுக்கண் நல்ல கண்ணாகாததுபோல், சிலர் படித்திருந்துந் திருந்தாமலிருப்பது இயற்கைத்தீக் குணமே தவிரக் கல்வியால் வந்த குற்றமென்று சொல்வது பொருந்தாது.

"பொருந்துறாற் கலைதெரி பூவை கற்பது
திருந்தியே மிகுமலாற் றேய்ந்து போமெனல்
வருந்திடா துயர்தரு மருந்தை மானுடர்
அருந்திடிற் சாவரென் றறைத லொக்குமே." (3)

நல்ல கல்வியை உணருகிற பெண்ணினுடைய கற்பானது திருந்தி வளருமல்லாது, கெட்டுப்போமென்று சொல்வது சாவும் உயிரை நீடித்திருக்கச்செய்யும் தேவாமிர்தத்தை மனிதர்கள் புசித்தால், இறந்துபோவார்களென்று சொல்வதற்குச் சமானமென்று நீதிநூல் மாதரைப் படிப்பித்தலென்னும் அதிகாரத்திற் சொல்லப்படுகிறது.

## கடவுளை உணர்தற்குக் கல்வி வேண்டும்

எல்லாவுலகங்களின் தலைவரும், எல்லாவுயிர்களிடத்தும் இரக்கமுடையவரும், எல்லாவுயிர்களினும் நிறைந்தவரும், எல்லா அறிவு முடையவரும், அறவடிவினரும், பேரண்டங்கள் எல்லாவற்றின் பெருந்தலைவரும் முதல் முடிவு இல்லாதவரும், மனமொழிகளுக்கு எட்டாதவரும், ஐம்பொறிகட்கும் அப்பாற்பட்டவரும், தேவர் முதலானவர்கட்குத் தலைவரும், கோடி ஞாயிற்றின் ஒளியையுடையவரும், எல்லா முதற்பொருள்களுக்கும் முதற்பொருளானவரும், ஞாயிற்றிற்கு ஞாயிறும், உடலுக்கு உடலும், உயிருக்குயிருமாய் இந்த உலகத்தைப்போன்ற கணக்கற்ற கோடி உலகங்களையும் கணக்கற்ற கோடி ஞாயிறு திங்கள் விண்மீன்களையும் உண்டு பண்ணி அவைகளைப் பற்றுக்கோடில்லாமல் இடைவெளியில் நிறுத்திக் காப்பவரும், கற்பகோடி காலங்களை ஒரு நொடியாகக் கழிக்கிறவரும், இன்னும் எவ்வித மறுவுந் தொடர்பு மற்ற மாபெரும்

பொருளுமாகிய கடவுளைக் கல்வியறிவினால் அறியலாமே யன்றி மற்றெதனாலும் அறிய இயலாது.

நம்மை அறியுயிராகப் படைத்து, நமக்காக அடிப் படை தூண் சுவர் முதலியவைகளில்லாமலே நிலமாகிய பெரிய அரண்மனையைக் கட்டி, விண்மண்டபம் வளைத்து, உடுக்களாகிய முத்து மேற்கட்டி தூக்கி, செப்பும் நெய் யும் திரியும் தூண்டுகோலுமில்லாத ஞாயிறு திங்கள் முத லிய விளக்குகளை யேற்றி, புல் பூண்டு முதலிய பச்சை மணிக் கம்பளங்களைக் கீழே விரித்து, பொன் கொடி களாலும் ஒன்பதுவகை மணிகளாலும் பலவகை வேடிக் கையழகுகள் அமைந்த ஓவிய மண்டபத்தை அழகு செய்து, இனிமையான பழவகைகளும் நறுமணமலர் களும் நிறைந்த தோட்டங்களையும் மலைகளாகிய அழகிய அரியணைகளையும் அழகிய பொழில்களையும் ஆறு, ஏரி, குளமுதலிய நீராடு துறைகளையும், தாமரைத் தடாகங்களையும், யானை, குதிரை, ஏறு முதலிய ஊர்தி களையும் கொடுத்துக் கடல்களும், முகில்களுமாகிய இன் னிசைக்காரர்களையும், அன்னம் மயில் முதலிய நாடக சாலைப் பெண்களையும், குயில் நாகணவாய் முதலிய பற வைகளாகிய இன்னிசைப் புலவர்களையும், முகிற்குடங் களால் நீரிறைக்கிற வானமங்கையையும், காற்றாகிய ஆல வட்டக்காரனையும், தீயாகிய அடுக்களைக்காரனையும், ஊதியமில்லாத ஊழியக்காரர்களாக ஏற்படுத்திப் பின் னும் எண்ணிமுடியாத நன்மைகளையும் இன்பப்பேறு களையும், நமக்குத் தந்தருளிய மேலான அருள் வடிவக் கடவுளை, தயாள மூர்த்தியைக் கற்றறிந்த மெய்யறிவாளர் கள் உணர்வார்களேயன்றி, கற்றறியாத அறிவற்றமக்கள் எப்படி உணர்வார்கள்?

சிலநூல் வானநூல் முதலிய நூல்களைப் படியா விட்டால், கடவுளுடைய பெருமையும், முழு ஆற்றலும் கீர்த்திப் பெருமையும், மாதர்களுக்கு எப்படி விளங்கும்? கடவுளினுடைய பெருமையை அறியாத மாதர்களுக்கு அவர் மேல் எப்படி அன்புண்டாகும்? எழுத்து வடிவமாயிருக்கிற மறைமுறைகளையும், அறநூல்களையும் படித்தறியாத பெண்கள் எப்படி நல்வழியில் நடக்கக்கூடும்? கோவிலில் தான் தெய்வம் உண்டென்றும், கோவிலிலிருக்கிற உருவங்களைத் தவிர, வேறே தெய்வமில்லையென்றும், நினைக்கிற பொதுமாதர்கள் மேற்படி உருவங்களில்லாத வீடுகளில் தீமைகளைச் செய்ய அஞ்சுவார்களா?

## உண்மையறிவுக்குக் கல்வியறிவு வேண்டும்

மாதர்கள் படியாவிட்டால், யானையையும் மலையையும் பார்த்த குருடர் கதையாகவல்லவோ முடியும். அக்கதைகள் வருமாறு :—

சில குருடர்கள் யானையை அறிந்துகொள்ள அவாக்கொண்டு, யானைக்காரனுடைய கட்டளையால் யானையைக் கைகளால் தடவிப் பார்த்தார்களாம். வாலைத்தடவி அறிந்தவன், யானை விளக்குமாறுபோ லிருக்கிறதென்றும், காலைத் தடவி அறிந்தவன், யானை உரல்போ லிருக்கிறதென்றும், காதைத்தடவி அறிந்தவன், யானை முறம்போ லிருக்கிறதென்றும், துதிக்கையைத் தடவி அறிந்தவன், யானை உலக்கைபோ லிருக்கிறதென்றும், தங்களில் சொற்போர் செய்துகொண்டார்களாம்.

ஒரு குருடன் மலையைப் பார்க்க விருப்பங்கொண்டு மலைக்குப் போகிறவர்களைத் தொடர்ந்துபோய்த் தன் கை யெட்டினவரையில் மலையைத் தடவிப்பார்த்துத் தன் கை

யெட்டின உயரந்தான் மலையென்று சாதித்தாளும். அப்படியே கல்லாத பெண்களுக்குக் கடவுள் உறுதியும் பேரறிவும் உண்டாவது கடினமன்றோ?

கடவுளினுடைய மேலான வடிவத்தைக் குறித்தும் மறை முடிவு நூற்செய்திகளைக் குறித்தும் கல்லாத பெண்களுக்கு எவ்வளவுதான் கற்பித்தாலும் செவிடன் காதில் சங்கை ஊதினதுபோலவும், குருடனுக்குமுன் பந்தத்தைப் பிடித்ததுபோலவும், கல்லில் மழை பெய்தது போலவும், காட்டுக் கெறித்த நிலவு போலவும், அக்கற்பிப்பு வீணகப் போவதேயொழியப் பயன் பெற மாட்டாது.

குருமார் முதலானோர் சொல்லுகிற பொதுவான சொற்பொழிவுகளுக்குக்கூடக் கல்லாத மாதர்கள் பொருள் கண்டுபிடிப்பது வருத்தமாயிருக்கிறது. அவர்கள் செய்கிற பொருள்களெல்லாம் மாறுபாடான வேறு பொருள்களே. அவர்களுக்குப் பெரியவர்கள் சொல்லும் அறிவுப் பொருளோ தாலாட்டாக முடிகிறது. எப்படி என்றால், குருமார் முதலானோர் சொற்பொழிவு தொடங்கியவுடனே கல்லாத மாதர்கள் அச்சொற்பொழிவின் பொருளை அறிந்துகொள்ளக் கூடாமையால் மனஞ் சோம்பித் தூங்கிவிழத் தொடங்குகிறார்கள். தாலாட்டு முடிந்தவுடனே பிள்ளைகள் விழித்துக்கொள்வதுபோல, சொற்பொழிவு முடிந்தவுடனே மாதர்களுடைய உறக்கமும் முடிந்து விழித்துக்கொள்ளுகிறார்கள். கல்லாத மாதர்கள் வீண்பயன் ஒன்றைத்தானே, கேள்வியின் பயனையு மிழந்து இரண்டுங் கெட்டவர்களாய்ப் போகிறார்கள். ஆடவர்களே! மாதர்கள் இப்பேர்ப்பட்ட நிலைமையிலிருப்பதுதானு உங்களுக்கு மகிழ்ச்சி?

## கல்வியே பெண்வடிவம்

கல்விக்குத் தெய்வமாகிய கலைமகளே பெண்ணென்று சொல்லுகிற இந்த நாட்டார்கள் பெண் வடிவமாயிருக்கிற கல்வியைப் பெண்கள் படிக்கக்கூடாதென்று சொல்வது முன்னுக்குப்பின் முரணாகவிருக்கிறதே. ஆடவர்களுடைய நாக்குகளிலே இருக்கிறதென்றும், தன்னைப்போன்ற மாதர்களுடைய நாக்குகளில் நுழைகிறதில்லையென்றும் கலைமகள் உறுதிகொள்ளாமலிருக்கப், பெண்கள் கல்வி கற்றால் குற்றமென்ன?

## புலவர்கள் அறிவே நூல்

உலகத்திலிருந்த பல கல்விமான்கள், பல பல காலங்களில் பல செய்திகளைப்பற்றி அவர்களுடைய வாணாளெலாம் செலவழித்து நூல்வடிவாகச் செய்திருக்கிற செய்திகளே கல்வியென்று சொல்லப்படுகின்றன. அந்த நூல்களைப் படிக்கிறவர்கள் அத்தனை புலவர்களுடைய அறிவையும் மெய்யுணர்வையும் எளிதாகப் பற்றிக்கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்ட மேலானபயனை ஆடவர்கள் மட்டும் அடைவதுதான் முறையோ? பெண்களையும் அடையச் செய்வது முறையன்றோ? இஃதென்ன ஒழுங்கற்ற முறைமை?

## காலத்திற்குத் தக்கபடி பழக்க வழக்கங்கள் மாறுகின்றன.

பெண்கள் படிப்பது முற்காலத்துப் பழக்க வழக்கமன்று என்பதாகச் சிலர் இழிந்த சொற்போர் செய்கிறார்கள். பாட்டனும் தகப்பனும் படியாத அறிவிலிகளாயிருந்தால், பிள்ளையும் அறிவிலியாய் இருக்க வேண்டுமா? தகப்பன் அலுவல் பார்க்காமல் இருந்தால், பிள்ளையும் அலுவல் பார்க்கக்கூடாதா? பார்ப்பனர்கள் மறை ஓதுதலை

யன்றி மற்றொரு தொழிலும் செய்யக்கூடாதென்றும், அப்படியே மற்றைக் குலத்தார்களும் தங்கள் தங்களுக் குரிய தொழில்களைச் செய்யவேண்டு மென்றும், மனு நீதியிற் சொல்லப்பட்டிருக்க, இப்போது பார்ப்பனர்கள் மறையைப் பொருட்படுத்தாமல் விட்டு விட்டு, மற்றைக் குலத்தார்களுடைய தொழில்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு செய்யவில்லையா? மறையோதுதலுக்கு மாறாக வழக்குமுறை நூல் ஓதுதலும், மறையியல் நெறி வாழ்க் கைக்குப் பதிலாக உலகியல்நெறி வாழ்க்கையையுஞ் செய் கிறார்களே! கலப்பை என்னும் கருவியைக் கொண்டு நிலத்தை உழுது உழவுத் தொழில் செய்யவேண்டிய வேளாளர் இறகென்கிற கருவியைக் கொண்டு கடிதமாகிய நிலத்தை உழுது உயிர்வாழ்க்கை நடத்தவில்லையா?

ஆங்கிலேயருடைய அரசாட்சியில் நம்முடைய பழைய வழக்கங்களெல்லாம் விட்டு நாள்தோறும் சீர் திருத்தத்தையும் நாகரிகத்தையும் அடைகிற நாம், பெண் களுடைய பாவத்தைக் கட்டிக்கொள்வதற்காக மட்டும் அவர்கள் செயலில் பழைய வழக்கத்தை மேற்கொண்டு மடமைக் கடலில் அமிழ்த்துவது முறையா?

## முற்காலத்தில் பெண்கள் படித்தார்கள்

பெண்கள் படிப்பது பழைய வழக்கமன்று என்று சொல்வது பெரும்பொய்யே தவிர உண்மையன்று. திரு வள்ளுவருடைய உடன்பிறந்தார்களாகிய ஔவை உப்பை, உறுவை, வள்ளியம்மை முதலான பெண்கள் கல்வி கற்றுப் பல நூல்களைச் செய்யவில்லையா? சைவர் களுடைய பெரிய புராணத்தில் எடுத்துரைக்கப்பட்ட நாயன்மார்களில் ஒருவராகிய காரைக்காலம்மையாரும், வைணவர்களுடைய குருபரம்பரைப் பிரபாவத்தில்

கூறப்பட்ட ஆழ்வார்களில் ஒருவராகிய சூடிக்கொடுத்த நாச்சியாரும், பெண்களாயிருந்துங் கல்வி கற்றுப் பல புகழ்ப் பாடல்களைச் செய்யவில்லையா! அன்றியும் சீதை, திரௌபதி, சந்திரமதி, தமயந்தி, சகுந்தலை முதலானவர் களும், மற்றுஞ் சில முனிவர் மனைவிகளும், பாண்டியன் மனைவியும், கம்பர் வீட்டு வெள்ளாட்டியும், படித்தவர் களென்பது வெளிப்படையாகத் தோன்றுகிறதே! இம் மட்டோ! தற்காலத்திலும், தஞ்சாவூர் முதலான நகரங் களில் இருக்கிற அரசமாதர்களும் படித்தவர்களென்பது உலகெங்குந் தெரிந்த செய்தியன்றோ?

நாலடியார், காரிகை முதலிய நூல்கள் மகடூஉ முன் னிலையாகச் செய்யப்பட்டிருக்கின்றன வாதலாலும், திருக் குறள், நாலடியார், காசிகாண்டம் முதலிய நூல்களில் பெண்களுக்கு இருக்கவேண்டிய கற்பு முறைமை முதலிய குணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன வாதலாலும், ஆட வர்களைப் போலப் பெண்களும் படிப்பதற்காகவே அந்த நூல்கள் செய்யப்பட்டன வென்பது எடுத்துக்காட்டா யிருக்கிறது. பெண்கள் படிக்கக்கூடாதென்பது மேற்படி நூலாசிரியர்களுடைய முடிவாயிருந்தால், அவர்கள் பெண் முன்னிலையாகப் பாடவும், கற்பு முறைமைகளைப் பேசவும் ஏதுவில்லையே.

ஆகையால் நம்முடைய பக்கத்தை நிலைநாட்டுதற்கு மேற் சொன்ன நூல்களே வெளிப்படையான மூலச்சான்று களாயிருக்கின்றன. கம்பராமாயண பாலகாண்டத்தில், நாட்டுப்படலத்தில் (செ. ௩௬)

"பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே"

என்று சொல்லியிருக்கிற விருத்தத்தைக் கொண்டு, கோசல நாட்டு மாதர்கள் படித்தவர்களென்பது விளங்குகிறது. சீவக சிந்தாமணி, நாமகளிலம்பக (செ-உசஉ)த்தில்

"வண்டுமொய்த் தரற்றும் பிண்டி வாமனால் வடித்த
[நுண்ணூல்
உண்டுவைத் தனைய நீயு முணர்விலா நீரை யாகி
விண்டுகண் ணருவிசோர விம்முயிர்த் தினையை யாதல்
ஒண்டொடி தகுவதன்றா லொழிகநின் கவலை
[யென்றான்" (5)

என்ற செய்யுளால் சச்சந்தன் மனைவியும் சீவகன் தாயுமாகிய விசயை யென்பவள் படித்தவளென்பது தோன்றுகிறது. மேலும் நாலடியாரில

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு" (நாலடி-கருக)

என்று சொல்லியிருப்பதால், மயிரழகும், உடை அழகும், மஞ்சளழகும், அழகல்ல; கல்வி யழகே அழகு என்பது தெளிவாய்த் தோன்றுகிறது. குஞ்சி யென்பது ஆண் மயிராதலால், மயிரழகை வேண்டுமானால் ஆடவர்களெடுத்துக் கொள்ளட்டும். சேலை கட்டுவதும், மஞ்சள் பூசுவதும் பெண்களுக்குரிய அழகாதலால், அந்த அழகு தங்களுக்குரியதென்று ஆடவர்கள் சொல்லத் துணியார்களென்று நம்புகிறோம். ஆகையால், பெண்கள் படிக்க வேண்டு மென்பது மேற்படி நூலாசியர்களுடைய கருத்தென்று பட்டப் பகல்போல வெளியாகிறது.

## நூல்கள் பெண்கல்வியை மறுக்கவில்லை

பெண்களுக்குக் கற்பிக்கக் கூடாதென்று ஒரு நூலிலும் விலக்கப்படவில்லை. கணக்கும் எழுத்தும் கண்

னுக்கு ஒப்பா மென்று ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாகப் பல புலவர்கள் பாடியிருக்கிறார்கள். அப்படியே,

"எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்"

என்று ஔவையாரும்,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு" குறள்-௩௯௨

என்று திருவள்ளுவநாயனாரும் சொல்லியிருக்கிறார்களே. பின்னும்,

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் குறள்-௩௯௩

என்ற குறளில் கற்றவர்களே கண்ணுடையவர்கள், கல்லாதவர்கள் முகத்தி லிரண்டு புண்ணுடையவர்களென்று திருவள்ளுவநாயனார் மாதர் ஆடவர்களுக்குப் பொதுவாகச் சொல்லுகிறாரேயல்லாமல், ஆடவர்களுக்குமட்டும் சொல்லவில்லையே. குருடனைச் செந்தாமரைக் கண்ணன் என்பதுபோலவும், வறுமைப்பிணி பிடித்தவளை அன்னபூரணி என்பதுபோலவும், படியாத பெண்களுடைய கண்களைக் கருங்குவளையென்றும், வண்டென்றும், மானென்றும், மீனென்றும், மற்றைப் புலவர்கள் எவ்வளவுதான் புகழ்ந்து பேசினாலும் நா மொருநாளும் ஒப்பமாட்டோம். புண்ணென்றே சாதிப்போம். ஏனென்றால் திருவள்ளுவருக்கு மற்றப் புலவர்கள் ஆட்டுக்குட்டியைப் போன்றவர்க ளல்லரோ? கல்வி யென்னும் மருந்தைச் செலுத்தி மேலே சொல்லப்பட்ட புண்களைக் கண்களாக்காதவரையில் நாம் நம்முடைய கட்சியை விடோம். "கற்பு" என்கிற சொல்லுக்குக் கல்வி யென்று பொருளாகிறபடியால், பெண்களுக்குக் கற்பு வேண்டுமானால் கல்வியும்

வேண்டு மென்பது அந்தச் சொல்லினாலேயே விளங்குகிறது.

பெண்ணும் ஆணும், ஓர் உடலென்பது எல்லா மதத்திற்கும் உடன்பாடானதால் ஆடவன் மட்டும் படித்துப் பெண் படிக்காமலிருப்பது பாதியுடலில் உயிரும் பாதியுடலில் உயிர் இல்லாமலும் செய்கிற பாரிசவாயு போலவும், பாதி உடலை அழகுபடுத்திப் பாதி உடலை அழகுபடுத்தாமல் விடுவது போலவு மிருக்கிறது. இது எவ்வளவு நாணத்தக்க செய்தியாயிருக்கிறது.

## குடும்பத்திற்கு உதவி

பெண்கள் படித்தால் அவர்களுக்கு எல்லா அறிவும் உண்டாகுமானதால், அவர்கள் ஆடவர்களுக்கு அமைச்சர்களைப்போலச் சமயத்தில் அறிவு சொல்வார்கள். செயலாளர்களைப் போல வீட்டுச் செயல்களையெல்லாம் நடப்பித்துக் கொள்வார்கள். கணக்கர்களைப்போல வீட்டைச் சேர்ந்த கணக்குகளை யெல்லாம எழுதிக்கொள்வார்கள். தாய் போல ஆடவர்களைக் காப்பாற்றுவார்கள்; காவற் காரரைப் போல வீட்டுப் பண்டங்களை யெல்லாம் காத்துக்கொள்ளுவார்கள்; நல்ல அட்டில் தொழிலாளர்களைப் போல ஆடவர்களுயடைய நாவுக் கிசைவான சிற்றுண்டிகளைச் செய்துகொடுத்துப் போற்றுவார்கள். மருத்துவர்களைப்போல ஆடவர்களுடைய உடல் நலங்களுக்கடுத்த செயல்களைத் தேடிச் செய்வார்கள்; இன்னிசைப் புலவர்கள் போல இன்பமான இசைகளைப் பாடியும், இனிமையான மொழிகளைப் பேசியும், ஆடவர்களுடைய வருத்தங்களைத் தீர்ப்பார்கள்; நண்பர்களைப்போல ஆடவர்களுடைய ஆபத்துக்கு உதவுவார்கள்; ஆடவர்கள்

பிசகி நடந்தால் அவர்களுக்குக் குருவைப்போல அறி வுரை பகர்வார்கள். பெண்களைப் படிப்பியாமையினால் இவ்வளவு நன்மைகளையும் ஆடவர்க ளிழந்துபோவது எவ்வளவு அறிவீனம்? இப்போது பெண்கள் படியாத வர்களாயிருப்பதனால் ஆடவர்கள் தங்களுடைய தொழி லைச் சேர்ந்த வெளிவேலைகளுடனேகூட வீட்டைச் சார்ந்த செயல்களையும், மேற்கொண்டு இரண்டு குதிரைகள் கட்டி இழுக்கவேண்டிய வண்டியை ஒரு குதிரைமட்டும் இழுப்பதுபோலத் தாங்கள் வருத்தப்படவேண்டியிருக் கிறது.

பெரிய குடும்பங்களில் பல உறவினர்களும், பிள்ளை களும், வேலைக்காரர்களும் இருக்கிறபடியால் அடிக்கடி கல கங்களும், மனவருத்தங்களும் உண்டாகுமே. குடும்பத் தலைவி படியாத முழுஅறிவிலியா யிருந்தால், அவள் அந் தக் கலகச் சண்டைகளைப் போக்கவும் மற்றவர்களுக்கு அறிவு கற்பிக்கவும் எப்படி இயலும்? குருடனுக்குக் குரு டன் வழிகாட்டவும், முடவனுக்கு முடவன் சிலம்பங் கற்றுக்கொடுக்கவுங் கூடுமா? ஓர் எழுத்தும் தெரியாத வளாயிருக்கிற தலைவியானவள் வேலைக்காரர்கள் செய்கிற களவுகளையும், புரட்டுகளையும், வஞ்சனைகளையும் கண்டு பிடித்துப் பொருட்சேதமில்லாமல் குடும்பத்தை எப்படிக் காப்பாற்றக்கூடும்? மூடன் ஆஸ்தி முழுவதும் நாஸ்தி என்பதுபோலப் பெண்களுக்குப் படிப்பில்லாமையினால் பொருளிழப்பு ஏற்படவும் இடமுண்டாகிறது.

## பிள்ளைகளுக் குதவி

பெண்கள் படித்திருந்தால் அவர்கள் வீட்டுவேலைகள் செய்கிற நேரம்போக மற்ற நேரங்களில் நல்ல நூல்களைப்

படித்துத் தங்களுடைய அறிவை வளரச் செய்யவுங் குழந்தைகளுக்குப் படிப்பிக்கவும் தக்கவர்களாயிருப்பார்கள். அப்படியில்லாமையினால் மாதர்கள் வீண்பேச்சும், வம்பு மொழிகளும், கோளும், புரளியும் பேசி, தீய வழிகளைக் கற்றுக்கொள்ள இடமுண்டாகிறது. சிறு குழந்தைகளுக்குத் தகப்பனைவிடத் தாய்மார்களிடத்தில் அதிக பழக்கமிருப்பதினால், பிள்ளையாரைப் பிடித்த சனியன் அரசமரத்தையுங் கூடப் பிடித்ததுபோலப் படிப்பில்லாத தாய்மார்களுடைய அறியாமையுந் தீக்குணமும் பிள்ளைகளையுஞ் சாரும்படியாயிருக்கின்றன. ஆடவர்களைப் பார்க்கிலும் பெண்களுக்கு மிகுந்த ஒழிவான நேரமிருப்பதால், அவர்கள் படித்தவர்களாயிருந்தால், ஔவை முதலானவர்களைப் போலப் பல நூல்களை உண்டுபண்ணவும் புதுமையான செயல்களைக் கண்டுபிடித்துச் செய்யவும், அதனால் இந்த நாடு ஐரோப்பிய நாட்டைப்போல விரைவில் நாகரிகம் அடையவும், இடமுண்டாகு மென்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல விளங்கவில்லையா?

## நாட்டிற்குங் கணவனுக்கும் நல்லது

பிள்ளை பெற்றவளைப் பார்த்து மலடி பெருமூச்சு விட்டதுபோல ஐரோப்பியநாட்டு நாகரிகத்தைப் பார்த்து, நாம் பெருமூச்சுவிட வேண்டியதேயல்லாமல் பெண்கள் கல்வி கல்லாதவரையில், நம்முடைய நாடு திருந்தவேமாட்டாது. பெண்களுடைய கல்வியினால் ஆடவர்களுடைய கல்வியும் மிகு மென்பது தெளிவாயிருக்கிறது. எப்படியென்றால், பெண்கள் தங்களைக் கல்வியில் வெல்லாமலிருக்கும் பொருட்டும், நையாண்டி செய்யாமலிருக்கும்பொருட்டும்

ஆடவர்களுக்குக் கல்வியில் மிகுந்த கருத்தும், முயற்சியும் உண்டாகு மென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை.

## கல்வியழகே அழகு

கல்வி கல்லாத பெண்கள் எவ்வளவோ அழகுள்ளவர் களாயிருந்தும் அவர்களுடைய அழகானது எட்டிமரம் பழுத்ததுபோலவும், பிணத்தை அழகு படுத்தியதுபோல வும், அடியோடு பயனற்றதாயிருக்கிறது. உயிரில்லாத மண்பாவைக்கு நகைகள் பூட்டினாற்போலக் கல்லாத பெண்களுக் குண்டாகிய அழகினால் பயனென்ன? அவர் களுடைய வாயைத் திறந்தால் அவர்களுடைய சொல் அறிவாளிகளுக்கு எவ்வளவுங் கேட்கப் பொறுக்காமல் காதுக்கு வெறுப்பாயிருக்கிறது.

அவர்களிடத்திற் பேசினால் நமக்கிருக்கிற அறிவும் மழுங்கிப்போ மென்று அஞ்ச வேண்டியதாயிருக்கின்றது. சில ஆடவர்கள் தங்கள் மனைவியர் எவ்வளவோ அழ குள்ளவர்களாயிருந்தும், அவர்கள் படியாதவர்களாயும், இனிமையாக உரையாடத் தகாதவர்களாயும் இருப்ப தால், “ வீட்டுப் பெண்சாதி வேம்பும் நாட்டுப் பெண்சாதி கரும்பும் ” என்பதுபோல, சொந்த மாதர்களை விட்டு விட்டு அழகில் மூதேவிக்கு மூத்தாளாயிருக்கிற தாசிகள் அடியே கதி யென்று ஓடுகிறார்கள். தாசிகள் கல்வி கற்று இனிமையாய்ப் பேசுவதே இதற்குக் காரணமாயிருக்கிறது. பெண்கள் கல்வி கற்றிருந்தால், ‘ அவர்கள் அழகில்லாத வர்களா யிருந்தாலும் அவர்களை ஆடவர்கள் விரும்பு வார்களென்பதற்கும், பெண்களுடைய கல்வியானது, ஆடவர்கள் தாசிகள் ‘வீட்டுக்குப் போகிற’ வழியை அடைக்கு மென்பதற்கும், இதுவே சான்றாக இருக்கிறது.

## கல்வியறிவே கற்புக்குக் காவல்

ஓர் ஆடவனுக்குத் தன் மனைவிமேல் ஐயமுண்டாகி அவளைக் கண்டித்துத் தலைமண்டை யுள்ளவரையில் கள்ளக்கணவனைச் சேருவதில்லை யென்று ஆணையிடும்படி கேட்டானும். அவள் கணவனுக்குத் தெரியாமல் ஒரு மண்டையோட்டை யெடுத்துத் தலைமேல் வைத்துக் கொண்டு, தலைமண்டை யுள்ளவரையில் பிற ஆடவர்களைச் சேருகிறதில்லை யென்று ஆணை செய்து கொடுத்து, பழையபடியே நடந்துவந்தாளாம். இப்படிப்பட்ட படியாத மாதர்களுடைய கற்பைக் கணவன் தடியெடுத்துக் கொண்டு காக்கவேண்டியதாயிருக்கின்றதே. பெண்கள் படித்தால், அவர்களுடைய கல்வியே கற்புக்குக் காவலாயிருக்கு மென்பது உறுதியே.

"சிறை காக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறை காக்குங் காப்பே தலை" குறள்-ருஎ

என்று திருவள்ளுவநாயனுர் சொல்வது உண்மைதானே.

## பிற ஆடவர் உதவி

தலைவர்கள் தொலைவான ஊருக்குப் போயிருக்கும் பொழுது அவர்கள் அனுப்புகிற மறைமுகமான கடிதங்களை மனைவியர் வாசிக்கத் தெரியாமையினலே பிற ஆடவர்களிடத்திற் கொடுத்துப் படிக்கச் சொல்வதும் அவர்களைக் கொண்டே பதில் எழுதுவதும் வழக்கமாயிருக்கின்றது. பொருளுக்குக் கள்ளனைக் காவல் வைத்ததுபோலவும், கிளிக்குப் பூனையையும், ஆவுக்குப் புலியையுந் துணைவைத்தது போலவும், மாதர் ஆடவர்களுடைய மறைவுகளைப் பிற ஆடவர்கள் அறிவது எவ்வளவு தீயசெயல்? படித்திருந்தால் அவர்கள் தாங்களே

கடிதங்களைப் படிக்கவும், மறுமொழி எழுதவுங் கூடு மன்றோ?

## மாதர்கள் ஆடவருக்குக் கீழ்ப்பட்டவர்கள்

மாதர்கள் படித்தால் ஆடவர்களுக்கு அடங்கமாட்டார்களென்று சிலர் சொல்லும் மறுப்பிற்குத் தகுந்த பதில் சொல்லுகிறோம். பறவை எவ்வளவு உயரப் பறந்தாலும் விண்ணிற்கு உட்பட்டிருப்பதுபோல, மாதர்கள் எவ்வளவு படித்தாலும் ஆடவர்களுக்குத் தாழ்ந்தவர்களே தவிர மேற்பட்டவர்களல்லர். படைப்பு முறையில் மாதரைப் பார்க்கிலும் ஆடவன் மேலானவனென்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. எல்லாச் சமயத்தார்களும் தெய்வத்தை ஆண் பாலாகப் பேசுகிறார்களேயல்லாது பெண்பாலாக ஒரு சமயத்தாரும் பேசவில்லை. கடவுள் முந்தி ஆணை உண்டுபண்ணிப் பிறகு பெண்ணை உண்டு பண்ணினதாக எல்லாச்சமயத்தார்களும் மறுப்பில்லாமல் ஒப்புக்கொள்கிறார்கள். உடற்பலம், துணிவு, ஆற்றல், நல்லியல்பு, அறிவு முதலிய திறமைகளில் மாதர்களைப் பார்க்கிலும் ஆடவர்கள் மேம்பட்டவர்களென்பது உறுதியாகின்றது. சில மாதர்கள் மேற்கண்ட ஆற்றல்களில் சில ஆடவர்களுக்கு மேற்பட்டிருந்தாலும் இருக்கலாம். ஆனால் அப்படிப் பட்ட ஆற்றலுள்ள பெண்களையும், ஆடவர்களையும் எண்ணிப் பார்க்குமிடத்தில் தோள்வலிமையும், அறிவுக் கூர்மையும், நல்லியல்பும் உள்ள ஆடவர்களுடைய தொகை மிகுதிப்படு மென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. அரசர்கள், அமைச்சர்கள், சிறந்தோர்கள், படைத்தலைவர், போர்மறவர்கள் முதலிய எல்லா அலுவலாளர்களும், மற்ற

அலுவலாளர்களும் ஆடவர்களே தவிரப் பெண்க
அல்லரே.

## அரசாட்சி உரிமை

ஆங்கிலநாடு முதலிய சில நாடுகளில் தவிர, பி
நாடுகளிலெல்லாம் பெண்கள் முடிசூட்டலுக்குத் தகு
யற்றவர்களென்று கருதப்படுகிறார்கள். ஆங்கி
நாட்டிற்கூட அரச குடும்பங்களில் ஆண்பிள்ளையில்லாம
போனால்மட்டும் மாதர்களுக்குப் பட்டங் கட்டல
மென்கிற முறை யிருக்கின்றது.

## மாதர்கள் ஆற்றல் குறைந்தவர்கள்

பகைவர்களுடன் போர்செய்து வெல்லல், தீயோ
களை அடக்கி நல்லவர்களைக் காத்தல், முறை நூல்க
உண்டுபண்ணுதல், பாலம் இருப்புப்பாதை முதலி
வைகளைக் கட்டுதல், ஆறு, குளம், ஏரி, முதலியவை
களை வெட்டுதல், காடு வெட்டிக் கரம்பு திருத்தி
பயிரிடுதல், பிறநாடுகளில், தீவுகளில் சென்று வாண
ங்கள் செய்தல், நாட்டிலும், காட்டிலும், கடலிலும
கரையிலும் பலவிதமாகப் பாடுபடல் முதலி
நாட்டு நன்மைக் கடுத்த எல்லாச் செயல்களும் ஆடவ
களால் நடத்தப்படுகின்றவே யல்லாமல் பெண்கள் அந்
வேலைகளுக்கு அடியோடு ஆற்றலற்றவர்களாய் இரு
கிறார்கள். தங்களுக்கு இயற்கையான ஆற்றலின்மை
துணிவின்மை, பேதமை, நாணம், அச்சம் முதலி
குணங்களாலும், சூல், பிள்ளைப்பேறு முதலிய துன்ப
களாலும், உறுப்புக்களுக்குத் தொல்லையான தொழி
களுக்கும் மற்றைய அலுவல்களுக்கும் ஆற்றலற்றவர்

ளாவதை அவர்களே மறுப்பில்லாமல் ஒப்புக்கொள்வார்கள்.

## இரண்டு தலைவர்கள் கூடாது

ஒரு நாட்டிற்கு இரண்டு அரசர்க ளிருந்தால், நாட்டாட்சி எப்படித் தகுதியாக நடக்கமாட்டாதோ, அப்படியே ஒரு குடும்பத்திற்கு இரண்டு தலைவர்க ளிருந்தால் குடும்பச் செயல் ஒருபோதும் செவ்வையாக நடக்கமாட்டாது. ஆகையால் ஒவ்வொரு குடும்பத்துக்கும், ஒரே தலைவ னிருக்கவேண்டியது கட்டாயம். உடல் ஆற்றலிலும், அறிவிலும் நாட்டுச் செயல்களை நடப்பிக்குந் திறமையிலும், குடும்பப் பாதுகாப்பிலும் மிக வல்லவர்களான ஆடவர்களே தலைமைக்கும் தகுதியானவர்களானதால், மாதர்கள் தெய்வத்துக்குப் படிந்து நடப்பது போல ஆடவர்களுக்கும், படிந்து நடக்கவேண்டு மென்பது மறைமொழியா யிருக்கின்றது.

## மாதர் கடமை

மேலும் முதலில் பெண்ணானவள் முன்னர்த் தீவினை செய்து ஆடவனையுங் கெடுத்தாள் ஆதலால், அவள்மேல் ஆடவன் முறைமை செலுத்தவும், அந்த ஆட்சிக்கு அவள் உட்பட்டிருக்கவும், பிள்ளைப்பேறு முதலிய துன்பங்களை நுகரவும், தெய்வக்கட்டளை பெற்றுக் கொண்டவளா யிருப்பதால், அவள் எவ்வளவு படித்தாலும் ஆடவனுக்கு அடங்கி நடக்கவேண்டியவளே யல்லாது மீறுதல் கூடாது.

உயிர்த் தூய்மையாகிய நெஞ்சிலக்கணந் தெரியாதவளுக்கு ஐந்திலக்கணந் தெரிந்து பலனென்ன? ஆடவன் மேல் குறியில்லாதவளுக்கு லட்சியம் (இலக்கியம்) தெரிந்து பயனென்ன? இனிமை தெரியாதவளுக்கு இசை

தெரிந்து வெற்றி என்ன? வீட்டுவேலை தெரியாதவளுக்கு நாட்டுவேலை தெரிந்து நன்மையென்ன? மடைத்தொழில் தெரியாதவளுக்குப் படைத்தொழில் தெரிந்து பல னென்ன? ஊர்ச் செய்தி தெரியாதவளுக்கு உலகச்செய்தி தெரிந்து பயனென்ன? ஆகையால், குணமில்லாதவளு டைய மெய்யறிவெல்லாம் பொய்யறிவே. அவளுடைய அறிவெல்லாம் அறிவின்மையே. அவளுடைய நற்செய்கை யெல்லாம் தீச் செய்கையே.

எல்லா ஆடவர்கட்கும் மேலான சிறந்த ஆடவனும் மேலான பொருளுமான கடவுளுடைய கட்டளை எல்லா வற்றிற்கும் மேலானதாகையால், அந்தக் கட்டளைக்கும் அரசநெறிக்கும் அறத்துக்கும் மாறுபாடில்லாமல், ஆட வன் சொல்லுகிற எல்லாக் கட்டளைக்கும் மனைவி கீழ்ப் படிய வேண்டியவளாயிருக்கிறாள். சில செய்திகளில் அரசனைப் பார்க்கிலுங் குடிகள் சிறந்த அறிவாளிகளாயும், கல்விமான்களாயு மிருந்தாலும், அரசனுடைய கட்டளைக் குக் குடிகள் எப்படி உட்பட வேண்டியவர்களோ, அப் படியே ஆடவனைப் பார்க்கிலும், மாது அறிவிலும் கல்வி யிலும் சிறந்த புலமை யுள்ளவளாயிருந்தாலும், அவள் ஆடவனுக் கடங்கி அவனுடைய மனவிருப்பப்படி நடக் கக் கடமைப்பட்டிருக்கிறாள். அப்படியிருக்க, மாதர் கள் படித்தால், தங்களுக்கு அடங்கமாட்டார்க ளென்று ஆடவர்கள் அஞ்சுவது வேறுபாட்டுணர்ச்சியே தவிர, உண்மையன்று.

## ஆடவர்கட்குத் துணையாகப் படைக்கப்பட்டவர் அரிவையர்

ஆடவர்களுக்கு உதவியாகப் படைக்கப்பட்ட பெண் பிறப்பு விருப்ப முடையதாயிருக்கின்றது. இராக்காலங்

களில் விளங்குகின்ற விளக்குகள்போல, குடும்பமாகிய இருளுக்கு மாதர்களே விளக்குகளாயிருக்கிறார்கள். மர வகைகளுக்கு அழகைக் கொடுக்கிற மலர்கள்போலவும், மாதர்கள் விளங்குகிறார்கள். ஆனால், கல்வியில்லாமையால் மணமில்லாத மலர்கள் போலவும், குடத்தி லிட்ட விளக்கைப்போலவும், சாணைபிடியாத மணிகள் போலவும், இருக்கிறார்கள். சில மாதர்கள் தெற்கு வடக்குத் தெரியாமலும், ஞாயிறு இன்ன திக்கில் தோன்றுகிறதென்பது தெரியாமலும், தங்களுடைய கையிலிருக்கிற விரல்கள் இத்தனை யென்று தெரியாமலும், சிற்றறிவும் அற்றவர்களாக விருக்கிறார்கள். இப்படிப்பட்ட அறிவற்ற மாதர்களே நமக்குத் தாய்மார்களாயும், உடன்பிறந்தவர்களாயும் மனைவிகளாயு மிருப்பதால் நமக்கு எப்போதும் அறிவில்லாக் கூட்டுறவே நிலைத்துவிட்டது. ஓர் ஆடவன் படியாதவனாயிருந்தால், ஒரு நொடியாயினும் அவனுடன் நாம் சேர்ந்திருக்கமாட்டோம். நம்முடைய வாணாள் முழுவதும் அறிவில்லா மாதர்களுடன் உடனிருக்க நாம் உடன்பட்டிருப்பது கூட்டுறவுக் குற்றமேயல்லாது வேறென்ன காரணமோ தெரியவில்லை.

## அறிவற்ற மாதின் செய்கை

கல்லாத மாதர்களுக்குக் கல்வியின் அருமை தெரியாதபடியால், அவர்கள் பிள்ளைகளின் படிப்புக்கும் இடையூறா யிருக்கிறார்கள். படிக்கும்படி பிள்ளைகளைத் தகப்பன்மார்களும், ஆசிரியரும் கண்டிக்கும்போது, அவர்களைத் தாய்மார்கள் கண்டித்துப் படிப்புக்கு இடையூறு செய்கிறார்கள். கணவனை இழந்த ஒரு மாதினுடைய பிள்ளை கல்வியில் மிகுந்த முயற்சியுள்ளவனாய் அறப் பாடசாலைக்குப் போய்ப் படித்துக்கொண்டுவந்தான். அவன்

வீட்டிலும் நிலநூல், வானநூல் முதலிய நூல்களை ஓயாமல் படித்துக்கொண்டிருப்பான். அவனைப் படிக்க வேண்டாமென்றும் கூலிவேலை செய்யும்படிக்கும், அவனுடைய தாய் சொல்லியும் அவன் கேட்கவில்லை. ஒருநாள் அவன் வெளியே போயிருந்த சமயத்தில் அந்தக் கொடியவள் பிள்ளைமேலிருந்த சினத்தைப் புத்தகங்களிடத்திற் காட்டத்தொடங்கினாள். அவள் நிலநூலைக் கிழித்து நிலத்தின்மேல் எறிந்துவிட்டாள். வான நூலைக் கிழித்து வானத்திற் பறக்கும்படி எறிந்துவிட்டாள். தீ நூலைக் கிழித்துத் தீயிற் போட்டுவிட்டாள். கூட்டல், கழித்தல், பெருக்கல், கொடுத்தல் முதலிய முறைகளடங்கிய கணக்கு நூலைக் கிழித்துத் துண்டுகளாக்கி, அவைகளைக் கூட்டிப் பெருக்கிக் கழித்துக் குப்பைக்குக் கொடுத்துவிட்டாள். இலக்கண மென்கிற நல்ல பெயரை வைத்துக் கொண்டு, விகாரம், வேற்றுமை, விகற்பம், ஐயம், திரிபு, மயக்கம், வழூ, அல்வழி முதலிய வீண் குணங்களடங்கிய அந்த நூலைக் கிழித்து, ஒருமையைப் பன்மையாக்கி, நெடிலைக் குறிலாக்கி, வல்லினத்தை மெல்லினமாக்கி, ஆண்பாலைப் பெண்பாலாக்கி, பெண்பாலையும் அலியாக்கி, வேறுபடுத்தி, அந்த நூலின் குணத்தை அதனிடத்திலேயே காட்டினாள். அறநூலைக் கிழித்து மறஞ் செய்தாள். சொற்போர் நூலைக் கிழித்துப் பெரும்போர் செய்தாள். இவ்வகையாக ஒரு நொடியில் தன் பிள்ளையின் படிப்பை அடியோடு கெடுத்துவிட்டாள். அந்த மாது படியாமையினால் பிள்ளைக்குப் பகையாளென்பது கண்கூடன்றோ?

## அறிவற்ற மாதர்கள் நோயை உண்டாக்குவார்கள்

அறிவுடலை வளர்ப்பவருக்குக் கல்வி எப்படி இன்றியமையாததோ, அப்படியே ஊனுடலை வளர்ப்பதற்கும்

கல்வியே பயன்படுகின்றது. கல்வியினால் உண்டாகிற மனக் கிளர்ச்சியும் அறிவும் மகிழ்ச்சியும் நற்குண நற்செய்கைகளும் நோய்க்குப் பகைகளா யிருக்கின்றன. அப்படியே உடல் தூய்மையும் ஒழுங்கான உணவு முறைகளும் உடல் நலத்திற்கு முதன்மைக் காரணங்களா யிருக்கின்றன. மாதர்கள் படியாமையினால் உடல் தூய்மை இல்லாமலும், இல்லத் தூய்மை இல்லாமலும், காலத்திற் கேற்ற உணவுகளைச் செய்யத் தெரியாமலும், தலைமுறை வழக்கப்படி ஒரே தன்மையுள்ள உணவுகளைச் செய்துவருகிறார்கள். அதனால் நோய்கட் கிடமாகி நம்முடைய உடல்களை மருத்துவர்கள் கையில் ஒப்புவிக்கும்படி ஏற்படுகின்றது. இந்து நாட்டு மருத்துவர்களில் சிலர் இந்த உலகத்து மனிதர்களை மேல் உலகத்துக்குப் பயணப்படுத்தி அனுப்புவதில் கைதேர்ந்தவர்கள். அவர்க ளில்லாவிட்டால் மேல் உலகம் குடியில்லாமல் பாழாய்ப் போய்விடும். இந்த உலகத்திலும் மக்கள் திரளாய் அதிகரித்து நெருக்குண்டு துன்பப்பட ஏதுவாகும் அந்த மருத்துவர்கள் கொடுக்கும் கைகண்ட மாத்திரை வைகுண்ட யாத்திரை. அவர்கள் மருந்து யமனுக்கு விருந்து. அவர்களுடைய மருத்துவமே கொலைச் செயல். அவர்களுடைய நெய்யே மெய்யை அழிக்கும். அவர்களுடைய தூளே வாளாம். பயிருக்கு மழை எப்படியோ அப்படியே பிறருக்கு வருகிற வயிற்றுப்போக்கு, காய்ச்சல் முதலிய நோயே மருத்துவர்களுக்குத் தாயாம். ஆகவே மருத்துவர்களுக்குத் தப்ப மனமுடைய மனிதர்கள் கட்டாயம் பெண்களுக்குக் கல்வி கற்பிப்பார்க ளென்று நம்புகிறோம்.

## நகைப் பித்துக் கொண்ட நங்கையர்

படியாத மாதர்கள் அறியாமையால் தங்களைப் பல கொடுமைகளுக்கு உட்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

முறைமன்றத் தலைவர் குற்றவாளிகளுக்குக் கால் விலங்கு மட்டும் போடுகிறார்கள். மாதர்களோவென்றால் உலக்கைக்குப் பூண் கட்டினதுபோல, பாடகம், காலணி, தண்டை, சிலம்பு, கொலுசு முதலிய பல கால்விலங்குகளையும், காப்பு, தோடா, வளையல் என்ற பெயர்கொண்ட பலவகை கை விலங்குகளையும், முத்துமாலை, கழுத்துமாலை முதலிய பல கழுத்து விலங்குகளையும், தலையழகு என்று பெயர்பெற்ற தலை விலங்குகளையும், ஒட்டியாண மென்று சொல்லப்பட்ட இடுப்பு விலங்கையும், ஆழிகளாகிய விரல் விலங்குகளையும், அணிந்து கொள்ளுகிறார்கள். காதுகளிலும், மூக்குகளிலும், சல்லடைக் கண்கள்போல, பல ஓட்டைகளைச் செய்து பல நகைகளை மாட்டுகிறார்கள். அறிவின்மை வடிவமாகிய மாதர்களுடைய உடல்களையும் அறிவுரை நுழையாத அவர்களுடைய காதுகளையும் பல விலங்குகளிட்டு ஒறுப்பது ஒழுங்குதான். நூல்களைப் பாராத கண்களையும், படிக்காத வாயையும் விலங்கிட்டு ஒறுக்காமல் வெறுமையாய்விட்ட காரணந் தெரியவில்லை. முன்காலத்தில் ஒருவன் குற்றவாளி யென்று தெரியும்படி அவனுடைய நெற்றியில் அரசர்கள் பச்சை குற்றிவிடுவது வழக்கமாம். இந்தக் கொடிய தண்டனையையும் மாதர்கள் தங்களுக்குத் தாங்களே செய்து கொள்ளுகிறார்கள். மாதர்கள் நெற்றியிலும் கால்கைகளிலும் பச்சை குற்றிக்கொள்ளும் பொழுதும், உடலில் பல அணி கலன்களை அணிந்துகொள்ளும் பொழுதும், உண்டாகிற துன்பத்தைப் பொறுக்கமாட்டாமல் பல்லைக் கடித்துக் கொண்டும், முகத்தைச் சுளித்துக்கொண்டும், அழுத கண்ணுஞ் சிந்திய மூக்குமா யிருக்கிறார்கள். இப்படிப்பட்ட துன்பத்தை நுகரும்படி அவர்களை யார் அடித்தார்கள். இயற்கையாகவே அழகுள்ள அவர்களுக்குப் பூட்டப்பட்ட

நகைகள் அவர்களுடைய அழகை மறைக்கின்றன. அழகில்லாதவர்களுக்கு அணியப்படுகிற நகைகள் அவர்களுடைய உடல் வேறுபாடுகளை மிகுதியாய் எடுத்துக் காட்டுகின்றன. மாதர்களுக்குக் கல்வியென்கிற அறிவு அணிகலன்கள் கிடைத்தால் மணி அணிகலன்களென்று சொல்லப்பட்ட துன்பத்துக்குரிய விலங்குகளை அவர்களே வெறுத்துத் தள்ளுவார்களென்பது உண்மையே.

## கல்விச் செல்வத்தின் சிறப்பு

கல்வியின் பெருமை அளவிடப்படாததாயிருக்கின்றது. ஒளிக்கும் இருளிற்கும், நல்வினைக்கும் தீவினைக்கும், தூய்மைக்கும் அழுக்கிற்கும், எவ்வளவு மாறுபாடோ அவ்வளவு மாறுபாடு செல்வப் பொருளுக்கும், கல்விப் பொருளுக்கும் உண்டாயிருக்கின்றது. செல்வம் அறிவைக் கெடுக்கும்; கல்வி அறிவைக் கொடுக்கும். செல்வம் கொடுக்கக் கொடுக்கக் குறையும்; கல்வி கொடுக்கக் கொடுக்க நிறையும்; செல்வம் சிலநாளில் அழியும்; கல்வி அழியாத பொருளாம். செல்வம் கள்ளர்களால் கைப்பற்றப்படும்; கல்வி யாவராலும் போற்றப்படும். செல்வம் நம்மைத் தீயோர் கையில் ஒப்புவிக்கும்; கல்வி நம்மை இடரிலிருந்து தப்புவிக்கும். செல்வம் காமம் முதலியவைகளை உண்டாக்கும்; கல்வி காமம் முதலியவைகளை அழிக்கும். செல்வர்களுடைய பேர் பிற நாடுகளில் தெரியாது; கல்விமான்களுடைய பேர் உலகம் முழுதும் புகழ் பெறும். கல்வியே பொருள். கல்வியே பெருமை. அழகில்லாருக்குக் கல்வியே அழகு; அணிகலமில்லாருக்குக் கல்வியே அணிகலம். பலமில்லாருக்குக் கல்வியே பலம்; துன்பமுள்ளாருக்குக் கல்வியே ஆறுதல் மருந்து. வறிஞர்களுக்குக் கல்வியே

பாக்கியம்; இடருற்ற வேளையிற் கல்வியே பாதுகாக்கும் பொருள்; கல்வி நினைத்தவெல்லாம் தருஞ் சிந்தாமணி.

ஆற்றின் மணலை எண்ணினாலும் விண்மீன்களை யெண்ணினாலும் உலகம் உண்டானது முதல் தற்காலம் வரையில் இறந்து போனவர்களுக்குத் தொகை சொல்லக்கூடுமா? அவர்களுடைய பெயர்களெல்லாம் விளக்கமற்றவாய் மறைந்துபோய்விட்டன. புலவர்களுடைய பெயர்களும் அவர்களுடைய நூல்களும் என்றும் விளங்கிக்கொண்டிருக்கின்றன. பழங்கால வரலாறுகளை எழுதிப் பழங்கால அரசர்களுடைய பேர் விளங்கும்படி செய்தவர்களும் கல்விமான்களே. கல்விமான்களுடைய அருளில்லாவிட்டால் அந்த அரசர்கள் இறந்த நொடியில் அவர்களுடைய பெயர் மறைந்துபோயிருக்கு மென்பது ஐயமா? இங்கிலாந்து, பிரான்சு முதலான ஐரோப்பாக் கண்டத்திலுள்ள நாகரிகமும், நேர்மையும், ஒழுங்கும், செல்வமும் அருமையான வேலைகளும், அந்த நாட்டாருடைய கல்வித் திறத்தினாலும், அவர்கள் கடைப்பிடிக்கின்ற மெய்ம்மறைக் கொள்கையினாலும், உண்டாயினவே யல்லாமல் மற்றவைகளா லல்லவே. கடலைக் கிணறு விழுங்கியதுபோல் இந்த இந்து நாட்டிலுள்ள கோடானுகோடி மக்களைச் சில ஆங்கிலேயர்கள் ஆண்டது, கல்வியின் பலத்தினாலே யல்லாமல் உடற்பலத்தினா லன்றே.

படியாதவர்கள் தங்கள் சொந்த நாட்டுச் செயல்களையே அறியாதவர்களா யிருக்கிறார்கள். படித்தவர்கள் பூமண்டலமெல்லாம் சுற்றுகிறவர்கள் போல, எல்லாவகையான செய்திகளையும் பல செய்தித்தாள்கள் மூலமாகத் தெரிந்துகொள்ளுகிறார்கள். படியாதவர்கள் இப்போதிருக்கிற புலவர்களையே அறியார்கள். படித்தவனோ வென்றால் தற்காலப்

புலவர்களை மட்டுமன்றி, பழங்காலப் புலவர்களையும் நேருக்குநேர் கண்டு உரையாடுகிறவன்போல் அவர்களுடைய நூல்களிலுள்ள ஒழுங்கு முறைகளையும், அழகுகளையும் மறைபொருள்களையும் கற்றுக்கொள்ளுகிறான். எப்படியென்றால், திருவள்ளுவரையும் ஒளவையாரையுங் கண்டு வணக்கஞ் செய்து, 'ஓ! ஐயரே! ஓ அம்மையே! உங்களுக்குத் தெரிந்த முறைமையைக் கற்பியுங்கள்!' என்று கேட்பது போலக் குறள், மூதுரை முதலிய நூல்கள் மூலமாக எல்லா அறநெறிகளையும், கற்றுக்கொள்கிறோம். கம்பருக்கு வணக்கஞ் செய்து, "ஓ! பாவாணர் தலைவரே! உமது வியத்தகு ஓவியப் பாடல்களையும் மிகுந்த ஒப்பனைகளையும், நூல்களையும் எங்களுக்குப் படிப்பியும்" என்று இரப்பதுபோலக் கம்ப ராமாயண மூலமாக எல்லா ஒப்பனைகளையும் கற்றுக்கொள்ளுகிறோம். காளமேகப் புலவரை மடி பிடித்துக்கொண்டு 'ஓ! செய்யுளரசரே! எங்கள்மேல் வசை பாடினாலும் உம்மை விடோம்; இகழ்ச்சியாகப் புகழ்ந்துபாடுந் திறமையை எங்களுக்குக் கற்பியும்' என்று வழக்காடுவது போல அவருடைய பாடல்களைக் கற்றுக்கொள்ளுகிறோம். வீரமாமுனிவருக்கு வணக்கஞ் செய்து, 'ஆசிரியப் பெருந்தகையே! தேம்பாவணி, தொன்னூல், சதுரகராதி முதலிய நூல்களைக் கற்பித்தருளும்' என்று விண்ணப்பஞ்செய்து கற்றுக்கொள்வதுபோல் அந்த நூல்களைப் படிக்கிறோம். இப்படியே பழங்காலப் புலவர்களெல்லாரும் ஆசிரியர்களாகவும், நாம் மாணாக்கர்களாகவும் இருக்குந் தன்மைபோல் இலக்கண இலக்கியங்களையெல்லாம் கற்றுக்கொள்ளுகிறோம்.

## உலகமே ஒரு பெரிய நூல்

படித்தவனுக்கு உலகமே ஒரு பெரிய நூலாக இருக்கிறது. ஐந்து பொருள்களும் நிலத்திலுள்ள மலைகள், மரங்கள், கடல்கள், ஆறுகள் முதலியவைகளும், வானத்திலுலாவும், திங்கள், ஞாயிறு, விண்மீன்களும், முகில்களும் மெய்யறிவைக் கற்பிக்கிற ஆசிரிய வடிவங்களா யிருக்கின்றன. நிலத்திலுள்ள பற்பல மாறுபாட்டையுடைய உயிர்த்தொகைகளையும் மரவகைகளையும் அம்மரங்களிலுள்ள மரகதத் தகடுபோன்ற இலைகளையும், ஒன்பதுவகை மணிகளை யொத்த நறுமண மலர்களையும், கற்கண்டுக் கட்டி போன்ற இனிய கனிகளையும், பல நிறமுள்ள அழகிய பறவைகளையும், கல்விமான் பார்த்துப் பார்த்துக் கண் மகிழ்ச்சி யடைகிறான். வானம்பாடி, குயில், கிளி, பூவை முதலிய பறவைகள் பாடும் இசையைக் கேட்டுக் காதுக் கின்பத்தை யடைகிறான். அந்த இன்பங்களைக் கொடுத்த மேலான அருட் செல்வத்தை உடனே எண்ணி உயிர்மகிழ்ச்சியையும் அடைகிறான். படியாதவனோவென்றால், அந்த இன்பங்களை நுகரத் தெரியாமல் சுற்றித் திரியும் பிணம்போல, கண்ணிருந்தும் பாராதவனாகவும், காதிருந்தும் கேளாதவனாகவும், மனமிருந்தும் நினையாதவனாகவுந் திரிகிறான்.

## கல்விப் பயிற்சியைக் கைவிடுதல்

நல்ல நூல்கள் படிக்கப்படிக்க எவ்வளவோ விருப்பமா யிருக்கின்றன. அவைகளைப் படிக்கும்போது பசி தெரியவில்லை. பொழுது போவது தெரியவில்லை. உணவு உறக்கங்களில் விருப்பமில்லை. மனவருத்தங்களெல்லாம் நீங்கிப் போகின்றன. அந்தக் காரணங்களைப்பற்றியே

ஐரோப்பியர்கள் எப்போதும் நூல்களைப் படித்துப் பொழுது போக்குகிறார்கள். இந்த நாட்டுப் பிள்ளைகள் பாடசாலைகளை விட்டவுடனே படிப்பையும் விட்டுவிடு கிறார்கள். குற்றஞ் செய்கிறவர்களைக் கட்டித் தூக்குவது போல, நூல்களைக் கட்டித் தூக்குப்பலகையில் வைத்து விடுகிறார்கள். பின்பு அந்த நூல்களின் சாரம் எலிக் கும் கறையான் முதலிய பூச்சிகளுக்கும் பயன்படுகிறதே தவிர, நம்முடைய பிள்ளைகளுக்குப் பயன்படுகிறதில்லை. பிள்ளை வரத்துக்குப் போய்க் கணவனைச் சாவக்கொடுத் தது போலவும், உடல் வலிக்கு மருந்து சாப்பிட, உள்ள வன்மையும் போய்விட்டது போலவும், சிலர் ஆங்கிலம், இந்தி முதலிய பிறமொழிகளைப் படிக்கத் தொடங்கி, அந்த மொழியுந் தெரியாமல், சொந்த மொழியுந் தெரியாமல், பேசத் தெரியாதவர்களாய்ப் போய்விடுகிறார்கள். சிலர் பிற மொழிகளில் முழு அறிவுடையவர்களாயிருந்தும் சொந்த மொழியைப் படியாமல், இடைவழியில் விட்டுவிடு கிறார்கள். சொந்த மொழியில் பிழையில்லாமல் இரண்டு வரி சேர்த்தெழுதத் தெரியாமலும், தங்களுடைய பெயரையே ஒழுங்கா யெழுதத் தெரியாமலும் "வைத்திய நாதன்" என்பதற்குப் "பைத்தியநாதன்" என்று கை யெழுத்து வைத்துக்கொண்டு சிலர் உயிர் வாழ்கிறார்கள். ஐரோப்பாக் கண்டத்தில் தன்மொழியில் தன்னுடைய கையெழுத்தையே பிழையற யெழுதத் தெரியாதவனுக்கு ஒரு சிறு அலுவலுங் கிடைக்கமாட்டாது.

## நாட்டுமொழி யறியார்க்கு வேலை

இந்த நாட்டில் பிறமொழியைக் கற்றுக்கொண்டு தாய்மொழி தெரியாமலிருப்பவர்களுக்கே பெரிய அலு

வல்கள் கிடைக்கின்றன. அதற்காக நாம் பொறுமை கொள்ளவில்லை. ஆங்கிலம், பிரான்சு முதலிய பிற மொழிகளில் பல செய்திகளைப்பற்றி அருமையான பல நூல்களிருக்கின்றமையால். அந்த மொழிகளைப் படிக்கிற இந்த நாட்டார் அந்த நூல்களிலுள்ள அருமையான பொருள்கள் இந்த நாட்டு மாதர்களுக்கும் ஆடவர்களுக்கும் பயன்படும் பொருட்டு, நாட்டு மொழியில் உரைநடை நூல்கள் எழுதவேண்டுமென்பதே நம்முடைய விருப்பமாயிருக்கின்றது.

## பயனில்லாப் பாடல்கள்

செய்யுள் வடிவமாயிருக்கிற இந்த நாட்டு நூல்கள் பலருக்குப் பயனற்றவைகளா யிருக்கின்றன. சில புலவர்களுடைய பாடல்களை நாம் நாள் முழுவதும் பார்த்தாலும் பொருள் விளங்கவில்லை. அவர்களுக்குத்தான் பயன் தெரியுமோ தெரியாதோ அதுவும் ஐயம். அவர்கள் எந்தத் தெய்வத்தின்மேலே பாடியிருக்கிறார்களோ அந்தத் தெய்வத்துக்குத்தான் பொருள் தெரியுமோ தெரியாதோ; அந்தத் தெய்வத்தைத்தான் கேட்கவேண்டும். அந்தப் பாடல்களைச் சிறந்த புலவர்களிடத்திற் காட்டினாலும் அவர்களுக்கும் பொருள் தெரிவதில்லை. அந்தப் பாடல்களில் ஆளப்பட்டுள்ள அருஞ் சொற்கள் அகர வரிசையிலும் அகப்படவில்லை. சிறு நூல்களுக்குச் சில புலவர்கள் செய்திருக்கிற உரைகளும், சில ஆங்கில நூல்களுக்குச் சிலா செய்திருக்கிற மொழிபெயர்ப்புகளும் தமிழோ நான்முக னெழுத்தோ அல்லது வேறென்ன மொழியோ வென்று தெரியாமல் மலைக்கும்படியாய் இருக்கின்றன. மூலத்தைப் பார்த்து அந்த உரைக்குப் பொருள் செய்ய

வேண்டியதா யிருக்கின்றது. திருமணஞ் செய்தும் துறவுநிலை, கடன் வாங்கியும் பட்டினி என்பது போல ஒரு நூலுக்கு உரையிருந்தும் பயன்படமாலிருப்பது வியப்பல்லவா?

கண் குருடானாலும் தூக்கத்துக்குக் குறைவில்லை என்பதுபோல மாதர்களுக்குப் படிப்பியாவிட்டாலும் அவர்களிடத்தில் சில புலவர்கள் தாங்கள் கற்ற கல்வியைக் காட்டுகிறார்கள். குண்டு சட்டியிற் குதிரை யோட்டுவது போலவும், சப்பாணிக்கு நொண்டி சண்டப்பிரசண்ட னென்பதுபோலவும், அந்தப் புலவர்கள் தங்கள் மனைவிமார்களிடத்திற் பேசும்பொழுதும் கடினமொழியைப் பயன்படுத்துகிறார்கள்.

## ஒரு கதை

ஒரு புலவன், ஒரு செல்வனிடத்தில் ஒரு குதிரை பரிசுபெற்றுக்கொண்டு வீட்டிற்கு வந்தான். அந்தச் சிறப்பை அறியாது அவனுடைய மனைவி வெளியே போய் வந்தீரே என்ன சுபமென்றாள். அவன் குதிரை வந்ததென்று சொல்லாமல், அசுவம், கோரம், மா, வாசி என்கிற குதிரைகளுக்குள்ள பல பெயர்களைத் தனித்தனியே சொல்லத்தொடங்கினான். என்ன சுபமென்று கேட்ட மனைவிக்கு அசுவம் வந்ததென்று முந்திக் கணவன் சொன்னவுடனே, ஏதோ துன்பச் செயல் நேர்ந்ததென்று மனைவி மயங்கினாள். உடனே கோரம் என்ற வேறொரு பெயரைப் புலவன் சொன்னான். கோரமான துன்பம் வந்ததென்று மனைவி மிகுதியாகக் கலங்கினாள். அதுகண்ட கணவன் மா மா என்று ஒரு முறைக்கு இரண்டு முறையாக உரைத்தான். மாமாவுக்குப் பெரிய இடர் வந்ததென்று மனைவிநினைத்துக் கூக்குரலிட்டழுதாள். அந்த ஒலி கேட்டு ஊரரெல்

லாம் ஓடிவந்து கூடினார்கள். அந்தப் புலவன் இன்னுந் தன் மனைவிக்குத் தெரிய வில்லையே யென்று சினந்து வாசி என்றான். அதுகேட்டு மாமாவுக்குப் பெரிய நோய் கண்டு வாசியானதாக மனைவி நினைத்து மனந்தேறினாள். கடைசியாய்ப் புலவன் வெளிப்படையாகக் குதிரை வந்ததென்று சொல்ல மனைவி நாணத்தையும் அச்சத்தையும் அடைந்தாள். இவ்வகையாகக் கணவனுக்குந் தனக்கும் நடந்த உரையாடலை மனைவி தன் தோழிக்குச் சொன்னதாகப் பாடிய

விருத்தம்

சுந்தரியே புறமேகி வந்ததுணை வரைநோக்கிச்
சுபமென் றென்றேன்
வந்ததோ ரசுவமென்றார் கோரமென்றார் மயங்கி
நின்றேன் மாமா வென்றார்
நொந்தழுதேன் பலர்மொய்த்தார் வாசியெனத்
தேறினே னுவன்ற யாவும்
அந்தமுறுங் குதிரையென்று சொலிச்சினந்தார்
நாணமிகுந் தஞ்சி னேனே. (11)

நம்முடைய கருத்தைப் பிறர் அறியவும் பிறருடைய கருத்தை நாம் அறியவுமே கடவுள் நமக்கு வாயையும் மொழிகளையுங் கொடுத்திருக்கிறார். நாம் பேசுகிற மொழிகளிலும் செய்கிற நூல்களிலும் நம்முடைய கருத்து நன்றாகப் பிறருக்கு விளங்காவிட்டால், அந்த மொழிகளைப் பேசாமலும் அந்தநூல்களைச் செய்யாமலும் ஊமைபோல் பேசாமலிருந்துவிடுவது மிகவும் நன்மை. குருடனுஞ் செவிடனுங் கூத்துப் பார்க்கப் போய்க் குருடன் கூத்தைப் பழித்தானும் செவிடன் பாட்டைப் பழித்தானும் என்பது

போல் சில புலவர்களும், ஆசிரியக்கோலம் பூண்டுகொண் டவர்களும் உரை நடையான நூல்களையும் தாங்களும் செய்கிறதில்லை; பிறர் செய்கிற நூல்களையும் ஒப்புக்கொள் ளாமல், குற்றம் உண்டுபண்ணுவதே அவர்களுடைய இயற்கைக் குணமா யிருக்கின்றது. கற்றவர், கல்லாதவர் முதலிய யாவர்க்கும் பயன்படும்படி, கல்விமான்கள் உரை நடைவடிவான நூல்களைச் செய்து உரைநடைவடிவம் விளங்கச்செய்ய வேண்டுமென்பது நமது வேண்டுகோளா யிருக்கின்றது.

## இளமையே கல்விக்கு ஏற்றது

சிறு பிள்ளைகளுடைய மனம் இளக்கமாயும் மென் மையாயு மிருப்பதால், இளமைப் பருவத்தில் அவர்களுக் குக் கற்பிக்கும் கல்வியும் நற்குணங்களும் அவர்களுடைய அறிவில் பதிந்து நன்றாய் வேரூன்றிக்கொள்ளும். பெரியவர் களான பின்பு கற்பிப்பதினால் பயனில்லை. பொன் வெள்ளி முதலிய ஐவகைப் பொருள்களையும், மெழுகு, படிகம் முதலியவைகளையும் உருக்கி இளக்கியிருக்கும் பொழுது, வேண்டிய வடிவங்களையும், நகைகளையும், ஏனங்களையும், செய்துகொள்வதுபோலவும், பச்சை மண்ணைக்கொண்டு பல குடம் முதலியன செய்வதுபோலவும், உழுது திருத்தி இளக்கமாயிருக்கிற நிலத்தில் வேண்டிய விதைகளை விதைப்பதுபோலவும், இளமைப்பருவத்திலே கல்வியையும் நல்லறிவையும் கற்பிக்கவேண்டும். விளையும் பயிர் முளை யிலே தெரியுமென்பது போல நற்குணமும் சிறு பருவத் திலே உண்டாகி உடனுடன் வளருகிறபடியால் பயிரிட்ட வன் அடிக்கடி களை பிடுங்கி மிகப் பாதுகாப்பாகப் பயி ரைக் காப்பாற்றுவதுபோல், சிறுவர்களுடைய அறிவில்

தீக்குணமாகிய களைகள் வளராதபடி தாய் தகப்பன்மார் கள் எப்போதும் பாதுகாப்பாயிருக்க வேண்டும். சிறு பிள்ளைகளுடைய ஒவ்வொரு மொழியையும் செய்கைகளை யும் நடைகளையும் உன்னிப்பாய்ப் பார்த்து அவர்களிடத் தில் நன்மையைக் காணும்பொழுது விருப்பத்தைக் காட் டியும், தீமையைக்காணும்பொழுது தகுந்த அறிவு சொல்லி யும், நயமும் அச்சமுமாகப் பிள்ளைகளை வளர்க்கவேண்டும். பிள்ளைகளை மிகுதியாய்க் கண்டிப்பதனால் அவர்கள் தாய் தகப்பன்மார்களுக்கு அஞ்சிப் பலபொய்களைச் சொல்லவும் சூது, வஞ்சகம் முதலான தீக் குணங்களைக் கற்றுக் கொள்ள வும் இடமுண்டாவதுந் தவிரத் தாய் தகப்பன்மார்களிடத் தில்வெறுப்பும் உண்டாகுமானதால் பிள்ளைகளை மிகுதி யாய்க்கண்டிப்புச்செய்வது தகுதியன்று; பிள்ளைகள் குற்றஞ் செய்தாலும் அதைப் பொய் சொல்லி மறைக்காமல் உண் மையை ஒப்புக்கொள்ளுவார்களானால் மெய் சொன்னதற் காக அவர்களிடத்தில் விருப்பத்தைக் காட்டவேண்டுமே தவிர அவர்கள் செய்த குற்றத்தைப் பாராட்டக் கூடாது. தாய் தகப்பன்மார்கள் நல்வழியில் நடந்தால் பிள்ளைகளும் நல்வழியில் நடப்பார்கள். அவர்கள் தீய வழியில் நடந்தால் பிள்ளைகளும் தீயவழியில் நடப்பார்களானதால், தாய் தந்தைகள் எப்போதும் நல் வழியிலே நடக்கவேண்டும்.

பிள்ளைகள் விளையாடுவதினால் உடல்நலம் முதலான நன்மைகள் விளைகின்றபடியால் பிள்ளைகள் சில நேரம் விளை யாடவும் இடங்கொடுக்கவேண்டும். கெட்டவர்களுடைய பழக்கம் பாம்போடு பழகுவதற்கு ஒப்பானதால் தீயோர் கள் கூட்டுறவை விலக்கி எப்போதும் நல்லோர்களுடன் பழக்கம் பண்ணும்படி கட்டளையிடவேண்டும். பலர் பிள்ளை களைப் பெறுகிற கடமை மட்டுமேயன்றி, அவர்களை நல்ல

வர்களாக்குகிற வேலையில் எள்ளளவும் கவலை வைக்கிற தில்லை. மக்கள் நடமாட்டமற்ற காட்டில் தானே வளர்ந்து தானே உயிர் வாழ்கிற மரம்போல் பிள்ளைகளுடைய நடக்கையைக் கருதாமற் கவலையற்று விட்டுவிடுகிறார்கள். இப்படிப்பட்ட தாய் தந்தையர்கள் மக்களுக்குப் பகைவர்களா யிருக்கிறார்கள். பிள்ளைகளைத் தாய் தந்தையர்கள் தங்களுடைய விருப்பத்தாற் பெறுகிறார்களேயன்றித் தங்களைப் பெறும்படி தாய் தந்தையர்களைப் பிள்ளைகள் கேட்டுக் கொண்டதே இல்லை. அறையிலிருக்கிறவனை யிழுத்து அம்பலத்தில் விட்டு வேடிக்கை பார்ப்பது போலவும், விருந்துக் கழைத்து விடத்தைக் கொடுப்பதுபோலவும், உருவில்லாம லிருந்த பிள்ளைகளை உருவாக்கி உலகத்திற் கொண்டுவந்த தகப்பன்மார்கள், அவர்களுக்குச் சிறு பிள்ளைக் காலத்திலே நற்குணங்களைக் கற்பிக்காமல் அவர்கள் வாணாள் வரையில் தீயோர்களாய்த் தொல்லைப்படும்படி விடுவது. பெரிய பிள்ளைக்கொடுமையா யிருக்கிறது.

## மாதர்களுக்குக் கல்வி இன்றியமையாதது

பிள்ளைகளை நல்லவர்களாக்குவதும தீயவர்களாக்குவதும் தாய் தந்தையர்களுடைய பொறுப்பிலிருப்பதால், பிள்ளைகளுடைய பொல்லாத் தன்மைக்குப் பெற்றவர்களே முதன்மையான ஏதுவானவர்களாயும் கடமையாளிகளாயு மிருக்கிறார்கள் இப்படிப்பட்ட தாய்தந்தையருக்கு அரச தண்டனை யில்லாவிட்டாலும், தெய்வ தண்டனை அவர்களை விடாது. ஆண்பிள்ளைகளாயினும் எப்போதும் தாய் தந்தையர் வீட்டிலிருக்கத் தக்கவர்கள். பெண்பிள்ளைகள் வேறொருவர் வீட்டிற்குப் போக வேண்டியவர்களானதால் அவர்களை நல்லவர்களாக்கி யனுப்புவது அவர்களுக்கே

நன்மையாகவும், அப்படியில்லாவிட்டால் அவர்களுக்கே எப்போதும் துன்பமாகவு மிருக்கும். நற்குணங்களை மாதர்களுக்குக் கற்பியாமல் அவர்களைக் கணவன் வீட்டுக் கனுப்புவது நீந்தத் தெரியாதவனைக் கடலில் பிடித்துத் தள்ளுவதுபோலவும், போர் நூல் தெரியாதவனைப் போர் முகத்தில் விடுவதுபோலவும், குதிரையேறத் தெரியாத வனைக் கடிவாளமில்லாத பொல்லாக் குதிரைமேலேற்றித் துரத்துவது போலவு மிருக்கின்றது.

## ஓர் ஐரோப்பிய மாது

சிறு போதிலேயே தாய் தகப்பன்மார்கள் அடக்கி நல்வழிக்குக் கொண்டு வந்ததனால் நற்குணங்களிற் சிறந்த ஓர் ஐரோப்பிய மாதினுடைய வியத்தகு பண்புகளை விளக்கு வோம். அவள் நல்வினை வைப்பு; பொறுமைக் கிருப்பிடம். அறிவுக் களஞ்சியம்; நற்குணப் பிறப்பிடம். கற்பழகி; நல்லுதவி செய்பவள். வியத்தகு அழகுடையவள்; அறிவிலே அமைச்சு. அறிவுக் கொடையாளி; அடக்கம் நிறைந்தவள். வாடாமலர்; ஒளிமழுங்கா விளக்கு. ஆடாத மாமயில்; அலையாத மாங்குயில். ஓடாத புள்ளிமான்; பறவாத பைங்கிளி. மாற்றிலலாத் தங்கம்; மாசில்லா மாணிக்கம். கோதில்லாக் கரும்பு; குறையில்லாத் திங்கள். அவளைப் பார்த்தாலும் பசி தீரும்; கண்டாலும் கலி நீங்கும். அவள் உயிர் போனாலும் ஒரு பொய்சொல்லத் துணியாள்; தீமையென்றால் பாம்பைக் கண்டதுபோல் நடுங்குவாள். அவள் எந்த வேலை செய்தாலும் கடவுளுடைய எண்ணத்தை மறவாள்; அவள் எந்த உயிரையும் சொந்த உயிர்போல எண்ணி உதவிசெய்வாள். கணவனுக்குச் சிறிதும் வருத்த மில்லாமல் குடும்பச் சுமைகளையெல்லாம் தானே தாங்கிக்

கொள்வாள்; குடும்பத்திற்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் தக்க காலத்தில் தேடி வைத்துக்கொள்வாள். வருமானத்துக்கு மிஞ்சின செலவு செய்யாள்; தன்னுடைய நிலைமைக்குத் தகுந்த செயல்களில் யாதொரு குறைவும் செய்யாள். தன் வீட்டுச் செயல்களை வெளியிலே பேசாள்; பிறர்மேல் பழிப்பான மொழிகளைத் தானும் பேசாள்; பிறர் பேசவும் இடங் கொடாள்.

## அவளுடைய தூய்மையும் பெருமையும்

அவளுடைய உள்ளமெப்படித் தூயதோ அப்படியே அவளுடைய உடலும் ஆடையும் எப்போதும் தூய்மையா யிருக்கும். அவளுடைய வீடு, ஏனம் முதலியவைகளைத் துலக்கி எப்போதும் கண்ணாடிபோல் வைத்திருப்பாள். அழுக்கென்பது மருந்துக்கு வேண்டுமானாலும் அவள் வீட்டில் அகப்படாது. அவளுடைய குடித்தனப்பாங்கும் மேன்மை வழிபாடும் அருமை! அருமை!! என்று யாவரும் புகழ்வார்கள். அந்த அறக்கடவுளின்மேல் குற்றம் நினைத்தால் தலை வெடிக்குமென்று அஞ்சித் தீயோர்களும், அவளுடைய கற்புக்குத் தீங்கு நினையார்கள். அவள் வேலைக்காரர்கள் அன்பாகவும் அருமையாகவும் நடப்பிக்கும் தன்மையினால், அவர்கள் எல்லா வேலைகளையும் தாங்களே உள்ளக்கிளர்ச்சியுடன் செய்து முடிப்பார்கள்.

## அவளுடைய அட்டில் வன்மை

அவளுடைய அட்டில் வன்மைக்கு நளனுடைய அட்டில் வன்மையும் ஈடல்ல; அவள் கைபட்டால் வேம்பும் கரும்பாகும். அவள் சமைத்தால் பிடி சோறு இறங்காதவர்களும் படி சோறு உண்ணுவார்கள்; சோற்று வெறுப்புள்ளவர்களும் உணவு விருப்பமுடையவராவார்கள். தீராத

நோயாளிகளும் நலமடைந்து நோயற்ற நல்லுடல் பெறு வார்கள்; அவள் ஆக்கும் கறி கமகமவென்று வீடெல்லாம் மணக்கும்; அதைத் தொட்ட கையும் மணக்கும். உண்ட வாயும் மணக்கும். அதைக் கழுவிய நீரெல்லாம் மணக்கும்; பின்னும் ஊரெல்லாம் மணக்கும். அவள் வீட்டில் சாப்பி டக்கூடாத சைவர்களும் அவளுடைய சமையலுக்கு வாயூறுவார்கள்; அவள் வீட்டு வேலைகளையெல்லாம் குறை வறச் செய்து முடித்தபின்பு நல்ல நூல்களையெடுத்துப் படிப்பாள். சில நேரம் வீணை வாசிப்பாள்; சில நேரம் தையல் முதலிய ஒவிய வேலைகளைச் செய்வாள்.

## அவளுக்கு எல்லாம் கணவனே

கணவனே அவளுக்குப் பற்றுக்கோடு; கணவனே அவளுக்குச் செல்வம். கணவனுடன் கூடிவாழ்வதே அவளுக்குப் பேரின்பம்; கணவன் இருக்கும் இடம் காடாயிருந்தாலும் அஃது அவளுக்குக் கற்பகச் சோலைக்கு ஒப்பு. பட்டணமாயிருந்தாலும் கணவன் இல்லாத இடமே பாழ்; கணவனுடைய அன்பே அவளுக்கு இன்பு. அவளுக்கு என்ன துன்பம் வந்தாலும் கணவனுடைய அருட்பார்வை பட்டால் அவளுடைய துன்பமெல்லாம் ஞாயிற்றைக்கண்ட பனிபோல நீங்கும்; அவளுக்கு எவ்வளவு செல்வமிருந்தாலும் கணவனுடைய அருள்மட்டும் நீங்கினல் நீரைவிட்டு நீங்கிய தாமரை போலவும், நிலத்தை விட்டு நீங்கிய பயிர்போலவும் வாடுவாள். அவளுடைய மனமும் கணவனுடைய மனமும் ஒன்றுயிருப்பதால் கணவனுக்கு எதில் விருப்பமோ அதிலே அவளுக்கும் விருப்பம்; கணவனுக்கு எதில் வெறுப்போ அதிலே அவளுக்கும் வெறுப்பு. கணவன் உண்டால் அவளுக்குப் பசி தீரும்; கணவன் மகிழ்ந்தால் அவளுக்கு உண்டாகும்

மகிழ்ச்சி. கணவனுடைய துன்பமே அவளுக்குத் துன்பம்; கணவனுக்கு இடர் வரும் காலத்தில் அவளே அடைக்கலம். கணவன் துன்புறுங் காலத்தில் அவளே இன்பம்; அவன் நோயடையுங் காலத்தில் அவளே மேலான மருந்து. வறுமைக் காலத்தில் அவளே செல்வம்.

## அவளுடைய கணவன் அன்பு

கணவன் அழகில் ஆயிரம் அமாவாசைக்குச் சமானமானவனாயிருந்தாலும் அவனைப் பேரழகுடையவனாக எண்ணுவாள்; அவன் வறியனாயிருந்தாலும் குபேரச் செல்வமுடையவனாக எண்ணுவாள். தான் துரைமகளாயிருந்தாலும் கணவனுக்குத் தன்னை ஊழியக்காரியாக நினைப்பாள்; கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருடன், மரமானாலும் மணவாளன். ஆதலால் கணவனுக்கு எப்போதும் அரசவழிபாடு செய்வாள். கணவன் ஒன்றும் தெரியாத அறிவிலியாயிருந்தாலும் அவனுடைய மொழியை மறைமொழிபோல் எண்ணுவாள்; ஒரு செய்தியிலும் கணவனுக்குச் சினம் வரும்படி நடவாள்; கணவன் வீணாகச் சினந்தாலும் பொறுமையுடனே பொறுத்துக்கொண்டு சமயம் பார்த்து அமுத மழை போல இன்பமான மொழிகளைப் பேசிக் கணவன் சினத்தைத் தணிப்பாள்.

## நற்குணமாதின் நன்மொழி

அந்தப் பெண்ணினல்லாளை வேறொரு மாது நோக்கி, "உன்னுடைய தகப்பனோ நாடாளுகிற அரசன், உன்னுடைய தாயோ அரசி, இப்படிப்பட்ட தந்தை தாயார்களையும் தோழிமார்களையும் அரண்மனையையும் விட்டு நீங்கி, ஒரு வறியவனை மணஞ் செய்துகொண்டு அவனுடைய சிறுமனையில் வாழும்படி உனக்கு ஏற்பட்டதே என்று வருத்

தப்பட்டாள். அதைகேட்ட அந்த நல்வினையாட்டி "என்னுடைய கணவர் வீடு சிறு வீடானதால் நான் எப்போதும் அவருக்கு அருகிலிருக்கும்படியான பேறு பெற்றேன்; அவர் வறிஞரானதால் அவருடைய ஊழியங்கள் யாவும் என்னுடைய கையால் செய்யும்படியான நற்பேறும் எனக்குக் கிடைத்து; இடமகன்ற பல அரண்மனைகளும் பல ஊழியக்காரர்களுமுள்ள என்னுடைய தாய் தந்தையருக்கு இப்படிபட்ட பேறு இல்லாமையால் அவர்களுடைய செல்வம் பாழ்ந்தது; பின்னும் என்னுடைய கணவரே எனக்கு அரசர். அவருடைய சிறு குடிசையே எனக்கு அரண்மனை; அந்த அரசருக்கு நானே குடி; அவருடைய அன்பே எனக்குச் செல்வம்; என்னுடைய கற்பே அவருக்கு நான் கொடுக்கும் கடமை," என்று மொழிந்தாள்.

* ஏந்தலாந் தந்தையைத்தாய் சகியர்கோ
யிலைவிட்டோ ரெளியர் சிற்றிற்
சார்ந்தனனென் றிகழுமின்னே சிற்றில்லா
லவரருகே தங்கப் பெற்றேன்
சேர்ந்தமிடி யாலவர்தம் பணியாவு மெனது
கையாற செய்யப் பெற்றேன்
பாந்தவமீ தின்றியெந்தை யன்னையவே
ருக்குநிதி பாழ்த்த தன்றே. (12)

o மிடியுளார் கேள்வரென் றுரைத்த மின்னாய்
கடிநகர் சிறுகுடில் காந்தர் வேந்தரா
மடியனே குடியவ ரன்பென் செல்வமாங்
குடியிறை யென்னிறை குறையுண் டோசொலாய் (13)

---

*நீதிநூல் கணவமனைவியர் இயல்பு 14-வது பாடல்.
o ,, ,, ,, 18-வது பாடல்.

பணம், நகை முதலியவைகளின்மேல் அவளுக்கு எவ்வளவும் விருப்பமில்லை. அவள் கணவன் பார்க்கத் தன்னை அழகுபடுத்திக்கொள்வதே அல்லாது மற்றவர்கள் பார்க்கத் தன்னை அழகுபடுத்திக்கொள்ளாள். கணவன் ஊரிலில்லாத காலத்தில் தன்னை அழகுபடுத்த வந்த தோழியை நோக்கி, நான் உண்ணுவதும் மலரணிந்து கொள்வதும், மகிழ்வதும், அழகுசெய்துகொள்வதும், என்னுடைய கணவர் பார்ப்பதற்காகவே யன்றி மற்றபடியல்லவே; இப்போது என் கணவர் ஊரில் இல்லையென்று உனக்குத் தெரிந்திருந்தும் என்னை நீ அழகுசெய்யவந்தது அறியாமையாகும் என்றாள்.

* உண்ணல்பூச் சூடல்நெஞ் சுவத்த லொப்பனை
பண்ணலெல் லாமவர் பார்க்க வேயன்றோ
அண்ணல்தன் பிரிவினை யறிந்துந் தோழிநீ
மண்ணவந் தனையிது மடமை யாகுமே. (14)

அம்மாதின் பெருமை

அவள் பிற ஆடவரை அறியாமலிருக்கிற அறியாமையன்றி வேறு அறியாமை அவளிடத்தில் இல்லை; தான் நல்வினையாட்டியாயிருக்கத் தன்னைத் தீவினையாட்டி என்று அவள் சொல்லுகிற பொய்யைத் தவிர வேறு பொய் சொல்லியறியாள்; தீவினையின் மேல் அவளுக்குப் பகையே தவிர வேறொருவரிடத்திலும் அவளுக்குப் பகையுமில்லை; நல்லவர்களைப் பார்த்து அவர்களைப்போல் மிகுந்த தகுதியுடைமை நமக் கில்லையேயென்று அவளுக்குண்டாகிற பொறுமையைத் தவிர வேறு பொறுமை அவளிடத்தில்

* நீதிநூல் கணவமனைவியர் இயல்பு 19-வது பாடல்.

இல்லை. இவளைப்போலுண்டாவென்று எல்லா மக்களும் சொல்லுகிற புகழ்ச்சிகளை அவள் முழுதுங் கொள்ளையடிப் பதேயல்லாது வேறு களவு அவளிடத்தில் இல்லை. தகுதி யறியாமல் ஐயமிடுகிற செய்கையில் அவள் செய்கிற இவறன் மையே அல்லாமல் தகுதியறிந்து ஐயமிடுவதில் எவ்வளவும் இவறன்மையில்லை. அவளும் அவளுடைய குடும்பத்தா ரும் அறம் செய்வதில் ஒருவரையொருவர் முந்திக்கொள்ள முயன்று அறத்தின் பொருட்டுச் செய்துகொள்ளுகிற சண் டையே தவிர வேறு சண்டை, மனவருத்தம், வேறுபாடு முதலிய தீக்குணங்கள் அவர்களிடத்தில் இல்லை. கடவுளி னுடைய அடித் தாமரையை அடைவதில் அவளுக்குப் பேரவாவே தவிர வேறு பேரவா அவளிடத்தில் இல்லை. அவளுடைய வீட்டுக்கு வருகிற ஈக்களும், எறும்புகளும் அழுக்கு அகப்படாமல் பட்டினியா யிருக்க நேருமது அல் லாது அவளிடத்திற்கு வருகிற வறியவர்கள் பட்டினி யாயிருப்பதில்லை. தன் கையில் இல்லாத காலத்திலும் தான் உண்ணும் உணவை ஏழைக்கிட்டுத் தன் வயிற்றுக்கு அவள் செய்யும் தீமையைத் தவிர வேறு தீமை அவள் செய்வதில்லை. தீமையைச் செய்யாமலிருப்பது மன்றி அதை நெஞ்சிலும் நினையாமல் மனம் மொழி செயல் மூன் றும் ஒரே தன்மையாயிருப்பாள். தீமை செய்யாமல் நன்மை செய்யவேண்டுமென்பது முழுமுதற் கடவுளுடைய மறை மொழியானதாலும், அந்த மொழியை புறக்கணிக்கக் கணவனுக்கு அதிகாரம் இல்லாமையினாலும், தீமை செய் யும்படி கணவன் கட்டளையிட்டால் அந்தக்கட்டளையை மட்டும் ஒதுக்குவாளே யல்லாது, மற்றச் செயல்களிலெல் லாம் கணவன்மொழியைச் செய்யத் தவறாள்.

## உறவினர்களிடத்திலும் அன்பு

கடவுளன்பு உடையவர்கள் தெய்வத்திற்குரிய கோயில், வழிபாட்டிருக்கை முதலியவைகளிடத்திலும் முயற்சியுள்ளவர்களாயிருப்பதுபோல், கணவன் அன்புள்ள அந்தச் சீமாட்டி தன் கணவனைப் பெற்ற தாய் தந்தையர்களையும் மிகுதியாக எண்ணி அவர்களுடைய அடி பணிந்து பணிவிடைசெய்வாள். முதுமைக்காலத்தில் உடல்மெலிவினால் சினம் வருவது சிலருக்கு இயற்கையானதால் தன்னுடைய மாமன் மாமி முதலானவர்கள் வீணாகத் தன்னைச் சினந்தாலும் அதைப் பாராட்டாமல் இனிமையாய்ப்பேசி அவர்களுடைய சினத்தைப் பொறுமைப்படுத்துவாள். அவர்கள் எங்கள் மருமகள் போலுண்டோ? இவளே எங்கள் கண்மணி; இவளே பெண்மணி, இவளே எங்களை வளர்க்கிறவள்; இவளே எங்களைக் கரையேற்றுகிறவள்; இவள் தேடக்கிடையாத பொருள்; காணக்கிடையாத கற்பகம் என்று மகிழும்படி போற்றுவாள். கொழுந்தன்மார், நாத்தனார் முதலியவர்களைத் தன்னுடைய உடன் பிறந்தார்களிலும் மிகுதியா யெண்ணி அவர்களுடைய காலிற் பட்டது தன் கண்ணிற் பட்டதாக நினைந்து முழு அன்பு காட்டுவாள். அவளும் அவளுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் நடக்கிற ஒழுங்கையும், பணிவையும், அவர்களுக்குள் இருக்கும் ஒற்றுமையையும், மாறாத அன்பையும், அதனாலுண்டாகிற இன்பத்தையும் எண்ணுமிடத்தில் அவளுடைய வீட்டை நிலவுலக வீடுபேறென்று சொல்லத் தடையில்லை.

## அவளுடைய நல்லியல்பு

அவளுக்கு எப்போதும் பிறருக்குதவி செய்யும் எண்ணமே தவிர வேறு எண்ணமில்லை; உணவிலார்க்கு உணவு

படைப்பாள். உடையிலார்க்கு உடை தருவாள்; தாயில்லாப் பிள்ளைகளைத் தாய்போலத் தாங்குவாள். துக்கமுள்ளாரைத் தேற்றுவாள்; அழுவாரோடு அழுது ஆறுதல் செய்வாள். நோயாளரை அடிக்கடி உசாவி வேண்டிய பக்குவங்கள் செய்வாள்; அறிவில்லார்க்கு அறிவு கற்பிப்பாள்; அன்பிலார்க்கு அன்பைப் படிப்பிப்பாள்; வைவாரையும் வாழ்த்துவாள்; வாழ்த்துவார் முன்னே தன்னைத் தாழ்த்திக்கொள்வாள். தீமை செய்வோர்க்கும் நன்மை செய்வாள்; வறியவர்களுக்குத் தன்னால் கூடியமட்டும் உதவி செய்வாள். பொருளுதவி செய்யத் தன்னால் இயலாதபோது மொழியுதவியாயினுஞ் செய்வாள்; பிறர் துன்பத்தை நீக்கத் தன்னால் முடியாதபோது அழுது இரங்கிக் கடவுளை வேண்டுவாள். இன்னும் அவளுடைய நற்குணங்களைச் சொல்லப்புகின் அளவின்றி விரியுமாதலால் இம்மட்டில் நிறுத்தினோம்.

திருமணக் காலங்களில் பெண்களுக்குக் கற்புள்ள அருந்ததியையும், காட்டிற் கற்பிழந்து கல்லாச்சமைந்த அகலியையும், அம்மி மிதிக்கிற சடங்கு மூலமாகக் காட்டுவது போல் தாய் தந்தையருடைய முயற்சிக் குறைவினாலும் கெட்ட பழக்கத்தினாலும் தீயவைகளைக் கற்றுக்கொண்ட ஒரு தீயவளுடைய கெட்டவரலாற்றை அடியில் எழுதுகின்றோம்.

## கோடியவள் வரலாறு

தீமைகளுக்கெல்லாம் அவள் பண்டகசாலை; நன்மையெல்லாம் அவளுக்கு நஞ்சு; தின்மையெல்லாம் அவளுக்குத் தேவாமிர்தம். தப்புகளெல்லாம் அவளுக்கு முழு உரிமை; வம்பு மொழிகளெல்லாம் அவளுக்கு வாய்ப்

பாடம். பொய்யிலே அவள் முழு நிறைவு; உண்மை பேசுவதில் அவள் ஊமை. நல்வினையென்றால் போராட்டம்; குற்றங்களென்றால் கொண்டாட்டம். தன் குற்றங்களைப் பார்ப்பதில் அவள் சுத்தக் குருடி; பிறர் குற்றங்களைப் பார்ப்பதில் அவளுக்கு ஆயிரங் கண். எளியவர்களுக்கும் அவளுக்கும் ஏழாம் பொருத்தம்; ஐயம் கேட்டவரை நையச் செய்வாள். தானம் கைக்கூலியே யல்லாமல் வேறு தானமில்லை; கொடை உயிர்க் கொடையே யல்லாமல் வேறு கொடையில்லை. எச்சிற்கையாலுங் காகமோட்டாள்; அறுத்த கைக்குஞ் சுண்ணும்பு கொடாள். பிள்ளைகள் ஆத்திசூடி படிக்கும்பொழுது (தா) என்று படித்தாலும் அவள் சண்டைக்கு வருவாள்; அவள் முன்னே ஈயைப் பார்த்து ஈ யென்று சொன்னாலும் சினப்பாள். அவளுக்குக் கோவிலில்லை; குருவில்லை; பூசையில்லை; பணமே தெய்வம்; பணமே குரு; பணமே வாழ்வு; பணமே எண்ணம். கண்ணாடியில் தன் முகம் தெரிவதுபோல அவள் யாரைப் பார்த்தாலும் தன் வடிவமாகத் தோன்றுவதால் தன் குற்றத்தைப் பிறர்மேலேற்றி வீண்பழி பேசுவதே அவளுடைய இயல்பு. அவள் கள்ளியானதால் எல்லாரையுங் கள்ளிகளென்று சொல்வாள்; அவள் பொய் பேசுகிறவளானதால் எல்லாரையும் பொய்யரென்றும் நினைப்பாள். அவள் வஞ்சகியானதால் எல்லாரையும் வஞ்சகியென்று வைவாள், அவளுடைய வாய்க்குப் பூட்டுப் போட்டாலும், அவள் வசவு பேசாமலிராள். அவள் காதுகளைத் தைத்து வைத்தாலும், கோள் மொழிகளைக் கேளாமலிராள். அவள் கைகளைக் கட்டி வைத்தாலும், களவு செய்யாமலிராள். அவள் கால்களில் விலங்கிட்டு வைத்தாலும், அண்டை வீடுகள் போய்ச் சண்டைசெய்

யாம லிருக்கமாட்டாள். அவளுக்கும் அவள் கணவனுக்கும் வாணுட்பகை; கணவன் ஒன்று சொன்னுல் அவள் ஒன்பது சொல்வாள். அவன் வேண்டுமென்பதை இவள் வேண்டாமென்பாள்; அவன் தெற்கென்றுல், இவள் வடக்கென்பாள்; அவன் கறுப்பென்பதை இவள் வெளுப்பென்பாள்; கணவனுக்கு எது விருப்பமோ அது அவளுக்கு வெறுப்பு; கணவனுக்கு யார் நண்பர்களோ, அவர்களெல்லோரும் அவளுக்குப் பகைவர்கள்; கணவனுக்கு யார் பகைவர்களோ, அவர்களெல்லோரும் அவளுக்கு நண்பர்கள். கணவனே அவளுக்கு நஞ்சா யிருக்கும்போது, கணவனுடைய உறவினர்களை அவள் எப்படி மதிப்பாள்? மாமி தாலியுடனிருப்பதைத் தான் அறுதலியாயிருப்பதுபோ லெண்ணுவாள். மாமிக்குத் தலை வலித்தால் இவளுக்குத் தலையில் முடி அணிந்ததுபோ லிருக்கும். நாத்தனுருக்குப் பிள்ளை பிறந்தால் இவளுக்கு ஒரு பிள்ளை இறந்ததுபோ லிருக்கும். ஓரகத்திக்கு ஒரு நலம் உண்டானுல் இவளுக்குத் துக்கம் ஏற்பட்டதுபோன்றது. அவள் கழுத்தில் தாலியிருப்பது இவள் கழுத்தில் இல்லாதது போன்றது. அவளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும் ஓயாத பெரும்பகை. பிள்ளைகளை அவளும் விரும்புகிறதில்லை. பிள்ளைகள் விருப்பப்படி அவளும் நடவாள். அவள் விருப்பப்படி பிள்ளைகளும் நடவார்கள். திருமண வீட்டில் கட்டிக்கொண்டு அழுகிறவள், இழவு வீட்டில் என்ன செய்யமாட்டாள்? தன் கணவனையும் பிள்ளைகளையுமே பகைக்கிறவள், மற்றவர்களைப் பகைக்காமலிருப்பாளா? அவளுக்கு ஊரெல்லாம் பகை. ஊரெல்லாம் கெட்ட பெயர், எல்லாரும் அவளுடைய கேட்டை விரும்புகிறவர்களே தவிர அவளுடைய நன்மையை வேண்டுகிறவர்கள்

ஒருவருமிலர். அவளுடைய மன மாசு எப்படியோ அப்ப டியே உடல்மாசும் உள்ளவளா யிருக்கிறாள். அவளுடைய உடலில் எந்தக் காலத்திலாயினும் தண்ணீர் பட்டிருக் குமோ என்னவோ அறியோம். அவள் உடலின் அழுக் கைத் திரட்டினால் பல வண்டிச் சுமை ஏற்றலாம். அவ ளுடைய துணி, நெருப்பிலே போட்டாலும் வேகாது. அவளுடைய உடலில் மலர் பட்டால் உடல் நாற்றத்தை மலர் வாங்கிக்கொள்வதே யல்லாது மலர் மணம் உடலில் சாருகிறதில்லை. அவளுடைய உடல்போலவே அவளு டைய வீடும், அழுக்குகளுக்கு இருப்பிடமா யிருக்கின் றது. அழுக்கில் பிறக்கிற பல பூச்சிகளும் புழுக்களும் அவளுடைய வீட்டில் தலைமுறை தலைமுறையாக உறவு முறைகளுடன் வாழ்ந்துகொண்டிருக்கும். அவளுடைய வீட்டின் அழுக்குகளையும் அவளுடைய தீய வழியால் அவளுக்கு வருகிற பல துன்பங்களையும், அவளுக்கும் அவளுடைய குடும்பத்தாருக்கும் நடக்கும் ஓயாத சண்டைகளையும் கலகங்களையும், வழக்குகளையும் வேறு பாடுகளையும் பார்க்குமிடத்தில் அவளுடைய வீட்டை நிலவுலக நிரயமென்று உறுதியாகச் சொல்லலாம்.

அம் மாது தீயவழியிற் சென்று கெட்டுப்போன தற்கு அவளுடைய தாய் தகப்பன்மார்களின் பாதுகாப் பின்மையே முதன்மையான ஏதுவானதால், மாதர்களுக்கு இளமைக்காலத்தில் நல்லறிவு புகட்டுவது கட்டாயமா யிருக்கின்றது. கடவுளன்பே எல்லா நல்வினைகளுக்கும் அடிப்படையாயும் முடியாயும் இருப்பதால் கடவுளன்பை முந்திக்கற்பிக்க வேண்டும். கடவுளன்பு உண்டாவதற்குக் கடவுள்வடிவ உறுதி செய்வது கட்டாயமாகையால், உலக வட்டங்களை அணுவில் அடைக்கத் தொடங்கியது போல

வும், விண்ணுக்கு நடுவிடம் காட்டுவதுபோலவும், நரி வாலைக்கொண்டு கடலாழம் பார்ப்பதுபோலவும், மனச் சாட்சியாய் விளங்கா நின்ற கடவுளுடைய கணக்கற்ற நற் குணங்களில் சிலவற்றைப் புல்லறிவுடையோனாகிய நான் எனக்குத் தெரிந்தமட்டில் ஒருவாறெடுத்துரைக்கத் துணி வுற்றேன்.

## கடவுளின் பெருமை

கடவுள் ஆணுமல்ல; பெண்ணுமல்ல; அலியுமல்ல; அவருக்கு ஊருமில்லை;யாருமில்லை;நேருமில்லை;அவருக்குத் தாயுமில்லை; தந்தையுமில்லை; மனைவியுமில்லை; பிள்ளைகளு மில்லை; அவருக்கு ஒப்புமில்லை; தப்புமில்லை; அவர் முதற் பொருளுமல்லர்; ஒலியுமல்லர்; இயங்குபவரும் அல்லர்; இயங்காதவருமல்லர்; காணப்பட்ட ஒருபொருளுமல்லர். ஐம்பொறிகளுக்கும் வியப்பானவர். அறிவுப்பொருளுக்கு எட்டாத மேனிலையை உடையவர். மிகுந்தபெருமையை உடைய உலகத்தலைவர், ஒற்றையாணை யுருளையை உருட்டு பவர். தேவர்களுக்குத் தேவர், அரசர்கட்கு அரசர்; எல் லாம் உணர்ந்தவர்; எல்லா ஆற்றலு முடையவர்; எப் பொருள்களுக்குந்தலைவர். எல்லாவற்றிற்கும் மூலகாரணர்; எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருப்பவர். அவர் தந்தை நாம் பிள்ளைகள்; அவர் ஆசிரியர் நாம் மாணவர்; அவர் அரசர் நாம் குடிகள்; அவர் ஆண்டவர் நாம் அடிமை; அவர்கொடையாளி நாம் இரவலர்; அவர் செல்வர் நாம் வறியவர்; அவர் அறம்புரிபவர் நாம் மறம்புரிபவர். அவர் என்றும் உள்ளவர் நாம் அழிபவர்; அவர் உருவமற் றவர் நாம் இழிந்த உருவத்தையுடையவர்; அவர் எளிய வர்கட்கு அருள்பவர்; நற்குணம் நிறைந்தவர்; அறிவில்

ஞாயிறாய் உள்ளத்திற்கு இன்பத்தை யுண்டாக்குபவர்; மேலான தூய்மையுடையவர்; அடியார்கள் நண்பர் அறக் கடல்; எல்லா அழகு முடையவர்; எல்லாப் பொறுப்பு முடையவர்; இன்பவடிவினர்; இம்மை மறுமை நலங்களைக் கொடுப்பவர்; இன்பப் பெருக்கையுடையவர்; வீடுபேற் றையளிப்பவர்; முதற்காரணமான மறையையுடையவர்; கண்கண்ட தெய்வம்; எல்லா அறிவு முடையவர்; முதல்நடு முடிவுகளைக் கடந்தவர். ஒளிவடிவினர், மறைமுடிவுகளுக்கு வேறுபட்டவர்; ஞானவரலாற்று எழுத்தாளர்; கபடநாடக சூத்திரர்; ஞாயிறுகோடிகளை உடலாகவுடையவர்; இரு அறிவுக் கண்களையுடையவர்; அடைக்கலத்தையும் வீடு பேற்றையும் அளிப்பவர். தீவினையை அழிப்பவர். உயிர் கட்கு நண்பர்; தேவர்கட்கு அரசர்; பெருஞ் சிறப்பையு டையவர்; இப்படிப்பட்ட தன்மைகளையுடையவரும் மன மொழிகளுக்கு எட்டாதவரும்; பெரிதுக்கெல்லாம் பெரிய வடிவத்தையுடையவரும் உலகங்கள் எல்லாவற்றையுந் தாங்குபவரும் மேலான பரம் பொருளுமாகிய கடவுளி னுடைய பெருஞ்சிறப்பமைந்த பெருமை தெரிவதற்கு அவ ரால் படைக்கப் பெற்ற பேருலகப் பொருள்களின் தன்மை யைப் பிண்டமாக வேனுஞ் சிறிது அறிந்து கொள்ள வேண் டியது முதன்மையானது.

இந்த நிலவுலகம் எவ்வளவு பெரிதென்பதை நாமெல் லோரும் காட்சியளவையா யறிந்திருக்கிறோம். இந்த நிலத்தினும் ஞாயிறு பதின்மூன்று லட்சம் பங்கு அதிகப் பெரிதாயிருக்கின்றது. அந்த ஞாயிற்றைப்போல் பல கோடி ஞாயிறுகளும் திங்கள்களும் வான பரப்பில் உடு வடிவமாக நமக்குக் காணப்படுகின்றன. நாம் பார்க்கிற உடுக்களைத் தவிர நம்முடைய பார்வைக்கு எட்டாத சேய்

மையிலும் அதற்கு மேலுங் கீழும் எந்தப் பக்கங்களிலும் அடுக்கடுக்காக எண்ணிக்கையில்லாத உடுக் கூட்டங்களி ருக்கின்றன. அவைகள் ஒன்றுக்கொன்று அண்மைபோல நமக்குக் காணப்பட்டாலும் அவைகளுக்கும் இந்த நிலத் திற்கும் எப்படிச் சேய்மையோ, அப்படியே அவைகள் ஒன்றுக்கொன்று சேய்மையுள்ளவைகளா யிருக்கின்றன. இந்த ஞாயிற்றைச் சுற்றி நிலம் முதலிய பல கோள்கள் ஓடுவதுபோல விண் மீனாகிய ஒவ்வொரு ஞாயிற்றையும், பல உலகங்கள் சுற்றியோடுகின்றன. அப்படியானால், கட வுளால் படைக்கப்பட்ட திங்கள் ஞாயிறுகளையும் உலக கோடிகளையும் எண்ணத் தொலையுமா? ஏட்டில் அடங்குமா? அந்தப் பேருலக கோடிகளுக்குள் இந்த நிலம் ஓர் அணு வுக்கும் ஒப்பானதன்று. எல்லா உலகங்களையுந் தாங்கிப் படியளக்கிற தலைவருக்குச் சிறிது சினம் உண்டானால் அண்ட அடுக்குகள் குலைந்து ஒன்றோ டொன்று மோதி ஞாயிறு மண்டலம் திங்கள் மண்டலத்தின் மேலும் திங்கள் மண்டலம் பூமண்டலத்தின் மேலும் விழுந்து சின்னாபின் னமாய்ச் சிதறுண்டுபோமென்பது ஐயமா? பல அண்ட கோடிகளும் கடவுளினுடைய அடித்துகள். ஞாயிறு தீ முதலிய சுடர்கள் கடவுளினுடைய மேலான ஒளியுடம் பிலிருந்து சிதறிய சிறு பொறிகள். கடல்களும்முகில்களும் அவருடைய அருட்கடலிலிருந்து தெறித்த சிறு துளிகள். பெருங்காற்று அவருடைய சிறு விரலின் அசைவு; உயர்ந்த மலைகள் அவர் விளையாடும் பந்துகள். அவருடைய பிள் ளைகளாகிய நமக்காக அவரால் நியமிக்கப்பட்ட ஊழியக் காரர்களே ஐம்பெரும் பூதம் முதலானவைகள்; கற்ப கோடி காலங்கள். அவருக்குக் கணப்பொழுது. தமக்கு உடலில்லாதிருந்தும் எல்லா உயிர்களுக்கும் உடலைக்

கொடுப்பவர் அவரே. அவரே தாம் உண்ணாமல் மற்ற உயிர்களுக்கு உணவளிப்பவர்; அவரே தாம் உறங்காமல் மன்னுயிர்களைத் தூங்கவைத்துக் காவலாயிருப்பவர்; அவரே தாம் நடவாமல் திரியாமல் எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்திருப்பவர்; அவரே தாம் கைவேலை செய்யாமல் நினைத்தமாத்திரத்தில் அண்ட கோடிகளை யுண்டாக்கிக் காப்பவரும்; அவரே அந்த அண்டகோடிகளைப் பம்பரம்போல ஆட்டுகின்றவரும்; அவரே கண்ணாயிருந்து பொருள்களைக் காட்டுகின்றவரும்; அவரே அருட்கண்ணால் நம்மைப் பார்ப்பவரும்; கொடிய பகைவர்கள் மேல் சினங் காட்டுகிற இரண்டாம் குலத்தவரும் அடியார்களுக்குத் துறக்க வாணிகம் செய்கிற வணிகரும் அவரே; அண்டங்களை ஆட்டுகிற ஆண்மையரும் அவரே, உயிர்த் தொகைகளுக்கு வேளாண்மை செய்கிற வேளாளரும் அவரே; எல்லா உலகங்கட்கும் தலைவரும் அவரே; அண்டவீடுகளைக் கட்டிய தெய்வத் தச்சனும் அவரே; உடற்குடங்களைச் செய்கிற குலாலனும் அவரே. தொண்டர்மொழியைத் தட்டாதவரும் அவரே. ஒரு சிறிய விதையைக் கொண்டு பெரிய மரங்களையும், வெண்ணீர் செந்நீர் கலந்த சிறு துளியைக் கொண்டு பெரிய உடல்களையும், ஒரு கூலத்தைக்கொண்டு கோடிகூலங்களையும் செய்கிற மாய வேடிக்கைக்காரரும் அவரே, மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும், பறவைகளுக்கும், மலர்களுக்கும், பல நிறங்களையும், அழகுகளையும், அமைத்தெழுதிய ஓவியக்காரரும் அவரே. உயிர் அரசன் குடியிருக்கும் பொருட்டு இரண்டு கால் நாட்டி, குருதியாகிய நீர் சேர்த்து, ஊன் சுவர் எழுப்பி, என்புக் கழிகளைப் பரப்பி நரம்புக் கயிறுகளாற் கட்டித் தோலாகிய கூரை வேய்ந்து, ஒன்பது வாயில் விட்டு உடல் வீட்டைச்

செய்த கொத்தனரும் அவரே. அந்த வீடு உயிர்க் காற்றால் இயங்கச்செய்த மறைமொழியாளரும் அவரே. நமக்குத் தெரியாமல் நம்முடைய ஓவியங்களில் இருக்கிற சித்தரும் அவரே. உடல் வீடு தானே வளரவும், நிமிரவும், குனியவும், நடக்கவும், ஓடவும், இருக்கவும், படுக்கவும், தூங்கவும், பலவேலைகளைச் செய்யவும், உண்ணவும் உண்ணுகின்ற பொருள் செரித்து உடலெங்கும் பரவவும், மனமானது இயங்கவும், நினைக்கவும், எண்ணவும், இன்புறவும், துன்புறவும், ஐம்புலன்கள் பல இன்பங்களை நுகரவும், நம்முடைய பொறுப்பில்லாமல் உயிர் தானே ஓயாமல் நடந்துகொண்டிருக்கவும், செய்த மேலான தண்ணளிச் செல்வரும் அவரே.

## உயிர்த்தோகைகள் வழியாக உதவி

இந்த நிலவுலகை கடவுள் உண்டாக்கி எத்தனையோ காலமாகியும் அது என்றும் புதிதாயும் வளப்பமாயும் செழிப்பாயுமிருக்கின்றது. ஒரு பொருளை நாம் வீட்டில் வைத்திருந்தால் எத்தனை காலமானாலும் அந்தப் பொருள் மட்டு மிருக்குமே யல்லாமல், அது பல பொருள்களை உண்டாக்காது? நிலமோவென்றால் ஒன்றைக் கோடியாகச் செய்கின்றது. ஒரு நெல்லை விதைத்தால் எண்ணிமுடியாத பல நெற்களை உண்டாக்குகின்றன. ஒரு மரக்கால் கூலத்தை இருபது மரக்காலாகவும், பத்து மரக்கால் கூலத்தை இருநூறு மரக்காலாகவும் நிலம் விளைவிக்கின்றது. கடவுளுடைய கட்டளையினால் நிலம் முதலிய ஐம்பூதங்களும் எல்லாப் பொருள்களும் மனிதர்களுக்கு ஊழியக்காரர்கள்போல் வேலைசெய்கின்றனவென்பதை அடியில் விளக்கிக் காட்டுவோம்.

நிலமானது எல்லா அசையும் பொருள் அசையாப் பொருள்களும் அடங்கிய பண்டகசாலையா யிருப்பது மன்றிப், பயிரிடுகிற குடியானவன்போல் ஒன்பதுவகைக் கூலங்களையும் பிற உண்பொருள்களையும் நமக்கு விளைவித்துக்கொடுக்கின்றது. நீர் தண்ணீர்க்காரியைப்போல் நீராடல் குடித்தல் முதலியவைகளுக்கு நீரளித்து உதவுகின்றது. காற்று ஆலவட்டக்காரன்போல் நமக்குச் சாமரை போடுகின்றது. நெருப்பு சமையற்காரனைப்போல் உணவாக்க உதவுகின்றது. விண் விளக்கு ஏந்துகிறவன்போல ஞாயிறு திங்கள் உடு முதலிய விளக்குகளைத் தாங்கிக்கொண்டிருக்கின்றது. முகில்கள் நீர் இறைக்கிற பெண்களுக்கு ஒப்பாயிருக்கின்றன. ஆறு, ஏரி, குளம் முதலியவைகள் நீர் வைக்கிற தடாகங்களா யிருக்கின்றன. மரவகைகளும், பயிர் பூண்டு முதலியவைகளும் பலசரக்குக் கடைக்காரர்கள்போல இலை, பூ, காய், கனி, கிழங்கு, கூலம் முதலிய பல பொருள்களைக் கொடுக்கின்றன. மலைகளும், கடல்களும், மணிவணிகர்கள்போல ஒன்பதுமணி முதலிய பல பொருள்களைக் கொடுக்கின்றன. பூச்செடிகள் பூவிறைக்கிற பெண்களாயிருக்கின்றன. பல மூலிகைகள் மருந்துகொடுக்கிற மருத்துவர்களாயிருக்கின்றன. பூஞ்சோலைகள், நாடகசாலைக்கு ஒப்பாக விருக்கின்றன. மயில், அன்னம், கோழி, கொக்கு முதலிய பறவைகள் நாட்டியப் பெண்கள்போலக் கூத்துச் செய்கின்றன. குயில், கிளி, பூவை வானம்பாடி முதலிய பறவைகள் பாடகர்கள்போல இன்னிசை பாடுகின்றன. காகம், பருந்து, கோழி முதலிய பறவைகளும், பல்லி, அரணை முதலியவைகளும் வீடு தூய்மை செய்கிற பெண்கள் போலப் பல பூச்சிகளையும், இறந்துபோன பல உயிர்

களையும், அழுக்குகளையும் உண்கின்றன. பருத்திச்செடி, பட்டுப்பூச்சி முதலியவைகள் நமக்கு அறுவை வணிகர்களாயும், நாய், ஆடு, புலி, கரடி முதலியவைகள் சால்வை, போர்வை, கம்பளம் இவைகளைக் கொடுக்கிற வணிகர்களாயுமிருக்கின்றன. தேனீக்கள் தேன் கொடுக்கின்றன. ஆ, எருமை, ஆடு முதலியவைகள் நமக்குப் பால்கொடுக்கின்றன. காளை, குதிரை, யானை, ஒட்டகம் முதலியவைகள் ஊர்திகளாய் நம்மைச் சுமப்பதுமன்றி, இன்னும் பல வேலைகளுக்கும் உதவுகின்றன. வீடு பெருக்குகிறவள்போல அந்த விலங்குகள் புல் வைக்கோல் முதலிய பலவிதமாய்ச் சிந்திகிடக்கிற பொருள்களைத்தின்று வீட்டைத் தூய்மை செய்கின்றன. நாய்கள் காவற்காரரைப்போல் வீடு காக்கின்றன. கழுதைகளும் நமக்காகப் பல சுமைகளைச் சுமக்கின்றன. சேவல்களும், செம்போத்துகளும், காகங்களும் நமக்கு ஞாயிற்றின் எழுச்சியைக் காட்டுகிற கட்டியக்காரர்களா யிருக்கின்றன. அரிமா, புலி, கரடி முதலிய கொடிய விலங்குகளும், பாம்பு, தேள் முதலிய நஞ்சுடை உயிர்களும், தெய்வ அச்சத்தைக் கற்பிக்கிற குருவுக்கு ஒப்பாகவிருக்கின்றன. நயமும் அச்சமும் காட்டிப் பிள்ளைகளை வளர்க்கும் தாய் போலத் தண்ணளி மிக்க கடவுள், அந்தக் கொடிய உயிர்களையும், இடி, பெருங்காற்று, நிலநடுக்கம், பஞ்சம் முதலிய துன்பங்களையும் நமக்குத் தெய்வ அச்சமும் அன்பும் நற்குணங்களும் உண்டாவதற்காகப் படைத்திருக்கிறாரென்பது உறுதியேயாயினும், அந்தக் கொடிய உயிர்களாலும் துன்பங்களாலும் நமக்கு அடிக்கடி தொல்லை உண்டாகாதபடி அவைகளை அடக்கி வைத்திருக்கிறாரென்பது வெளிப்படை அல்லவா? எலிகள் மிஞ்சாதபடி

பூனைகளையும், பாம்புகள் மிஞ்சாதபடி கீரி, மயில் முதலிய வைகளையும் அப்படியே பிற கொடிய விலங்குகளுக்கு வெவ்வேறு பகைவர்களையும் கடவுள் உண்டுபண்ணியிருக்கிறார். மேலே நாம் விளக்கியபடி உலகத்தில் காணப்பட்ட பொருள்களில் ஒன்றேனும் நமக்குப் பயனற்றதாயிருக்கவில்லை.

## ஒருவருக்கோருவர் உதவி

மேற்சொன்ன பொருள்களுமன்றிப் பூமண்டலத்தில் உள்ள எல்லா மனிதர்களும் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கும்படி கடவுள் செய்திருக்கிற வேடிக்கை வியக்கத் தக்கதாயிருக்கின்றது. ஒரு குடும்பத்திலுள்ள பல பெயர்கள் பல தொழில்களைச் செய்து அந்தக் குடும்பத்தைத் தாங்குவதுபோல, உலகமாகிய பெரிய குடும்பப் பாதுகாப்பின் பொருட்டு எல்லா மக்களும் தொல்லைப் படுகிறார்கள். ஒருவன் பேரரசனாயிருந்தாலும் வறியவனானாலும் அவன் ஒருநாள் வாழ்வதற்கும் எத்தனையோ மக்களுடைய உதவி வேண்டியதாயிருக்கின்றது. நமக்கு உணவு கிடைப்பதற்காக நிலத்தை வெட்டித் திருத்துகிறவர்களும், உழுகிறவர்களும், பயிரிடுகிறவர்களும், தண்ணீர் பாய்ச்சுகிறவர்களும், களை பிடுங்குகிறவர்களும், காவல் காக்கிறவர்களும், அறுத்துக் களம் சேர்க்கிறவர்களும், கூலங்களைக் குத்தி அரிசியாக்கி விற்கிறவர்களும், இவ்வகையாக அதிற்றொடர்புள்ளவர்கள் இத்தனை பெயரென்று கணக்கிடக்கூடுமா? அப்படியே உப்பு முதல் கற்பூரம் வரையில் உள்ள எல்லாப் பொருள்களும் காய், கறிகளும் நமக்குக் கிடைப்பதற்காக எண்ணிக்கையில்லாத மக்கள் பலவிடங்களில் பலவிதமாகப் பாடுபடுகிறார்

கள். வேட்டி நமக்குக் கிடைப்பதற்காகப் பருத்தி விதைத்தெடுத்துப் பஞ்சாக்கிக் கொட்டி நூற்றுச் சாயந் தோய்த்து நெய்து வேட்டியாகிறவரையில் உடல் வருந்திய வர்களுக்குக் கணக்குண்டா? சமையலுக்கு வேண்டிய விறகும், நீரும் கிடைப்பதற்காகப் பலர் விறகு வெட்டி விற்கிறார்கள்; பலர் ஆறு, ஏரி, குள முதலியவைகளை வெட்டுகிறார்கள். பலர் நமக்கு நடக்கப் பாதை செப்பனிடுகிறார்கள். நமக்கு வீடு கட்டப் பலர் செங்கல், ஓடு, சுண்ணாம்பு முதலியவைகள் செய்கிறார்கள். பலர் மரங்கள் வெட்டி அறுத்துப் பலகையாக்குகிறார்கள். அரசர்கள் அமைச்சர்கள், படைவீரர்கள்; வழக்குமன்றத் தலைவர்கள் முதலானவர்கள் நமக்குப் பகைவர் அச்சமில்லாமலும், ஒழுங்கற்றமுறை நடவாமலும், முழுக்கருத்தாகப் பாதுகாக்கிறார்கள். குருமார், ஆசிரியர் முதலியோர் நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் அறிவுரை செய்கிறார்கள். மருத்துவர்கள், தச்சர், கொல்லர், தட்டார், வண்ணார், நாவிதர், செக்கார், சேணியர் முதலானவர்கள் நமக்காகப் பல தொழில்கள் செய்கிறார்கள்.

## ஒரு நாட்டாருக்குப் பலநாட்டார் உதவி

ஒரு நாட்டார் பிழைப்பதற்காக அந்நாட்டு மக்கள் மட்டுமல்லர், பூமண்டலத்திலுள்ள எல்லா மக்களும் உழைக்கிறார்கள். நம்முடைய மாதர்கள் அடிமுதல் முடிவரை ஆடை யணிகல அழகு செய்துகொள்வதற்காகப் பல நாடுகளிலிருந்து பல நிறமான ஆடைகளையும், ஒன்பதுவகை மணிகளையும், தங்கம், வெள்ளி முதலிய ஐந்து கனிப் பொருள்களையும், எடுத்துக்கொண்டு கடல் வழியாயும், கரை வழியாயும், எண்ணிக்கையில்லாத மக்கள்

வருகிறார்கள். அந்த ஒன்பதுவகை மணிகளும ஐவகைக் கனிப்பொருள்களும் வீட்டுக்குதவியான பல ஏனங்களும், பொருள்களும், நமக்குக் கிடைப்பதற்காக மலைகளிலும், கடல்களிலும், பொற்சுரங்கங்களிலும், காடுகளிலும், பல்லாயிரக்கணக்கான மக்கள் கை சலிக்கக் கால் சலிக்க உடல் மெலிய நெற்றித் தண்ணீர் நிலத்தில் வீழப் படாத பாடுகளெல்லாம் படுகிறார்கள். இவ்வகையாக ஒவ்வொருவனும் வாழ்கிறதற்கு உலகத்திலுள்ள எல்லா மக்களும் வருத்தப்படும்படி ஐயன் செய்திருக்கிற புதுமையை யார் அளவிடக்கூடும்?

## உலகம் முழுவதும் ஒரே குடும்பம்

உலக முழுவதும் ஒரு குடும்பமென்பதற்கும் ஒரே இன்பமென்பதற்கும் இன்னும் பல காண்டலளவை எடுத்துக்காட்டுகள் உண்டு. நிலவட்டத்தைச் சேர்ந்த எல்லாக் கண்டங்களிலும் இருக்கிற எல்லா மக்களுக்கும் உடல்களும், உறுப்புகளும், குணங்களும், இன்ப துன்பங்களும், சாவு வாழ்வுகளும், எவ்வளவும் வேறுபாடில்லாமல் ஒரே தன்மையாயிருக்கின்றன. எல்லா மொழிகளிலும் உள்ள இலக்கணம் இலக்கியம், கணிதம், கட்டளை, சொற்போர் முதலிய நூல்களும், புலவர்களுடைய கற்பனைகளும், கிழமை, திங்கள், ஆண்டு முதலிய கணக்குகளும், எல்லா நாட்டாருக்கும் சற்றேறக்குறைய ஒரே வகையாயிருக்கின்றன. நிலச்சுமையினாலும் அந்தந்த நாடுகளுக்குரிய குளிர்ச்சி, சூடு முதலிய மாறுபாடுகளினாலும், உணவு மாறுபாடுகளாலும், சில நாட்டார் வெளுப்பாயும், சில நாட்டார் கறுப்பாயுமிருக்கிறார்களே யன்றி வேறு காரணமல்லவே. ஒரு நாட்டிலுள்ள பேரூர்

வாசிகளுக்கும் சிற்றூர் வாசிகளுக்கும் பேச்சு முதலிய சில செய்திகளில் சிறிது மாறுபாடு உண்டாயிருப்பது கூட்டுறவுக் காரணமேயல்லாமல் இயற்கைக் காரணமன்றே.

ஒரு பார்ப்பனன் வீட்டுக் குழந்தையைப் பாலப்பருவத்தில் ஒரு தாழ்ந்த குலத்தான், தன் வீட்டில் கொண்டு போய் வளர்த்தால், அது அந்தத் தாழ்ந்த குலத்தார் போலப் பேசவும் நடக்கவும் கற்றுக்கொள்ளும். ஒரு பறையன் வீட்டுப் பிள்ளையைப் பார்ப்பனன் கொண்டு போய் வளர்த்தால், அதற்குப் பார்ப்பனனைப்போல மொழியும், நடை உடை பாவனைகளும் உண்டாகும். இதுவே சேர்க்கைக் காரணமென்பதைக் காட்டுகின்றது; பார்ப்பனப்பிள்ளை பூணூல், திருநீறு உருத்திராக்கத்துடன் பிறக்கவில்லை; பறையன்வீட்டுப்பிள்ளை மாடு மேய்க்கிறகோல், குடுவை, கந்தையுடன் பிறக்கவில்லை; மன்னர்மக்கள் தலையில் முடியும், கையில் செங்கோலும், அரையில் பட்டாடையும் அணிந்துகொண்டு பொன்னுருவம்போல் பேரழகாய்ப் பிறக்கவில்லை. ஏழைப்பிள்ளை இரந்து குடிக்கும் ஓட்டுடன், கோவணாண்டியாய் அழகற்றதாய்ப் பிறக்கவில்லை; அரசன் வீட்டுப் பிள்ளையாயிருந்தாலும் எல்லாப் பிள்ளைகளும், ஒரு கோவணத்துக்கும் வழியில்லாமல் ஆடையில்லாமலும், பற்றுக்கோடில்லாமலும், பலமற்றும் பிறக்கின்றன; பிறந்தபிற்பாடு, எந்தக் குலப்பிள்ளையாயிருந்தாலும், படித்தால் அறிவாளியாயும், படியாவிட்டால் அறிவில் உலக்கைக் கொழுந்தாயும், ஆகின்றானென்பது யாவருக்கும் நன்கு தெரிந்ததாயிருக்கின்றது. நிலைபெற்ற உயிர்கள் எல்லாவற்றிற்கும் ஒரே தந்தையாகிய கடவுள், எல்லாருக்கும் ஞாயிறு,

திங்கள், உடுக்கள் விளங்கவும் எல்லாருக்கும் சமமாக ஐம்பூதங்கள் வேலைசெய்யவும் கட்டளையிட்டிருக்கிறார். வேறுபாடில்லாமல் எல்லா மனிதர்களும் நோய் முதலிய துன்பங்களால் பிடிக்கப்பட்டு இறுதிக்காலத்தில் தங்களோடுகூட ஒன்றுங் கொண்டுபோகாமல் பிறந்த கோலமா யிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல காரணங்களால் உலகமெல்லாம் ஒரு குடும்ப மென்பதும், ஒரே குலம் என்பதும், கண்கூடா யிருக்கின்றது.

## நாட்டிற்கு அரசன் வேண்டும்

ஒரு சிறிய குடும்பச் செயல் நடப்பதற்குப் பெரியர் சிறிய ரென்கிற நிலைமை ஒழுங்கு இருக்கவேண்டியது எப்படி இன்றியமையாததோ, அப்படியே உலகமாகிய பெரிய குடும்பம் பிழைப்பதற்கு அரசரென்றும், குடிகளென்றும், மேலோரென்றும், கீழோரென்றும், செல்வர்களென்றும், வறியவர்களென்றும் பல நிலைமைகளிருக்கவேண்டியது முதன்மை. அப்படிப்பட்ட ஏற்றத் தாழ்வில்லாமல் எல்லோரும் ஒப்புடையவர்களா யிருந்தால் தலைக்குத் தலை மூப்பாய், அரசமுறையில் பல தொழில்களும் நடவாமல் வேறுபாடு உண்டாகுமென்பது உறுதியே. மேலான நிலைமையுள்ளவர்களுக்கும் நிலைமைக்குத் தக்க தொல்லைகளும், கவலைகளும், பகைவர் அச்சமும், நோய்களும் மிகுதியாயிருக்கின்றன. அவ்வளவு தொல்லைகள் தாழ்ந்த பதவியில் இருப்பவர்களுக்கு இல்லை. அவர்கள் படும் உடல் உழைப்பானது அவர்களுக்கு உடல் நலத்தையும், மனமகிழ்ச்சியையும், மேலான இன்பத்தையும் கொடுக்கின்றது. தாங்கள் குடியிருக்கிற வீடுகள் அசைந்தாலும் சோம்பலை மேற்கொண்டிருக்கிற செல்வர்களுக்கு உடல் நலமும் மனநிறைவும்

குறைவா யிருக்கின்றன. பல நாடுகளைப் பிடித்தால் ஓர் அரசனுக்கு எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகுமோ, அவ்வளவு மகிழ்ச்சி கூலி வேலை செய்து சிறு பொருளைத் தேடுகிற எளியவர்க்கு உண்டாகின்றது. இவ்வாறாக ஒரு செய்தியில் குறைவுள்ளவர்களை வேறொரு வகையில் மிகுதிப்படுத்தி எல்லோரையும் சமமாகக் காப்பாற்றுகிற அருட்கடல் வடிவராகிய கடவுளை எப்போதும் எண்ணும்படி மாதர்களுக்குக் கற்பிக்கவேண்டும்.

## நல்வினையின் சிறப்பு

தெய்வத்தை யடைவதற்கு நல்வினையே வழியாயிருப்பதால், மாதர்களுக்கு நல்லுரை கற்பிப்பது முதன்மையா யிருக்கின்றது. நல்வினைக்கு நல்வினையே சமமல்லாது, அதற்கு ஒப்புச் சொல்ல வேறொரு பொருளுமில்லை. நல்வினையே அறிவு; நல்வினையே பேறு; நல்வினையே ஆற்றல்; நல்வினையே வீடு; நல்வினையே மறைமுடிவு; நல்வினையே அறிவெல்லை; நல்வினையே முடிந்த முடிவு; எல்லா நூல்களும், மறைகளும், மறையறிவு நூல்களும், பழவரலாற்று நூல்களும், போற்றுவது நல்வினையையே; மறைமுடிவாளர்களும், செம்பொருட்டுணிவாளர்களும், முனிவர்களும், கல்வியறிவாளர்களும், எப்பொழுதும் விரும்புவதும், வழிபடுவதும், கற்பிப்பதும் நல்வினையே; துறவிகளும், தவத்தினர்களும், அனைத்தையும் துறப்பதும் நல்வினைக்காகவே; உன் கொள்கை, என் கொள்கை என்று தீயகொள்கையாகச் சொற்போர் செய்கிற எல்லாக் கொள்கையாளர்களும் நல்வினை ஒன்றையே மாறுபாடில்லாமல் ஒப்புக்கொள்கிறார்கள்; மேலான பரம்பொருள் மக்கட்பிறப் பெடுப்பதும், தீவினையை நீக்கி நல்வினையை நிலைநிறுத்தும் பொருட்டே; முன்னு

வில் பல பெரியோர்கள் தலையெடுத்து நிலைநிறுத்தினதும் நல்வினையே; இல்லறம், துறவற மென்று சொல்லப்பட்ட இரண்டறங்களிலும், அடியார்களைத் தூய்மையாக்குவதும் நல்வினையே; தூயவர்களை வீடுபேற்றிற் குரியவர்களாக்குவதும் நல்வினையே. சிறந்த இம்மை, மறுமை நலங்களைக் கொடுப்பதும் நல்வினையே; மக்கட்டன்மையைத் தெய்வத் தன்மையாக்குவதும் நல்வினையே.

## நல்லவர்களும் பொல்லாதவர்களும்

வீட்டிற்கும், நிரயத்திற்கும் எப்படி மாறுபாடோ அப்படியே நல்லோருந் தீயோரும் ஒருவருக்கொருவர் மாறுபட்டவர்களா யிருக்கிறார்கள். இந்த உலகத்திலும் நல்வினையாளர்களுக்குப் போற்றுதலும், தீயவர்களுக்குத் தூற்றுதலும் உண்டாகின்றன. நல்லவர்களுக்கு எங்கும் பெரும் புகழ்; தீயவர்களுக்கு எங்கும் பழிச்சொல். நல்லவர்கள் எல்லா மக்களுக்கும் நண்பர்கள்; தீயவர்கள் எல்லா உலகிற்கும் நோய்கள். அரசர்களும் வழக்குமன்றத் தலைவர்களும் நல்லவர்களைப் பாதுகாக்கிறார்கள்; நாட்டுத்தலைவர்கள் கூடியவரையில் நல்லவர்களையே தேடி தகுந்த அலுவல்களைக் கொடுக்கிறார்கள். தெரியாமையினாலும், ஒருதலையன்பு முதலிய காரணங்களாலும், தகுதியற்றவர்கள் அலுவல்களில் அமர்த்தப்பட்டாலும், அவர்களுடைய தகுதியின்மை வெளியான அளவில், அவர்களை அலுவல்களிலிருந்து தள்ள, யாவரும் வழி தேடுகிறார்கள். பெற்ற தாய் தந்தையரும், நல்ல பிள்ளைகளை விரும்பிக் கெட்ட பிள்ளைகளை வெறுக்கிறார்கள். நல்லவன் ஒருவனேயாயினும் அவனுடைய மொழியை ஆணையாகக் கொண்டு பொய்மையாளர்கள் பலராயிருந்தாலும், அவர்க

ளுடைய சான்றுகளைத் தள்ளி வழக்குமன்றத்தார் தீர்மானிக்கிறார்கள். கூடியமட்டும் நல்லர்களையே தேடி அவர்களிடத்தில் கொடுக்கல் வாங்கல் செய்ய யாவரும் விரும்புகிறார்கள். நாணயமுள்ள வணிகர்களிடத்திலே யாவரும் சரக்குகளைக் கொள்ள விரும்புகிறார்கள். பெண் வீட்டுக்காரர்கள் நற்குணமுள்ள ஆடவர்களையும், பிள்ளை வீட்டுக்காரர்கள் நற்குணமுள்ள பெண்களையுந் தேடி மணஞ் செய்வது, பெரும்பாலும் வழக்கமாயிருக்கின்றது. தலைவன் பொல்லாதவனா யிருந்தாலும் அவன் நல்லவர்களையே தேடித் தனக்குள் வேலைக்காரர்களாக வைத்துக் கொள்ளுகிறான்.

## நல்லவர்களை எல்லாரும் போற்றுவர்
## தீயவர்களை எல்லாரும் தூற்றுவர்

நல்லவர்களால் ஒருவருக்கும் துன்பமில்லாதபடியால், நல்லவர்களைப் பொல்லாதவர்களும் போற்றுகிறார்கள். பொல்லாதவர்களால் யாவருக்கும் தொல்லையானபடியால் பொல்லாதவர்களைப் பொல்லாதவர்களும் தூற்றுகிறார்கள். தீயவனைத் தீயவனென்று சொன்னால், அவனுக்கே சினம்வரும் அவனை நல்லவனென்று சொன்னால், அவனுக்கு மகிழ்ச்சியும் உண்டாகும் பொல்லாதவனை, அவனுடைய மனைவியும் பிள்ளைகளுமே நம்பார்கள். பொல்லாதவர்கள் சொல்லள விலாயினும் தாங்கள் நல்லவர்களென்று வெளிக்கோலம் பூண்டுகொண்டால் மட்டும், அவர்கள், இந்த உலகத்தில் வாழலாமே யொழிய வேறுவகையில் வாழ வழியில்லை. இந்தக் காரணத்தைப்பற்றியே உலகத்தில் கள்ள ஞானிகள் மிகுதியாயிருக்கிறார்கள். ஒருவனுக்கு அழகும், பொருளும் கல்வியும்

இல்லா திருந்தாலும், அவன் நல்லவனாயிருப்பானானால், அவனிடத்தில் யாவருக்கும் மேன்மையும், அவனைப் பார்க்கப் பார்க்க விருப்பமும் மனக்களிப்பும் உண்டாகின்றன. வடிவில் காமனாயும் பொருளுடையவனாயு மிருந்தாலும், அவன் பொல்லாதவனா யிருப்பானானால் அவனிடத்தில் யாவருக்கும் மனவெறுப்பும் அவமதிப்பும் உண்டாகின்றன. சிறு பிள்ளைகளும் பொல்லாதவர்களைக் கண்டு வெறுப்புறுகிறார்களென்பதற்கு, மழையில்லாத காலங்களில் சிறு பிள்ளைகள் கொடும்பாவி கட்டியடிக்கிற வழக்கமே சான்றாயிருக்கிறது. ஊருக்கு ஒரு நல்ல அலுவலாளன் வந்தால் அவனை எல்லாரும் கொண்டாடிக்கொண்டு அவனுடைய நன்மையை வேண்டுகிறார்கள். அவன் மிகப் பொல்லாதவனாயிருந்தானானால், அவனால் துன்பமடைந்தவர்கள் துன்பமடையாதவர்கள் எல்லோரும் ஒருங்கு கூடிச் சமயம் வரும்போது, அவனைக் கெடுக்கக் காப்புக் கட்டிக்கொள்ளுகிறார்கள். வீடுகளிலும் தெருக்களிலும் பல பேர் பேசுகிற மொழிகளைப் பார்த்தால், இன்னான் நல்லவன், இன்னான் கெட்டவன், என்கிற மொழி கலவாமலிராது. விவரம் தெரியாத குழந்தைகளும், நல்லவர்களிடத்தில் விருப்பத்தையும் பொல்லாதவர்களிடத்தில் வெறுப்பையுங் காட்டுகின்றன.

## நல்லவரை எல்லாரும் நாடுவர்

உண்மை, பொறுமை, அமைதி, அருள், கண்ணோட்டம், இரக்கம், உதவி, செருக்கின்மை, ஒழுங்கு முதலிய நற்குணங்களைப் புகழாதவர்கள் யார்? அந்த நற்செய்கைகளைத் தங்களுக்கு யாவருஞ் செய்யவேண்டுமென்று விரும்பாதவர்கள் யார்? ஆணவம், பொய், சூது, வஞ்சகம்,

களவு, கொலை, சினம், இவறன்மை, மையல், பகை, களிப்பு, உட்பகை, கொடுமை, ஒழுங்கின்மை, முதலிய தீச்செய்கைகளைப் பிறரிடத்திற் கண்டால், அவைகளை வெறுக்காதவர் யார்? அந்தச் செய்கைகளைத் தங்களுக்கு ஒருவரும் செய்யக்கூடாதென்று எண்ணுதவர்கள் யார்? பிறர்க்குதவி செய்பவனைக் கண்டால், அவனை விருப்ப மாகப் போற்ருதவர்கள் யார்? ஒருவன் தாங்கக்கூடாத துன்பத்தை நுகர்ந்தால், அவனுக்காக இரங்காதவர்கள் யார்? ஒருவன் மற்றொருவனை வீணுகத் துன்பஞ் செய்தால், அந்தக் கொடியனைச் சினக்காதவர்கள் யார்? ஒருவனுடைய கண்ணில் வேருெருவன் குத்துவதை நாம் பார்த்தால், நம்முடைய கண்களும் நோகின்றன. ஒருவன் வேருெருவனை அடித்தால், அதைப் பார்க்கிற நம்முடைய உடலும் வலிப்பதுபோ லிருக்கின்றது. தங்களுடைய சொந்தத் துக்கத்துக்காக அழாதவர்களும், பிறர் துக்கத் துக்காக அழுகிருர்கள். தீ வழியிற் பழகிப் பழகிக் கல்லைப்போன்ற கடின உள்ளங்கொண்டிருக்கிறவர்களைத் தவிர மற்ற யாவரும் துன்பப்படுகிற நல்லோனைக் கண்டால் இரங்காமலிரார்கள்.

கதைகளிற் சொல்லப்படுகிற சான்றவர்களைக்கூடப் போற்றுவதும், அவர்களுக்குப் பகையான மற்றவர்களை இகழ்வதும், யாவருக்கும் இயல்பாயிருக்கின்றன. இராவணன் இராமனுக்குத் தீமை செய்தானேயல்லாமல் நமக்கென்ன தீமை செய்தான்? துரியோதனன் தருமபுத்திரர் முதலானவர்களுக்குத் தாயாதியேயல்லாமல் நமக்குத் தாயாதியல்லனே, அரிச்சந்திரன் நமக்கென்ன உதவி செய்தான்! நட்சத்திரையன் நமக்கென்ன தீமை செய்தான்? இராமாயணத்தில் இராமர் தம் மனைவியைப் பிரிந்து

அழுகிற இடத்தை நாம் படிக்கும்பொழுது, சீதையுடனே நம்முடைய மனைவிகளும் போய்விட்டதுபோல் நாமும் கூட அழுகிறோம். அவருடைய படைகளாகிய குரங்குகளுடனே நாமும் கூடிக்கொண்டு இராவணாதிகளுடனே மனப்போர் செய்கிறோம். அந்தக் குரங்குப் படைகளுக்குச் சிறிது அழிவு வந்தாலும் நமக்கு உயிர் அழிவு வந்தது போல் வாடுகிறோம். இராமன் கணையால் இராட்சதப் பிணங்கள் மலை மலையாய்க் குவியும்போது நமக்கு இராமர் பொன்முழுக்குச் செய்ததுபோல, நாம் இன்பமடைகிறோம். தருமர் முதலிய பஞ்சபாண்டவர்களும் அரிச்சந்திரனும் நாடுகளை இழந்து வருந்தும் பொழுது நம்முடைய நாடுகளும் போய்விட்டனபோல் நாமும் வருந்துகிறோம். பின்பு அவர்களுக்கு முடிசூடலானபோது நமக்கும் ஆனதுபோல் மகிழ்ந்து, அவர்களுடனே நாமும் மனவரசாட்சி செய்கிறோம். இவை முதலிய காரணங்களால் நல்வினையின்மேல் விருப்பத்தையும், தீவினையின்மேல் வெறுப்பையும் மனிதருக்கு இயற்கைக் குணமாகக் கடவுள் கொடுத்திருக்கிறாரென்பது காண்டலளவையா யிருக்கின்றது.

## நல்வினை செய்வது மிகஎளிது

நல்வினை செய்வது, தொல்லையென்று சிலர் நினைப்பார்கள். அப்படி நினைப்பது தப்பு. சாண் வயிறு வளர்ப்பதற்காகக் கடற் பயணஞ் செய்தும், மலைகள் ஏறியும் காடுகளைக் கடந்தும், நாடுகள் பல சுற்றித் திரிந்தும், பல தொழில்களைச் செய்கிறார்கள். போர்க்களத்திற் போய்ச் சண்டைசெய்து உயிரைக்கொடுக்கிறார்கள். மனிதனுடைய செய்கையோ தெய்வத்தின் படைப்போவென்று மலைக்கும்படியான கற்றச்சு வேலைகள், ஓவிய வேலைகள், நீராவிப்

பொறிகள், இரும்பு வண்டிகள், கம்பி அஞ்சல் முதலிய அருமையான வேலைகளைச் செய்கிறார்கள். இராப்பகல் தொல்லைப்பட்டுப் பல நூல்களையும், பல தொழில்களையும் கற்றுக்கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்ட புதுமையான செயல்களைச் செய்கிற மனிதர்களுக்கு உண்மை, அமைதி, பொறுமை முதலிய நல்வினைகளைச் செய்வது மிகக்கடினமா? அவைகளைச் செய்ய அலையவேண்டுமா? உடல் வருத்தப்படவேண்டுமா? இல்லையே.

தீவினை செய்வது துன்பமே தவிர நல்வினை செய்வது துன்பமன்று. உள்ள செயலை உள்ளபடி சொல்வதுதானே உண்மை. நடந்த செயலை கூட்டாமற் குறைக்காமல் நடந்தபடியே சொல்வது எவ்வளவு எளிதான காரியம். நடவாத செயலை நடந்ததுபோலப் பொய் சொல்லுகிறதா யிருந்தால், முன்னுக்குப்பின் மாறுபாடில்லாமல் முந்தியே நன்கு எண்ணிக் கற்பித்துக்கொண்டு வானத்தில் மாளிகை கட்டுவதுபோலப் பொய்க் கோட்டை கட்டுவது எவ்வளவு வருத்தமா யிருக்கின்றது. அடிப்படையில்லாத சுவருக்கு ஆயிரம் முட்டுக் கொடுப்பதுபோல, ஒருபொய்யை நிலை நிறுத்தப் பல பொய்களைச் சொல்லியும் பயனில்லாமல் கேட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரியு மென்பது போல, எப்படியும் பொய் வெளியாகின்றது. கொலை, களவு. மோசம், வஞ்சகம், பிறனில் விழைதல் முதலிய கொடிய செய்கைகளைச் செய்வதற்குத் தகுந்த சமயங்களும், ஆயுதங்களும், உதவிகளும் தேடிக்கொண்டு அந்தச்செய்கைகளைச் செய்வது எவ்வளவு வருத்தமும், அச்சமும், உயிர்த் தொல்லையுமா யிருக்கின்றன. அந்தச் செய்கைகளுக்கு மாறுபாடான நல்வினைகளைச் செய்வது எவ்வளவு எளிதா யிருக்கின்றது.

## மனச்சான்று

எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கும் கடவுள் நன்மை தீமைகள் தெரியும்படி மனச்சான்றாகிய விளக்கை ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஏற்றி வைத்திருக்கிறாரென்பது உண்மையே. விவரந்தெரியாதபாலர்களும், மனத் தெளிவில்லாத பித்தர்களும் தவிர, மற்ற யாவரும் படித்தவர்களாயிருந்தாலும், படியாதவர்களாக இருந்தாலும் நன்மை தீமை தெரியாதவர்கள் ஒருவருமில்லை. படியாத அறிவிலிகள் அறம் அறமல்லாதவைகளைச் சேர்ந்த சில நுட்பமான செய்திகளை அறியாமலிருந்தாலும், பருப் பொருளாய் அறம் இன்னது, மறம் இன்னது என்பது யாவர்க்கும் இயற்கையாகத் தெரிந்திருக்கின்றது. அனது பற்றியே, "நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை" என்றும், "தன்னெஞ்சறியாத பொய்யில்லை தாயறியாத சூலில்லை" என்றும், "தன்னையறியாத சன்னதமில்லை" என்றும், பெரியோர்களுடைய மொழிகளிருக்கின்றன. மனச்சான்றாகிய விளக்கு நன்மை தீமைகளை நமக்குக் காட்டுகிறதுந் தவிர நாம் தீவினை செய்யும் பொழுது நம்மை இகழ்ந்து துன்புறுத்துகின்றது. நல்வினை செய்யும் பொழுது நம்மைப் புகழ்ந்து களிப்பிக்கின்றது. ஆகையால் மனச்சான்றுக்கு மாறுபாடில்லாமல் நடக்கிறவர்களே நல்வினையாளர்கள்.

## உலகம் நம்மைப் போன்றது

கண்ணாடியில் தோன்றுகிற நம்முடைய வடிவம் நாம் செய்வதை யெல்லாம் தானுஞ் செய்து காட்டுவது போல் நமது நிழல்போல் காணப்படும் இவ்வுலகம் நாம் செய்வதையே நமக்குச் செய்கின்றது. நாம்

ஒருவனைப் புகழ்ந்தால் அவனும் நம்மைப் புகழுகிறான். நாம் ஒருவனை இகழ்ந்தால் அவனும் நம்மை இகழுகிறான். நாம் ஒருவனுக்கு உதவி செய்தால் அவனும் நமக்கு உதவி செய்கிறான். ஒருவன் எளியவனாயிருந்தாலும் அவனுக்கு நாம் தீமை செய்தால் அவனும் ஒரு சமயத்தில் தீங்கு செய்வது கூடாத செயலன்று. கொக்கும் யானையைச் சாடுகின்றது. குப்பை உயர்ந்து கோபுரத்தை மூடுகின்றது. பெரிய பொருள்களைச் சிறிய செல்லும் தின்று அழிக்கின்றது. நாம் எதை விதைக்கிறோமோ, அதுவே நமக்கும் பயனாகும். வேம்பை விதைத்தவனுக்கு வேம்பேயல்லாமற் கரும்பு கிடைக்குமா? பாம்பை வளர்த்தவனுக்கு நஞ்சே யல்லாமல் அமிர்தம் கிடைக்குமா? அப்படியே நாம் நன்மை செய்தால் நன்மையும், தீமை செய்தால் தீமையும் நமக்கேற்படுகிறபடியால், தீமையை விட்டு நன்மையைப் பிடித்துக் கொள்வது அறிவாயும் நம்முடைய தந்நலமாகவும் இருக்கின்றது.

## குடியர்கள்

தீயவர்களுக்கு அவர்களுடைய தீயவழிகளே அவர்களை ஒறுக்கிற கருவிகளாய் இருக்கின்றன. பேருண்டி, சோம்பல் முதலிய தீக்குணங்களை மேற்கொண்டவர்களுக்கு உணவுசெரியாநோய் வாணளிழப்பு முதலிய பல துன்பங்கள் வளர்கின்றன. கள்குடிக்கிறவர்கள். பணத்தைக் கொடுத்து மருளை விலைக்கு வாங்குவது போல் பல துன்பங்களுக்கு ஆளாகிறார்கள். அவர்களுடைய குடியே, குடியைக் கெடுக்கின்றது. தாயென்றும், மனைவி யென்றும், நல்லதென்றும், கெட்டதென்றும் வேறுபாடு தெரியாமல் வீட்டைவிற்று, மாட்டை

விற்று, உடைமைகளை விற்றுப் பெருமை கெட்டு, பணிவு கெட்டு, மதிகெட்டு, விதிகெட்டு மனைவி யொருபக்கம், மக்களொருபக்கம், தாங்களொரு பக்கமாகத் திரிகிற குடியர்களுடைய பெருமையை என்னென்று சொல்லலாம்? கள்ளின் கடையே அவர்களுக்குக் காணியாட்சி. குப்பை மேடே அவர்களுக்குக் குடியிருப்பு. புழுதியே அவர்களுக்குப் போர்வை. சாம்பலே அவர்களுக்குத் தனிப் படுக்கை. சாணியே அவர்களுக்குத் தலையணை. விண்ணே அவர்களுச்கு வேட்டி. கள்ளே அவர்களுக்கு குடித்தலும்; குளித்தலும். துன்பங்களே அவர்களுக்குத் துணை. கள்ளை வாயில் விட்டவுடனே தங்களுடைய வரலாறுகளைத் தாங்களே சொல்லிக்கொள்ளுகிறவர்களாதலால், நாம் பின்னும் அவர்களைப்பற்றி மிகுதியாக விவரித்துச் சொல்ல வேண்டுவதில்லை.

காமிகள்

காமிகள் படுந் தொல்லைகளுக்கு அவர்களுடைய உடல்களே சான்றாகையால், வேறு சான்று வேண்டியதில்லை. ஈ, எறும்பு, புழுதி முதலியவைகளுக்குத் திருவிழாக்கொண்டாடுவதுபோல, அவர்கள் உடல்களில் புண்களும், கட்டிகளும், பல நோய்களும் கொண்டு வேப்பிலையுங் கையுமாகத் திரிகிறார்கள்.

"மேகங்கள் யாவுமுயர் விண்ணீங்கி வேசையர்தந்
தேகங்க ளில்வாசஞ் செய்கையான்—மாகமிசை
ஆசைக்குங் கார்காணு மவ்வேசை யர்கொடுப்பார்
காசைக கொடுப்பவர்க்கே காண்."

(முகில்களெல்லாம் விண்ணை விட்டுத் தாசிகளுடைய உடல்களில் வாழ்கிறபடியால், சில சமயங்களில் ஆசைக்

குப் பார்க்கவேண்டுமானாலும், விண்ணில் முகிலியக்க மில்லாமலிருக்கின்றது. தாசிகளுக்கு யார் காசு கொடுக் கிறார்களோ அவர்களுக்கே தாசிகள் மையல்களைக் கொடுப்பார்கள்.) ஆகையால் காமுகர்கள் மேக முதலிய பல நோய்கொண்டு, சின்னாளில் மாண்டுபோவதற்கு அவர்களுடைய கொடிய வழியே காரணமாயிருக்கிறது.

## வேறு ஒறுப்பு வேண்டியதில்லை

பொறாமை, சினம், பகை, உட்பகை முதலிய தீக் குணங்களை உடையவர்கள், பாம்புகளையும், தேள்களையும் பிடித்துத் தங்கள்மேலே விட்டுக்கொண்டு அவ்வளவு துன் பங்களைத் தாங்களே செய்துகொள்ளுகிறவர்களுக்கு எவ் வளவு துன்பமோ, அவ்வளவு துன்பங்களைத் தாங்களே அடைகிறார்கள். அவர்கள் தங்களுக்குத் தாங்களே செய்துகொள்ளுகிற துன்பங்களை, அவர்களுடைய பகை வர்களுஞ் செய்யத் துணியார்கள். தான் சேர்ந்த பொரு ளைச் சுட்டு அழிக்கிற நெருப்புப்போலப் பொறாமை, பகை முதலிய தீக்குணங்களுக்கு யார் இடங்கொடுக்கிறார் களோ, அவர்களே தொல்லைப்படுகிறபடியால், அவர் களுக்கு வேறு ஒறுப்பு வேண்டுவதில்லை. மற்றவர்களுக்கு உண்டாகிற இன்பமெல்லாம் பொறாமையுள்ளவனுக்குத் துன்பமாய் முடிவதால், அவனுக்கு ஓயாத துக்கமும் மனக்கலக்கமும் வளர்கின்றன. சினவெறி கொண்டவனை வென்றால், நெருப்புப் பற்றி எரிகிற வீட்டிற் குடியிருப் பவன்போல், தானே பல துன்பங்களை அடைகிறான். இத்தன்மையாகக் கொடியவர்களுக்கு, அவர்களுடைய தீக்குணமே ஒறுத்தலாயிருக்கும்படி இறைவன் செய் திருக்கிற வேடிக்கை வியக்கத்தக்கதாயிருக்கின்றது.

தீயவர்களுக்குத் தெய்வ ஒறுப்பும் தவிர, இந்த உலகத்தில் அரச ஒறுப்பும் ஏற்படுகின்றதே. கால் விலங்குகளும், தூக்குமரங்களும், சிறைக் கூடங்களும், பீரங்கிகளும், குண்டுகளும், மருந்துகளும், கத்தி முதலிய ஆயுதங்களும், தீயவர்களுக்காக உண்டாயிருக்கின்றனவேயொழிய மற்றபடியல்லவே. அரசர்களும், அமைச்சர்களும் வழக்குமன்றத் தலைவர்களும், ஊர் பாதுகாப்பு மறவர்களும், படை மறவர்களும், தீயவர்களை ஒறுப்பதற்காக இருக்கிறார்களேயல்லாது வேறல்லவே. தீயவர்கள் இல்லாவிட்டால் அந்த அலுவலாளர்களுக்குப் பிழைப் பேது.

## துன்பமே அறிவின் பாடசாலை

தீயவர்களுக்கு அவர்களுடைய தீமையே ஒறுப்பாயிருப்பதுபோல நல்வினையாளர்களுக்கு நல்வினையே நன்கொடையாயிருக்கின்றது. எல்லோருக்கும் நண்பர்களாகிய அவர்களுக்கு எல்லாரும் நண்பர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் ஒருவரையும் பகையாதபடியால் அவர்களுக்குப் பகைவர்கள் ஒருவருமில்லை. எல்லாவுலகப் பேறும், நல்வினையினாலுண்டாகிற மனமகிழ்ச்சியும், குற்றமற்ற உயிரின்பமும் அவர்கள் உள்ளவர்களாயிருக்கிறார்கள். தகப்பன், பிள்ளைகளை யடித்து அறிவு கற்பிப்பது போல், நல்லவர்களை ஆராய்வதற்காகவும், அவர்கள் அறிவிலும் நல்வினையிலும் மிகுதிப்படுவதற்காகவும், அவர்களுக்குச் சில சமயங்களில் கடவுள் துன்பத்தைக் கொடுப்பதுமுண்டு. அதற்காகச் சான்றோர்கள் பின்வாங்கமாட்டார்கள். **துன்பமே அறிவின் பாடசாலையாயிருக்கின்றது. உலகத்தில் துன்பங் கலவாத இன்பமில்லை. பிள்ளைப்**

பேற்றுத் தொல்லைக்கு அஞ்சினால் பிள்ளைச் செல்வம் கிடைக்குமா? மருந்து கசப்பென்று உண்ண அஞ்சினால் உடல்நல முண்டாகுமா? குளிருக்கு அஞ்சினால் குளிப்ப தெப்படி? அதுபோலத் துன்பத்துக்கு அஞ்சினால் இன்ப மில்லை. ஆதலால், சுடச்சுட ஒளிவிடும் பொன்னினைப் போலவும், சாணைக்கல்லில் வைத்துத் தேய்க்கத் தேய்க்க ஒளி மிகும் மணிகள்போலவும், என்ன துன்பம் வந்தா லும் பின்னிடாமல் நல்வினையில் மிகுதிப்படுபவர்களே நல்லவர்கள். இந்த உலகம், மேலுலகப் பயணத்திற்கு வழியேயல்லாமல், இது நமக்குச் சொந்தமல்லவே. ஓர் ஊருக்குப் பயணமாய்ப் போகிறவர்கள், வழியில் படுகிற துன்பங்களை மதியாமல், அந்த ஊரின்மேலே நோக்க மாய்ப் போவதுபோல், மேலுலகப் பயணக்காரர்களாகிய நாம், வழியாகிய இந்த உலகத்தில் வருகிற துன்பங் களுக்கு அஞ்சாமல், அந்தப் பயணத்தின்மேலே நோக்க மாயிருக்கவேண்டும்.

"தாட்டோட்டக்காரனுக்குத் தயிருஞ் சோறும், விசு வாசக்காரனுக்கு வெந்நீரும் பருக்கையும்" என்பது போல நல்வினையாளர்கள் வெளிப்பகட்டாய்த் தங்க ளுடைய பெருமையைத் தாங்களே சொல்லிக்கொள்ளார்க ளாகையால், அவர்களைச் சில சமயங்களில் உலகத்தார் அறியாமலும், அவர்களுக்குத் தகுந்த வழிபாடு செய்யா மலு மிருப்பார்கள். அதற்காக நல்வினையாளர்கள் சிறி தும் களைக்கிறதில்லை. நிலையற்றதான இம்மைச் செல் வத்தை, அவர்கள் விலக்குவதால், அவர்களுக்கு அந்தச் செல்வமில்லாமற் போவது குறைவன்று.

## இவ்வுலக செல்வத்தின் இழிவு

இவ்வுலக செல்வமெல்லாங்கூடி மண்ணும், கல்லும், மயிரும், பஞ்சும், அழுக்குகளுமேயன்றி வேறல்லவே. பொன்னும் வெள்ளியும் ஒருவகையான மண்ணேயன்றி வேறொன்றுமல்லவே. ஒன்பதுவகைமணிகள் பலவகைக் கற்களே. கம்பளம், போர்வை, சால்வை முதலியவைகள் நாய், புலி, கரடி, ஆடு முதலிய விலங்குகளின் மயிர்களே. பட்டுகள் பட்டுப் பூச்சியின் வாய் நுரையே. ஆடைகள் பருத்தி நூலே. புனுகு, சவ்வாது, கத்தூரி முதலியவைகள் பூனை மலமே. தேனென்பது தேனீக்களின் எச்சிலே. இப்படிப்பட்ட அழுக்குப் பொருள்கள் நல்வினைக்கு மாற்றுப்பயனாகுமா? அந்தப் பொருள்கள் எவ்வளவிருந்தாலும், மனிதனுடைய அவா அடங்காமலிருப்பதால், அந்தப் பொருள்கள் மனிதனுக்கு மனநிறைவையும், மகிழ்ச்சியையும் உண்டுபண்ணத் தக்கவைகளல்லவென்பது வெளிப்படையா யிருக்கின்றது.

## அவாவுக்கு அளவில்லை

உலகத்தில் நம்முடைய அவாவுக்கு ஓர் அளவில்லை. அலெக்சாந்தர் என்கிற அரசனுக்கு சைதியர் என்கிற குலத்தார் சொன்னதுபோல, நம்முடைய பேரவா எவ்வளவு பெரிதோ, அவ்வளவு பெரிய உடல் நமக்கிருக்குமானால், நம்முடைய தலைகள் அண்ட முகட்டை முட்டி, அப்பாற் செல்லும். அடிகள் பாதாள உலகமட்டும் அடையும். வலக்கை நிலத்தின் வடதிசைச் சுவரை ஊடுருவும். இடக்கை தென்றிசைக் கோடிமட்டும் ஏகும். நிலவுலகமெல்லாம் பிடித்த பின்பு, தேவர்களுடனே போர்செய்து விண்ணுலகத்தையும் பிடிக்கத் தொடங்குவோம். இன்

னுஞ் சில் உலகங்களிருந்தால், அவைகளையும் பிடிக்க வெற்றிக்கொடி கட்டுவோம். இப்படியாக நம்முடைய அவா அளவற்றதாயிருப்பதால், நிலவுலக செல்வம் நிலை யற்ற பொருளென்றும், மேலுலக செல்வம் மேலான தென்றும், வெள்ளிடை மலையாய் விளங்குகின்றது.

## செயற்கருஞ் செயல்கள்

பிள்ளை வரத்துக்குப் போய்க், கணவனைச் சாவக் கொடுத்ததுபோலவும், வட்டிக் காசைப்பட்டு முதலை இழந் ததுபோலவும், குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண் டதுபோலவும்,சிலர் நல்வினையாளர்போல் கோலம்கொண்டு தீவினையைக் கட்டிக்கொள்ளுகிறார்கள். வாயிலே தேனும், வாலிலே கொடுக்குமுள்ள தேனீக்கள்போல, உதட்டிலே உறவும், உள்ளத்திலே பகையும், கையிலே சிவமணி மாலையும், கக்கத்திலே கன்னக்கோலும்; கழுத்திலே தாழ் வடமும், அகத்திலே கரவடமுமாய் வேளைக்குத் தகுந்த கோலம் பூண்டுகொண்டு வஞ்சகத் துறவிகளாய்த் திரியா மல் உள்ளும் புறம்பும் ஒத்திருக்கவேண்டும்.

இளமங்கை கறபுடையவளா யிருப்பது கற்பேயன்றி, அகவை முதிர்ந்தவள் கற்புடையவளாயிருப்பதும், சிறந்த கற்பாமா? மிகுந்த வலுவுள்ளவன் அடங்கியிருப்பது, அடக்கமேயன்றி வலுவில்லாதவன் அடங்கியிருப்பது அடக்கமாமா? எல்லா நூல்களையும் உணர்ந்தவன் கல்விச் செருக்கில்லாம லிருப்பது பெருமையே யன்றிப் படியாத அறிவிலி செருக்கற்றிருப்பது வியப்பா? பெண்டு பிள்ளை கிலபுலங்களையுடையவன் துறவியாவது துறவேயன்றி, ஒன்றுமில்லாதவன் துறவியாவது இன்மைத் துறவுதானே. அப்படியே நம்முடைய இளமைப் பருவத்தில், உடல்

நலமுடையவர்களா யிருக்கும்பொழுதே தெய்வ அன்பும், நல்வினைப் பயிற்சியும் நமக்கிருக்கவேண்டுமே யல்லாமல், சாவுங்காலத்தில் நல்வினை செய்யலாமென்று நினைப்பது, பசி எடுத்தபின்பு நெல் விதைப்பதுபோலவும், நீர்வேட்கை வந்த பின்பு ஆறு வெட்டுவதுபோலவும், கப்பலேறினபின்பு மாலுமி நூல் கற்றுக்கொள்வதுபோலவு மிருக்கின்றது.

பலநாள் முயன்று கற்றுக்கொள்ளாமல் எந்தத் தொழிலையும் நிறைவேற்ற முடியாது. அப்படியே நல்வினைத் தொழிலும் முன்னமே பழக்கமின்றி இறுதிக் காலத்தில் கூடுமோ? மரம், சாய்ந்த பக்கத்தில் விழுவதுபோல ஒருவனுக்கு எப்பொழுதும் பயிற்சி எதுவோ, அதுவே, அவனை இறுதிக்காலத்திலும் விடாது. மேலும் சாகிற காலமும் சமயமும் ஒருவருக்கும் முன்னுடித் தெரியாதே. இன்றோ, நாளையோ, இந்த நொடியோ, மறு நொடியோ, காலையோ, மாலையோ, பகலோ, இரவோ, இருக்கும்பொழுதோ, நடக்கும்பொழுதோ, உண்ணும் பொழுதோ, உறங்கும்பொழுதோ, வேலை செய்யும் பொழுதோ, இப்பொழுதோ, அப்பொழுதோ, எப் பொழுதோ இறப்பு வருமென்பது உறுதியில்லாமலிருப் பதால், ஆரியக் கூத்தாடினுலும் காரியத்தில் கண்ணு யிருப்பவர்கள்போல், எப்பொழுதும் இறைவனெண்ணமும் நல்வினை யெண்ணமும் உள்ளவனு யிருக்கவேண்டும்.

## காலக் கடவுள் செய்யும் கணக்கற்ற கொடுமை

காலம் ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கிறது. அதன் ஓட்டத்தைப் பிடிக்க ஒருவராலும் இயலாது. அந்தக் காலத்துக்கு நாம் என்ன கொடுமை செய்தோம். அதன்

செய்கையெல்லாம் மாறுபாடாயிருக்கின்றன. அது தன் பாட்டிற் போகாமல், நம்முடைய வாணுளையும் நொடி தோறும் களவாடிக்கொண்டு போகின்றது. மூலையிலிருப் பவர்களை முற்றத்தில் இழுத்து விடுவதுபோல, நடுவீட்டி லிருக்கிற நம்மைத் தினந்தோறும் இடுகாட்டிற்கு அரு கிலே இழுத்துக்கொண்டு போகின்றது. சிறு குழந்தை களைப் பிள்ளைகளாகவும், பிள்ளைகளை இளைஞர்களாகவும், இளைஞர்களைக் கிழவர்களாகவும் செய்கின்றது. கல்லைப் போன்ற உடலை, வில்லைப்போல் வளைக்கின்றது. கன்னங் கறுத்த மயிரைப் பின்னமாக்கிக் கொக்குப்போல வெளுக் கச்செய்கின்றது. இரண்டு காலுள்ளவர்களை மூன்று காலாக்குவதுபோல, கிழவரைக் கோலூன்றி நடக்கப் பண்ணுகின்றது. ஒளியுள்ள உடலை ஒந்தி உடலாக்கி, அழகிய முகத்தை ஆந்தை முகமாக்கி, மீன் விழியை ஊன் விழியாக்கி, முத்தைப் பழித்த பல்லைச் சொத்தைப் பல்லாக்கி, கட்டிபோல் மொழியை எட்டிபோலாக்கி, சீதேவிபோலிருந்தவளை மூதேவியாக்கிப் பாழ் செய்கின் றது. இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமோ என்பதுபோல அசையாமல், ஆயுத மில்லாமல் இருந்துகொண்டு கோட்டை கொத்தளங்கள் மாடகூடங்கள் முதலியவை களை எல்லாம் நாளாவட்டத்தில் இடித்துத் தகர்த்து அழியச் செய்கின்றது. இந்தக் கொடிய காலத்தை நம்பக் கூடாதாகையால், எப்பொழுதும் முழுவிழிப்புடன் நல் வினையையே எவரும் செய்தல்வேண்டும்.

## நாடகமே உலகம்

இந்த உலகமே ஒரு பெரிய நாடகசாலையாயிருக் கின்றது. கூத்தாடிகள் இராக்கோலக்காரர்களா யிருக்

கிறார்கள். நாமெல்லாரும் பகல் வேஷக்காரர்களாயிருக்கிறோம். உலகத்தில் அரசர்கள் அணிகிற முடிகளும், பட்டாடைகளும், பல அலுவலாளர்கள் அணிகிற சட்டை, தலைப்பாகை முதலியவைகளும், கோலங்களேயல்லாமல் வேறல்லவே. கூத்தாடிகளுடைய நாடகத்தில், அரசர் முதலிய பல கோலங்களை அணிந்துகொள்வதுபோல், இந்த உலக நாடகத்தில் அரசரென்றும், குடிகளென்றும், பெரியரென்றும், பெற்றவரென்றும், பிள்ளைகளென்றும், கணவரென்றும், மனைவியென்றும், நாம் பல கோலங்களைப் பூண்டுகொள்ளுகிறோம். அந்தந்தக் கோலங்களுக்குரிய தொழில்களை நாம் குறைவற நிறைவேற்றினால் உலக நாடகத் தலைவனாகிய கடவுள், நமக்கு அழியா இன்பப் பரிசை அளிப்பாரென்பது உண்மையே. நாடகம் முடிந்து போவதுபோல் உலகமெல்லாம் அழிந்துபோகும். நாம் பூண்டுகொண்ட கோலங்களும், நாம் படித்த நூல்களும், கல்விகளும், தேடியபொருள்களும், புகழ்களும், பட்டங்களும், பெருமைகளும், மின்னல்போல் மறைந்து போகும். நல்வினை ஒன்றே எக்காலமும் நம்மைப் பிரியாமல் மேலுலகத்திலும் நம்மைத் தொடர்ந்துவந்து கடவுளினுடைய அடித்தாமரையில் சேர்க்குமாதலால், நல்வினையைப் போல் நமக்கு உற்ற துணை வேறொன்றுமில்லையே.

## தீவினை

நல்வினை நமக்குப் பொருளா யிருப்பது போலவே தீவினை நமக்குப் பகையாயிருக்கின்றது. தீவினை தீயினுங் கொடிது; பேயினுங் கடிது; நஞ்சினும் பெரிது; நமனிலும் வலிது; பாம்பு கடித்தாற் கொல்லும்; நெருப்பு தொட்ட

வர்களைச் சுடும். நஞ்சு உண்டவர்களைக் கொல்லும்; நமன் வாராள் முடிந்தவர்களைக் கொல்வான். தீவினையோவென்றால் நினைத்த அளவிலே கொல்லுந்தன்மையுடையதா யிருக்கின்றது. ஒரு பிற மாதை நாம் சேராமலிருந்தாலும், அவளை அவாவோடு நாம் மனத்தில் நினைத்த அளவில் அவளைச் சேர்ந்ததற்கு ஒப்பாகத் தீவினையாளர்களாகிறோம். பிறர் பொருளைப் பார்த்து நாம் பொறாமைகொண்டால் உடனே அந்தப் பொருளைக் களவாடினவர்கள் போலக் குற்ற முடையவர்களாகிறோம். பிறர் கெட்டுப்போக வேண்டுமென்று மனத்தில் நினைத்தால், உடனே அவர்களைக் கொலை செய்தது போலத் தீவினையுள்ளவர்களாகிறோம். இப்படியே "உண்ணாமல் தின்னாமல் ஊரம்பலமானேன்" என்பது போல் யாதொரு பயனுமில்லாமல் மனத்திற் பல தீவினைகளைக் கட்டிக்கொள்ளுகிறோம். இன்னும் மொழியினாலும் செய்கையினாலும் நாம் செய்கிற தீவினைகளுக்குக் கணக்குண்டா? ஒரு சிறு மனிதன் நம்முடன் கூடவிருந்தால் அவன் முன்பாகத் தீமை செய்யாமல் முழுவிழிப்பாயிருக்கிறோம். கடவுளர்க்குக் கடவுளும் அரசர்க் கரசனும், எல்லா உலகங்களிலும் நிறைந்திருப்பவனுமான கடவுள், எப்போதும் நம்முடன்கூட இருப்பதை நினையாமல் நாம் உலகமாகிய பேரிருளில் மதிமயங்கிப் பல தீவினைகளைச் செய்வது தகுமா?

## கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார்

ஒரு செல்வர் ஒரு பழத்தைக் கையில் எடுத்துக் கொண்டு ஒரு சிறு பாலனைக் கூப்பிட்டு "ஓ! குழந்தாய்! கடவுளிருக்கிற இடத்தை நீ சொன்னால் உனக்கொரு பழந் தருவேன்" என்று சொல்ல, அதற்கு அந்தப் பையன் "கட

வுள் இல்லாத இடத்தை நீர் சொல்வீரானால் உமக்கு இரண்டு பழந் தருவேன்,'' என்று பதில் சொன்னனாம். அது போலக் கடவுள் இல்லாத இட மில்லையே. அவருக்கு மறைவான செயல்களு மில்லையே. நமக்குக் கண்களைக் கொடுத்த கடவுளுக்கு நம்முடைய செய்கைகளைப் பார்க்கக் கண்கள் இல்லாமலிருக்குமோ? நமக்குக் காதுகளைக் கொடுத்த இறைவனுக்கு நாம் பேசும் மொழிகளைக் கேட்கக் காதுகள் இல்லாமலிருக்குமோ? நம்முடைய மனங்களில் இருக்கின்ற மாபெருங் கடவுளுக்கு நம்முடைய நினைவுகள் தெரியாமலிருக்கக் கூடுமோ? மறைவடிவராகிய கடவுள் மறைமுறைகளைப் பின்பற்றாதவர்களை ஒறுக்காமல் விடுவாரோ? தீவினைகளைக் கடந்து நிற்குந் தேவன் தீவினையாளர்களை வெறுக்காமலிருப்பாரோ? ஆகையால் நாம் எப்போதும் தெய்வத் திருமுன்பு இருப்பதை அடிக்கடி நினைவுற்று, நம்முடைய அவாக்களையும் மன மாறுபாடுகளையும் அடக்கித் தூய்மையுடையவர்களாய் விளங்கவேண்டும். கோட்டைக்குள் பகைவர்கள் நுழையாதபடி அரசர்கள் கோட்டை வாசலில் காவல் வைப்பதுபோல், காமம், பகை, மையல், இவறன்மை, செருக்கு, உட்பகைகளாகிய பகைவர்கள், ஐம்புலன்களின் வழியே நம்முடைய மனக் கோட்டைக்குள் நுழையாதபடி அறிவையும், நல்லியல்பையும் காவல் வைத்து அந்தப் பகைவர்களை வெல்ல நாம் எப்போதும் போர்க்கோலம் கொண்டவர்களாயிருக்கவேண்டும்.

## கற்பு நெறி

மாதர்களுக்குக் கற்பின் முறைமையைப் படிப்பிக்க வேண்டும். இந்தச் செய்தியைக் குறித்து நீதிநூலிலும்,

'பெண்மதி மாலையிலும் இந்த உரைநடை நூலிற் பல விடங்களிலும், நாம் கூறியிருப்பதால் அதை மேலும் எடுத்துக் கூறாமல், அதற்குத் தொடர்பான சில செய்திகளை மட்டும் சுருக்கமாக எடுத்துரைப்பது போதுமென்று நினைக்கிறோம். முதல்மனிதர் தீவினை செய்யாமல் தூய்மையாயிருக்கும்பொழுது, திருமணம் கடவுளால் ஏற்படுத்தப்பட்டது. ஆகையால், உலகத்தில் நடக்கிற எல்லாச் செயல்களிலும் திருமணம் மிக வுயர்ந்ததாயிருக்கின்றது. உலகத்தில் மக்கட்டொகை பெருகும்பொருட்டும், ஒருவருக்கொருவர் உதவியா யிருக்கும்பொருட்டும் முதலில் ஆணையும் பெண்ணையும் கடவுள் உண்டுபண்ணித் தம்முடைய திருக்கையால் அவர்களுக்கு மணவினை நிறைவேற்றி வைத்தபோதே திருமணம் எவ்வளவோ சிறப்புள்ளதாயிருக்கின்றது. கணவனும் மனைவியும் ஓர் உடலானதால் அவர்கள் வாணாள்வரை கூடி வாழக்கடவார்களென்றும், அவர்கள் ஒருவரொருவரை மிகுந்த விருப்பமாக நாட வேண்டு மென்றும் மறை கட்டளையிடுகின்றது. மறைமொழிகளின்படி கணவனுடைய முழு அன்பிற்கு மனைவியும், மனைவியினுடைய முழு அன்பிற்குக் கணவனும் உரிமை யுடையவர்களாயிருக்கிறார்கள். கணவனை மனமாரக் காதலிப்பதோடுகூட அவனுக்குக் கீழ்ப்படிந்து அவனுடைய சொற்படி நடக்கவும், மனைவி சிறப்பாக உரிமைப்பட்டிருக்கிறாள். ஆயினும், கணவனைத் தெய்வமாக எண்ணவேண்டு மென்கிற இந்த நாட்டாருடைய கொள்கை பொருந்தாததாயிருக்கின்றது. கடவுளே ஆண்டவர்; நாம் அடிமை. அவர் தலைவர்; நாம் ஊழியக்காரர். அவர் படைத்துக் காத்து அழிக்கும் தலைவர்; அவரால் நாம் ஆக்கப்படுகிறவர்களும் காக்கப்படுகிறவர்

களும் நீக்கப்படுகிறவர்களுமா யிருக்கிறோம். அவர் பாவை யாட்டுவோர்; நாம் அவரால் ஆட்டப்படுகிற சயிற்றுப் பொம்மை. இப்படிப்பட்ட கடவுளுக்குச் சமமாகக் கண வனை மனைவி எண்ணவேண்டு மென்கிற கட்டளையானது, பெரிய தெய்வ இகழ்ச்சியாயிருக்கின்றது. பின்னும் இந் தக்கொள்கையானது எல்லாப் பொருள்களுக்கும் மேலாக வும், மனமாரவும் கடவுளை விரும்ப வேண்டு மென்கிற மறைமொழிக்கு நேர் மாறுபாடாகவு மிருக்கின்றது.

தெய்வப்பற்றுக்குப் பின்பு கணவன் அன்பு சிறந்த தென்பதும், பெண்ணுக்கு எல்லாப் பற்றுக்களிலும் கணவன் பற்றே மிகச் சிறந்த தென்பதும் உண்மையே. இதற்கு எடுத்துக்காட்டாகத் திருமணமானவுடனே, பெண் தன்னுடைய தாய் தந்தை உடன்பிறந்தார் முதலி யவர்களையும், முன்னோர் தேடியவைகளையும் விட்டுவிட்டுக் கணவனுக்கும் அவனுடைய பொருள்களுக்கும் உரியவளா வதே போதுமான சான்றா யிருக்கின்றது. ஆகையால், கணவனிடத்தில் முழு அன்பு வைக்கவேண்டியது, மனைவி யினுடைய மாறாத கடமையா யிருக்கின்றது. கணவனுக் குக் கீழ்ப்படிந்து அவனுடைய விருப்பப்படி நடக்கிற மனை விக்கு எல்லா விருப்பங்களும் இடையூறில்லாமல் நிறை வேறு மென்பத உண்மையே. உலகம் ஒன்றைக் கொடுத்து மற்றொன்றை வாங்குகிற வணிகர்களுக்கு ஒப்பாக விருப்ப தால், நமக்குப் பணிவு வேண்டுமானால், நாம் பணிவைக் கொடுத்துப் பணிவை வாங்கவேண்டும். நமக்கு ஒருவரு டைய அன்பு வேண்டுமானால் நாம் அன்பைக் கொடுத்து அன்பை வாங்கவேண்டும். அப்படியே ஒரு பெண், கண வனிடத்தில் எவ்வளவு அன்பு வைக்கிறாளோ அவ்வளவு அன்பு கணவனிடத்திலிருந்து அவளுக்குங் கிடைக்கும்.

ஒழுங்கான எல்லாச் செயல்களிலும் கணவனுடைய எண்ணப்படி மனைவி நடந்தால், அவளுடைய எண்ணப்படி கணவனும் நடப்பான். ஆகையால், குடும்பத்துக்குக் கணவன் தலைவனாயிருந்தாலும், அவனுக்கு அன்பாக நடக்கிற மனைவியின் சொற்படி கணவன் கேட்பானாதலால், அப்படிப்பட்ட மனைவி ஒரு வகையில் கணவனுக்குத் தலைவியாயிருக்கிறாள். இது மாதினுடைய வணக்கத்தினாலும் இணக்கத்தினாலும் வருகிற மேன்மையன்றோ? சில சமயங்களில் காரணமின்றி மனைவியைக் கணவன் சினந்துகொண்டாலும், அதற்குப் பதிலாகக் கணவனை மனைவி சினக்க எவ்வளவும் உரிமையில்லை. மனைவி எப்போதும் வீட்டுக்குள் இருப்பவளாதலாலும், அவளுக்குக் கணவனைத் தவிர வேறே தலைவர்கள் இல்லாதபடியாலும், அவள் அந்த ஒரு தலைவனுக்குப் பொருத்தமாக நடப்பது எளிதாயிருக்கின்றது. கணவன் எப்படிப்பட்ட தகுதியுடையவனாயிருந்தாலும், அவன் பல தலைவர்களும் பல பேருடைய பகைகளும் பல தொல்லையான தொழில்களும் உடையவனாகையால், தன்னை யறியாமல் அவனுக்குச் சினம் வரக் காரணமாயிருக்கின்றது. அந்தச் சமயம் அறிந்து, மனைவி ஒதுங்கவேண்டியது முறைமை. பெருங் காற்று ஓங்கி வீசும் பொழுதும், மிகுவிரைவாய் நீர்ப்பெருக்கு வரும்பொழுதும் வளையாமல் எதிர்த்து நிற்கிற பெரிய மரங்கள் வேரோடே சாய்ந்து வீழ்கின்றன. அந்தச் சமயத்தில் நிமிராமல் வளைந்துகொடுக்கிற சிறிய செடிகளுக்கு ஓர் இக்கட்டுமில்லை. அப்படியே மாதர்களும், தத்தம் கணவன்மார்களுக்குச் சினம் வரும்பொழுது எதிர்த்து மறுமொழி சொல்லாமல், வேளைக்குத் தக்கபடி ஒதுங்குவதே அறிவுடைமை. மாதர்கள் எவ்வளவு நன்மையாக நடந்தாலும், அதற்குத் தாமும்

ஒத்தபடியாக நடவாமல், மாதர்களுக்குக் கொடுமைசெய்கிற சில ஆடவர்களும் உண்டு. இப்படிப்பட்ட நிலைமையிலுள்ள மாதர்களுக்குத் தெய்வம் உதவி செய்ய வேண்டுமேயல்லாமல் வேறு உதவியில்லை. கைவிரலே கண்ணைக் குத்தினால் கையை என்ன செய்யலாம்? நம்முடைய பல்லே நம்முடைய நாவைக் கடித்தால், பல்லை உடைக்கலாமா? கப்பலேறின பின்பு, கடல் பயணத்துக்கு அஞ்சிச் செய்வதென்ன? பெண்ணுக்கும் கணவனைத் தவிர வேறு தலைமை யில்லாதபடியால், தன்னால் கூடியவரையில் கணவனுக்கு மன நிறைவாக நடக்கவேண்டியது பெண்ணினுடைய கடமையாயிருக்கின்றது. ஆடவன் எப்படிப் பட்டவனாயிருந்தாலும், தெய்வ அன்பும், அமைதியும் பொறுமையும், உண்மையும், அடக்கமும், வணக்கமும், கற்புநெறியு முள்ள மாதர்களுக்கு ஒரு நாளும் குறைவில்லை.

## ஒழுக்கமற்ற மாதர்களின் இழுக்கு

எண்சாணுடம்பிற்கும் தலையே தலைமையா யிருப்பது போல், மாதர்களுக்கு எல்லாக் குணங்களிலும் கற்பு நிலையே முதன்மையான அணிகலமாயிருக்கின்றது. கற்பு நிலை தவறாதவளுக்கு முக அழகு இல்லாமலிருந்தாலும், திருமண வீட்டுப் பூமாலைபோல், அவள் யாவராலும் பெருமைப்படுத்தப்படுவாள். கற்புநிலை கெட்டவள், பேரழகியாயிருந்தாலும், அவள் சுடுகாட்டு மாலையைப்போல், யாவராலும் இகழப்படுவாள். உலகத்தில் ஒருவனுக்குத் தீங்கு செய்கிறவன், அவனுக்குமட்டுந் தீயவனாகிறான். பிற ஆடவர்களைச் சேருகிற பெண்ணோ வென்றால் பலபேர்களுக்குத் தீமை செய்கிறாள். அவள் தன்னையுங் கெடுத்து, அந்தப் பிற ஆடவரையுங் கெடுத்துத், தன்னுடைய சொந்

தக் கணவனுக்கு இரண்டகஞ் செய்பவளாகி, அந்தப் பிற ஆடவருடைய மனைவிக்கும் பெரிய வஞ்சகியாகிறாள். அவளுடைய தீயவழியால், அவளுடைய கணவனுக்கும் பிற ஆடவனுடைய மனைவிக்கும் உண்டாகிற வருத்தமும் பொறாமையும், தொல்லையும் துன்பமும், மிகுதியல்லவா? அன்றியும் கோடரிக்காம்பு குலத்துக் கீனமென்பதுபோல் கற்புநிலை கெட்டவள், தன்னுடைய உற்றார், பெற்றார் முதலியவர்களுக்கும், தன்னுடைய கணவன்வழிச் சுற்றத்தாருக்கும் மாறாத பழியையும் இழிவையும், உண்டு பண்ணுகிறாள். இந்த ஒழுங்கற்ற உலகமானது, அவள் செய்த குற்றத்திற்காக, அவளுடைய கணவனையும், பிள்ளைகளையும் இழிவு படுத்திக் குற்றமற்றவர்களான அவர்களையும் ஒறுக்கின்றது. மற்றக் குற்றங்களெல்லாம், சிலகாலத்தில் மறைந்துபோகும். பிற ஆடவரைச் சேரும் குற்றமோ வென்றால் உலகமுள்ளமட்டும் மறையாது. அந்த ஒழுக்கமற்றாள் இறந்தாலும், அவளுடைய பழி இறவாமல், என்றும் நிலைபெற்று விளங்கிக்கொண்டிருக்கும். மற்றக் குற்றங்களுக்கெல்லாம் ஒவ்வொரு கழுவாய் உண்டு. ஒருவனுடைய பொருளைக் களவாடினால், அதற்குத் தகுதியான பொருளைக் கொடுத்து ஒழுங்கு செய்யலாம். அப்படியே, நமக்குண்டாகிற பொருளிழப்புகளுக்கும், நாம் பிறருக்குச் செய்கிற தீங்குகளுக்கும், தகுந்த மாற்றுதல்களைச் செய்யலாம். கற்பிழப்பிற்கு ஒரு கழுவாயும் இல்லையே! கெட்டுப்போன கற்பு, எட்டுநாள் அழுதாலும் வருமா? அரைக்காசுக்கு அழிந்த கற்பு, ஆயிரம் பொன் கொடுத்தாலும் வருமா? என்று பழமொழியும் இருக்கின்றதே. பெண்களுக்குக் காவலாகிய நாணத்தையும், பெருமையையும் விட்டு ஒரு மாது பிற ஆடவர் சேர்க்கைக்கு எப்போது உடன்

பட்டாளோ, அப்போதே அவள் எப்படிப்பட்ட முறை யற்ற செயல்களுக்கும் பின்வாங்கமாட்டாள். ஒழுக்கமற் நடத்தை பல தீவினைகளை விளைவிக்கிற வித்தாயிருக்கின் றது. எப்படியெனில், பிறஆடவனைச் சேருகிற பெண், அந்தக் குற்றத்தை மறைப்பதற்காகப் பல தந்திரங்களை யும், பொய்களையும், வஞ்சக வழிகளையும் பயன்படுத்து வாள். பிறஆடவனால் உண்டாகிற சூலை அழிப்பதற்காக அவள் பல மருந்துகளை உண்டு, கொலைத் தீமையையுங் கட்டிக்கொள்வாள். அவள், சில சமயங்களில் தன் கணவ னைக் கொல்லவும் வழிதேடுவாள். காம எழுச்சியைத் தூண்டிவிடுவதற்காகக் கள் முதலிய மயக்கந் தரும் பொருள் அருந்துவாள். அந்தப் பொருள்களை விலைக்கு வாங்கவும், பிற ஆடவர்கள் பார்க்கத் தன்னை அழகுபடுத்திக் கொள் ளவும், கையிற் பொருளில்லாவிட்டால் களவாடவுந் தொடங்குவாள். ஒரு பிற ஆடவன்போலப் பல ஆடவர் களைச் சேர்ந்து பொருள்தேடவும் துணிவாள். கருடன் காலிற கச்சை கட்டினதுபோல், ஒழுக்கமற்ற நடத்தை எப்படியும் வெளியாய்விடும். அந்தக் குற்றத்தை மறைக்க முயல்வது, விண்ணைப் படல்கொண்டு மூடுவதற்கும், பூனை தன் கண்ணை மூடிக்கொண்டு, ஞாயிறு மறைந்து உலகம் முழுவதும் இருளால் மூடப்பட்டதென்று நினைத்துக் கொள்வதற்கும் ஒப்பாயிருக்கின்றது.

## காமமே அனைத்துக்குங் காரணம்

கணவனும் மனைவியும் வாணாள் வரையில் பிறர் முகம் பார்க்கிறதில்லையென்று, திருமணக் காலத்தில் தெய்வத் திருமுன்பு உறுதிமொழி செய்து கொள்ளுகிறார்களே! அந்த உறுதிமொழியை இகழ்ச்சி செய்து, பிறரைச் சேர்

வது, மிகக் கொடிய தீவினையாகையால், அப்படிப்பட்ட தீவினையாளர்கள் வீடுபேற்றை இழந்து தணியாத தீயில் பேய் பிசாசுக் கூட்டங்களால் துன்பப் படுவார்களென்று மறைநூல்களில் பலவிடங்களில் சொல்லப்படுகின்றது. இந்த உலகத்திலும் ஒழுக்கமற்றவர்கள் எல்லோராலும் கைவிடப் பட்டுக் கள்ளக் கணவனாலும் தள்ளப் பெற்று வறுமையும் பல நோய்களும் துன்பங்களுங் கொண்டு, சந்தி நகைக்கத் திரிகிறதை நாம் கண்ணாற் பார்க்கிறோம். பின்னும் இந்த உலகத்தில் நடக்கிற கொலைகளுக்கும், சண்டைகளுக்கும் கலகங்களுக்கும், இந்த ஒழுக்கமற்ற போக்கே முதன்மை யான காரணமாயிருக்கின்றது. இந்தக் குற்றத்தின் பொருட்டு, சோதங் கோமோரா முதலிய பட்டணங்களைக் கடவுள் அழித்தது யாவர்க்குந் தெரிந்த செய்திதானே.

## இன்பஞ் சிறிது; துன்பம் பெரிது

பிறன்மனை நயத்தலால் உண்டாகிற இன்பம் மிகச் சிறிதாயிருக்கின்றது. அந்தச் சிறு இன்பத்தினால் உண்டா கிற இடுக்கண்களும், தீமைகளும், பழிகளும், பெரிதா யிருக்கின்றன. ஒருவனை மதங்கொண்ட யானை பின்னே துரத்த, முன்னே புலி வந்து பாய, அவன் அந்த இடருக்கு அஞ்சி ஆற்றிலே குதிக்க, ஆற்றிலே முதலைகள் அவனைப் பிடித்து விழுங்க, இப்படிப்பட்ட நிலைமையிலிருக்கிறவன், நீர் வேட்கைக்குத் தண்ணீரை அள்ளிக் குடித்து மகிழ்ந் தால் எப்படியோ, அப்படியே கள்ளப்புணர்ச்சி செய்கிற வர்களுடைய நெஞ்சில், ஓயாத அச்சமும், நடுக்கமும், துன்பமும் குடிகொண்டிருக்குமே. இவ்வளவு அச்சத் தோடு அவர்கள் அடையும் இன்பம், துன்பமே யல்லாமல் வேறன்றே. இந்தச் சிறு இன்பத்தை விரும்பி, மலைபோலே

தீவினைகளையும், பழிகளையும், துன்பங்களையும் தேடிக் கொள்ளுகிற மாது எவ்வளவு மதிகெட்டவளாயிருக்கிருள்?

ஒரு மாது பிற ஆடவனுக்குப் பெறுகிற பிள்ளைகளை, அவள் தன் சொந்தக் கணவனுடைய பொருள்களுக்கு உரிமையாளர்களாக்குவது எவ்வளவு பெரிய ஒழுங்கற்ற முறை. கணவன் மனைவியர் ஒருவர்க் கொருவர் உதவியா யிருக்கும்பொருட்டும், அவர்கள் பிள்ளைகளைப் பெற்று நல்வழியில் கொண்டுவரும்பொருட்டும், திருமணத்தைக் கடவுள் ஏற்படுத்தியருளினுர். அந்தக் கட்டளைக்கு மாறுபாடாக, உலகத்தில் ஒழுக்கமற்ற குற்றங்கள் மிகுமானல், கணவனை மனைவி மதியாமலும், மனைவியைக் கணவன் விரும்பாமலும், பிள்ளைகளைத் தாய் தகப்பன்மார்கள் காப்பாற்ருமலும், தாய் தந்தையரைப் பிள்ளைகள் பேணுமலும், இல்லறச் செயல்கள் ஒழுங்காக நடவாமலும், உலகத்தில் பெரிய மாறுபாடு உண்டாகுமே. ஆகையால், மாதர்கள், கற்பு நிலையைக் கைவிடாது காக்கவேண்டும். உலகப்போர்களில், பகைக்குப் பின்வாங்காமல் எதிர்த்து நிற்பவர்களே வெற்றியடைவார்கள்; காமப் போரிலோ வென்றல், எதிர்த்து நில்லாமல் ஓடுகிறவர்களே வெற்றி கொள்வார்களாகையால், பெண்கள் பிற ஆடவர்களுடன் பேசாமலும், அவர்களைக் கனவிலும் நினையாமலும், காம நூல்களையும், கெட்ட கதைகளையும் படியாமலும், கேளாமலும் தூய்மையா யிருக்கவேண்டும்.

## கற்பே உயிரினுஞ் சிறந்தது

உலகத்தில் பிற பெண்களைக் கெடுக்கச் சூழ்ச்சி செய்கிற ஆடவர்களும் இருக்கின்ருர்களாகையால், பெண்கள் தகுந்த துணையில்லாமல், ஒருபோதும் தனிமையாயிருக்கத்

தக்கவர்களல்லர். கணவன் வீட்டில் இல்லாதபோது, அவர்கள் நற்குணமுள்ள பெண்டுகளைத் துணைதேடி வைத்துக் கொள்ளவேண்டும். அவர்கள் உயிர் போனாலும், கற்பு நிலை தவறுகிறதில்லை யென்கிற மனவுறுதி உடையவர்களாயிருக்கவேண்டும். ஓர் அரசனுடைய கெட்ட எண்ணத்துக்கு, ஒரு நல்லாள் இணங்காமல் உதறித்தள்ளிய பொழுது, அவன் வாளை உருவிக்கொண்டு, "என்னை நீ சேராதிருப்பாயானால் உன்னை வெட்டிக் கொல்வேன்," என்று, சினத்தோடு மொழிந்தான். அதைக் கேட்ட கற்புடையாள் அந்த அரசனை நோக்கி,

* நரபதிநீ யானுநு நண்பரின்பா தத்துகட்குன்
சிரமகுட நிகராமோ சேர்கிலையேற் கொல்வனெனக்
கரவாளை யுருவிநின்றாய் கற்பினுக்கோர் குறைவின்றித்
தரமாநீ யெனைக்கொல்லிற் றந்தைதாய் குருநீயே. (16)

(ஓ! கொடியோனே! நீ அரசனானாலும் என் கணவனுடைய திருவடிகளில் ஒட்டிய தூசிக்கு உன்னுடைய தலையி லிருக்கின்ற முடியும் ஒப்பாகுமா? உன்னைச் சேராவிட்டாற் கொல்வே னென்று கை வாளை உருவி நின்றாய்; என்னுடைய கற்புக்கு மட்டும் பழுதில்லாமல் என்னை நீ கொன்றுவிடுவாயானால், எனக்குத் தாயும் தந்தையும் குருவும் நீயே யென்று மறுமொழி கூறினாள்.)

பெருமைக்கு முன் உயிரைத் துரும்பாக எண்ணிக் கற்பைக் காப்பாற்றின அந்த நல்லாளை மற்ற மாதர்கள் ஆசிரியராகக் கொள்ளவேண்டும். பிற ஆடவரைச் சேருகிற பெண்ணுக்கும், அந்தப் பிற ஆடவனுக்கும், குற்றம் சிறிதாயிருந்தாலும், பெண்ணுக்குப் பிறஆடவனால் சூலுண்டா

---

* நீதிநூல் புருடபாரிய ரியல்பு 30-வது பாடல்.

வது முதலான தீச் செயல்கள் ஏற்பட இடமிருப்பதால், அவர்களுடைய குற்றத்தை உலகத்தார் பெரிதாக எண்ணு கிறார்கள். சில சமயங்களில், குற்றமற்ற மாதர்களுக்கும், குற்றம் கற்பித்து, அவர்கள் ஒழுக்கமற்றவர்களென்று வெறுமையான பெரும் பொய்யைக் கட்டிவிடுகிற உலகமானது, உண்மையில் கெட்டுப்போனவளுடைய செய்கையை வெளிப்படுத்தாமலிருக்குமா? தாங்கள் கலவாத மாதர்களையும், கலந்ததுபோலப் பெருமையாகப் பொய் பேசுகிற ஆடவர்களும் உலகத்தி லிருக்கிறார்களே! இப்படிப்பட்ட ஆடவர்கள், தாங்கள் உண்மையாகச் சேர்ந்த பெண்களுடைய பழியை ஊரெங்கும் பறை சாற்றாமல் விடுவார்களா? ஆகையால், பிறஆடவர்களுடைய காற்றும் தங்கள்மேல் வீசாமல் மாதர்கள், மனத்தூய்மை யுடையவர்களாயிருக்க வேண்டும்.

## உயிர்களிடத்து அருளுடைமை

தெய்வ அன்புக்குப் பின்பு, உயிர்களிடத்து அருளுடைமை நல்வினைகளுக்கும் முதன்மையாகையால், உயிர்களிடத்தில் அருளுடைமையை மாதர்களுக்குக் கற்பிக்க வேண்டும். தன்னைப்போற் பிறரை விரும்பவேண்டும் என்கிற தேவ மொழியானது, மறைநூல்க ளனைத்தின் நுண்ணிய கருத்து மாயிருக்கின்றது. மனிதரால் செய்யப்பட்டிருக்கிற கட்டளைகளும், நூல்களும், விரிவாயும் புதைபொருளாயும், பல விரிவுரையாளர்களை விரும்புகின்றனவாயு மிருக்கின்றன. அந்த விரிவுரையாளர்கள், ஒருவருக்கொருவர் மாறுபாடாக ஒரு மொழிக்குப் பல விரிவுரைகளைச் செய்கிறார்கள். தன்னைப்போற் பிறரை விரும்ப வேண்டும் என்கிற மறைமொழியானது மலைமேல் வைத்த விளக்குப்போல் யாவர்க்கும் எளிதிற் பயன் விளங்கத்தக்

கதாயிருப்பதால், அதற்கு விரிவுரை வேண்டுவதில்லையே. நேர்மையான செய்திகளில் எதை நமக்குப் பிறர் செய்ய வேண்டுமென்று விரும்புகிறேமோ, அதை நாம் அவர்களுக்குச் செய்வதும், எதை அவர்கள் நமக்குச் செய்யக்கூடா தென்று நினைக்கிறேமோ, அதை அவர்களுக்கு நாம் செய் யாமலிருப்பதுமே, இதே மறைமொழியின் பொருளா யிருக்கின்றது.

நாம் பசித்திருக்கும்போது உணவை விரும்புகிறே மாகையால், நாமும் பசித்தவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டும். நாம் நீர்வேட்கையாயிருக்கும் பொழுது தண் ணீரை வேண்டுகிறேமாகையால், நாமும் விடாயாயிருக்கிற வர்களுக்குத் தண்ணீரைக் கொடுக்கவேண்டும். நாம் வேட்டியில்லாதபோது வேட்டியை விரும்புகிறேமாகை யால், நாமும் வேட்டியில்லாதவர்களுக்கு வேட்டி அளிக்க வேண்டும். நாம் துன்புறும் பொழுது ஆறுதலை அவாவு கிறேமாகையால், நாமும் துன்புறுகிறவர்களைத் தேற்ற வேண்டும். எல்லோரும் நமக்கு உதவி செய்யவேண்டு மென்றும், ஒருவரும நமக்குத் தீங்கு செய்யக் கூடாதென் றும் நாம் விரும்புகிறபடியால், நாமும் ஒருவருக்குத் தீங்கு செய்யாமல் உதவியே செய்யவேண்டும். இவ் வாறாக இந்த மறைமொழியில் அடங்காத முறை ஒன்று மில்லை. கடவுளை எல்லாப் பொருள்களுக்கும் மேலாக எண்ணி, அவரிடத்தில் முழு மனதோடு, உள்ளன்பு செய்ய வேண்டும் என்றும், தன்னைப்போற் பிறரை விரும்பவேண் டும் என்றும், ஆசிரியவடிவாகத் தோன்றிய கடவுள், திரு வாய் மலர்ந்தருளிய இரண்டு மொழிகளும், எவ்வளவு பெரும்புதுமையாயிருக்கின்றன. கடுகுக்குள் கடலையும், அணுவுக்குள் மலையையும் அடைத்தது போலக் கடவுள்

பொருட்டாகவும், பிறர் பொருட்டாகவும், நம்முடைய சொந்த நன்மைக்காகவும் நாம் கடைப்பிடிக்க வேண்டிய எல்லா நெறிகளையும், அந்த இரண்டு மொழிகளில் அடக்கிய ஐயனுடைய ஆற்றலே ஆற்றல். தன்னைப்போற் பிறரை விரும்ப வேண்டும் என்கிற முறையை, நற் செயல்களுக்கு மட்டும் பயன்படுத்த வேண்டுமேயல்லாமல் கெட்ட வழிகளில் பயன்படுத்தக் கூடாது. சில சமயங்களில் நாம் தீய வழிகளில் செல்ல விரும்புவோமாகையால், அந்தக் காரணத்தைக் கொண்டு பிறருடைய கெட்டவழிக்கு நாம் இடங் கொடுக்கக் கூடாது. இப்படிப்பட்ட தீயசெயல் நீங்கலாக, மற்றைச் செயல்களிலெல்லாம், தன்னைப்போற் பிறரை விரும்பவேண்டும், என்கிற முறையை நாம் தக்காங்கு கடைப்பிடிப்போமானால், உலகத்தில் வறுமையென்பது தலைகாட்டுமா? குற்றமென்பது குடியிருக்குமா? வஞ்சகமென்பது வாழ்ந்திருக்குமா? இந்த முறையைக் கடைப்பிடியாத காரணத்தால், உலகத்தில் தீதுசநம், சூதுகளும், வாதுகளும், வறுமைகளும், தொல்லைகளும் நிலைகொண்டிருக்கின்றன. நிலத்தில் கோடான கோடி ஏழைகள் படுந் தொல்லைகளை, நாம் விளக்குவோமானால், கல்லான மனமுங் கரையாதிருக்குமோ? இரும்பான மனமும் இளகாதிருக்குமோ?

## வறுமைப் பிணி படைத்த ஏழைமக்கள்

உண்ணச் சோறில்லாமலும், உடுக்க உடையில்லாமலும், இருக்க வீடில்லாமலும், படுக்கப் பாயில்லாமலும், தங்களுடையஇடுப்பிலிருக்கிற பழங்கந்தையும், கையிலிருக்கிற ஓடும் தவிர, வேறு பொருளில்லாமலும், வயிற்றுத் தீ உள்ளே சுட, வெயில் மேலே சுட, மழையினால் நனைந்தும்,

பனியினால் மெலிந்தும், காற்றினால் கலங்கியுந் தெருக்கள் தோறுந் திரிகிற ஏழைகளுக்குக் கணக்குண்டா? வீடு, வீடாகத் திரிந்தும் சோறு அகப்படாமல் பசியினால் வாய் வறண்டு, கண் இருண்டு, காதடைத்துக் கைசோர்ந்து, மெய் தளர்ந்து, எலும்புகளெல்லாம் எண்ணும்படி துரும்பு போல இளைத்துக் களைத்து வருந்துகிற ஏழைகள் பலஆயிரவர் அன்றோ? பல குருடர்களும், செவிடர்களும், கூன்களும் சப்பாணிகளும், கிழவர்களும், அலைந்து திரிந்து இரந்துண்ண ஆற்றலில்லாமலும், அவர்களை உசாவ ஒருவருமில்லாமலும், இருந்த இடத்திலேயே கிடந்து மடிந்துபோகிறார்களே! செல்வர்களாயிருந்து வறுமை அடைந்த பெருமையுடையவர் கைப்பாடுபடத் தெரியாமலும், நாணத்தினால் வெளியே போய் இரந்துண்ணத் துணியாமலும், வீட்டிற்குள்ளிருந்துகொண்டு, பசியினால் தாய் முகத்தைப் பிள்ளைகள் பார்க்க, கணவன் முகத்தை மனைவி பார்க்க, மனைவி முகத்தைக் கணவன் பார்க்க, அவர்களுடைய முகத்தைப் பார்க்க ஒருவருமில்லாமல், பலநாள் பட்டினியாயிருந்து வருந்துகிறார்களே! பல கற்பரசிகள் தாங்கள் சாப்பிடாமலிருக்கச் சாப்பிட்டது போல் கணவருக்குப் பொய்சொல்லி, அகப்பட்ட சோற்றையெல்லாம் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் படைத்துவிட்டுத் தாங்கள் தினப்பட்டினியாயிருந்து சாகிறார்களே! பிள்ளைகள் விளையாடும்பொழுது, செல்வர்கள் வீட்டுப் பிள்ளைகள், சிற்றுண்டி சாப்பிட்டோமென்று சொல்ல, ஏழை வீட்டுப் பிள்ளைகளுக்குச் சிற்றுண்டியென்பது இன்னதென்று தெரியாமல், தாய்மாரைப் பொருள் கேட்க, அதைக் கேட்டுத் தேம்பித் தேம்பி அழுகிற எளிய தாய்மார்களும் பலரே! எளியவர்கள் பலர் இரவும் பகலும் ஓயாமல் கைப்பாடுகள் பட்டும், அவர்களுக்குக்

கிடைக்கிற கூலி, அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பங் களுக்கும், கால் வயிற்றுக்கும் போதாமல் தொல்லைப்படு கிறார்களே; பாதி உடல் வெளியிலும், பாதி உடல் உள்ளு மாயிருக்க, நிமிர்ந்தால் தலையிலும், குனிந்தால் முதுகி லும், இடிக்கும்படி குருவிக் கூடுபோல் பலர் சிறிய குடி சைகளைக் கட்டிக்கொண்டு, அந்தக் குடிசைகளில் ஞாயிறு திங்கள் வாழ, அடுப்பை விட்டு தீக்கடவுள் அவர்களுடைய வயிறுகளில் வசிப்பது போல், வயிற்றுத் தீ பற்றியெரிய; நீர்க்கடவுள் அவர்களுடைய கண்களில் வசிப்பதுபோல் தாரைதாரையாகக் கண்ணீர்சொரிய, காற்றுக்கடவுள் அவர்களுடைய வாயிலும் மூக்கிலும் வாழ்வதுபோல், ஓயா மல் பெருமூச்சுவிட, இவ்வகையாகத் துன்பப் படுகிறார் களே! சோறென்பது இன்னதென்று தெரியாதவர்க ளாய்க் கீரைகளையும், இலைகளையும், இலுப்பைப் பூ, அல் லிக் கிழங்கு முதலியவைகளையும் பிடுங்கி அவித்துக் கால்வயிறு சாப்பிட்டு, முக்கால் வயிற்றைத் தண்ணீ ரால் நிரப்புகிறவர்களும் பலரே! உண்ணுவதற்குப் பழங்கூழும் அகப்படாமல், நண்டுகளையும், நத்தை முதலியவைகளையும் வேவவைத்துச் சாப் பிட்டு, அந்த உயிர்களுக்கு மறலியாய்க் காலங்கழிக்கிற பள்ளர்களும், பறையர்களும், பலரே! புலிக்கு அஞ்சா தவர்களுங், கலிக்கு அஞ்சி, பல நாட் பசியைத் தாங்க மாட்டாமல், களவுகளையும் புரட்டுகளையும் கற்றுக்கொடுக் கிறவர்களும், தங்களுக்கு உயிர்போன்ற பிள்ளைகளையும் விற்கத் துணிகிறவர்களும் பலரே! பிச்சைக்காரன் சோற் றிலே சனீசுரன் புகுந்ததுபோல், எலி வளைகளையும் எறும்பு வளைகளையும் தோண்டி, அவைகளி லிருக்கிற கூலங்களை யெடுத்தும் களங்களிலும், வழிகளிலும்,

இறைந்து கிடக்கிற கூலங்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கியும், பாதி நெல்லும் பாதி கல்லும் பாதி உமியுமாய்க் கஞ்சி காய்ச்சிக் குடித்துக் காலம் போக்குகிறவர்களும் பலரே! பல எளியவர்களுக்குச் சிறிது கஞ்சி அகப்பட்டாலும், அந்தக் கஞ்சிச் சட்டியை ஒரு பிள்ளை ஒரு பக்கத்திற் பிடித்திருக்க, மற்றொரு பக்கத்தை மற்றொரு பிள்ளை பிடித்திருக்க, அதில் சிந்துகிற கஞ்சிக்குப் பல பிள்ளைகள் கைநீட்ட, இவ்வகையாகக் கஞ்சியையெல்லாம்; பிள்ளைகளுக்குக் கொடுத்துவிட்டுத் தாங்கள் என்றும் பட்டினியாயிருக்கிற தாய் தந்தைமார்களும் பலரே!

## உலகம் அனைவருக்கும் போது

ஒரு நாள் ஓர் எளிய பெண், ஒரு பிள்ளையை இடுப்பில் வைத்துக்கொண்டு, ஒரு பிள்ளையைத் தோளில் எடுத்துக்கொண்டு, சில பிள்ளைகளைக் கையிற் பிடித்து நடத்திக்கொண்டு, மிகுந்த பசி விடாயுடனே வந்து ஐயம் கேட்டாள். அவள் பசியினால் வாடி மெலிந்து, பேசவும் ஆற்றல் இல்லாமலிருந்தாள். அவள் முந்திச் சாப்பிடும்படி ஒரு இலை போட்டுச் சோறு படைக்கப்பட்டது. அவள் உட்கார்ந்து, ஒரு பிடிசோறு எடுத்து வாயில் வைத்தவுடனே இரண்டு பிள்ளைகள் ஓடி, அவளுடைய இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டன. ஒருபிள்ளை அவளுடைய தோளில் ஏறி, அவளுடைய வாயிலிருந்த சோற்றை வலுகட்டாயமாகப் பிடுங்கித் தன் வாயிற் போட்டுக்கொண்டது. மற்றப் பிள்ளைகள் இலையிலிருந்த சோற்றை அள்ளி அள்ளிச் சாப்பிட்டு ஒரு நொடியில் சோறிருந்த வாழையிலையை வெற்றிலையாக்கிவிட்டன. மலைத்துப் போய்ப் பேசாமலிருந்த அந்த மாது மாலை

மாலையாகக் கண்ணீர் விட்டுக்கொண்டு 'ஐயா! இப்படியே
நாடோறும், இந்தப் பிள்ளைகளால் நான் பட்டினியா
யிருக்கிறேன்' என்று சொல்லி, உடனே பசிக் களையினால்
அறிவு மயக்கத்தை யடைந்தாள். அப்போது, கூட இருந்
தவர்கள், ஒருவராவது இதைக் கண்டு அழாமலிருக்க
வில்லை. இப்படியே, எண்ணிக்கையில்லாத மக்கள் படுந்
தொல்லைகளைக் கண்கொண்டு பார்க்கக்கூடுமா! காதினால்
கேட்கக்கூடுமா? ஐயையோ! இஃதென்ன இரக்கம்! அந்த
எளியவர்களும் கடவுளுடைய பிள்ளைகள் அல்லரா?
அவர்களுக்காகவும் மழை பெய்யவில்லையா? அவர்களுக்
காகவும் நிலம் விளையவில்லையா? கடவுளால் கொடுக்கப்
பட்ட எல்லாப் பொருள்களிலும் அவர்களுக்கும் பங்கு
இல்லையா? இந்த நிலத்தில் விளையப்பட்ட கூலங்களையும்,
மற்றப் பொருள்களையும் எல்லா மக்களுக்கும், சம பங்கா
கப் பிரித்துக்கொடுத்தால், இந்த உலகத்துக்குங் கொடுத்து
இன்னும் சில உலகங்களுக்குந் தானங் கொடுக்கலாமே.
அப்படியிருக்கப் பலகோடி எளியவர்கள், துன்பப்படக்
காரணமென்ன? அதற்குச் செல்வர்களுடைய பேராவலும்
ஈகையின்மையுமே காரணமாயிருக்கின்றன. நிலமும் நிலத்
தில் அடங்கிய மற்றப் பொருள்களும், எல்லோருக்கும்
பொதுவே தவிர, அவைகள் செல்வர்களுக்கு மட்டும்
சொந்தமென்று அவர்கள் கடவுளிடத்தில் உறுதிமொழித்
தாள் பெற்றுக்கொள்ளவில்லையே. ஐந்து பூதங்களில்
நிலம் தவிர, மற்றப் பூதங்களையும், திங்கள் ஞாயிறு உடுக்
களின் ஒளியையும் யாவரும் பொதுவாகவே நுகருகிறார்
கள். அப்படியே, நிலத்தையும், நிலத்தில் விளைகிற கூலம்
முதலியவைகளையும் எல்லோரும் பொதுவில் நுகரவேண்
டியது முறைமையாயிருக்க, அவைகளைச் சில செல்வர்கள்

மட்டும் கட்டிக்கொண்டு, மற்றவர்களுக்குப் பாகம் கொடாமையினால், பலர் வறுமைப்படக் காரணமாயிருக்கின்றது.

## செல்வர்கள் அறச்சாலையாளர்கள் போன்றவர்கள்

ஒரு நல்வினையாளன் அறச்சாலை கட்டி, அதற்குச் சிற்றூர்கள் விட்டு, அந்தச் சிற்றூர்களின் வரும்படியைக் கொண்டு, எளியவர்களுக்குச் சோறு போடும்படி, செயலாளர்களையும், கணக்கர்களையும், சரக்கறைக்காரர்களையும், ஏற்படுத்துவதுபோல், தண்ணளி வடிவினராகிய கடவுள், உலகமாகிய அறச்சாலையைக் கட்டிச் செல்வர்களைச் செயலாளர்களாகவும், பொருளாளர்களாகவும் ஏற்படுத்தி, அவர்கள் மூலமாக அறம் நடக்கும்படி, அவர்களிடத்தில் பொருள்களைக் கொடுத்தருளினர். அறச்சாலை உசாவல் தலைவர்கள், அறச்சாலை வரும்படியில் தங்களுக்குள்ள திங்கள் கூலியை யெடுத்துக்கொண்டு, மற்றவைகளை எளியவர்கட்குப் பயன்படுத்துவதுபோல், செல்வர்கள் தங்களுக்கும் தங்களுடைய குடும்பங்களுக்கும் வேண்டியமட்டில் வைத்துக்கொண்டு, எஞ்சியதை எளியவர்களுக்கு அளிக்கவேண்டு மென்பது கடவுளுடைய திருவுளமாயிருக்கின்றது. அவ்வாறு நல்வழியில் வழங்காத பெரியபினர்கள், எளியவர்களுடைய பொருளைக் கைப்பற்றுகிறவர்களாகையால், அவர்களை எளியவர் உறவினராகிய தெய்வம், ஒறுக்காமல் விடுமா? உலகத்தில் மிகப் பெருஞ் செல்வர்களும் பலர் இருக்கிறார்களே! அவர்களுடைய கைவசமாயிருக்கிற பொருள்களைப் பங்கிட்டால், எண்ணிறந்த எளியவர்களுக்குக் கொடுக்கலாமே! பொதுவாகத் தனித்தனியே ஆயிர வேலி நிலமுடைய

நிலத்தலைவர்கள் பலர் இருக்கிறார்கள். ஓர் எளிய குடும்பத்தின் வாழ்க்கைக்கு ஒரு வேலி நிலம் போதுமாகையால், ஆயிரம் வேலி நிலம் ஆயிரங் குடும்பங்களின் வாழ்க்கைக்குப் போதுமே. அவ்வளவு நிலங்களை ஒருவன் வைத்துக்கொண்டு, மற்றவர்களைப் பறக்கவிடுவது அறமா? செல்வர்கள் வீட்டு மாதர்கள், சிறப்பான காலங்களில் வெளியில் புறப்படும்போது, அணிந்திருக்கிற அணிகலன்களையும், ஆடைகளையும் மதிப்பிட்டால், ஒவ்வொருத்திக்கு நூறாயிர ரூபாவுக்குக் குறையாமல் இருக்கின்றனவே! குடும்பம் ஒன்றுக்கு நூறுரூபா வீதம் பிரித்துக் கொடுத்தாலும், நூறாயிர ரூபாவை ஆயிரம் குடும்பங்களுக்குக் கொடுக்கலாமே! ஆயிரம் குடும்பங்களுடைய சோற்றைப் பலமற்ற ஒரு மாது, தன்னுடைய உடலின்மேலே தூக்கிக்கொண்டு திரிவது, எவ்வளவு பெரிய ஒழுங்கின்மை. இன்னும் செல்வர்கள் வீட்டிலிருக்கிற எல்லா நகைகளும், பல பொருள்களும், ஆடைகளும், தீச்செயல்களிலும், வெளிப்பகட்டுகளிலும், அவர்கள் வீணாகச் செலவு செய்கிற பொருள்களும், வீணாக அவர்கள் வைத்திருக்கிற பண்டம் பாடி முதலிய பொருள்களும் இவ்வளவென்று கணக்கு எடுக்கக் கூடுமோ? அந்தப் பொருள்களையெல்லாம் பணமாக்கி வட்டிக்கு விட்டு, வட்டி வரும்படியில் அந்தச் செல்வர்களுடைய குடும்பங்களுக்குத் தற்காலத்திற்கு வேண்டிய மட்டும் வைத்துக்கொண்டு, எஞ்சியதை ஏழைகளுக்குக் கொடுத்தால், அவர்களுடைய தொல்லை விடியாதா? நிலத்தைப் பார்த்து, 'நிலமே உனக்குப் பொன்; எனக்கு மண்,' என்று சொல்வதுபோல, நிலத்தைத் தோண்டித் தோண்டி, மண்ணைத் தங்களிடம் இழுத்துக்கொண்டு பொன்னை நிலத்தில் புதைக்கிற செல்

வர்கள், அந்தப் பொருளைத் தாங்களும் நுகராமல், ஏழைகளுக்குங் கொடாமல் மண்ணுக்குத் தத்தம் செய்வது நன்மையா? அண்டையிலும், அயலிலும் எண்ணிக்கையில்லாத மக்கள், கொட்டைப்பாக்களவு சோறும் அகப்படாமல் துன்பப் படும்பொழுது, நிலவுரிமையாளர்கள் களஞ்சியங்கள் தோறும் மலை மலையாகக் கூலங்களைக் கட்டி வைத்துக்கொண்டு, மிகுந்த விலையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கலாமா? பல ஏழைகளுடைய வயிறுகள், வறுமையினால் வெறுமையா யிருக்கும்பொழுது, நெற்கோட்டைகள்போல் பொற்கோட்டைகளைக் கட்டி வைத்திருக்கிற பெருஞ்செல்வர்கள், வெள்ளிக் கிண்ணியிலே பாலும், தங்கக் கிண்ணியிலே சோறும் வைத்துக்கொண்டு, தங்களுடைய வயிறுகளை மட்டும் நிரப்பலாமா? பல ஏழைகள், உடையில்லாமல் வெற்றுடம்பாய்த் திரியும்பொழுது, செல்வர்கள் பல வண்ணார் வீடுகளை விலைக்கு வாங்கினது போல, மூட்டை மூட்டையாகவும் அடுக்கடுக்காகவும் உடைகளை வைத்துக்கொண்டு சும்மா இருக்கலாமா ?

## பிறருக் குதவிசெய்தலே பேரின்பம்

உதவியில்லாத பிறப்பே பாழ். ஒருவன் எல்லா நூலினும் வல்லவனுயும், பெரிய மறவனுயும், உலகப் புகழ் உள்ளவனுயும் இருந்தாலும், அவன் பிறருக் குதவியற்றவனு யிருப்பானுனல், அவனுடைய பிறப்பே வீண். மக்கள் தேவர் முதலிய எல்லாருடைய நாவுகளினுல், நாம் பேசினுலும், பிறருக் குதவிமட்டும் நம்மிடத்தில் இல்லாதிருக்குமானுல், நம்முடைய பேச்சுப் பொருளற்ற வெண்கல ஒலிக்கு ஒப்பாகும். கடவுள் நம்மை

விரும்பியதுபோல், நாம் ஒருவ ரொருவரை விரும்பவேண் டும். அப்போதுதான் அந்த அனைத்துலக ஆசிரியருக்கு, நாம் மாணவர்களென்று எல்லா மனிதர்களும் அறிவார் கள். கடவுளே உதவி வடிவாயிருக்கிறார். நாம் நிலத்தைப் பார்த்தாலும், வானத்தைப் பார்த்தாலும், எந்தப் பொரு ளைப் பார்த்தாலும் நம்மை நாம் பார்த்தாலும், எல்லா மும் அவருடைய உதவி வடிவேயல்லாமல் வேறில்லையே! அந்த மேலான அருட்கடவுள்போல் நாம் ஒருவ ரொரு வரை விரும்புவோமானால், கடவுள் நம்மிடத்தில் இருப் பார். அவருடைய அருளும் நம்மிடத்தில் நிறைவாயிருக் கும். எல்லாரும் கடவுளுடைய பிள்ளைகளாதலால், நாம் ஒருவர்க் கொருவர் உடன்பிறந்தவர்களா யிருக்கிறோம். ஒருவன் கடவுளை விரும்புவதாகச் சொல்லிக்கொண்டு தன்னுடைய உடன்பிறந்தானைப் பகைப்பானானால், அவன் பொய்யனே. ஏனெனில், தன் கண்ணாற் பார்க்கிற உடன் பிறந்தானை விரும்பாதவன், தன் கண்ணாற் பாராத கடவுளை எப்படி விரும்புவான்? இம்மைச் செல்வத்தை உடையவன், தன்னுடைய உடன்பிறந்தான் வறுமைப் படுவதைக் கண்டும் இரங்காதிருப்பானானால், அவனிடத் தில் தெய்வ அன்பு எப்படிக் குடிகொண்டிருக்கும்? கடவுளே ஏழைக்கோலங்கொண்டு வருவானாதலால் ஏழை களுக்கு மக்கள் கொடுக்கிறார்கள். ஏழைகளுக்கு இல்லை என்கிறவர்கள், கடவுளுக்கே இல்லை என்கிறார்கள். பிற செயல்களில் நாம் செலவிடுகிற பொருள்களெல்லாம் வீணாய்ப் போகின்றன. அறச்செயல்களிற் செலவிடுகிற பொருள் மட்டும், அழியாமல் மேலுலகச் செல்வமாகச் சேருகின்றது நாம் நுகரும் இன்பங்களெல்லாம் சிறியவா யும், பின்பு துன்பங்களை விளைவிக்கத் தக்கவைகளாயு

யிருக்கின்றன. நாம் பிறருக்கு உதவிசெய்து, அந்த உதவிப் பயனை அவர்கள் நுகரும்பொழுது, நமக்கு உண்டாகிற இன்பம் பேரின்பமல்லவா? ஆகையால் பிறருக் குதவி செய்வதற்கு ஒப்பான இம்மை மறுமை நன்மை வேறில்லையே.

ஒவ்வொருவரும் தங்களுடைய நிலைமைக்குத் தக்கபடி பிறருக் குதவிசெய்வது பெரிதன்று. செல்வர்கள் வறியவர்களுக்குச் சோறு உடை முதலியவைகளைக் கொடுக்கலாம். புலவர்கள் எளிய பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கலாம். வலுவுள்ளவர்கள் வலுவற்றவர்களுக்குத் துணைசெய்யலாம். துன்பமுள்ளவர்களுக்கு யாரும் இனிய மொழிகளைச் சொல்லித் துன்பத்தை நீக்கலாம். நோயாளர்களை உடனலமுள்ளவர்கள் அடிக்கடி உசாவி நோய் தீருஞ் செயல்களைச் செய்யலாம். அறிவுள்ளவர்கள் அறிவில்லாதவர்களுக்குச் சமயம்பார்த்துத் தகுந்த அறிவுரைகளைச் சொல்லித் திருத்தலாம். ஏழைகளும் தங்களுடைய உடல் வருந்தத் தொல்லைப்பட்டாயினும், பிறருக்கு உதவி செய்யலாம். இவ்வாறே, ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய ஆற்றலுக்குத் தக்கபடி பிறருக் குதவி செய்தால், ஏழைகளுக்கெல்லாம் வறுமை அழியுமே. கோடை வெயிலைத் தான் தாங்கிக்கொண்டு, மற்றவர்களுக்கு நிழல் கொடுக்கிற மரம்போலத் தங்களுக்கு வருகிற துன்பங்களைப் பாராட்டாமல், பிறருக்கு உதவி செய்கிறவர்களே சிறந்தவர்கள்.

கையிலே பொருளை வைத்துக்கொண்டு வறிஞர்கள் போல ஐயத்துக்கு இரந்துண்ண வருகிற மாயப் புரட்டர்களுக்கும், பாடுபடத்தக்க உடல்வலிமை யுடையவர்களுக்கும், வீண்புகழ்ச்சி செய்பவர்களுக்கும் ஐயமிடுவது

வீன் கொடையாயும், அவர்களிடத்தில் பொருளாசை, சோம்பல், பொய் முதலிய தீக்குணங்களை விளைவிக்கத் தக்கதாயு மிருப்பதால், தகுதியறிந்து ஐயமிடுவதே பொருத்தமாயிருக்கின்றது. ஆருமற்ற உள்ளூரார் வெளியூரார்களும், பாடுபட ஆற்றலில்லாத குருடர், முடவர் முதலிய உறுப்புக் குறைபாடுள்ளவர்களும், நோயாளர்களும், முதியவர்களும், தாய் தகப்பன் அற்ற பிள்ளைகளும், ஆருமற்ற கைம்பெண்களும், வாழ்ந்து வறியோரானவர்களும், நம்முடைய உதவிக்கு உரியவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் எந்தக் குலத்தாராயிருந்தாலும், எந்தச் சமயிகளாயிருந்தாலும், எந்த நாட்டாராயிருந்தாலும், எவ்வளவும் வேறுபாடு பாராமல் அவர்களுக்கு உதவி செய்வதே மேலான நன்மை. எல்லோருக்கும் தந்தையாகிய கடவுள், நல்லவர்களுக்கும் பொல்லாதவர்களுக்கும் தக்கபடியாக ஞாயிறு விளங்கவும், நன்னெறியாளர்களுக்கும் தீநெறியாளர்களுக்கும் ஒருபடியாக மழை பெய்யவுஞ் செய்கிறாராதலால், அவருக்குப் பிள்ளைகளாகிய நாம், நம்முடைய பகைவர்களையும் விரும்பவும், வைவாரை வாழ்த்தவும், நம்மைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யவும், நமக்குத்துன்பஞ் செய்கிறவர்களுக்கு நல முண்டாகும்படி வேண்டவும் மறைமொழிகளின்படி நாம் உரிமைப்பட்டிருக்கிறோம்.

“இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்” (17)

என்று திருவள்ளுவரும் செப்புகின்றாரே!

## உறவினருக்குதவுதல்

பெற்ற தாய் பசித்திருக்கப் பார்ப்பனர்கட்கு உணவளிப்பதுபோல், சிலர் தங்களுடைய சொந்தக் குடும்பங்

களைத் தவிக்க விட்டுவிட்டு, சொத்துக்களைப் பிறர்க்குரிமை செய்கிறார்கள். இது மறு நெறிக்கும் உலக நடைமுறைக்கும் பொருந்தாததா யிருக்கின்றது. நம்முடைய மனைவி, பிள்ளைகள், தாய் தந்தை, அண்ணன் தம்பிமார், அக்கா தங்கைமார்கள் முதலியவர்களை நம்மிடத்தில் கடவுள் ஒப்புவித்திருப்பதால் அவர்களை முந்திக்காப்பாற்ற வேண்டியது நம்முடைய பொறுப்பாய் இருக்கின்றது. அப்படியே ஏழைகளான நம்முடைய சொந்த உறவினர்களையும், நமக்கு அருகிலிருக்கிற வறியவர்களையும் காப்பாற்ற வேண்டியது கட்டாய மாயிருக்கின்றது. ஒருவனுடைய பொருளைக் களவாடி வேறொருவனுக்குக் கொடுப்பதுபோல், சிலர் வாங்கினகடனைக் கொடாமல், தங்களுடைய பொருள்களையெல்லாம் அறநெறியில் செலவுசெய்கிறார்கள். இப்படிப்பட்ட கொடையாளிகள் கள்வர்களாயும், அவர்களிடத்தில் கொடை வாங்குகிறவர்கள் களவுச் சொத்தை வாங்குகிறவர்களாயும் இருக்கிறார்கள். ஆகையால் அறங் கொடுப்பதற்குமுன், கடன்களைத் தீர்ப்பதே நேரிய முறைமையா யிருக்கின்றது.

## வறியார்க்கொன் றீவதே ஈகை

நோயில்லாதவர்களுக்கு மருந்து கொடுப்பதுபோலும் நீர்ப்பெருக்கின் மேலே பெய்யும் மழையைப்போலும், சிலர் செல்வர்களைக் கண்டால் விருந்து முதலிய பதினாறு வகை ஓம்புதல்களைச் செய்கிறார்கள். வறியவர்களைக் கண்டால், தடியெடுத்துத் துரத்துகிறார்கள். இது பெருங் குற்றமாயிருக்கின்றது. முகங்கோணாமலும், கைம்மாறு வேண்டாமலும், உள்ளன்போடு ஐயமிடுவதே பெரிய நல்வினை. ஏழைகளுடைய திட்டுக்கும் அலட்டுக்கும் அஞ்சி மன

வொருமையற்றும் மகிழ்ச்சியில்லாமலும் ஐயங்கொடுப்ப தானது, கொடுங்கோல் அரசர்களுடைய கட்டளைக்கு அஞ்சிக், கடமை கொடுப்பதுபோலும், கள்ளர்களுடைய தடியடிக்கு அஞ்சி அவர்கள் கையில் பொருளை வாரிக் கொடுப்பதுபோலுமிருக்கின்றது. யாதொரு எதிருதவி யைக் கருதி ஐயமிடுகிறவர்களைக் கொடையாளிகளென்று சொல்லுகிறதாயிருந்தால், உலகத்தில் எல்லோரையுங் கொடையாளிகளென்று சொல்லலாம். கடைக்காரர்களி டத்தில் சரக்குகளை வாங்கிக்கொண்டு, அவர்களுக்கு விலை கொடுக்கிறவர்களும் கொடையாளர்களே! விலைவாங்கிக் கொண்டு சரக்குகளைக் கொடுக்கிற வணிகர்களும் கொடை யாளிகளே! வேலைக்காரர்களிடத்தில், வேலை வாங்கிக் கொண்டு அவர்களுக்குக் கூலிகொடுக்கிறவர்களும் கொடை யாளிகளே! ஊதியம் வாங்கிக்கொண்டு சமையல் செய்து கொடுக்கிற சமையலாட்களும் உணவுக்கொடையாளர்களே! வீடுகள்தோறும் ஆடை வெளுத்துக் கொடுக்கிற வண்ணார் களும், கூறைக கொடையாளர்களே! விலைமாதர்களுக்குப் பொருள் கொடுக்கிற காமிகளும், கொடையாளிகளே! அந்தக் காமிகளுக்குப் புண்களையும் நோய்களையும் கொடுக் கிற விலைமாதர்களும், கொடையாளிகளே! இப்படிப்பட்ட கொடைவிருப்பத்தையால் எதிருதவிவேண்டாது, ஐயமிடுவதே பெருமை. மனிதர்கள் பார்க்க அவர்கள் முன்பாக எளியவர் களுக்கு ஐயம் கொடுக்கிறவர்களுக்குக் கடவுளினுடைய அருட்பேறு கிடைக்கமாட்டாதாகையால், ஒருவருக்குந் தெரியாமலும் மக்கள் புகழ்வதை விரும்பாமலும், மறை முகமாகச் செய்கிற கொடையே நல சிறந்தது. மலர் மறைவாயிருந்தாலும், அதனை மணமானது காட்டிவிடுவது போல், எளியவர்களைக் காப்பாற்றுபவர்களுடைய

கொடைப்பண்பு எப்படியும் காட்டிவிடும். பிறர்க்குதவி செய்வோர் இறந்தும், இறவாமல் என்றும் விளங்குகிறார்கள். பிதுபிசினர்கள் பிறந்தும், பிறவாதவர்களாயும், இருந்தும் இல்லாதவர்களாயும் இருக்கிறார்கள். அறநெறியாளர்களுக்கு ஒரு துன்பம் வந்தால் எல்லோருந் தங்களுக்கு வந்ததுபோல எண்ணி, அந்தத் துன்பம் நீங்கவேண்டுமென்று கோயில்கள் தோறும் கும்பிடுகிறார்கள். பெரும்பிசினர்களுக்குத் துன்பம் வந்தால், அவர்களை நினைப்பாருமில்லை, அவர்களுக்கு இரங்குவாருமில்லை. யாருமற்றவர்களைப் போற்றுவது, ஒவ்வொருவருக்குந் தனித்தனியே கடனுபிருப்பது மன்றி, எல்லோருக்கும் பயன்படும் படியாக அறவுணவுச்சாலைகள், பாடசாலைகள், மருத்துவசாலைகள், வறியோர்சாலைகள், தண்ணீர்ப்பந்தல்கள் முதலிய நிலைபெற்ற அறங்களை ஏற்படுத்துவது பெருஞ் செல்வருக்குக் கடமையாயிருக்கின்றது.

## அரசர்கள் செய்த அழிவு

தன்னுயிர்போல் மன்னுயிரை யோம்புகிற முறைநட்பு இல்லாமையினுல், அரசர்கள் சிலர் தங்களுடைய தந்நலத்திற்காகவும், காரண மில்லாமலும் எண்ணிக்கையில்லாத யானை குதிரை தேர் காலாள் முதலிய படைகளைச் சேர்த்துக்கொண்டு, போர்ப்பறைகள் முழங்கப், போர்க்கோலத்துடன் புறப்பட்டுப் பிறநாட்டரசர்களுடனே சண்டை தொடுக்கிறார்கள். அந்த இரண்டு படைக்கடல்களும் கலந்து எட்டுப் பக்கங்களும் நடுங்கும்படி பெருநகை செய்து கொண்டும், பெருநஞ்சுபோல் சீறிக்கொண்டும், கோடையிடிபோல் முழங்கிக்கொண்டும், ஊழித் தீ போல் கண்களில் தீப்பொறிகள் பறக்க, ஒருவரை யொருவர் பிடித்துக்

கடித்து அடித்து இடித்து மடித்து முடித்து விடுகிறார்களே! அப்போது தலையற்று, மார்பற்றுக் கையற்றுக் காலற்று விழுகிற முண்டங்களும், துண்டங்களும், கண்டங்களும் அண்டங்களைப்போய் முட்டுகின்றனவே! ஒவ்வொரு போரி லும் குவிகிற பிணமலைகள், புதுமலைகளாகின்றனவே! குரு திப் பெருக்குக் கடற் பெருக்கிலும் மிகுதியே! புலிக்கு அஞ் சியவர்கள் எல்லோரும் என்மேலே படுத்துக்கொள்ளுங்கள் என்பதுபோல், அந்த அரசர்கள் தாங்கள் வெளியே புறப் படாமல் மூலையில் பதுங்கிக்கொண்டு, ஏழைகளைச் சண் டைக்குவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். அறிவிலும் ஆற்றலிலும் மிகப் பெரியவர்களென்றும், அறநெறியாளர் களென்றும் பெயர்கொண்ட அலெக்சாந்தர் போனபார்த்து, சீசர் முதலிய நல்லபோர்மறவர்கள் செய்த கொலைகளுக்கு, கணக்குண்டா? அவர்களுக்கு அறநெறியாளர்களென்றும் பெயரா? இந்த அறநெறியாளர்கள்போல், பின்னுஞ் சில அறநெறியாளர்கள் உலகத்தில் இருந்திருப்பார்களானால் ஊழிக்காலப் பெருக்குப்போல், உலகத்தில் மனிதப் பூண் டில்லாமல் எல்லாவற்றையும் அழிவு செய்திருப்பார்களே. நம்முடைய தந்தைகள் ஒருவரும் இறந்திருக்கமாட்டார் கள். இந் நூலை எழுத நாமும் இருக்கமாட்டோம்.

அமைதி, அருள், இரக்கம், பொறுமை, அடக்கம், வணக்கம் முதலிய நற்குணங்களைக் கற்பிக்கிற மெய்ம் மறையினின்று பிரிந்த பல சமயத்தார், அந்த மறையைக் காரணமாக வைத்துக்கொண்டு ஐரோப்பாவில் ஒருவரோ டொருவர் சண்டைசெய்து, அந்தச் சண்டையில் மடிந்த மக்களும், குருதிகளும், ஒடிந்த கைகால்களும், இடிந்த கோயில்களும், பொடிந்த மடங்களும், முடிந்த பொருள் களும், படிந்த துன்பங்களும் இவ்வளவென்று சொல்லக்

கூடுமா? இந்த நாட்டிலும் ஒவ்வொரு கொள்கை ஏற்படும் போது, நடந்த சண்டைகளும், கலகங்களும், உயிர்க் கொலைகளும் பலவே. ஒரு சமயத்தார், மற்றொரு சமயத்தை இகழ்ந்தும், ஒரு புலவன் மற்றொரு புலவனைப் பழித்தும், செய்திருக்கிற நூல்கள் பொய்க் குவியலாயும், இழிமொழிகளுக்கு அகர வரிசைகளாயு மிருக்கின்றன. அவைகளைப் படித்தால், நம்முடைய வாயுங் கசக்கின்றது; நினைத்தால் மனமுங் கசக்கின்றது. தென்றல் முற்றிப் பெருங் காற்றாவதுபோல், சில சமயங்களில் எழுத்துச் சண்டையிலிருந்து, கழுத்துச் சண்டையிலும், வாய்ச் சண்டையிலிருந்து கைச்சண்டையிலும் நுழைகிறார்கள். இவ்வளவு வேறுபாடுகளுக்கும் தன்னைப்போற் பிறரை எண்ணாத குணமே காரணமாயிருக்கின்றது.

## பலவகைக் கள்ளர்கள்

பின்னும் பிறரிடத்தில் அன்பில்லாமையினால் உலகத்தில் களவுகளும் புரட்டுகளும் ஒழுங்கின்மைகளும் நிறைந்திருக்கின்றன. கள்ளர்கள் இரவில் எப்போதாவது புதுப் பிறை இருட்டில் களவாடுகிறார்கள். நாடோறும் பட்டப் பகலில் எல்லோரும் அறிய நடக்கிற களவுகளுக்கு அளவில்லையே! பொருளவாவினால் பொய்யாணை யிடுகிறவர்களும், பொய்ச்சான்று சொல்லுகிறவர்களும் பொய்ச் சீட்டு உண்டுபண்ணுகிறவர்களும், பொய் வழக்குச் செய்கிறவர்களும், தங்களுடைய ஆற்றலுக்கு மேற்பட்ட கடன் வாங்குகிறவர்களும், வாங்கின கடனைக் கொடாதவர்களும், முறையற்ற வட்டிவாங்குகிறவர்களும், அடைக்கலமாக வைத்த பொருள்களைக் கவர்ந்து கொள்கிறவர்களும், வேலை செய்யாமல் கூலி வாங்குகிறவர்களும், ஏழைக

ளிடத்தில் வேலை வாங்கிக்கொண்டு கூலி கொடாதவர்களும், செல்லாப் பணத்தைச் செலுத்துகிறவர்களும், அளவிலும் நிறையிலும் வேறுபாடு செய்கிறவர்களும், சரக்குகளுக்கு மிகுந்த விலை வாங்குகிறவர்களும், நல்ல சரக்குக்கு விலை வாங்கிக்கொண்டு கெட்ட சரக்குகளைக் கொடுக்கிறவர்களும், சூதாடிப் பொருள் தேடுகிறவர்களும், கண்டெடுத்த பொருளைச் சொந்தக்காரரைத் தேடிக் கொடாதவர்களும், பிறர் பொருளைப் பார்த்துப் பொறாமை கொள்ளுகிறவர்களும், களவுப் பொருளை வாங்குகிறவர்களும், களவுக்கு உதவி செய்கிறவர்களும், களவாடும்படி பிறருக்குக் கற்பிக்கிறவர்களும், பிறருக்குப் பொருள்இழப்பு உண்டாகும்படி செய்கிறவர்களும், கையில் பொருளை வைத்துக்கொண்டு ஏழைகளுக்கு ஐயம் இடாதவர்களும், பணம் வாங்கிக்கொண்டு பெண் கொடுக்கிறவர்களும், பட்டப்பகலில் கொள்ளை யடிக்கிற கள்ளர்களே! அன்றியும், எளியவர்கள் தாங்கக்கூடாத நாட்டு வரி, காட்டு வரி, வீட்டு வரி, மாட்டு வரி, ஆட்டு வரி, ஏட்டு வரி, சீட்டு வரி, கூட்டு வரி, பாட்டு வரி, மேட்டு வரி, தீட்டு வரி, ரோட்டு வரி, கோட்டு வரி, ஈட்டு வரி, சாட்டு வரி, முதலிய கேட்டு வரிகளைச் சுமத்தி, ஒழுங்கின்மை செய்த பழங்கால ஆட்சியாளர்கள் முறைமையற்றவர்களே! கைக்கூலி! வாங்கிக்கொண்டு ஒருதலைப் பக்கம் முடிவு செய்கிற சில வழக்கு மன்றத் தலைவர்கள், கொடியவர்களே! எங்கே கொலை நடக்கும், எங்கே களவு நடக்கும், எப்போது நமக்குப் பணம் வருமென்று எப்பொழுதும் எதிர்ப்பார்த்துக்கொண்டு, குற்றவாளிகளை விட்டு விட்டுக் குற்றமில்லாதவர்களைப் பிடித்து, வருந்தச் செய்கிற சில ஊர்க்காவல் மறவர்கள் கள்ளர்

களே! எப்போது குடும்பங்களிற் கலகம் உண்டாகும், எப்போது வழக்கு வருமென்று கருத்தாய்க் காத்துக் கொண்டிருக்கிற சில முறைமன்றத் தலைவர்கள் வஞ்சகர் களே! யாருக்குக் காய்ச்சல் வரும், யாருக்கு வயிற்றுப் போக்கு வரும், யாருக்குத் தலை உடையும், யாருக்குக் கைகால் ஒடியும் என்று வேண்டிக்கொண்டு, தங்களுடைய பிழைப்புக்காகப் பிள்ளை வளர்ப்பதுபோல், நோயை வளர்த்துவிட்டுக்கொண்டு, பிழைக்கிற சில மருத்துவர் கள், வன்னெஞ்சக் கள்ளர்களே! பிள்ளைகள் படித்துக் கொண்டால் தங்களுடைய பிழைப்புக்கு மோசம் வரு மென்று கருதித் தேய்பிறைத் திங்கள் போல் பிள்ளைக ளுடைய அறிவை நாளுக்குநாள் குறைக்கிற சில ஆசிரியர் களும், மாசிறியர்களே! மேற்சொல்லிய அலுவலாளர் களில் பலர் மிக நல்லவர்களாக யிருக்கிறார்களாகையால் அப்படியில்லாத சிலரைப் பற்றி மட்டும் நாம் பேசினோம்.

## பிற உயிர்கட்குத் துன்பஞ் செய்தல் கூடாது

அன்றியும் தன்னைப்போற் பிறரை எண்ணவேண்டும், என்கிற கட்டளையை எல்லோரும் பின்பற்றினால் கடவுளை வஞ்சிப்பவர்களும், ஆசிரியரை வஞ்சிப்பவர்களும், தந் தையை வஞ்சிப்பவர்களும், தாயை வஞ்சிப்பவர்களும், பிள்ளையை வஞ்சிப்பவர்களும், உடன்பிறந்தாரை வஞ்சிப் பவர்களும், கணவனை வஞ்சிப்பவர்களும், மனைவியை வஞ் சிப்பவர்களும், பிறன்மனைவியை வஞ்சிப்பவர்களும், பொய்யர்களும் வெய்யர்களும், கொலைஞர்களும், புலைஞர் களும், கொடியர்களும், குடியர்களும், சினமுடையவர் களும், பிசினர்களும், தீவினையாளர்களும், உலகத்தில் இருப்பார்களா? இரார்களே! ஆகையால், பிறர்க்குதவி,

உயிர்களிடத்து அருள், இரக்கம் முதலிய நற்குணங்களை மாதர்களுக்கு ஓயாமல் உரைக்கவேண்டும்.

விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீர்வாழ்வன முதலிய எல்லா உயிர்களிடத்திலும், அருளுடனிருப்பதே உயிர்களிடத்து அருளுடைமை என்று சொல்லப்படுகின்றது. மக்களுக்கு உதவியாகவே எல்லா உயிர்த்தொகைகளையும் கடவுள் படைத்தருளினாரென்று, நாம் முன்னமே விளக்கியிருக்கிறோம், சில உயிர்கள் நமக்கு நேரே உதவியாயிராவிட்டாலும், நமக்குப் பயனான வேறே சில உயிர்களுக்கு, அவைகள் உணவாய்ப் பயன்படுகிறபடியால், நிலத்தில் ஒரு சிறு உயிரேனும் நமக்குப் பயனற்றதாயிருக்கவில்லை. விலங்கு, பறவை முதலியவைகள் அறிவில்லாத பொருள்களாயிருந்தாலும், நம்மைப்போலவே அவைகளுக்கும் உடலும், உயிரும், ஐம்புலன்களும், இன்பதுன்பங்களை யறிகிற உணர்வும் உண்டாயிருக்கிறபடியால், அவைகளுக்கு எவ்வகைத் துன்பமுஞ் செய்யக்கூடாது. அவைகளுக்கு அறிவைக் குறைத்ததற்காக வேறு சில செயல்களில் கடவுள் அவைகளுக்கு நன்மை செய்திருக்கிறார். மனிதன் அறிவுள்ளவனானதால், வலுவான வீடு, போர்வை முதலியவைகளைச் செய்துகொண்டு வெம்மை, குளிர் முதலிய துன்பங்களைத் தடுத்துக் கொள்வனென்பதைக் கடவுள் எண்ணியே, அவனுக்கு மென்மையான தோலையும், திறந்த உடலையுங் கொடுத்திருக்கிறார், அப்படிப்பட்ட அறிவு விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இல்லாதபடியால், அவைகளுக்குத் தடிப்பான தோலும், திரளான மயிருமுள்ள உடல்களைக் கொடுத்திருக்கிறார். பகைவரச்ச நீக்கத்திற்குத் தகுந்த ஆயுதங்களைச் செய்துகொள்ள மனிதன் தெரிந்தவ

கையால், அவனுடைய உடல், படைக்கலமில்லாமல் டயற்றதாயிருக்கின்றது. படைக்கலஞ் செய்யத் தெரி த அறிவில்லாத உயிர்களுக்குக் கொம்புகள், கூரான குகள், நகங்கள், தந்தங்கள், வால்கள், கால்கள் முத படைக்கலங்களை அவைகளுடைய உடல்களிலே கட அமைத்துவைத்திருக்கின்றார். விலங்குகளும், பறை களும், தங்களுடைய கருத்துக்களை ஒன்றுக்கொன்று ரிவித்துக்கொள்ளும்படி, ஒவ்வொரு உயிர்க்கும் ஒவ் ரு மொழியைக் கடவுள் கற்பித்திருக்கிறாரென்பது டமுறையில் உறுதியாய்த் தெரிகின்றது. மக்கட் குழந் கள் பிறந்து பல காலம் வரையில், தங்களைத் தாங்களே துகாத்துக் கொள்ளத் தெரியாமல், பெரியவர்களுடைய வியை நாடுகின்றன. விலங்குகளின் குட்டிகளும், வைகளின் குஞ்சுகளும், பிறந்த உடனேயும் அல்லது ந்து சில நாட்களுக்குள்ளாகவும் தங்களுடைய உணவு த் தாங்களே தேடிக்கொள்ளவும், வளை, கூடு முதலிய ப்பிடங்களைச் செய்து கொள்ளவும், இயற்கையாகவே ரிந்துகொள்ளுகின்றனவே! விலங்குகள் தகுந்த இடந் டிக் குட்டிகளைப் பெற்று வளர்க்கிற அருமையும், பறவை , ஊர்வன முதலியவைகள், கூடுகளில் முட்டையிட்டு நாள் அடைகாத்துக் குஞ்சுபொறித்துக் குஞ்சுகளை ர்க்கிற அருமையும், மனிதரும் வியக்கத்தக்கதாயிருக் றதே!

## கடவுட் படைப்பின் காட்சி

நாம் ஆடையணிகலன்களை அணிந்து கொள்ளாமல் ந்தவடிவோ டிருப்போமானால், நம்முடைய உடல் ப் பார்க்க, நமக்கே வெறுப்பாயிருக்கும். பறவை

களுக்கும், விலங்குகளுக்கும், இயல்பாகவே எல்லா அழகு களும் பொருந்தியிருப்பதால், அவைகளைப் பார்க்கப் பார்க்க நமக்குக் கண்ணுக்கு விழாச்செய்வதுபோ லிருக் கின்றதே! மேலானவடிவும் நல்ல அழகுமுள்ள மயில், ஐந்துநிறக்கிளி, முதலிய பறவைகளுக்கு, ஒன்பதுவகை மணிவடிவான எல்லா அணிகலன் பொன்னுடைகளையும் அணிந்து கொண்டிருக்கிற அரசமாதர்களும் அழகில் ஒப் பாவார்களா? சில பறவைகள் ஓவியம் போல் உடல் அசையாமலிருந்துகொண்டு, ஏறுதல் இறங்குதல் முதலிய இசை முறை (ஆரோகண அவரோகணக்கிரமம்) தப்பா மலும், மாறுபாடு (அபஸ்வரம்) இல்லாமலும், கேட்பவர் கேட்டலின்பங்கொண்டு உடல் தன்னுணர்வின்மையை அடையும்படி மிக இனிமையாய்ப் பாடுகின்றன. கையை நீட்டிக் கொண்டும், தலையை ஆட்டிக்கொண்டும் இசை யைக் கூட்டிக் கொண்டும், பல்லைக் காட்டிக்கொண்டும் பாடுகிற நம்முடைய இசைப்புலவர்கள், அந்தப் பறவை களுக்கு ஒப்பவார்களா? நாம் இகழ்ச்சியாக எண்ணுகிற ஈக்கள், எறும்புகள் முதலிய பூச்சிகளையும் பூதக்கண்ணடி யிற் பார்த்தால், அவைகளுடைய உடல்களில் பலவகை யான அழகிய நிறங்களும், புள்ளிகளும், தோன்றுகின்ற னவே! செய்தற்கரியதையுஞ் செய்யவல்ல கடவுள், இவ்வ ளவு அருமையாகச் செய்திருக்கிற உயிர்த்தொகைகளை, நாம் தொல்லை செய்வதும் காரணமில்லாமல் கொல்லுவதும் நேர்மையா? ஒருவன் எழுதிய ஓவியத்தை வேறொருவன் கலைத்துப் பழுதுபடச் செய்தால் அந்த ஓவியக்காரனுக்கு எவ்வளவு சினம் உண்டாகும். அதுபோல் எல்லா உயிர் களையும் படைக்குந் தலைவனாகிய கடவுளுக்கு உயிர்களுக் குத் துன்பம் செய்கிறவர்மேல் சினம் வராமலிருக்குமோ?

## வாயில்லா உயிர்களை வருத்துதல்

பசு, காளை, எருமை, ஆடு, குதிரை, நாய், பூனை, கழுதை, ஒட்டகம் முதலிய விலங்குகள், மனிதருக்கு எவ்வளவோ உதவியுள்ளவைகளா யிருக்கின்றன. அவைகள் இல்லாவிட்டால், மனிதருடையஇன்பங்களில் பாதிஇன்பங்கள்போய்விடுமென்பது ஐயமா? தலைவன் எவ்வளவு அடித்தாலும் அந்த அடியையும் பட்டுக்கொண்டு, அவன் தீனி போட்டாலும் போடாவிட்டாலும் வெளியேயாவது போய் உடம்பை வளர்த்துக்கொண்டு வீட்டுக்குவந்து, தலைவனுக்கு எல்லா ஊழியங்களும் செய்கிற அந்த விலங்குகளுடைய பொறுமையும் அமைதியும் அன்பும் மனிதருக்கு வருமா? குரங்கின்கையிற் பூமாலை அகப்பட்டதுபோல், சிலர் கையில் அந்த விலங்குகள் அகப்பட்டுக்கொண்டு படுகிற வருத்தம் சிறிதல்லவே? திருவையாற்றான் குதிரை வளர்த்த கதை போல்பல மாடு, குதிரை, கழுதை முதலிய விலங்குகளிடத்தில் எல்லா வேலைகளையும் வாங்கிக்கொண்டு, அவைகளுக்குத் தகுந்த தீனி போடாமல் கொல்லுகிறார்கள். குருவியின் தலையில் பனங்காயைக் கட்டுவதுபோல, அவைகள் தாங்கக்கூடாத சுமைகளைச் சுமத்தி நடத்துகிறார்கள். அவைகள் நடக்கமாட்டாமல் தத்தளிக்கும்போது, சாட்டையினாலும், கழிகளினாலும் ஓங்கி ஓங்கி அடித்தும், செந்நீர் பீறிட்டு ஒழுகும்படி தாற்றுக்கோலால் தாறுமாறாகக் குத்தியும் கொடுமை செய்கிறார்கள். சிலர் ஆவுக்கு மூத்த பிள்ளைபோல், பாலையெல்லாம் கறந்துகொண்டு கன்றுக்குத் தீமை செய்கிறார்கள். அவர்கள் கன்றுக்கு உடன் பிறந்தார் களாயிருக்கிற வரையில் அவர்களோடுகூடக் கன்றுக்கும் சமபாகம் உண்டே! அப்படியிருக்க, எவ்வள

வும் கன்றுக்குப் பால் விடாமல் ஒட்டக் கறந்து விடுவது எவ்வளவு முறைகேடு? தம்பாட்டில் மேய்ந்து கொண்டிருக்கிற கழுதை முதலியவைகளைச் சிலர், காரணமில்லாமல் கல்லால் எறிந்தும், கழியால் அடித்தும் அவைகளுடன் போர் செய்து, அந்தக் கழுதைகள் கொடுக்கும் உதைகளையும் வாங்கிக்கொள்ளுகிறார்கள். சில பிள்ளைகள், ஈ, எறும்பு முதலிய பூச்சிகளைப் பிடித்துக் கொல்லுகிறதும், குருவிக் கூண்டுகளைக் கலைத்துக் குருவிகளுக்கும், குஞ்சுகளுக்கும் துன்பம் செய்கிறதுமே வேலையாயிருக்கிறார்கள். இவ்வகையாக, வாயில்லா உயிர்களுக்குத் துன்பம் செய்து கைபழகுகிறவர்கள், மக்களையும் தொல்லை செய்யக் கற்றுக்கொள்வார்களென்பது ஐயமா? விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் மகிழ்ச்சி உண்டாகும்போது அவைகள் எவ்வளவோ இன்பமாகக் குதித்துக் கூத்தாடி விளையாடுகின்றன. அவைகளுக்குத் துன்பம் உண்டாகும்போது கூக்குரலிட்டு அழுது புலம்புகின்றனவே! இப்படியாக மக்களைப்போலவே இன்பதுன்பங்களை உணருகிற விலங்கு முதலானவைகளுக்குத் தீங்கு செய்கிறவர்கள் மிக இழிந்தவர்களே. ஆனால் மனிதர்களில் தீயவர்களாயிருப்பவர்களை ஒறுப்பது எப்படி முறையோ, அப்படியே அரிமா, புலி, கரடி முதலிய தீய விலங்குகளையும், பாம்பு, தேள் முதலிய நச்சுயிர்களையும் கொல்வது குற்றமன்று.

## நாற் காற் படைப்புக்களின் நல்லியல்பு

விலங்குகளிடத்தில் மனிதரும் கற்றுக் கொள்ளும்படியாக சில நற்குணங்களுமிருக்கின்றன. மாடு, ஆடு, குதிரை, கழுதை முதலிய விலங்குகளும், காக்கைமுதலிய பறவைகளும் தங்களுடைய இனத்

துடன் சேர்ந்து இரையெடுக்க விரும்புகின்றன. கூட்டத்துடன் சேர்ந்து மேய்ந்து கொண்டிருக்கிற ஓர் ஆட்டையாவது மாட்டையாவது பிடித்துத் தனியே நல்ல புல்லிருக்கிற இடத்திலே கொண்டுபோய் விட்டாலும், அந்த இடத்தைவிட்டுக் கூட்டங்கள் மேய்கிற இடம், நல்ல புல்லில்லாத இடமாயிருந்தாலும், அந்த இடத்தையே நாடுகின்றது. ஓர் இனத்தைச் சேர்ந்த விலங்குகள் இல்லாத வரையில், பல வகை விலங்குகளும் ஒன்றுக்கொன்று கூட்டுறவாயிருக்கின்றன. எப்படியென்றால், ஒரு வீட்டில் ஒரு குதிரையும் கோழியும் மட்டும் இருந்தால், அவைகள் ஒன்றுக்கொன்று அண்மையாயும் நலமாயும் இருக்க விரும்புகின்றன. அமைதியான விலங்குகளும் அவைகளுக்கு உயிர்ப்பகையான தீய விலங்குகளும், பழக்கத்தினால் ஒரு கூண்டில் மாறுபாடில்லாமல் நட்பாயிருப்பதைப், பலர் பார்த்திருக்கிறார்கள். யானை, அரிமா, புலி, கரடி முதலிய கொடிய விலங்குகளையும், மனிதன் பிடித்துத் தன்னுடைய விருப்பப்படி நடக்கக் கற்பிக்கிறானென்பது யாருக்குத்தான் தெரியாது? தனிச் சிறையில் வைக்கப்பட்ட சிலர், தாங்கள் தனியாயிருக்க மனம் பொறுக்காமல், தங்களுக்கு அண்மையில் வந்த எலி முதலியவைகளுக்கு இரை கொடுத்து, அவைகளுடன் நட்புச் செய்து கொண்டதாகவும், அந்த உயிர்களும் அவர்களிடத்தில் மிக விருப்பமாயிருந்ததாகவும் சிலர் நூல்களில் எழுதியிருக்கிறார்கள். பின்னும், நாம் மேலே கூறியபடி, நாய், மாடு முதலிய வீட்டு விலங்குகள், தலைவன் என்ன துன்பம் செய்தாலும், அதையெல்லாம் பொறுத்துக்கொண்டு, அவனை விட்டுப் பிரியாமல், அவனுக்கு எல்லா ஊழியங்களும்

செய்கின்றனவே! இப்படிப்பட்ட பலவகை விலங்குகளிடத்தில் பிறநட்பு, பிறருக்குதவி, நன்றிமறவாமை, அடக்கம், பொறுமை முதலிய நற்குணங்களை மனிதர் கற்றுக்கொள்வது நன்மையாயிருக்கின்றது.

## ஊன் உணவு விலக்குதல்

சைவ வைணவர்களுடைய கொள்கை முடிவுப்படி ஊன் உண்பது குற்றமாயும், கிறித்துமத முடிவுப்படி குற்றமற்றதாயுமிருக்கின்றது. உலகப்போக்கைப் பார்க்குமிடத்தில், ஊனுண்போர் பலராயும், அதை உண்ணுதிருப்பவர்கள் சிலராயுமிருக்கிறார்கள். கிறித்துமத முறைமைப்படி, ஊன் உண்பது குற்றமற்றதாயிருந்தாலும், தவஞ் செய்யுங் காலத்திலும், நோன்பு நாட்களிலும், ஊனைத் தள்ளித் தூய உணவாகச் சாப்பிடுவது, நல்வினையென்று கிறித்துவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட சில காலங்களில் ஊன்களைத் தள்ளுவது, நல்வினையாயிருக்குமானால், எக்காலத்திலும் அதைத் தள்ளிவிடுவது சிறந்த நல்வினைதானே! முதல் மனிதர் பூம்பொழிலிலிருக்கும்போது, ஊன் உண்ணும்படி அவனுக்குக் கட்டளை கொடுக்கவில்லை நீரப் பெருக்குக்கு முன் உலகத்தில் எல்லா ஒழுங்கின்மைகளும் நிறைந்திருந்தாலும், ஊன் சாப்பிடுகிற வழக்கம், அப்போது இருந்ததாக ஒரு நாலினாலும் தெரியவில்லை. நீர்ப் பெருக்குக் காலத்துக்குப் பிற்பாடு, ஊன் அருந்தும்படி உடன்பாடு கொடுக்கப்பட்டதைக்கொண்டே, ஊனுணவு மனிதனுடைய தீவினைக்கு உரியதே தவிர, நல்வினைக்கு உரியதல்லவென்று வெளிப்படையாய் விளங்குகின்றது. ஆகையால் கூடியமட்டும் சிறிது சிறிதாய் ஊன் உணவை

விலக்குவது, மிக நன்மையென்று நமக்குத் தோன்று கின்றது. ஊனுண்பது தீவினையாய் மட்டு மிருக்கிறதே தவிர, அது நல்வினையென்று ஒருவரும் சொல்லத் துணி யார்கள். திருமணம் செய்துகொள்வது நான்முறைக்கு ஏற்றதா யிருந்தாலும், ஒருவன் தன்னை முழுவதும் தெய்வ ஊழியத்துக்கே ஒப்புவித்துத், திருமணமில்லாமல் என் றும் மணமில்லாதவனா யிருப்பானானல், அது நல்வினை தானே! ஒருவன் தீவினை செய்தாலும், பிற்பாடு மனம் வருந்தித் தகுந்த கழுவாய் செய்துகொள்வானானல், அவ னுக்குத் தீவினை நீங்குமென்று, மறையில் கூறப்பட்டிருப் பதைக்கொண்டு, மனிதன் தீவினை செய்யும்படி கட வுள் கட்டளை கொடுத்ததாகச் சொல்லலாமா? தீவினை செய்து பிறகு கழுவாய் தேடுவதைப் பார்க்கிலும் பாவமே செய்யாதிருப்பது நன்மையல்லவா?

ஒவ்வொருவனும் கூடியவரையில் தீவினையே செய்யா திருக்க முயல்வது நன்மைதானே! அப்படியே ஊனுண் பது மறைமொழிக்கு ஏற்றதாயிருந்தாலும், அது உயிர்க் கொலைக்குக் காரணமாயும், இரக்கம் உயிர்கள்மாட்டன்பு முதலிய நல்வினைகளுக்கு மாறுபாடாயும் இருப்பதால், அப்படிப்பட்ட உயிர்க்கொலை செய்வதைப் பார்க்கிலும் செய்யாமலே இருப்பது மிகவும் நலந்தானே. ஆடு, கோழி முதலியவைகளைப் பிடித்துக் கொல்லும்பொழுது, அவை கள் படுகிற பாடும், துடிக்கிற துடிப்பும், இடுகிற கூக்குர லும், படுகிற இறப்புத்துன்பமும், இவ்வளவென்று சொல்லக்கூடுமா? ஓர் உயிருக்கு இவ்வளவு துன்பஞ் செய்து, ஊனுண்பதைப் பார்க்கிலும், ஊனுண்ணுமல், விட்டுவிடுவது முழு நன்மை என்பதை யார் தாம் ஒப்புக் கொள்ளார்கள்? உலகத்தில் ஊனைப்போல் தூய்மையின்

மையும் அருவருப்புமுள்ள பொருள் வேறொன்றும் இல்லையே! ஊனை மனிதன் பார்த்துப் பொறுக்கமாட்டான் என்பதைக் கடவுள் எண்ணியே, அதைத் தோலினால் மூடி மறைத்துவைத்தார். மூக்கைக் கையால் மூடிக்கொள்ளாமல் இருப்போமானால், ஊனினுடைய தீநாற்றம் வீசி, தலைமண்டையிலேறி மூளையையும் குழப்பிவிடுமே! அழுக்கைத் தூய்மை செய்வதுபோல், பல மணப் பொருள்களைச் சேர்த்துச் சமைத்தும், ஊனின் தீநாற்றம் நீங்காமல் சாப்பிட்டவர்களுடைய வாய்நாறிக் கைநாறி, உடம்பெல்லாம் நாறி, ஊரெல்லாம் நாறுகின்றதே! ஐயையோ!! இப்படிப்பட்ட அழுக்குப் பொருளைச் சாப்பிடவும் தலைஎழுத்தா? உயிர்த் தூய்மைக்கும் உடல் தூய்மைக்கும் சிறப்பான தொடர்பிருப்பதால், உயிர்த்தூய்மையை விரும்புகிறவர்கள், அழுக்குகளுக்கு இருப்பிடமான ஊன் உணவை, விலக்கப்பட்டதாகத் தள்ளிவிடவேண்டும். ஊனைத் தள்ளினால், அதற்குத் தோழனை கட்குடியும் தொலைந்துவிடும். கட்குடி தொலைந்தால், அதற்குத் தோழர்களான எல்லாக் குற்றங்களும், தொலைந்துவிடுமென்பது உண்மையே.

## ஆசிரியர்களுக்கு அறிவுரை

இந்த உரைநடை நூலில் பெண் கல்வியைப் பற்றின இந்தப் பகுதியை முடிப்பதற்குமுன், சிறியவர்களுக்கு அறிவுரை செய்கிற ஆசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள் செய்ய விரும்புகிறோம். என்னவெனில், தெய்வ அன்பையும், பிறருக்குதவி முதலிய நல்வினைகளையும், பிறருக்குக் கூறுகிறவர்கள், தாங்களே நல்வழியில் நடந்து வழிகாட்டவேண்டும். அறிவுரையைப் பார்க்கிலும்,

நடந்து வழிகாட்டுவது, மிகவும் நன்மை, என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழியு மிருக்கின்றது. வழிகளில் எல்லோருக்கும் வழிகாட்டித் தான் ஓர் அடியேனும் எடுத்துவையாமலிருக்கிற கைகாட்டி மரம் போலவும், உருவேற்றல் செய்வதற்காக மற்றவர்களைக் கோயிலுக்கு வரும்படி கூப்பிட்டுத் தான்உருவேற்ருமலிருக்கிற கோயில் மணிபோலவும், தாங்கள் அறிவுரை கூறுகிறபடி நடவாதவர் எல்லோராலும் இகழப்படுவார்கள். அவர்களுடைய அறிவுரையையும் ஒருவரும் ஒப்பமாட்டார்கள். பசியாமல் மருந்து கொடுக்கிறேன், பழஞ்சோறிருந்தால் போடுங்கள், என்று ஒருவன் சொன்ஞல் அவன் மொழியை யார் நம்புவார்கள்? மருத்துவனே நோயாளியாயிருந்தால், அவன் மருத்துவத்தை யார் ஏற்றுக் கொள்வார்கள்? கட்குடிப்பது குற்றமென்று குடியன் சொற்பொழிவாற்றிஞல் அவனுடைய சொற்பொழிவை யார் கேட்பார்கள்? தீக் கடவுளுக்கு முழுக்காட்டியது போல் சினவெறி கொண்டிருக்கிற ஒருவன், அந்தச் சமயத்தில் சினம் தீவினை என்று சொற்பொழிவு செய்தால், அந்தச் சொற்பொழிவுக்கு யாராவது காது கொடுப்பார்களா? ஒரு பெரியவர், சொற்பொழிவுஇருக்கையில் இருந்துகொண்டு கடவுளைமட்டும் போற்றவேண்டுமென்றும், மக்களைப் போற்றக் கூடாதென்றும் சொற்பொழிவு செய்து கொண்டிருந்தார். அந்தச் சொற்பொழிவின் நடுவில் அவரே ஒரு செல்வனைப் போற்றத் தொடங்கி, அந்தச் செல்வனுடைய பண்புச் சிறப்புக்களை எண்ணுமிடத்தில், அவரை நிலவுலகத்தில் பேரரசர் நடுவில் மணி இருக்கையில் வைக்கலாமா, அவரை அன்பர்களுக்குத் தலைமையாக வைக்கலாமா, வானுலகத்தில் விண்ணவர்

அவைக்கு நடுத் தலைமையாக வைக்கலாமா, அல்லது கடவுளுடைய மடியில் வைக்கலாமா, என்று இவ்வகை யாகத் திருப்பித் திருப்பிப் பலமுறை சொல்லிச் சொற் பொழிவு செய்தார். அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு செலவன், திடீரென்று தன்னுடைய நாற்காலியைவிட்டு எழுந்து, ஓ! பெரியவரே! நீர் சொல்லும் செல்வனை வைக்க இடமில்லாமல் ஏன் தொல்லைப் படுகிறீர், என்னு டைய நாற்காலியில் வைத்துவிடும், நான் வீட்டுக்குப் போகிறேன், என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டுப் போய்விட்டான். மற்றவர்களும் கைகொட்டி ஏளனஞ் செய்துகொண்டு, சொற்பொழிவு முடிவதற்குமுன், வீட் டுக்குப் போய்விட்டார்கள். இப்படியே, சொல் ஒருவகை யாகவும், நடைமுறை ஒருவகையாகவும் இருக்கிறவர்களை, உலகம் பழிக்குமாதலால், ஆடல், பாடல் கற்பிக்கிறவர் கள், தாங்களே ஆடியும் பாடியும் மற்றவர்களுக்குக் கற் பிப்பது போலும், சிறு பிள்ளையினுடைய கையைத் தாய் பிடித்துக்கொண்டு தான் முன்னே நடந்து, பிள்ளைக்கு நடை பழக்குவதுபோலும், அறவுரை கூறுகிறவர்கள், தாங்களே அறப்பெருஞ்செல்வர்களாய் விளங்க வேண்டும். அப்போது, அஃது அவர்களுக்குத் துணைசெய்யுமென்பது உண்மையே. வானத்திலிருக்கிற ஞாயிறு விளங்கினால், உலகமும் விளங்கும். ஞாயிறு விளங்காமலிருந்தால், உலகமும் ஒளியற்றிருக்கும். அதுபோல், பெரியவர் களும் கல்வியாளர்களும் எப்படி நடக்கிறார்களோ, அப் படியே சிறியவர்களும் அறிவற்றவர்களும் நடப்பது இயல்பு. தீவழியில் நடக்கிற பெரியோர்கள், தாங்கள் கெட்டுப்போவதுமன்றி, மற்றவர்கள் கெட்டுப்போகவும் இடமாயிருப்பதால், அவர்களுக்கு இரண்டுவிதமான குற்

றங்கள் ஏற்படுகின்றன. தெரியாதவர்களுடைய அறிவற்ற செயல்களைப்பார்க்கிலும், தெரிந்தவர்களுடைய தீச்செயல்கள் மிகுந்த ஒறுப்புக்கு இடமாயிருக்கின்றன. எந்த இனத்தாராயிருந்தாலும், எந்த நிலைமை உடையவர்களாயிருந்தாலும், நற்குண நற்செய்கைகளை உடையவர்கள் மட்டும் பெரியவர்களேயன்றி, நற்குணங்கள் இல்லாமல், பொருளினாலும், பெருமையினாலும், இனத்தினாலும், அகவையினாலும், கல்விச் சிறப்புகளினாலுமட்டும் ஒருவனைப் பெரியவனென்று சொல்வது எத்தன்மையதென்றால், ஒருவன் சூட்டிச்சுவரின்மேல் ஏறிநின்றுகொண்டு, தான் மற்றவர்களுக்குப் பெரியவனென்று சொல்வதுபோலவும், சிறு பிள்ளைகள் தகப்பனுடைய தோளின்மேல் ஏறிக்கொண்டு, தாங்கள் தகப்பனிலும் பெரியவர்களென்று சொல்வது போலவும், காலையும் மாலையும் நீண்ட நிழல் உள்ளவர்கள் உயர்ந்தவர்களென்று சொல்வதுபோலவும் இருக்கின்றது. ஆகையால் மேலான நிலைமையுடையவர்கள் நல்லியல்புடையவர்களாய் விளங்கக்கடவார்கள்.

**பெண் கல்வி முற்றிற்று.**

# பெண் மானம்

## நம் நாட்டு நங்கையர் நிலை

மாதர்களுக்குக் கல்வி கற்பிக்கவேண்டியது முதன்மை யென்று பல எடுத்துக்காட்டுக்களைக்கொண்டு நாம் நிலை நாட்டினோமாகையால், இனி வேறொரு முதன்மையான செய்தியைக் குறித்து அடியிற் பேசத் தொடங்குகிறோம். அதை எல்லோரும் அருள்செய்து அன்புடன் படிப் பார்களென்று நம்புகிறோம்.

இந்த நாட்டில் பெண்களை அடிமைகளைப்போலவும், விலங்குகளைப்போலவும், நடத்துவது மிகவும் வருந்தத் தக்க செய்தியாயிருக்கின்றது. குலமும், செல்வமும், எவ்வளவு உயர்வோ, அவ்வளவும் மாதர்களுடைய துன்ப நிலை பெரிதாயிருக்கின்றது. உயர்ந்த குலத்தாராகிய பார்ப்பனர் முதலானவர்கள், மாதர்களை விலைக்கு வாங்குவதுபோல் வாங்கிக் கொடுமையாக நடத்துகிறார்கள். நாயே, பேயே, கழுதையே, மாடே என்கிற பேச்சைத் தவிர, வேறே ஒரு பேச்சும் மாதர்களிடத்தில் ஆடவர்கள் பேசுகிறதில்லை. உதைக் கொடையைத் தவிர வேறு கொடையில்லை.

## மாமியார் தடபுடல்

சில குடும்பங்களில், மாமியாருடைய கட்டளையில்லாமல் கணவனுக்கும் மனைவிக்கும் காட்சியே கிடையாது. அவர்

கள் எதிர்ப்பட்டாலும், கல்லுந் தேங்காயும் எதிர்ப்படுவது போலும், எலியும் பூனையும் கூடுவது போலுமேயல்லாமல், இனிய பார்வையே யில்லை. விண்ணுலகத்தக்குப் போயும் சோற்றை ஐயம் எடுப்பதுபோலப் பலர் திருமணஞ் செய்தும், துறவிகளாயிருக்கிறார்கள். அத்தி பூத்ததுபோல், தப்பித்தவறிக் கணவர்கள் மனைவிகளிடத்தில் ஓர் இனிமையான மொழியைப் பேசிவிட்டாலோ, மாமிக்குக் கடுப்பு, மாமனுருக்கு மனவருத்தம், நாத்திக்கு வயிற்றெரிச்சல், ஊரெல்லாம் உறுமல், மகன் செத்தாலும் சாகட்டும், மருமகள் தாலியறுத்தால் போதுமென்று நினைக்கிற நல்ல குணமுள்ள மாமிமார்களும் பலரிருக்கிறார்கள். கணவன் மனைவியை வைது அடித்தால், மாமியாருக்கு இறந்துபோன தன் கணவன் மறுபடியும் பிழைத்து வந்ததுபோல், மனமகிழ்ச்சி உண்டாகும். மாமியாருடைத்தால் மண் கலம், மருமகளுடைத்தால் வெண்கலம் என்பதுபோல், மருமகள் மேலே மாமியார் குற்றஞ் சொல்லாத நேரமில்லை. மாமிக்குக் கொடுமைசெய்கிற மருமக்கள்மாருஞ் சிலருளர்.

## மாதர்கள் பசிக்கிறபோழுது ஏன் உண்ணக்கூடாது?

நாய், ஆடு, மாடு முதலிய விலங்குகளை எவ்வளவோ அருளுடன் நடத்துகிறார்கள். அவ்வளவு அன்புகூட மாதர்களிடத்தில் காட்டுகிறதில்லை. கொடுமைகளெல்லாம் மாதர்களுடைய பகுதியாகவே இருக்கின்றன. ஒரு மாதுக்கு எவ்வளவுதான் வயிறு பசித்தாலும், கணவன், மாமன், மாமி முதலானவர்களெல்லாரும் 'சாப்பிட்டு, எல்லா வேலைகளும் முடிந்த பிற்பாடு, கணவனுடைய எச்சிலுக்காக மனைவி காத்திருக்க வேண்டியதே யல்லா

மல், அவள் முந்திச் சாப்பிடக் கூடாதாம். இஃது எவ்வளவு பெரிய ஒழுங்கின்மை. தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு என்பதுபோல, மாதுக்குப் பசித்த போது அவள் முந்திப் புசித்தால் குற்றமென்ன?

## ஒருவர் தீவினை நல்வினை மற்றொருவருக் காகா

கணவன் பாதி, மனைவி பாதி, ஆக இருவருங்கூடி ஓர் உடலென்பது, எல்லாச் சமய உடன்பாடாயிருக்கின்றது. சில கொள்கையாளர்களுடைய திருமணம் இம்மைக்கு மட்டும் உடன்பாடாயிருக்கின்றது. சைவ வைணவர்களுடைய திருமணங்கள், இம்மை மறுமை இரண்டுக்கும் உடன்பாடாயிருக்கின்றன; ஏனென்றால், கணவனுக்குப் புத்தென்கிற அளறு நீங்குவதற்குப் புத்திரன் கட்டாயமாகையினாலும், மாதரில்லாமல் மக்கட்பேற்றிற்கு வழியில்லாமையினாலும், ஆடவர்கள் இம்மை மறுமை நலம் அடைவதனாலும், மாதர்கள் முதன்மையென்று அறநூல் முறையிடுகின்றது. அல்லாமலும், மனைவியில்லாதவன், வேள்வித்தீ யோம்புகை முதலான நல் வினைகள் செய்யக்கூடாதென்றும், மணமில்லாதவனும், அறிஞனும், பிள்ளை வளர்ப்பெடுத்தலும், வேள்விகளும் செய்யக்கூடாதென்றும், கணவனுடைய நன்மை தீமைகள் மனைவியையும், மனைவியினுடைய நன்மை தீமைகள் கணவனையும் சேருமென்றும், இந்து நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒருவருடைய நன்மை தீமைகள் மற்றொருவரைச் சேருமென்கிற முறையை, நாம் தலை போனாலும் ஒப்புக்கொள்ளோம். இது நிற்க, இந்து நூல்கள், பெண்கள் பக்கத்தில் இருக்கின்றன என்ப

தற்கு, மேற்கண்ட முறைகளே கண்கூடான சான்றுகளாயிருக்கின்றன.

## காரியமாகிற வரையில் காலைப் பிடித்தல்

நூல்களையுந் தவிர, உலகத்தில் நடக்கிற நடைமுறைகளும், பெண்களுக்கு உடன்பாடாகவே யிருக்கின்றன. எப்படியென்றால், ஒரு பெண்ணை ஒருவன் திருமணஞ் செய்யும்பொழுது, ஊருக்கெல்லாம் பாக்கு வெற்றிலை வைத்தும், உறவினர்கள் முதலிய எல்லா மக்களையும் வரவழைத்துப் பந்தல் அழகு செய்து, பலவகை மாலைகள் கட்டி, வாழை கமுகுகள் நாட்டி, இன்னிசை ஒலிக்கருவிகள் கடல்போல ஒலிக்க, பல ஞாயிறுகள்போல் விளக்குகள் பல விளங்க, உணவுக் கொடை, பொன் கொடை, நிலக்கொடை, ஆன்கொடை எல்லாம் வழங்கி, மணமலர், சந்தனம் முதலான நறுமணப் பொருள்கள் மணக்கப் பெரியவர்கள் வாழ்த்துக் கூறப், பெண்கள் மங்கல வாழ்த்துப் பாட, வீண் பெருமையுடன் திருமண விழா நடக்கின்றதல்லவா? ஓர் எளியவனுடைய திருமணமாயிருந்தாலும், எவ்வளவோ விருந்துகளும், சிறப்புகளும், வேடிக்கைப் புதுமைகளும், நடக்கின்றன. அரண்மனைகளிற்கூடத் திருமணத்தைத் தவிர, வேறெந்தச் சமயங்களிலும் இவ்வளவு ஆரவாரங்களும், இன்பமும், குதூகலமும் இல்லையே? மேலும், திருமண காலத்தில் பெண்ணுக்கும் ஆடவனுக்கும் யாதொரு மாறுபாடுமில்லாமல், ஒரே இருக்கையும், ஒப்பான சிறப்பு வழிபாடுகளும், நடப்பதுமன்றிப் பெண்ணினுடைய காலைக் கணவன் தூக்கி அம்மி மேல் வைக்கிறதும் வழக்கமாயிருக்கின்றது காரியமாகிற வரையில் காலைப் பிடித்து, பிற்பாடு குடுமி

யைப் பிடிப்பதுபோலத் திருமணம் முடிந்த பின்பு, பெண்களுக்கு நடக்கிற வழிபாடுகளெல்லாம் இழிபாடுகளே! பெருமையெல்லாம் சிறுமையே! உதவியெல்லாம் உதைகளே! இஃது ஏற விட்டு ஏணியை வாங்குவதற்குச் சமானமல்லவா?

## மணமான பின்னரே மாண்புண்டாகிறது

மணமில்லாதவன் கச்சம் வைத்து வேட்டி கட்டக் கூடாது. தோளில் மேல் வேட்டி போடக்கூடாது. வெற்றிலை பாக்குச், சந்தனம் இவைகளைப் பயன்படுத்தக் கூடாது. ஒற்றைப் பூணூல் அணிந்துகொண்டு ஐயம் எடுக்கவேண்டும் என்கிற அறநூன்முறைப்படி, மணமாகாதவர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள். மணஞ் செய்த பின்பு, வேட்டி கட்டியறியாத இடுப்புக்கு நல்ல வேட்டியும், புழுதி படிந்த உடம்புக்கு மலர் முதலிய மணப் பொருள்களும், நாறிக் கிடந்த வாய்க்கு வெற்றிலை பாக்கும், இன்னும் பல இன்பங்களும் உண்டாகின்றன. அதைப்பற்றியே, "பாக்குக் கொடுத்த பாக்கியவதி," "பூக் கொடுத்த புண்ணியவதி," சந்தனங் கொடுத்த சரசுவதி," என்று பலவாறாகப் பார்ப்பனர்களுடைய திருமணங்களில் பெண்களை வாழ்த்துவது வழக்கமாயிருக்கின்றது. அன்னமிட்ட வீட்டிற் கன்னமிடுவது போலத் தங்களுக்கு எல்லா நலன்களையுங் கொண்டுவந்த மாதர்களை ஆடவர்கள் இகழ்ச்சி செய்வது எவ்வளவு முறைகேடு!

## மாநில முழுவதும் மங்கையர் ஆட்சி

செல்வம், அறிவு, கல்வி, ஆண்மை முதலியவைகளைப் பெண்பாலாகப் பேசுவது, எல்லா மொழிகளிலும்

வழக்கமாயிருப்பதுபோலவே, இந்துக்களும் திருமகள், காளி, கலைமகள் முதலானவைகளைச் செல்வம், உரம், கல்வி முதலியவைகளுக்குத் தெய்வங்களென்று சொல்லு கிறார்கள். எல்லா உயிர்களையும் தாய்போலத் தாங்கு கிற நிலமகளும் பெண்ணாயிருக்கிறாள்! நிலத்தை விட்டுத் திக்குகளிற் பறப்போமென்றாலோ, திக்குகளும் பெண் களாம். ஆறுகளிற் குதிப்போமென்றாலோ, கங்கை, காவிரி, கிருட்டிணை, கோதாவரி, பெண்ணை முதலிய ஆறுகளும் பெண்களாயிருக்கின்றன! இவ்விதமாக ஆட வர்களுடைய வாழ்வுகளெல்லாம், பெண் மூலமாகக் கிடைத்திருக்க, ஆடவர்கள் பெண்களை இழிவுபடுத்து வது ஒழுங்கா!

பழங்கால அரசர்களும், புலவர்களும், முனிவர்கள் முதலானவர்களும், தங்களுடைய மனைவிகளை எவ்வளவோ மேன்மையாக நடத்தினார்களென்றும், மாதர்களுடைய மொழிகளை, அவர்கள் ஒருகாலும் தட்டினதில்லையென் றும், இராமாயணம், பாரதம், நைடதம் முதலிய நூல் களால் தெரியவருகிறதுமன்றி, இந்துக்களுடைய தேவர் கள், தங்களுடைய மாதர்களைக் கீழேவிட மனமில்லா மல், தங்களுடைய உடல்களில் வைத்துக்கொண்டதாக வும், பழவரலாறுகளில் சொல்லப்படுகின்றது. சிவன் தன் மனைவியைப் பக்கத்திலும், மற்றொரு பெண்ணைத் தலையிலும் வைத்துக்கொண்டதாகவும், திருமால் மார்பி லும், நான்முகன் நாவிலும், விண்ணவர்கோன் தொடை யிலும், தங்களுடைய மனைவிகளை வைத்துக்கொண்ட தாகவும் சொல்லுகிறார்கள். குதிரை எட்டடி பாய்ந் தால், குட்டி பதினாறடி பாயுமென்கிற பழமொழிப்படி, இந்துக்கள் அவர்களுடைய தேவர்களையும் அரசர்களை

யும் பார்க்கத் தங்களுடைய மாதர்கள்மேல், அதிக அன்பு பாராட்டவேண்டியதாயிருக்க, அவர்களை அடிமை போல நடத்துவது பெரிய பெண்தீமை யன்றோ?

புகழ்பெற்ற பாவாணர்களும், அன்பர்களும், தங்களைத் தலைவிகளாகவும், கடவுளைத் தலைவனாகவும் எண்ணிப், பாக்கள் செய்கிறது பொதுவா யிருக்கின்றது. ஆடவர்கள் தெய்வத்தை அடைவதற்குக்கூடப் பெண் உருவங் காரணமாயிருக்கப், பெண்களை ஆடவர்கள் இழிவு செய்வது தெய்வ உடன்பாடாகுமா?

மனிதப் பிறப்பெடுத்த கடவுளை ஈன்றெடுத்த உலகத் தாயும் பெண்தானே! இந்த நாட்டையெல்லாம் ஆண்ட விக்டோரியா என்கிற பேரரசியவர்களும் பெண்தானே; இதுவுமன்றி நம்மைப் பத்துத் திங்கள் வயிற்றில் சுமந்து பெற்றெடுத்துப் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி வளர்த்த தாய்மார்களும் பெண்களல்லரோ? இரவெல்லாங் கண் விழித்து, அடிக்கடி பால் கொடுத்து, மருந்து கொடுத்துத், தாங்களும் மருந்துண்டு, மருந்துணவுண்டு, பிள்ளைகளுடைய சிறுநீர் மலங்களை யெல்லாம் பொறுத்துத் தங்களுடைய உயிரையெல்லாம் பிள்ளைகள் மேல் வைத்து, வாயைக் கட்டி வயிற்றைக் கட்டிப் பிள்ளைகளை வளர்ப்பதற்காகத் தாய்மார்கள் படுந் துன்பம் இவ்வளவென்று சொல்லிமுடியுமா?

## மாதர்களே பாதுகாப்பு

நாம் மணமாகிறவரையில், தாய், தமக்கை முதலானவர்கள் கைகளில் வளருகிறதுந்தவிர, தாய்க்குப்பின் மனைவியாதலால், மணமானபின்பு, மனைவிகளால் எல்லாப் பாதுகாப்பு மடைகிறோ மல்லவா? பொருளும், புகழும்,

தேடுவதில் நாம் நம்முடைய எண்ணமெல்லாஞ் செலுத்து கிறோம். தாய், உடன்பிறந்தாள், மனைவி முதலானவர் கள், நம்முடைய நலத்தையும், விருப்பத்தையும் தேடு வதில், அவர்களுடைய நினைவுகளெல்லாம் வைக்கிறார்கள். நாம் அவர்களுடைய நன்மையைக் கருதுவது மிகவும் அரிது. அவர்கள் நம்முடைய நன்மையை நினையாத நேரமில்லை. அவர்களுடைய பேச்செல்லாம் நம்முடைய பேச்சே. அவர்களுடைய நினைவெல்லாம் நம்முடைய நினைவே. அவர்கள் செய்யுங் கடவுள் வழிபாடுகளெல் லாம் நமக்காகவே. அன்றியும் நம்முடைய ஊரையும், வீட்டையும், விட்டுச் சில நாள் பிரிகிறதாயிருந்தால், எவ்வளவோ வருத்தப் படுகிறோம். நம்முடைய மனைவி மார் பிறந்த ஊரையும், வீட்டையும், தாய் தந்தை, உடன் பிறந்தார் முதலான உறவினர்களையும் விட்டு, நம்மை நம்பி வருகிறபடியால், அவர்களை மிகவும் அன்பாக நடத்தவேண்டியது நம்முடைய கடமையன்றோ?

## பெண்கள் செய்யும் நன்மைகள்

பெண்களுக்கு இயற்கையாயுள்ள மாத விடாய், சூல், பிள்ளைப்பேறு, பிள்ளை வளர்த்தல், அட்டில் தொழில், கணவன், மாமி, முதலியோரைப் போற்றல், விருந்தோம் பல் முதலாகிய தொல்லைகளையும், துன்பங்களையும் சற்று நினைத்தால், மண்ணும் இரங்கும்; மலையும் உருகுமே! அதைப்பற்றியே பெண்ணென்றால் பேயு மிரங்கும் என்று சொல்லுகிறார்கள். மழை, பனி, வெயில், காற்று முதலி யவைகளைத் தன் மேல் தாங்கிக்கொண்டு, குஞ்சுகளைச் சிறகுக்குள் வைத்தணைக்கும் பறவைபோல், எல்லாத் துன்பங்களையும் மாதர்கள் தாங்கிக்கொண்டு, நலங்களை

மட்டும் நமக்குக் கொடுக்கிறார்கள். ஆடவர்கள் எவ்வளவு தான் படித்தாலும், மாதர்களுக்குள்ள அடக்கமும், பொறுமையும், அமைதியும், உண்மையான அன்பும் அவர்களுக்கு வருமா? இறந்துபோன மனைவியின் பிணத்தை, வெளியிலே கொண்டுபோவதற்கு முன்னமே, நாம் வேறு பெண் உசாவி மறுமணத்திற்கு அடிப் போடுகிறோம். கணவரை இழந்த மாதர்கள் வேறு மணமில்லாமல், ஆயுள்நாளெல்லாம் போக்குகிறார்களே; சில பெண்கள் கணவனோடு உடன் கட்டை யேறவும் உடன்படுகிறார்கள். சில பெண்கள், ஆடவர்கள் இறந்து போன துக்கத்தைப் பொறுக்கமாட்டாமல், அதே ஏக்கமாயிருந்து சில நாளைக்குள் இறந்து, கணவர்களைப் பின் பற்றுகிறார்கள். மேலே நாம் சொல்லியபடி, கல்வி யில்லாமையாலும், இயற்கைத் தீக்குணத்தினாலும், தீய மாதர்களும் உலகத்தில் இருக்கிறார்களென்பது உண் மையே. ஆயினும், நல்ல மாதர்களையும் கெட்ட மாதர் களையும் எண்ணிப் பார்க்குமிடத்தில், நல்ல மாதர்க ளுடைய தொகை மிகுதியாயிருக்குமென்று உறுதியாகச் சொல்லலாம்.

பிற ஆடவர்களுடைய சூழ்ச்சிகளால் மாதர்கள் ஒழுக்கம் கெடுகிறார்களென்பதற்கு எடுத்துக்காட்டாக, 'இந்தியன் பினல்கோட்' என்கிற அரசாங்கக் கட்டளை நூல், பிற மாதருடன் சேருகிற ஆடவனுக்குமட்டும் ஒறுப் புச் சொல்லி, மாதர்களுக்கு ஒறுப்புச் சொல்லாமலிருக் கிறது. இது ஒழுங்குக்கு மாறுபாடாயிருந்தாலும், அற நெறி நூல்களெல்லாம், மாதர்களுக்கு உதவியாயிருக்கிற தென்பது வெளிப்படையாயிருக்கின்றது.

மாதர்களுக்கு உள்ள மற்றைப் பெருமைகளோடு கூட, அவர்களுடைய உடலழகும் அவர்களுக்குச் சிறந்த தகுதியை உண்டுபண்ணுகின்றது. விலங்குகளுக்குள் பெண் விலங்குகளும் பெண் பறவைகளும் அழகில்லாம லிருக்க, ஆண் விலங்குகளையும், ஆண் பறவைகளையும் அழகாகப் படைத்த கடவுள், மனிதர்களுக்குள் ஆடவர் களைப் பார்க்கிலும் பெண்களை மிகுந்த அழகிகளாகப் படைத்திருக்கிறாரென்பது கண்ணுள்ள யாவரும் ஒப்புக் கொள்ளத்தக்க செய்தியே. மாதர்கள் நல்ல உடலும், மென்மொழியும், வலுவின்மையும், நாணமும், அச்சமும் உடையவர்களானதால், கண் முதலிய மென்மையான உறுப்புக்களை மிகு பாதுகாப்புடனே பாதுகாப்பது போல, அவர்களிடத்திலும் மிகுந்த அருள் பாராட்ட வேண்டியது, ஆடவர்கள்மேல் விழுந்த சுமையாயிருக் கின்றது.

## கற்பு இருவருக்கும் பொது

உலகத்தில் நடக்கிற எல்லா நன்மைகளிலும், திரு மணமே மேலான நன்மை என்பதை, யாவரும் தடையில்லாமல் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆயிரம், பதி னாயிரம், நூறாயிரம் பொன், கொடுக்கல் வாங்கல் செய்து இடமகன்ற காணி, நிலம் முதலியவைகளை விலைக்கு வாங்குகிறார்கள். அந்தச் செய்கைகளெல்லாம் ஒரு சான்று அல்லது இரண்டு சான்றுகள் முன்பாக நடக்கின்றன. திரு மணமோவென்றால், தெய்வச் சான்றாகவும் குரு சான்றாக வும், எல்லோரும் சான்றாகவும் நடப்பதினால், திருமணம் எவ்வளவோ மேலான சேர்ந்த வெளியாகின்றது. திரும ணைப் பெருமைக்கு முதற் காரணமான மாதைப் பிற்பாடு அன்பில்லாமலும் கொடுமையாகவும் நடத்துவது அறமா?

மனைவியும் கணவனும் உடலும் உயிரும்போல், மாறாத அன்புடன் எப்பொழுதும் ஒத்து வாழ்கிறதென்று, திருமணக் காலத்தில் ஆணையோடு, உடன்படிக்கையும் செய்துகொள்ளுகிறார்கள். ஒரு சான்று அல்லது இரண்டு சான்றுகள் முன்பாக நடக்கிற விற்பனை முதலிய ஏற்பாடுகள், எவ்வளவோ உறுதியாயிருக்கத் தெய்வம் அறியக் குரு அறிய, எல்லா மக்களும் அறிய, வானம் நிலம் அறிய, மாதராடவர்கள் செய்துகொண்ட திருமண உடன்படிக்கையை மீறிக் கீரியும் பாம்பும்போல அவர்கள் அடித்துக் கொள்வதும், ஆடவர்கள் பிற மாதரிடம் போதல், விலைமகளிரிடம் போதல் முதலியன செய்வதும் தீமையல்லவா? ஒரு நல்வினையாளனை ஒரு விலைமகள் விரும்பி, அவனைத் தன் வலையில் மாட்ட முயற்சி செய்த பொழுது, அந்த ஆடவன் அவளை நோக்கி,

* இந்த வுடலுளம் ஐம்பொறி இன்னுயிர் யாவும் மணஞ் [செயும்
அந்தநன் னாளிலென் இல்லவட் கன்போ டளித்தனன் [யான்பொதுப்
பைந்தொடி யேயுனைச் சேர்ந்திடப் பாரிலெ னக்குடல் [வேறில்லை
சிந்தை புலன்களும் வேறிலை சீவனும் வேறிலை செல் [வையே. (18)

(பொருள்) பச்சை வளையல்களை யணிந்த பொதுமாதே! என்னுடைய உடல், மனம், ஐம்பொறிகள், உயிர் முதலிய யாவையும், திருமணக் காலத்தில் என்னுடைய மனைவிக்கு கொடுத்து விட்டேன்; இப்பொழுது உன்னைச் சேர வேறு உடலுமில்லை; வேறு மனமுமில்லை; வேறு புலன்களும் உயிரு மில்லை என்றான்.

* நீதிநூல் கணவர் மனைவிய ரியல்பு 23-வது பாடல்

அந்த நல்லவன் போல் காமத்தை விலக்கஞ் செய்து, சொந்த மாதர்களையே மேலாக மதிப்பவர்களே ஆடவர்களுள் சிறந்தவர்கள்! அவர்களே நல்லவர்கள்.

சில ஆடவர்களுக்கு விலைமாதரிடம் போதல் தண்ணீர் குடித்த பாடமாயிருக்கின்றது. அதில் நாணமுமில்லை; இழிவுமில்லை; பொக்கைவாயன் பொரிமாவைப் புகழ்ந்து கொள்வது போலவும், கோழி குப்பையை வியந்து கொள்வது போலவும், விலைமாதரிடஞ் செல்வதைத் தங்களுக்கு மேன்மையாக எண்ணுகிற அறிவிலிகளும் பலர் இருக்கிறார்கள்! இது மனைவியை வஞ்சிக்கிற பெரிய கொடுமையன்றோ?

ஒன்றுந் தெரியாத அறிவிலியாயேனும், அல்லது கணவன்மேல் உண்மையான அன்பில்லாதவளாயேனும் இருக்கிற மனைவி, கணவன் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன வென்று பேசாமலிருப்பாள். நன்மாதோ எந்தத் துன்பத்தைப் பொறுத்தாலும் கணவனுடைய தீயொழுக்கத்தைமட்டும் ஒரு நாளும் பொறுக்கமாட்டாள். சிறந்த பெண்ணானவள், தனக்கு எல்லாச் செல்வமும் கணவனே யென்று நினைப்பதனால், அவ்வாறாகவே கணவனுந் தன்னை விரும்ப வேண்டுமென்றும், கணவனுடைய அருளுக்குத் தன்னைத் தவிர வேறொருத்தியும் பங்காளியா யிருக்கக்கூடாதென்றும், எண்ணமுள்ளவளா யிருப்பாள். அன்றியும், பிற மாதர் தொடர்பால் கணவனுக் குண்டாகிற நன்மைக்குறைவு, வாணாளிழப்பு, புகழ்த்தேய்வு, இம்மைமறுமைக் கேடு, பொருள் அழிவு முதலியவைகளையும் நினைத்து நினைத்து மனம் வருந்துவாள்.

*

## ஓவியத்தையும் பார்க்க உடன்படா நங்கை

கணவனுடைய தீயொழுக்கத்தை வெளியிலும் சொல்லாமல், அவனையுஞ் சினவாமல், அல்லும் பகலும் ஓயாத வருத்தமும், துக்கமும், பொறுமையுங் கொண்டு, தகுந்த உணவு உறக்க மில்லாமல், மனம் புண்ணாகி மடிவாளென்பது உறுதியே. ஓவியக்காரர் சுவரில் எழுதும் ஓவியங்களை வந்து பார்க்கும்படி, ஒரு கணவன் தன் மனைவியை யழைக்க, அவள் ஆண் ஓவியமாயிருந்தால் நான் பார்க்கமாட்டேன்; பெண் ஓவியமாயிருந்தால் நீர் பார்க்க உடன்படமாட்டே னென்று மறுமொழி சொன்னாள்.

* ஓவியர்நீள் சுவரெழுதும் ஓவியத்தைக் கண்ணுறுவான்
தேவியையா மழைத்திட ஆண் சித்திரமேல் நான்பாரேன்
பாவையர்தம் முருவெனில்நீர் பார்க்கமனம் பொறே
[னென்றாள்
காவிவிழி மங்கையிவள்கற்புவெற் பின் வற்புளதால். (19)

ஓவியத்திற் கூட, பெண் வடிவத்தை ஆடவர்கள் பார்க்கக்கூடாதென்கிற மனவுறுதியுள்ள கற்பரசிகள் தம் முடைய கணவர்கள் பிறமாதர்களைக் கூடிச் செய்யும் ஒழுங்கின்மைகளை எப்படிப் பொறுப்பார்கள்? ஆகையால் விலைமகளிர் முதலிய மாதர்களை ஆடவர்கள் கனவிலும் நினைக்காமலிருப்பது மிகவும் நன்மை.

## மாதர்கள் நோய்க்குக் கணவன் அன்பே மருந்து

ஆடவர்கள் வெளிச் செயல்களும் பல வேலைகளு முள்ளவர்களாகையால், அவர்களுக்கு யாதொரு வருத்தம்

---

* நீதி நூல் கணவர் மனைவிய ரியல்பு 27-வது பாடல்.

வந்தாலும் விரைவில் மாறிப்போகும். எப்போதும் மனத் தொழிலும், இளகின உள்ளமும், உள்ள மாதர்களுக்கு உண்டாகிற வருத்தம் சிறிதன்றே! அவர்களுடைய மன நோய் கணவனுடைய அருளென்கிற மருந்து ஒன்றினால் தீருமே யொழிய, வேறொன்றினாலுந் தீரமாட்டாது. சூல், பிள்ளைப்பேறு முதலிய உயிர்த் தொல்லையான துன்பங் களில் வருந்துகிறதற் குரிய மாதர்களை, நாமும் தொல்லைப் படுத்தாமல் அவர்களுடைய துக்கம் நம்முடைய துக்கமாக வும், அவர்களுடைய இன்பம் நம்முடைய இன்பமாகவும் நினைத்து அன்பு பாராட்ட வேண்டியது நம்முடைய கடமையாயிருக்கின்றது.

சொந்த மாதர்களை வெறுத்துவிட்டுப், பிற மாதரை நட்புச் செய்கிற ஆடவர்கள், தங்களுடைய மகள்களையும், உடன்பிறந்தார்களையும், அவர்களுடைய கணவர்கள் கைவிட்டு மேற்சொன்ன கெட்டவழியில் திரிந்தால், தங் களுக்கு எவ்வளவு மனவருத்தம் உண்டாகும்? அதைச் சற்று நினைக்கும்படி வேண்டுகிறோம்.

இல்லறம், குடும்பம், மனைவி, என்று பெருமையாகப் பேசிக்கொள்வதெல்லாம் மாதர்களைப்பற்றியே யொழிய ஆடவர்களைப் பற்றியல்லவே! உலகத்தார் திருமண மில்லாத தனி மனிதனுக்குச் செய்கிற உதவியைப் பார்க்கிலும், ஒருவன் குடும்பியாயும், இல்லறத்தானாயு மிருந்து துன்பப்பட்டால், அவன் செயலில் மிகுந்த அருளும், இரக்கமும் வைத்துப் போற்றுகிறார்களே! இதுவும் மாதர்களால் வருகிற நன்மைதானே!

## மனைவியின் அருமை பெருமை

அகரவரிசை, திவாகரம், நிகண்டு முதலிய நூல் களில் மனைவிக்குச் சொல்லப்பட்ட பல பெயர்க

லும், அவளுடைய அருமையும் பெருமையும் விளங்கு
ின்றன. வீட்டுக்கு உடையவளானதால், இல்லாள்,
யாள், மனைவி, வீட்டுக்காரி யென்றும், ஆடவனுக்கு
ன்பும் விருப்பமு முள்ளவளானதால், காதலி என்றும்,
லா உறவினர்களைப் பார்க்கிலும், கணவனுக்கு மிக
மையுள்ளவளானதால், கிழத்தி யென்றும், குடும்
தை நிலைநாட்டுதல் செய்பவளானதால், குடும்பினி
ன்றும், குடும்பச் சுமைகளையெல்லாம் மேற்கொள்பவ
தலால் பாரி யென்றும், வீட்டுக்குத் தலைவியாதலால்
லவி யென்றும், கற்புடையவளானதால் பத்தினி யென்
ம், இம்மை மறுமை இரண்டிலும் கணவனுக்குத் துணை
ய்பவளானதால் துணைவி, வாழ்க்கைத்துணை யென்றும்,
த்தினிக்குப் பல பெயர்கள் உண்டாயிருக்கின்றன.

அப்படியே, ஆடவனுக்கு மனைவிமே லிருக்க
ண்டிய அன்பையும், அவாவையும், நன்மையும் காட்ட
ண்டியதற்காக அன்பன், ஆர்வலன், உரியோன், காத
ர் என்று ஆடவனுக்குப் பல பெயர்கள் உண்டா
ருக்கின்றன. அழகின்மையே பிறந்ததுபோ லிருக்
வளுக்கு அழகம்மை யென்றும், மறத்துக்கே இருப்
மானவனுக்கு அறவாண னென்றும் பெயர் கொடுத்
துபோல், அன்பென்கிற மணமே யில்லாத மாதராடவர்
ருக்கு மேற்கண்ட பெயர்கள் பொருந்துமா? கணவன்
னவியர் என்கிற பற்றில்லாதவர்களுக்குப் பிரியன்,
ியை யென்கிற பெயரை மாற்றி, அப்பிரியன் அப்
ியை யென்கிற பெயர்களைக் கொடுப்பது நன்று
ருக்கின்றது.

மக்களுடைய நன்மைக்காக அரசன், அமைச்சன்
தலானவர்களுக்கு ஆணை கொடுக்கப்பட்டிருப்பதனுல்,

அந்தச் செய்தி தவிர மற்றவைகளிலெல்லாம் அரசன் அமைச்சன் முதலான அலுவலாளர்களும் மற்ற மக்களும் ஒப்பானவர்கள் தாமே! அப்படியே குடும்ப நன்மைக்காகக் கணவனுக்குத், தலைமையிடம் கொடுக்கப்பட்டிருப்பதனால், அந்தச் செய்தி தவிர மற்ற நடவடிக்கைகளிலெல்லாம், கணவனும் மனைவியும் ஒப்பானவர்களாயிருக்கிறார்கள். நாடகத்தில் அரசனைப்போலக் கோலம அணிந்துகொண்டவனுடைய முறைமை வேறெங்கேயாவது செல்லுமா? அவனுடைய பட்டம் பித்துக்கொள்ளிப் பட்டந்தானே! நாட்டு நன்மைக்காக அரசமுறைமை பெற்றுக்கொண்டவன், நாட்டு நன்மையில் தவிர வேறு தீய செயல்களில் அவனுடைய முறைமையை எப்படிச் செலுத்தக்கூடாதோ, அப்படியே குடும்ப நன்மைக்காகத் தலைமைப் பட்டம் அணிந்துகொண்ட கணவன், குடும்பினிக்குக் கொடுமை செய்வதில், முற்றும் தலைவனாகவிளங்கக்கூடாது.

மாதர்களை அன்பாகப் போற்றவேண்டியது ஆடவர்களுக்கு எப்படிக் கடமையோ, அப்படியே மாதர்களுக்கு நல்ல அறிவு கற்பிக்கவேண்டியதும் ஆடவர்களுடைய முதன்மைக் கடமையா யிருக்கின்றது. இந்த நாட்டில், மிக இளமையில பெண்களுக்குத் திருமணமாகிக் கணவர்களுடைய வீட்டிற்கு வருகிறபடியால், அவர்களுக்கு இனிமையான அறிவுரை கூறித் திருத்துவது ஆடவர்களுக்குத் தொல்லையா யிராது. யானை, குதிரை, மாடு முதலிய விலங்குகளையும், மனிதன் திருத்தித் தன்னுடைய விருப்பப்படி நடக்கக் கற்பிக்கிறானே! நுண்ணுணர்வும் அறிவுமுள்ள மாதர்கள் செயலில்,

ஆடவன் சிறிது தொல்லை எடுத்துக்கொண்டால், அவர்களைத் திருத்துவது மிக எளிதே.

## தாமே நடந்து வழிகாட்ட வேண்டும்

முதன்மையாக ஆடவர்கள் தாங்களும் நல்வழியில் நடந்து, மாதர்களுக்கும் நல்ல வழிகாட்டவேண்டும். குரு ஒரு குற்றஞ் செய்தால், மாணவர்கள் ஒன்பது குற்றஞ் செய்யத் துணிவதுபோல, அகவையில் மூத்தவர்களும், படித்தவர்களுமான ஆடவர்கள் தீமை செய்தால், ஒன்றுந் தெரியாத சிறு அகவையுள்ள மாதர்களும், அந்தப் படியே நடக்கத் தொடங்குவார்களல்லவா?

வீட்டுக்கு வெளியில், பிறர் முன்பாக ஒருவரும் தங்களுடைய தீக்குணங்களைக் காட்டுகிறதில்லை. வெளியில் தங்களுக்கு மேற்பட்டவர்களும் சமமானவர்களும் பலரிருப்பதினால், உடலைச் சட்டை, போர்வை முதலானவைகளால் மூடிக்கொண்டு, புறத்தில் சுற்றுவதுபோலத் தங்களுடைய இயற்கைக் குணங்களை மறைத்துக்கொண்டு, சினமின்மை, இன்சொல், முகமலர்ச்சி, அறங்கூறல் முதலிய அறக்கோலம் பூண்டுகொண்டு திரிகிறார்கள். வீட்டில் வந்தவுடனே, ஆடவர்கள் உடலின் வெளிக் கோலத்தைக் கலைத்துப்போடுவதுபோல, உட்கோலத்தையுங் கலைத்துத் தங்களுடைய உண்மை வடிவத்தை எளிய மனைவியிடத்திலும், பிள்ளைகளிடத்திலும் காட்டத் தொடங்குகிறபடியால், ஆடவர்களுடைய தீக்குணங்கள் மனைவியர் பிள்ளைகளையுஞ் சேருகின்றனவே! அரசன் எப்படியோ அப்படியே குடிகளும் என்பதுபோலப், பெரும்பாலும் கணவன், மாமன், மாமி எப்படியோ அப்படியே, மனைவியும் மாறுகிறாளென்பது, நம்

மேலோருக்கும் இயல்பாயும் நடைமுறை யுண்மையாயு மிருக்கின்றது.

## இல்லமே இன்பத்திற் கிடம்

பறவை விண்ணெல்லாம் பறந்து திரிந்தாலும், கடை சியில் கூடுகளிலும், மரம் செடிகளிலும் வந்து சேர்ந்து ஆறுதல் அடைவதுபோல, ஆடவர்கள் வெளியில் படுகிற தொல்லைகளெல்லாம், வீடுகளில் மனைவியரால் விடு தலையாகி, அவர்களால் இன்பமடைய வேண்டியவர்க ளாதலால், மனைவிமார்களை அதற்கு உரியவர்களாக வும், அறிவாளிகளாகவும், நல்வினையாட்டிகளாகவும் ஆக்கிக்கொள்ளவேண்டியது, ஆடவர்களுடைய சொந்த நன்மையாகவும், அப்படிச் செய்துகொள்ளாமலிருப்பது, தங்களுடைய சொந்தக் குற்றமாகவு மிருக்கின்றன.

## மாதைக் கெடுப்பது மணாளன் போக்கே

ஆடவர்கள் மாதர்களுக்கு எப்போதுங் கொடுமை செய்வதனால், நல்ல மாதர்கள்கூட மனம் வெறுத்துக் கெட்டுப்போவதற்கு இடமுண்டாகிறது. நம்மை விரும்பு பவர்களை விரும்புகிறதும், வெறுப்பவர்களை வெறுக்கிற தும் மனித இயல்பாயிருக்கின்றன. ஆடவர்களுக்கு மாதர் களிடத்தில் அன்பில்லாவிட்டால், மாதர்களுக்கு மட்டும் ஆடவர்கள் மேல் எப்படி அன்புண்டாகும்? குற்றமற்ற வர்களான மாதர்களைக் காரணமில்லாமல் தீயவளென் றும், ஒழுக்கங் கெட்டவ ளென்றும், நாயே பேயே யென் றும் ஆடவர்கள் வைவதனால், "பார்ப்பனா உன் மொழி பலித்தது" என்பதுபோல, ஆடவர்களுடைய மொழி பலித்து, நல்ல மாதர்களும் தீயவர்களாய் விடுகிறார்கள்.

*

## அரிவையர் ஆற்றலற்றவர்கள்

மாதர்களை ஆடவர்கள் கைநீண்டி அடிப்பது, மிகக் கொடிதான வழக்கமாயிருக்கிறது. அணுவை மலை யெதிர்த்ததுபோலவும், எலியைப் புலி யெதிர்த்ததுபோலவும், பலமற்ற மாதர்களை ஆடவர்கள் வைது அடிப்பதனால், ஆடவர்களுக்கே இழிவல்லாமல், வேறல்லவே! சண்டைக்குப்போய்த் திரும்பின சிப்பாய்களில் ஒருவன், எதிரியினுடைய காலைத் தான் வெட்டினதாகவீரம் பேசிக்கொண்டானும்; அதைக்கேட்ட அறிவாளி யொருவன், எதிரியினுடைய தலையை வெட்டுவதல்லவோ வீரம்; காலை வெட்டவேண்டிய தென்ன வென்று கேட்க, அதற்கு மேற்படி சிப்பாய், "நான் என்ன செய்வேன்; எதிரியின் தலையை வேறொருவன் முதல்நாளே வெட்டிக்கொண்டு போய்விட்டான்; நான் மறுநாள், காலை வெட்டினேன்" னென்று சொன்னானும். பிணத்துடனே சண்டைசெய்த மேற்படி போர்மறவன் போலவும், செத்த பாம்பைத் துணிந்து பிடிக்கும் துணிவுடையவர்கள் போலவும், மாதர்களை ஆடவர்கள் வைது அடித்துச் செய்கிற இழிவெல்லாம் பழியே. அதனா லுண்டாகிற வெற்றியெல்லாம் தோல்வியே! பெருமை யெல்லாம் சிறுமையே.

பறவை விலங்குகள் கூடப் பெண்ணுக்காக ஆணும் ஆணும் அடித்துக்கொள்ளுகிறதே யல்லாது, பெண்ணை அடித்துத் தொல்லை செய்கிற ஆண் பறவையையாவது, விலங்கையாவது நாம் கண்டதுமில்லை; உண்டெனக் கேட்டதுமில்லை. மாதர்களை அடிக்கிற ஆடவர்கள், பறவை விலங்குகளையாவது குருவாக வைத்துக்கொண்டு, அவை

களிடத்தில் அறிவுரை பெற்றுக்கொள்ள வேண்டியது முறை. ஏழையைக் கண்டால் மோழையும் பாயும் என்பதுபோல, மாதர்களிடத்தில், கையின் பலத்தைக் காட்டுகிறதுமல்லாமல், அவர்களிடத்தில் தங்களுடைய பாட்டு வன்மையைக் காட்டுகிற புலவர்களும் பலர் உளர். மாதர்களெல்லாம் கெட்டவர்களென்றும், நமன் வடிவமென்றும், அவர்களை நம்பக்கூடாதென்றும் வாய் கூசாமல் வடமொழியிலும் தமிழிலும் பல புலவர்கள் பாடியிருக்கிறார்கள்.

## தையல் சொற் கேளேல் என்ற ஔவை சொல்

ஊமைகளிடத்தில் உளறுவாயன் சொற்பொருக்குத் தொடங்கியது போலவும், செவிடனிடத்தில் தெந்தனப் பாட்டுக்காரன் இசைவன்மையைக் காட்டுவது போலவும் செய்யுள் என்கிற பெயரைக் கனவிலும் கேட்டறியாத மாதர்களை இகழ்ந்து செய்யுள் பாடுவதனால் என்ன பயன்? கலைமகள் உறையுளாய் விளங்கும் ஔவைப் பிராட்டியார் தையல் சொற் கேளேல் (பெண் மொழியைக் கேளாதே) என்று ஆத்திசூடியில் சொல்லியிருப்பதன் காரணம் விளங்கவில்லை. பெண்கள் நல்ல அறிவு சொல்லுகிற வகையில், அதைக் கேட்டால் குற்றமென்ன? பெண்கள் படித்தால் ஔவையாரைப் போலவே அறிவாளிகளாவார்கள் என்பதற்கு, ஔவையாரே சான்றல்லவா? ஔவையாருடைய நீதிநூல்களைப் படித்துப் பயன் அடையாத ஆடவர்களுண்டா? இல்லையே! ஆகையால், இந்தச் செயலில் ஔவை சொல்வது பொருந்தாதாகையால் பெண் மொழியைக் கேளாதே என்னும் ஔவையாரின் மொழியை ஒத்துக்கொள்ள வேண்டுமென்பதில்லை.

## மாதரைப் போற்றினல் மாண்புண்டாகும்

இந்த நாட்டார் மாதர்களை மானமாகவும், அன்பாகவும் நடத்தவேண்டுமென்பதற்கு வேருெரு முதன்மையான காரணமு மிருக்கிறது ஐரோப்பா முதலான நாடுகளில் கணவனை யிழக்கிற மாதர்களுக்கு மறுமணஞ் செய்ய முறையிருப்பதுபோல இந்த நாட்டில் இல்லாமையினுலும், மிக இளமையில் திருமணஞ் செய்கிற வழக்கமிருப்பதனுலும், எண்ணிக்கையில்லாத மாதர்கள், இளமைக் கைம்பெண்களாய்ப்போய், உணவுக்கும் உடைக்கும் வழியில்லாமல், பற்றுக்கோடற்றுத் துன்பப்படும்படி ஏற்படுகின்றது ஆகையால், கணவன் உள்ளவரையில் மனைவியை அன்பாகப் போற்றவேண்டியதும், தனக்குப் பிற்காலம், அவளும அவளுடைய பிள்ளைகளும் தெருவில் அலையாதபடி உயிர்வாழ்க்கைக்குத் தகுந்த வழி செய்யவேண்டியதும், கணவனுடைய முதன்மையான கடமையாயிருக்கின்றது.

கணவனுக்குப் பாதி உடலாயும், துணைவியாயும், வீட்டுத்தலைவியாயும், அவனுடைய பிள்ளைகளுக்குத் தாயாயும், குலவிளக்காயும, கணவனுக்குப் பிள்ளைச்செல்வமும், பெயரும், பெருமையும், கொடுப்பவளாயும், இம்மை மறுமை உதவியாயுமிருக்கிற மனைவியை ஆடவன் எவ்வளவு பெருமைப்படுத்துகிருனே, அவ்வளவும் ஆடவனுக்குப் பெருமை. அவளை எவ்வளவு தாழ்த்தி வருகிருனே அவ்வளவு, தன்னையுந் தாழ்த்திக்கொண்டதற்கு ஒப்பு.

## செய்த தீமை மாருது

கடவுள் ஒருவர்மட்டுமே மாசற்றவரே தவிர, மனிதராகிய நாமெல்லோரும் தீவினையாளர்களா யிருக்கிருேம்.

ஒருவர் மற்றொருவருடைய குற்றங்களைப் பொறுக்காவிட்டால், நம்முடைய குற்றங்களைக் கடவுள் எப்படிப் பொறுப்பார்? மாதர்கள் தெரிந்தும், தெரியாமலும், யாதொரு பிழை செய்தாலும், அதை ஆடவர்கள் பொறுத்துக்கொண்டு அமைதியாகவும், நயமாகவும் மாதர்களுக்கு அறிவு சொல்லித் திருத்தவேண்டுமே தவிரச் சினங்கொண்டு கொடுமை செய்யக்கூடாது. சினம் வந்தபோது மூக்கை யறுத்து விட்டு மகிழ்ச்சி வந்தபோது அறுத்த மூக்கை ஒட்டிக் கொள்ளச் சொன்னால் ஒட்டுமா?

## வாழ்க்கைத் துணைவியே வாழ்வுகளெல்லாம்

கடவுள் அவருடைய அடியார் அவையை விரும்புவது போலவும், ஒவ்வொருவனும் தன்னைத்தான் விரும்புவது போலவும், தன்னுடைய மனைவியை விரும்பவேண்டுமென்றும், ஒருவனும் தன்னுடைய மனைவியிடத்தில் பகையாயிருக்கக்கூடாதென்றும், மறை கட்டளையிடுகின்றது. தன்னுடைய மனைவியை அன்பாக விரும்புவதாகத் திருமணக் காலத்தில் கணவன் முந்தி உறுதிமொழி கொடுக்கிறபடியால், அந்த மொழியை நிறைவேற்றவேண்டியது, அவனுடைய முந்தின கடமையாயிருக்கின்றது. ஒருவன் மணஞ் செய்துகொள்வதும், செய்துகொள்ளாமலிருப்பதும் அவனுடைய விருப்பமேயன்றித் திருமணம் செய்து கொள்ளுவது கட்டாயம் அன்று. மணம் செய்துகொள்ளாமலிருப்பது குற்றமு மன்று. ஆனால் மணம் செய்துகொண்டவனே, மேற்படி மறைமொழிகளின்படி மனைவியை அன்பாக நடத்தக் கடமைப்பட்டிருக்கிறான். தன்னைத்தான் விரும்புவதுபோலத் தன்னுடைய மனைவியை விரும்புகிறவன் மனைவிக்கு இனிமையான செயல் எதுவோ அதை

மட்டும் செய்வான். அவளுக்கு இனிமையல்லாத செயல்களை ஒருநாளும் செய்யமாட்டான். தான் எப்படித் தன் செயலில் வல்லவனு யிருக்கின்றனே, அப்படியே, மனேவியினுடைய செயல்களிலும், மிகப் பாதுகாப்பு உள்ளவனுயிருப்பான். ஒருவன் தன் மனேவியை எவ்வளவு அன்பாக விரும்புகிறனே, அவ்வளவு அன்பாக மனேவியும் கணவனே விரும்புவாளாகையால், மனேவியை விரும்புகிற கணவன், தன்னேத்தானே விரும்புகிறவனுக இருக்கிறன். இப்படியாக ஒருவரை ஒருவர் அன்பாக விரும்புகிற கணவனும் மனேவியும், மிகச் சிறந்தவர்களாயிருக்கிறர்கள். அவர்களுக்கு ஒரு துன்பம் நேரிட்டாலும், அந்தத் துன்பத்தை இருவரும் சமபங்காகத் தாங்கிக்கொள்வதனுல், அந்தத் துன்பத்தினுடைய சுமை குறைந்துபோகின்றது. அவர்களில் ஒவ்வொருவருக்கும் உண்டாகிற மகிழ்ச்சியை இருவரும் சமமாக நுகர்ந்தால், அவர்களுடைய மகிழ்ச்சி இரட்டிப்பாகின்றது. துன்ப வடிவமாகிய இந்த உலகத்தில், பல இடுக்கண்களும் நேரிடுகிறபடியால், அந்தச் சமயத்தில் நமக்குத் திடஞ் சொல்லித் தேற்றவும், மகிழ்ச்சிக்காலத்தில் கூட இருந்து மகிழவும், மனேவியைப்போல் நமக்கு உற்ற துணே யார் இருக்கிறர்கள்? மனேவியும் கணவனும், ஒருவரை ஒருவர் எவ்வளவு விரும்புகிறர்களோ, அவ்வளவு பிறராலும் அவர்கள் மதிக்கப்படுவார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் விரும்பாவிட்டால், அவர்களேப் பிறரும் மதியார்கள். அவர்களுடைய பிள்ளேகளும் அவர்களே மதியாமலும், அவர்களுடைய சொற்படி நடவாமலும்,' தன்னரசு நாடுபோற் கெட்டுப்போவார்களென்பது ஐயமா?

ஒரு நாளன்று, இரண்டு நாளல்ல, பல ஆண்டுகள் மனைவியும் கணவனும் கூடி வாழ்ந்து மரபுப் பெருக்கமும் குடும்ப நிலை நாட்டலும் செய்யவேண்டியவர்க ளான தால், அவர்கள் வறியவர்களாயிருந்தாலும், அவர்கள் மன மொக்கக் கலந்து வாழ்வதே பெரிய செல்வம். அந்தச் செல்வ மில்லாவிட்டால், மற்றவகைச் செல்வமெல்லாம் பயனற்றவையே. ஆகையால், உடலும் உயிரும்போலவும், நகமும் சதையும்போலவும், மணியும் ஒளியும்போலவும், மலரும் மணமும்போலவும், கரும்பும் சாறும்போலவும், மாதராடவர்கள் ஒற்றுமையாய்க் கூடி வாழக்கடவார்கள். அப்படி வாழ்ந்தால், இம்மை மறுமை நலங்களை அடை வார்களென்பது உறுதியே.

## மாதர்களின் மகட்கொடைப் பொருள்கள்

ஆடவர்கள் தத்தமக்குரிய பல தொழில்களைக் கற் றுக்கொண்டு உடல் வருந்தி மனைவி மக்கள் முதலிய குடும்பத்தினரை யெல்லாம், தகுந்தபடி பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நாம் மேற்சொல்லியபடி, இந்த நாட்டில் பல வகுப்பார்களுக்குள் கைம்பெண்களு க்கு மறுமணஞ் செய்கிற வழக்கமில்லாதபடியால், ஆடவர் கள் தாங்கள் தேடுகிற பொருள்களை வெளிப்பகட்டு, காமம், குடி, சூது முதலிய தீய செயல்களில் வீணே செல வழிக்காமல், மாதர்களுக்குப் பொருள் சேர்த்து வைக்க வேண்டியது கட்டாயமாயிருக்கின்றது. அப்படிச்செய்வது, நூன்முறைக்கு ஏற்றதாயுமிருக்கின்றது. எப்படியென்றால், ஒரு மாதுக்கு அவளுடைய தாய், தந்தை, கணவன் முதலிய வர்களால் கொடுக்கப்படுகிற பொருளே மாதர்பொருள், அல்லது மகட்கொடைப்பொருள் என்றும், அந்தச் சொத்

துக்கு அவளே முழு உரிமையுடையவளென்றும், பெரிய குடும்பத் தொல்லைகளை நீக்குதற்பொருட்டு மனைவியி னுடைய மகட் கொடைப்பொருளைக் கணவன் பயன்படுத் திக்கொள்ளுகிறவகையில், பிற்பாடு முதலும் வட்டியுமாக மனைவிக்கு அவன் கொடுக்கக் கடவனென்றும், மிதாட் சரம், மிருதிசந்திரிகை, சரசுவதி விலாசம், வியவகாரம், பூகம் முதலிய அறநூல்களில் சொல்லப்பட்டிருக்கின் றன மாதர்களுக்குப் பிற்காலத்தில் உதவும்படிக்கும் தனியாகப் பொருள் வைக்கவேண்டியது கட்டாயமென் பதற்கு மேற்கண்ட நூல்களைத் தவிர, வேறே சான்றும் வேண்டுமா? அந்த நூன் முறைமையைப் பொதுவாக இந்த நாட்டார், நடைமுறைக்குக் கொண்டுவராமலிருப் பது, மாதர்களுடைய நல்வினையின்மையா யிருக்கின்றது.

## கைம்பெண்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்

ஐரோப்பியர்களும், மகமது மதத்தார்களும், திரு மணக் காலத்திலாவது, அதற்கு முன்னாவது, பின்னாவது மாதர் மகட்கொடைப் பொருளைப்பற்றித் தப்பாமல் ஒரு முடிவு செய்துகொள்ளுகிறார்கள். கைம்பெண்களுக்கு, மறுமணஞ் செய்கிற வழக்கமுள்ள ஐரோப்பியர்களும், மகமது மதத்தார்களுமே, மாதர் மகட்கொடைப் பொரு ளைப்பற்றி ஏற்பாடு செய்து கொள்ளுவார்களானால், மாதர்களுக்கு மறுமணஞ் செய்கிற வழக்கமில் லாத இந்த நாட்டுப் பார்ப்பனர்கள், வேளாளர்கள், முதலி மார்கள் முதலாகியவர்கள், மாதர் பொருளைப்பற்றி ஏற் பாடு செய்துகொள்ளவேண்டியது, எவ்வளவு கட்டாய மென்பதை நாம் சொல்லவும் வேண்டுமா? அவர்கள் நெடுங் காலத்துக்குப் பிற்பாடு நடக்க வேண்டிய செயல்களை

யெல்லாம், முன்னமே சீரிட்டுக்கொள்ளுகிறார்கள். நிலம், மனை முதலியவைகளை வாங்குகிறவர்கள், பிற்பாடு எந்தக் காலத்திலும் மறுப்பு உண்டாகாதபடி, தகுந்த உறுதி மொழித் தாள்களையும், பட்டையங்களையும் பெற்றுக் கொள்ளுகிறார்கள். அவர்கள், மறுநாள் இறக்கிறவர்களாயிருந்தாலும், ஞாயிறு திங்கள்களும், கல்லுங் காவேரியும், புல்லும் நிலமும் உள்ளவரையில், சொத்துக்களை ஆள்கிறதென்று, ஏற்பாடு செய்துகொள்ளுகிறார்கள். பல ஆண்டுகளுக்குப் பிற்பாடு, பயன்படவேண்டிய பொருள்களை, முன்னமே சேர்த்து வைத்துக்கொள்ளுகிறார்கள்.

திருமணத்துக்கு நீண்ட காலத்துக்கு முன்னமே, இன்னான் மாப்பிள்ளை, இன்னாள் பெண்ணென்று உறுதி செய்துகொள்ளுகிறார்கள். நோயில்லாமல் உடல் வலிமையுடனிருக்கிறவர்களும், தங்களுக்குப் பிற்காலம், தங்களுடைய பொருள் கடன் முதலியவைகளுக்கு இன்னார் உரிமையாளர் என்பதையும், தங்களுடைய செயல்களும், அறங்களும் நடக்கவேண்டிய ஒழுங்கையும், எழுத்து வடிவமாகப் பதிந்து வைத்துக்கொள்ளுகிறார்கள். இவ்வண்ணமாகப் பின்பு நடக்கவேண்டிய செயல்களெல்லாவற்றையும் முன்னமே எண்ணி உறுதி செய்துகொள்ளுகிறவர்கள், தங்களுடைய மனைவியரை மட்டும் நினைக்கிறதில்லை. மனைவி உயிருடனிருக்கும்பொழுது, கணவன் யாதொரு ஏற்பாடுஞ் செய்யாமல் இறந்துபோனால், அவள் என்ன செய்வாள்? எங்கே போவாள்? எப்படி உயிர் வாழ்வாள்? பல இடங்களில், இறந்துபோன செல்வர்களுடைய பொருள்களை, அவர்களுடைய பங்காளிகள் முதலானவர்கள் கட்டிக்கொண்டு, அந்தச் செல்வர்க

னுடைய மனைவியரைத் துணையில்லாமல் விடுவதை நாம் பார்க்கவில்லையா? பிள்ளைகளும், உடன்பிறந்தார்களும், பங்காளிகளுமின்றி இறந்துபோகிறவனுடைய சொத்துக்கு மட்டும் மனைவி உரிமை யுடையவளாகிறாள். அப்படி யில்லாமல், உரிமை யற்றுப்போகிறவளுடைய நிலை, மிக இழிவுதானே! பெற்ற தாய்க்குச் சோறு போடாத பிள்ளைகளும் பலர் இருக்கிறார்களே! பிள்ளைகளுடைய நிலையே இப்படி இருக்கும்பொழுது, பங்காளிகளுடைய தன்மையைச் சொல்லவும் வேண்டுமா?

## பொதுக் குடும்பக் கைம்பெண்கள்

பங்கு பிரியாமல் ஒரே குடும்பமாயிருக்கிற உடன்பிறந்தார்களில் ஒருவன், இறந்துபோகிற அளவில் அவனுடைய மனைவியானவள், கொழுந்தன்மார்களிடத்திலும், அவர்களுடைய மனைவிகளிடத்திலும், உணவுக்காகவும் உடைக்காகவும கையேந்திக்கொண்டு அவர்கள் செய்கிற எல்லாக் கொடுமைகளையும் பொறுக்கும்படி ஏற்படுகின்றது. அவள் அந்தக் கொடுமைகளைப் பொறுக்கமாட்டாமல், கொழுந்தன்மேல் பிழைப்புக்கு வழக்குத் தொடர்ந்தால், அவள் ஒழுக்கமற்றவளென்றும், தான் வேறானவனென்றும், சொத்துக்கள் தன் சொந்தத் தேடுதலென்றும், கொழுந்தன் முழுப் பொய்யான வீண் வழக்குப் பேசி, அவளுடைய பிழைப்புப் பொருளைக் கெடுக்க முயற்சி செய்கிறான். அவள் மிக முயற்சித்து பிழைப்புப் பொருள் பெற்றுக் கொண்டாலும், அது நிறைவேறாதபடி கொழுந்தன் செய்கிற சூழ்ச்சிகள் பலவே! நாம் நெறிமுறைத் தலைவர் ஆகையால், நாம் சொலவது உண்மை என்பதற்கு, நாமே சான்றாயிருக்கிறோம். கணவனை இழந்து பற்றுக்கோடற்றுப்போன மாது, உடன்பிறந்தார்கள் வீட்

டுக்குப்போனால், அங்கே அண்ணியார் செய்கிற கொடுமை எண்ணிமுடியாது. நாத்தனாரைக் கண்டால், நாய்போல் விழுகிற அண்ணியார்கள், எண்ணில்லாதவர்கள் இருக்கிறார்கள். பிச்சை போட்டது போதும், நாயைப் பிடித்துக் கட்டு என்பதுபோல், அண்ணியாரிடத்தில் அரை நாழிகை இருப்பதைப் பார்க்கிலும், மண்ணை யள்ளி வாயிலே போட்டுக்கொள்ளலாமே! இப்படியாக அண்ட இடமில்லாமல் யாருமற்றவர்களாய்ப் போகிற மாது, என்ன செய்வாள்? அவள் வேலை செய்யத் தெரிந்தவளா யிருந்தால், கைப்பாடு பட்டாயினும் பிழைப்பாள். மேன்மையுள்ள குடும்பத்தைச் சேர்ந்த மாதர்கள் என்ன செய்வார்கள்? பூ முடித்த தலை புல்லெடுக்க அறியுமா? தங்க வளையிட்ட கை சாணந்தட்ட அறியுமா? தண்டை யிட்ட கால் சேறு மிதிக்க அறியுமா? நன்மையான வலக்கை, உலக்கை பிடிக்க அறியுமா? இப்படிப்பட்ட மாதர்களுக்குச் சிறு பிள்ளைகளும் இருந்துவிட்டால், அவர்களுடைய தொல்லைக்கு எல்லையுண்டா? கைம்பெண்களில் பலர் கெட்டுப்போவதற்கு வறுமையே முதன்மையான காரணமா யிருப்பதால், ஆடவர்கள் எப்படியாவது முயன்று தங்களுடைய மனைவியருக்குத் தனியாகப் பொருள் வைக்கவேண்டும். அப்படிச் செய்வது நாம் முன்னமே விவரித்தபடி நூன்முறைக்குடன்பாடா யிருக்கின்றது. கணவன் முன்னே இறந்தால் கணவனுக்கும் அந்த மாதர் மகட்கொடைப் பொருள் பயனாகுமே.

## நம் நாட்டுக் கைம்பெண்களின் நிலைமை

இந்த நாட்டில் கைம்பெண்களுடைய நிலைமை மிக வருந்தத் தக்கதாயும் இரக்கத்துக் குரியதாயும் இருக்கின்

றது. அறுதலி யென்கிற மொழியே இழிவாயிருக்கின்றது. ஒருவனைப் பார்த்து மற்றொருவன் அறுதலி என்று சொன்னால் அவனுக்குப் பெருஞ்சினம் உண்டாகின்றது. ஓர் அறுதலியைப் பார்த்து "அறுதலி" என்று சொன்னால், அவளுக்கும் மனவருத்த முண்டாகின்றது. அவள் கணவனோடு கூட எல்லா நலன்களையும் இழந்து போகிறாள். சிவப்புச் சேலை வெள்ளைச் சேலையாகவும், இரு கால உணவு ஒருகால உணவாயும், மயிர்த்தலை மொட்டை யாயும், இன்பமெல்லாந் துன்பமாயும் மாறுகின்றன. அவ ளுக்கு நகையுமில்லை, தொகையுமில்லை, வகையுமில்லை; அவ ளுக்கு அழகில்லை, பெருமையில்லை, யாதொன்றுமில்லை. கூலியில்லாவிட்டாலும் வேலைக்குக் குறைவில்லை என்பது போல், வீட்டிலுள்ள தொல்லையான வேலைகளுக்கெல் லாம் அவளே பொறுப்பாளியாகிறாள். திருமணக்காரர் கள் அவளைக் கண்ணால் பார்க்கக்கூடாதாம். அவள் நன்மைகளுக்கெல்லாம் தள்ளுபடியாகிறாள்; துன்பங்களுக் கெல்லாம் சொந்தக்காரியாகிறாள்; தீக்குறிக் கெல்லாம் முற்குறி யென்று அவளை வீணே வைவார்கள். ஒருவன் வெளியே போகும்பொழுது அறுதலி எதிரே வந்தால், தீக்குறி என்று காரணமில்லாமல் அவளைச் சினந்துகொள் கிறான். கைம் பெண்டாட்டியே கழிபட்ட பிறப்பு என்று அவளை யாவரும் ஒழுங்கற்ற முறையில் இகழுகிறார்கள். ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார்கோயி லாண்டி என்பது போல, எல்லாத்தீமைகளுக்கும் அவளே காரணமென்று சொல்லுகிறார்கள். குதிரை தூக்கிப்போட்டது மல்லாமல், மேலே யேறியும் மிதித்ததுபோல், கணவனை இழந்து வழி யற்று நிற்கிற கைம்பெண்ணை எல்லோரும் கூடித் துன் பப்படுத்துவது அறமன்றே! கணவன் இருக்கமாட்டாமல்

மேலுலகம் போனால், அதற்கு மனைவி என்ன செய்வாள். ஆகையால், கைம்பெண்களைப் பெருமையாக நடத்துகிற வர்களே அருமையான மனிதர்கள்.

மாதர்கள் பக்கத்தில் எழுதத்தொடங்கிய நாம் இன் னும் இரண்டொரு செய்திகளைப்பற்றி எழுதாமல் விட்டு விடுவோமானால், இந்த உரை நடைநூல் குறையுள்ளதா யிருக்குமாகையால், அந்தச் செய்திகளையும் எடுத்துரைக்க விரும்புகின்றோம்.

## பெண்ணுக்கு விலைவாங்கும் பேதைமை

பார்ப்பனர்களுக்குள் பெண் வீட்டுக்காரர்கள் கணவன் வீட்டுக்காரர்களிடத்தில் பெண்ணுக்கு விலை வாங்கிக் கொண்டு, பெண்ணைக் கொடுப்பது இக்காலத்திலும் சிலருக்குள், பெரும்பாலும் வழக்கமாயிருக்கின்றது. இது தீயவழக்கமாயும், நூன்முறைக்கு மாறுபட்ட தாகவும் இருக்கிறது. எட்டுவகைத் திருமணங்களில், பிராம்மியம், தெய்வதம், ஆரிடம், பிரசாபத்தியம் என் கிற நான்கு வகைத் திருமணங்கள் மட்டும் நூன்முறைப் படி பார்ப்பனர்களுக் குரியவைகளாயும், மற்ற நான்கு வகைத் திருமணங்களும், மற்ற வகுப்பார்களுக்கு உரியவை களாயும் இருக்கின்றன. ஆடவனிடத்தில் யாதொரு பொருளும் வாங்காமல், தீ சான்றாக அவனுக்குக் கன்னி கையைக் கொடுப்பதே, பார்ப்பனர்களுக்குரிய மேற்படி நான்கு வகை மணங்களின் கருத்தென்று அறநூல் முறை யிடுகின்றது. பொருள் வாங்கிக்கொண்டு பெண்ணைக் கொடுப்பது அசுரமணமாயும், அது நூன்முறைப்படி மூன்றும் நான்காம் வகுப்பார்களுக்குமட்டும் உரியதாயும் இருக்கின்றது. மூன்றும் நான்காம் குலத்தார்கள் அசு

மணம் ஒழுங்கற்றதென்று தள்ளிப் பிராம்மிய மணம் செய்கிறார்கள். * அப்படியிருக்கப் பார்ப்பனர்கள் தங்களுக்குத் தொடர்பில்லாத ஆசுர மணத்தைக் கைப்பற்றிக்கொண்டு கணவன் இனத்தாரிடத்தில் பெண்ணுக்குப் பொருள் வாங்குவது ஒழுங்கற்ற முறையாயும் நூன் முறைக்கு மாறுபட்டதாயு மிருக்கின்றது. பொருள் வாங்கிக்கொண்டு பெண் கொடுக்கிறவர்களும், திருமணக் காலங்களில் பெண் கொடைக்கு உரிய மறைகளையும் முறைகளையும் கடைப்பிடிக்கிறார்கள். இது வெளிப்படையான வஞ்சகமன்றோ? ஊன் விற்கிற தீய வழக்கத்தினால் பல தீங்குகள் விளைகின்றன. பெண் வீட்டுக்காரர்கள் தங்களுக்கு மிகுந்த பணம் வருகிற வழியைப் பார்க்கிறார்களே தவிரப், பெண்ணினுடைய நன்மைகளை எவ்வளவும் எண்ணுகிறதில்லை கைக்கூலி வாங்குகிற வழக்குமன்றத் தலைவர்கள் பொருத்தங்களையும் ஒழுங்குமுறைகளையும் பாராமல், இரு பக்கத்தார்களில் எவன் மிகுந்த பொருள் கொடுக்கிறானோ, அவன் பக்கமாக முடிவு செய்வது போலவும், ஒரு சொத்தை ஏலங்கூறுகிறவன், யார் மிகுந்த விலை கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு விலை செய்வது போலவும், ஊன் விற்பவர்கள் கொள்ளுகிறவனுடைய தகுதியையாவது, ஆண்டையாவது, நிலைமையையாவது எண்ணாமல், எவன் மிகுந்த தொகை கொடுக்கிறானோ, அவனுக்கே பெண்ணைக் கொடுக்கிறார்கள். ஒருவன்

* இந்நூலாசிரியர் இந்நூலை எழுதிய காலத்தில் பார்ப்பனர்கள் வழக்கம், இவவாறிருந்ததுபோய், இப்போது பெண் வீட்டாரிடம் எதிர்ப்பொருள் ஆயிரம் ஆயிரமாக வாங்கும் வழக்கம் மிகுதியாயிருக்கின்றது. பார்ப்பனர்களில் ஏதோ இரண்டொரு வகுப்பினர் முன் வழக்கத்தை விடாதிருக்கின்றனர்.

இளைஞனாயும், குலத்திலும் குணங்களிலும் சிறந்தவனாயு மிருந்தாலும், அவனைப் பார்க்கிலும் ஒரு கிழவன் மிகுந்த பணம் கொடுக்கிற வகையில், அவன் தகுதியற்ற வனாயும், நோயாளியாயும் இருந்தாலும், அவனுக்கே பெண்ணைக் கொடுக்கிறார்கள். நான்கு ஐந்து அல்லது ஆறு ஆண்டுள்ள பெண்ணை, அவளுக்குத் தகப்பனாயும், பாட்ட னாயும், சிலபோது முப்பாட்டனாயும் இருக்கத்தக்க பருவ முள்ள ஒரு கிழவனுக்குக் கொடுக்கிறார்கள். மிகுந்த அகவையுள்ளவர்களும், தகுதியற்றவர்களுமே, மிகுந்த பணம் கொடுக்க உடன்படுகிறபடியால், அவர்களுக்கே சிறு அகவையுள்ள பெண்கள் கிடைக்கிறார்கள். அக்கார ணத்தைப்பற்றியே, அம்மாள் தெருளுவதற்கு முன் ஐயா உருளுவார் என்கிற உலகப் பழமொழி யுண்டாயிருக்கின் றது. பார்ப்பனர்களில் பெண்கள் பக்குவமாவதற்குமுன் அவர்களுக்கு மணஞ் செய்யவேண்டு மென்றும், மணம் செய்வதற்குமுன் பக்குவமாகிற பெண் குலத்தைவிட்டுத் தள்ளத் தக்கவ ளென்றும் அறநூலில் சொல்லப்பட்டிருக் கச் சிலர், அந்த நூலைக் கட்டி அப்பால் எறிந்துவிட்டு, மிகுந்த அகவையுள்ள பெண்களுக்கு மிகுந்த பணம் வாங்கு வதற்காகப் பதினான்கு அல்லது பதினைந்து ஆண்டு வரை யில் மணம் இல்லாமல் பெண்களை வைத்துக்கொண்டு, அவர்களுடைய அகவையையும் குறைத்துச் சொல்லிக் கொண்டு, பெண்ணை ஏலங் கூறிக்கொண்டிருப்பதுமன்றி, பெண்கள் பக்குவமாகாதபடி உணவு முதலியவைகளைக் குறைத்து, அவர்களை எல்லாத் தொல்லைகளுக்கும் உட் படுத்துகிறார்கள். அவர்கள் தாம் பணத்துக்காகக் காத் திருக்கிறார்கள்; பக்குவகாலமும் அவர்களுக்காகக் காத் திருக்குமா? காத்திராதாகையால், பல சமயங்களில்

பெண்கள் திருமணத்திற்குமுன் பக்குவமாய்விடுகிறார்கள். அந்த நாணக்கேடு வெளியாகாதபடி, பக்குவமான பெண்ணை அப்புறப்படுத்தாமல் வீட்டிலேயே வைத்துக்கொண்டு, தங்களுடைய ஒழுக்கத்தைக் கெடுக்கிறார்கள். பலர் விரைவில் பெண்ணைக் கொடுத்துப் பணம் வாங்குவதற்காக, மிக்க இளமையில் பெண்களுக்குத் திருமணஞ் செய்கிறார்கள். கணவன் எப்படிப்பட்டவனென்று பாராமலும், அவனிடத்தில் பெண்கள் நலமாயிருப்பார்களோ, அல்லது வருத்தப்படுவார்களோ என்பதை நினையாமலும், தாய் தகப்பன்மார்கள் தங்களுடைய வருமானத்தை மட்டும் பெரிதா யெண்ணிப் பெண்களைப் பலியிடுவது எவ்வளவு பெரிய ஒழுங்கின்மை?

ஒருவன் எளியவனாயிருந்தாலும் பெண்ணுக்குப் பொருள் கொடுத்தல், திருமணச் செலவு முதலியவைகளுக்காக ஏறக்குறைய ரூபாய் ஆயிரம் வரையில் அவனுக்குச் செலவாகிறபடியால், அதனால் அவனுடைய குடி முழுகிப்போகின்றது. அப்படிப்பட்டவனுக்கு வாழ்க்கைப்படுகிற பெண்ணுக்கு என்ன இன்பம் உண்டு? அட்ட தரித்திரம் ஆத்தாள் வீடு, அதிலும் தரித்திரம் மாமியார் வீடு என்பதுபோல், கணவன் நலமாயிருந்த காலத்தில் அவனிடத்தில் இராமல், எளிய தாய் தகப்பன்மார்களோடுகூடத் தொல்லைப்பட்டுக்கொண்டிருந்த பெண், அவர்களுக்குத் தன்மூலமாக நன்மை உண்டாகுங் காலத்தில், அவர்களைவிட்டு நீங்கி, இனிமேல் தொல்லைப்படப் போகிற கணவனுக்கு அவள் வாழ்க்கைப்படுவது எவ்வளவு கொடுமை? கணவன் பொன்னைக் கொடுத்துப் பெண்டாட்டி கொண்டு, திண்டாட்டப் பட்டதை நினைத்து நினைத்து, அவளை எப்போதும் சீறுமாறாக நடப்பிக்கிறான்.

அவளுடைய மாமனார், மாமியார், நாத்தனார் முதலானவர்களும், சமயம் வரும்போதெல்லாம், அடியே! எங்களுடைய குடியைக் கெடுத்தவளே! என்று சொல்லிச் சொல்லி, அவளை ஓயாமல் இகழுகிறார்கள். இப்படியாக மாதர்களுக் குண்டாகிற பல துன்பங்களுக்கும், ஊனமிலேயே காரணமாயிருக்கின்றது.

பொருள் கொடுத்துப் பெண் கொள்வதினால், கணவனுக் குண்டாகிற தொல்லைகளும் பலவே. உலகத்தில் பணங் கொடுக்க வழியில்லாத ஏழைகளே மிகுதியாயிருப்பதால், பிள்ளைக்குப் பெண் அகப்படாமலும், பலருக்குப் பெண்ணுக்குப் பிள்ளை கிடைக்காமலும், வாணாள் முழுமையும் மணமில்லாதவர்களாகவே இருந்துவிடுகிறார்கள். பிற்பாடு ஒருகால் அவர்களுக்குப் பொருள் அகப்பட்டாலும், முதுமை மேலிட்டு இல்லறவாழ்க்கைக்குத் தகாதவர்களாய்ப் போகிறார்கள். பலர் வீட்டை விற்று, நிலத்தை விற்றுக் கைப்பொருளை யெல்லாம் திருமணத்துக்குக் கொடுத்துவிட்டு, அடியோடு வறியவர்களாய்ப் போகிறார்கள். பல பிள்ளைகளையுடைய ஒருவன் செல்வனயிருந்தாலும், ஒவ்வொரு பிள்ளைக்கும் தனித்தனியே பணம் கொடுத்துத் திருமணம் செய்வதில், அவனுடைய செல்வம் முழுவதும் தோற்றுவிடுகிறான். ஒருவனுக்கு நான்கு பெண்கள் பிறந்தால் அவன் செல்வனாகிறான். ஒருவனுக்கு நான்கு ஆண்பிள்ளைகள் பிறந்தால், அவன் வறியவனாய்ப் போகிறான். செல்வர்களுக்கு மகட்கொடையாகவாவது அல்லது சிறிது பொருளை வாங்கிக்கொண்டாவது சிலர் பெண் கொடுக்கிறார்கள். எளியவர்களிடத்தில்மட்டும் மிகுந்த பணம் கேட்கிறார்கள். வீடு, மாடு, நிலம் முதலிய சொத்துக்களுக்கெல்லாம் விலையேற்படுத்தப்

பட்டிருக்கின்றன. பெண்ணுக்கு விலையோ கணக்கில்லை. ஒவ்வொருவனும் தன்னுடைய விருப்பப்படி வாய் கொண்டமட்டும் பணம் கேட்கிறான். நாளுக்குநாள் பெண்களுக்கு விலை மிகுந்து வருவதாக எல்லோரும் முறையிடுகிறார்கள். முதல் மனைவி கொள்ளுகிறவனிடத்தில் வாங்குகிற பணத்தைப் பார்க்கிலும், இரண்டாம் மனைவி கொள்ளுகிறவனிடத்தில் மிகுந்த பணம் வாங்குகிறார்கள். மூன்றும் மனைவிக்காரனிடத்தில் அதிலும் மிகுந்த பணம் வாங்குகிறார்கள். இப்படியே மனைவி கூடுதலாகப் பணமும் கூடுதலாகின்றது.

## பெண்ணைக் கைப்பொருளின்றிப் பெறமுடியாது

கடை வணிகர்கள் எவ்வளவு சரக்கு வேண்டுமானாலும் கடனாகக் கொடுக்கிறார்கள். பெண் வணிகர்களோ என்றால், ஊன்விலைப் பணத்தை முழுதும் கையில் வாங்கிக்கொள்ளாமல் பெண் கொடுக்கிறதில்லை. கடன்பத்திரம், ஈடு, பிணை முதலியவைகளை அவர்கள் ஒப்புக்கொள்கிறதேயில்லை. நாளைக்குப் பெண் போய் வாழவேண்டிய இடம் என்பதை எண்ணாமல், கையில் பணத்தை வாங்கிக்கொண்டுதான் பிற்பாடு பெண்ணைக் கொடுக்கிறார்கள். இவ்வளவு கடுமையாகப் பெண்ணுக்கு விலை வாங்குவதற்கு ஒழுங்கு இன்னதென்று தெரியவில்லை. திருமணம் ஆணுக்கு எப்படிக் கட்டாயமோ, அப்படியே பெண்ணுக்கும் கட்டாயந்தானே. பெண்ணுக்கு விலை வாங்குவது ஒழுங்காயிருந்தால், ஆணுக்காகவும், பெண் வீட்டுக்காரனிடத்தில் விலை வாங்குவது ஒழுங்குதானே. திருமணமானது ஆடவனைப் பார்க்கிலும், பெண்ணுக்கு இன்றியமையாததாயிருக்கின்றது. ஏனென்றால், ஆடவன்

திருமணமில்லாமல் எப்போதும் தனித்தவனாக இருந்து விடலாம். பார்ப்பன மாதர்கள் திருமணம் இல்லாமல் இருப்பது முறையன்றே ஆகையால், ஆடவர்களெல்லா ரும் கட்டுப்பாடு பண்ணிக்கொண்டு, பெண்களுக்கு விலையே கொடுக்கிறதில்லை யென்று மறுத்தால், பெண்க ளுடைய தாய் தகப்பன்மார்கள் பெண்களை வைத்துக் கொண்டு என்ன செய்வார்கள்? அவர்களே ஆடவர்க ளுடைய கால்களில் விழுந்து பெண்களை மகட்கொடை யாகக் கொடுக்க முந்துவார்களன்றோ? பார்ப்பனர்களைத் தவிர, வேறெந்தக் குலத்திலும், எந்த நாட்டிலும் ஊன் விலை செய்கிற வழக்கமே இல்லை. முன்னே நாம் தெரி வித்தபடி அசுர மணத்துக்கு உரியவர்களான மூன்றுங் குலத்தவர் நான்காம் குலத்தவர்களுமே அந்த மணத்தை வெறுத்துத் தள்ளியிருக்கத், தாங்கள் குலநலமுடையவர்க ளென்று சொல்லிக்கொள்ளுகிற பார்ப்பனர்கள், மற்றைக் குலத்தார்களால் விலக்கப்பட்ட அந்த முறையைக் கடைப் பிடிக்கலாமா? ஆணைப்போல், பெண்ணுக்குத் தகப்ப னுடைய பொருளில் பங்கு இல்லாமையால், அவளுக்கு மகட்கொடைப் பொருள் கொடுப்பது நாட்டு வழக்கமா யும், நூன்முறைக் குடன்பாடாயு மிருக்க, அப்படிச் செய்யாமல் பெண்ணை விற்றுத் தாய் தகப்பன்மார்கள் பணம் தேடுவது ஒழுங்கா? உடம்பு வேண்டாம் கையை விட்டாற் போதும் என்பதுபோல், அவர்கள் பெண்ணுக்கு மகட்கொடை கொடாவிட்டாலும், பெண்ணை விலைப்படுத் தாமல் சும்மா கொடுத்துவிட்டாற் போதுமே!

## இளமை மணம்

பெண்களுக்கு மிக இளமையில் திருமணம் செய்கிற வழக்கம் கெட்ட வழக்கமா யிருக்கின்றது. மாதர்களுக்கு

மணம் செய்யத்தக்க பருவம் ஏழாவது அகவை என்று அறநூலில் சொல்லப்பட்டிருக்க, அதற்கு மாறுபாடாக ஒன்று அல்லது இரண்டு அகவையுள்ள பெண்களுக்கும் மணம் செய்கிறார்கள். அப்படிச் செய்வதனால், தாய் தந்தையர்களுக்கு ஊன்விலைப் பணம் விரைவில் கிடைக்கிற பயனைத் தவிர, பெண்ணுக்காவது கணவனுக்காவது என்ன நன்மை இருக்கின்றது? அதனால் உண்டாகிற தீமை மட்டும் பெரிதாயிருக்கின்றது. இளமைப் பருவமே அம்மை முதலிய நோய்களுக்கு உரிய காலமாகையால், மிக இளமையில் மணமாகிற பெண்கள், அந்த நோய்களுக்கெல்லாம் தப்பி இருப்பார்களென்பது உறுதி அல்லவே. இரண்டு அகவையுள்ள பெண்ணை ஒருவன் திருமணம் செய்தால், பெண் பக்குவமாகிக் கணவன் வீட்டுக்குப் போகக் குறைந்தது பன்னிரண்டு ஆண்டு வேண்டுமே! அவ்வளவு காலத்திற்குள்ளாகப் பெண்ணுக்கும் கணவனுக்கும் எவ்வளவோ இடுக்கண்களும் தொல்லைகளும், ஏற்படும்படியா யிருக்குமே! அந்த இடையூறுக்களுக்கெல்லாம் தப்பிக் கணவன் வீட்டுக்குப் பெண் போனாலும், கணவன் முதிர்ந்த அகவையுள்ளவனாயிருக்கிற வரையில் வாணாளின் அளவிலும் மற்றைச் செயல்களிலும் அவர்கள் ஒருவர்க்கொருவர் சமமாயிராமல் அலியின் கையில் அரம்பை அகப்பட்ட கதையாய் முடிகின்றதே? இப்படிப்பட்ட பல காரணங்களால், பார்ப்பனர்களுக்குள் அறுதலிகளும் மிகுதியாயிருக்கிறார்கள். சில சமயங்களில் சற்றேறக்குறையச் சம அகவையுள்ள ஆணுக்கும், பெண்ணுக்கும் திருமணம் செய்கிறபோது பெண்கள் விரைவில் வளர்ந்துவிடுவார்கள். ஆடவர்களுக்குப் பக்குவ காலம் வரக் காலந் தாழ்க்கு

மாகையால் அதுவரையில் பக்குவமான பெண்கள் காத்திருக்கும்படி ஏற்படுகின்றது.

இத்தன்மையான பல செயல்களுக்கு, இளமை மணமே காரணமாயிருக்கின்றது. பால் குடிக்கிற பிள்ளைகளைப் பிடித்து, மணவறையில் வைத்துப் பல அழகுகள் செய்யும்பொழுது, அவர்கள் பொறுக்கமாட்டாமல் போடுகிற கூக்குரல், ஊரெல்லாம் எதிரொலி பாய்கின்றது. திருமணத் தொடக்கம் முதல், முடிவு வரையில் அந்தக் குழந்தைகள் அழுதவண்ணமாயிருக்கின்றன. அழுகையை நிறுத்துவதற்காக, அந்தப் பெண் குழந்தைகளைத் தாய்மார்கள் மடியில் வைத்துப் பால் கொடுத்துக் கொண்டு மணவறையில் உட்காருகிறார்கள். மாப்பிள்ளையும் சிறு பிள்ளையானதால், தாலியை மணவறையிலிருக்கிற குழந்தைக்குக் கட்டுகிறதென்றும், அதன் தாய்க்குக் கட்கிறதென்றும், விவரம் தெரியாமல் சில சமயங்களில் தாய் கழுத்திலே கட்டிவிடுகின்றது! மாப்பிள்ளை மாமியாருக்குத் தாலி கட்டின புதுமையைப் பார்த்து, யாவரும் சிரித்தாலும், அந்தப் பெண் குழந்தைமட்டும் சிரியாமல் அழுதுகொண்டே யிருக்கின்றது. பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதைபோல், திருமணப் பெருமைக்குத் தொடங்கி அழுகைக்குரலாய் முடிவது வேடிக்கை அல்லவா? ஆகையால், இளமைமணம் இழிவுடையதாயிருக்கின்றது.

## முடிவுரை

ஆங்கிலம் முதலிய மொழிகளிலுள்ள நூல்கள் ஆடவர்களிடத்தில் மாதர்கள் நடக்கவேண்டிய ஒழுங்குகளையும், அப்படியே மாதர்களிடத்தில் ஆடவர்கள் நடக்க

வேண்டிய ஒழுங்குகளையும், வஞ்சனையின்றி எடுத்துக் காட்டுகின்றன. நம்நாட்டு நூல்களோ ஆடவர்களால் செய்யப்பட்டன. ஆதலால், அந்நூலாசிரியர்கள் ஆடவர்கள் செயலில் மாதர்கள் கடைப்பிடிக்கவேண்டிய முறைகளை மட்டும் அருளில்லாமற்சொல்லி, மாதர்கள் இடத்தில் ஆடவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய நெறிகளைச் சொல்லாமலும் விட்டுவிட்டார்கள். அந்தக் குறைவை நீக்கும் பொருட்டு, உரை நடைவடிவான இந்த நூலை நாம் செய்ததே ஒழிய, மாதர்களிடத்தில் கைக்கூலி வாங்கிக் கொண்டு, அவர்களுக்கு நாம் வழக்கறிஞராகப் போர்க் கோலங்கொண்டு புறப்படவில்லை.

ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய மகள்கள், உடன் பிறந்தார், முதலானவர்களை அவரவர்களுடைய கணவர்கள் அன்பாக நடத்தவேண்டுமென்று விரும்புவார்களே தவிர, துன்பப்பட நடத்த ஒருவரும் உடன்பட மாட்டார்கள். அந்தச் செய்தியையே நாம் விரிவாக எழுதியிருப்பதினால், அதற்காக நம்மைச் சினக்கிறவர்களாயின், அவர்கள் தங்களுடைய தாய்மார்கள், உடன் பிறந்தார், மகள்கள், மனைவிகள் முதலானவர்களைச் சினக்கிறவர்களேயன்றி, நம்மைச் சினக்கிறவர்களல்லரெனத் துணிகிறோம். ஆகையால், இந்தச் செய்திகளையெல்லாம் அறிவாளிகள் நன்றாக ஆராய்ச்சி செய்து, இதிலுள்ள குற்றங்களை நீக்கிக், குணத்தை மட்டும் பற்றிக்கொள்வார்களென்பதற்கு ஐயமில்லையெனவும் நம்புகிறோம்.

முற்றிற்று.

*

*

# பெண்மதிமாலை

---

## காப்பு

விண்மதி மாலை விலக்கல்போன் மெய்தோன்றப்
பெண்மதி மாலையான் பேசவே—தண்மதிசூழ்
அண்டபகி ரண்டமு மகண்டமே யுண்டெனமெய்
கண்டவரி ரண்டுகழல் காப்பு.

---

**இராகம்-நாதநாமக்கிரியை]** [மிச்ரதாளம்

### கண்ணிகள்

மதியிது மதியிது பெண்ணே-புண்ய
வதியல்ல வோநல்ல மகராசி கண்ணே-மதி 1

### தெய்வ பத்தி

நித்தியங் கடவுளை வாழ்த்து-பய
பத்தியுடனே நீ பணிந்துன்னைத் தாழ்த்து-மதி 2

தூயதே வாலயம் நாடு-பிள்ளை
தாயைத் தேடுவதுபோற் சாமியைத் தேடு-மதி 3

கர்த்தாவை மறக்குதல் தாழ்வு-நாளைச்
செத்தால் தெரியுமே செட்டியார் வாழ்வு-மதி 4

எண்ணவொண்ணா வுப காரம்-செய்த
புண்ணிய மூர்த்திக்குப் புரி நமஸ்காரம்-மதி 5

உலகெல்லாம் பட்டமாண் டாலும்-தெய்வ
பலமில்லார்க் கில்லையே பாக்ய மெக்காலும்-மதி 6

தலைமேலே மலைவிழுந் தாலும்-தெய்வ
பலமுடையார்க்குண்டோ பய மொருகாலும்-மதி 7

உடலுயிர் பலபல வுடைமை-எல்லாம்
திடமுட னீந்தோனைச் சேவித்தல் கடமை-மதி 8

பரவச மாகவுள் ளுருகு-ஐயன்
திருவருள்நினைந்து நீதினங் கண்ணீர் பெருகு-மதி 9

சூதான மாயப்ர பஞ்சம்-இதில்
நாதனல்லாது ந மக்குண்டோ தஞ்சம்-மதி 10

முன்னம் பொருளெல்லாந் தந்து-பின்பு
தன்னையுந் தந்தவன் தாள்தொழ முந்து-மதி 11

மாதா பிதா குரு தெய்வம்-ஆன
நாதனார் கைவிடில் நாமென்ன செய்வம்-மதி 12

துக்கசாகரஞ் சம்சாரம்-கரைப்
பக்கமே றிடப்பரன் பாதமா தாரம்-மதி 13

நீரைவிட்டாற் கெடும் மீனே-ஈச
னாரைவிட் டால்நமக் கார்துணை மானே-மதி 14

நாஞ்செய்வ தெல்லாம் விகாரம்-கர்த்தர்
தாஞ்செய்வ தெல்லாம் தகுமுப காரம்-மதி 15

தேவனை நினையாத வுள்ளம்-பெரும்
பாவமும் பழிகளும் படிந்திடும் பள்ளம்-மதி 16

ஈசனைப் போற்றாத வாயே-ஒரு
காசுக் குதவாக் கசப் பெட்டிக்காயே-மதி 17

சத்திய மார்க்கத்தைக் கூடு-தெய்வ
பத்தியே பாக்கியம் பந்தயம் போடு-மதி 18

செபமின்றி நீபடுக் காதே-நாளும்
செபமின்றி யொருவேலை நீ தொடுக்காதே- 19

மதியிது மதியிது பெண்ணே-புண்ய
வதியல்ல வோநல்ல மகராசி கண்ணே.

---

## குரு வணக்கம்

குருமாரை வணங்கிக்கொண் டாடு-அவர்
திருவாக்குக் கெதிர்வாக் கில்லாமலே நாடு-மதி 20

சித்தமும் குருவின்க டாக்ஷம்-பெற்ற
சுத்தருக் கல்லவோ சூக்ஷமத்தின் மோக்ஷம்-மதி 21

ஞான குருவுப தேசம்-இல்லா
ஈனருக் கில்லையே யென்றும் ப்ரகாசம்-மதி 22

பூலோக வாழ்வெல்லாம் நீங்கி-வந்த
மேலோரைக் கைதொழ வேண்டு நான்பாங்கி-மதி 23

அற்பருக் கூழியர் நாமே-ஆதி
தற்பர னூழியர் சாமிகள் தாமே- 24

மதியிது மதியிது பெண்ணே-புண்ய
வதியல்ல வோநல்ல மகராசி கண்ணே.

---

## தாய் தந்தையர் வணக்கம்

மாதா பிதாவை வணங்கு-நாளும்
ஆதாரமா யவர் சொல்லுக் கிணங்கு-மதி 25

தந்தைதாய் சாபம்போல் லாது-அவர்
சிந்தைநொந்தால் மக்கள் செல்வம் நில்லாது-மதி 26

மாதா பிதாவுக்கு த்ரோகம்-செய்யும்
பாதகரைச் சுற்றும் பாவ மநேகம்-மதி 27

பெற்றவர் நேசத்தைத் தேடு-அவர்
குற்றத்தை நீக்கிக் குணத்தைக் கொண்டாடு-மதி 28

தாய்தந்தைக் குதவாத பிள்ளை-தன
தாயுசும் வாழ்வு மடியோடே கொள்ளை-மதி 29

கட்டியுனை வளர்க்க நாமே-முன்பு
பட்டபாடுகள் சொல்லப் பாரதமாமே-மதி 30

உள்ள தாய் தந்தைக்குத் தீங்கு-செய்யும்
பிள்ளையைத் தன்பிள்ளை யேபழி வாங்கும்-மதி 31

கடலைப்போல் மாதா சகாயம்-அதற்
குடல்செருப்பாத் தைத்துப் போடுதல் ந்யாயம்- 32

மதியிது மதியிது பெண்ணே-புண்ய
வதியல்ல வோநல்ல மகராசி கண்ணே.

---

# அறிவுரை

அடுக்குப்பானையை யுருட் டாதே-வெகு
துடுக்காகப் பலகாரங் களைச் சுருட்டாதே-மதி 33

தங்கையைத் தொடையிற்கிள் ளாதே-தம்பி
பங்குப் பணியாரத்தைப் பறித்துக்கொள்ளாதே-மதி 34

உன்னைப்போற் பிறரையும் நேசி-தினம்
பொன்னே ஞானபுத் தகங்களை வாசி-மதி 35

நற்றவளே துரை சாணி-கல்லா
மற்றவளே சுத்த மடை சாம்பிராணி-மதி 36

தாழ்வோரை நீசிரி யாதே-மிக
வாழ்வோரைக் கண்டுநீ வயிறெரி யாதே-மதி 37

நாட்டிலெவரையும் வை யாதே-உன்றன்
பாட்டிசொன்னாலுநீ பாவஞ் செய்யாதே-மதி 38

பூச்சியைப் பிடித்துக்கொல் லாதே-உன்றன்
ஆச்சி சொன்னாலுநீ யபத்தஞ் சொல்லாதே-மதி 39

பிட்சையிடாம லுண் ணாதே-ம்ருகம்
பட்சிக்கு மேதுன்பம் பண்ண வொண்ணாதே-மதி 40

இட்டமாய் நல்லோரைக் கூடு-பொல்லாத்
துட்டரைக் கண்டால்நீ தூரத்திலோடு-மதி 41

பிறரார் பொருளைத் தொடாதே-நாலு
பேரறி யும்படி பிச்சை யிடாதே-மதி 42

நித்தமும் நீரிலே முழுகு-வீடு
சுத்தமாகும்படி தேர்கையே மெழுகு-மதி 43

புழுநிறை யூத்தைச் சரீரம்-இதைக்
கழுவாவிட்டால் நாறும் காதவித்தூரம்-மதி 44

அழுக்கு வத்திரங்கள்கட் டாதே-உடல்
கொழுக்கவுண்ணும் தீனி குடலிலெட்டாதே-மதி 45

சூதும் வாதும்படி யாதே-நாளும்
நீதிசெய் தால்தரித் திரம் விடியாதே-மதி 46

கோட்சொல்லி குடிகெடுக் காதே-தப்புச்
சாட்சி சொல்லுங்குடி தலையெடுக்காதே-மதி 47

கோளும் புரளியுங்கே ளாதே-எந்த
நாளும் புரளிபேச நாக்குநீ ளாதே-மதி 48

வந்ததுன் பத்திலா ழாதே-மிகச்
சந்தோசம் வந்தாலுந் தலைகீழ் விழாதே-மதி 49

வேலைக்குநீ சிணுங் காதே-ஒரு
மூலைக்குட் புகுந்துநீ முணுமுணுக்காதே-மதி 50

வேலைசெய்வோரை வாட் டாதே-தினம்
ஆலைக் கரும்புபோ லவரை யாட்டாதே-மதி 51

நெடுநேரம் படுத்துத்தூங் காதே-தூங்கும்
விடியா மூஞ்சிகளுக்கு விசனம் நீங்காதே-மதி 52

ஆரையுஞ் சீறியே சாதே-வேலைக்
காரர்களுட னேசக் கந்தம் பேசாதே-மதி 5

புருடர்கள் பார்க்கநில் லாதே-கோடி
வருடம்வாழ்வதுபோல்துன் மார்க்கங்கல்லாதே-மதி 54

தங்கை அக்காள் அண்ணன் தம்பி-மேலே
சங்கையு மன்புள் ளவள் தங்கக்கம்பி-மதி 55

சற்றுங் கூலியைக்குறைக் காதே-செய்த
குற்றத்தைப்பொய் சொல்லி நீ மறைக்காதே-மதி 56

பண்டங்களை யழிக் காதே-சும்மா
கண்டபடி சேலை களைக் கிழிக்காதே-மதி 57

உன்னை நீபுகழ்ந்துகொள் ளாதே-பிறர்
நன்னயப் புகழ்ச்சியை நம்பித் துள்ளாதே-மதி 58

மிஞ்சின செலவுசெய் யாதே-செய்து
கஞ்சிக்குக் காற்றுகப் பறந்து நையாதே-மதி 59

மெய்சொல்ல மேன்மையுண் டாமே-தினம்
பொய்சொல்லும் வாய்க்குப் புசிப்பற்றுப்போமே-மதி 60

நகைதுணி யிரவல்வாங் காதே-வாங்கில்
சகலரு மேசுவர் தாழ்வு நீங்காதே-மதி 61

மங்களமாக நாள் போக்கு-கைக்குக்
கங்கணம் போடவே காய் கறியாக்கு-மதி 62

வீட்டுக் கணக்கெல்லா மெழுது-நல்ல
ஏட்டுக் கணக்கருக் கில்லையே பழுது-மதி 63

மட்டின்றிக் கடன்வாங்கல் தீது-ஐயோ
குட்டிச்சுவரில் முட்ட வெள்ளெழுத் தேது- மதி 64

கடன்களைத் தீர்க்கத்தப் பாதே-கண்ட
இடமெல்லா முன்குறையெடுத்துச் செப்பாதே-மதி 65

வெள்ளமா யாசைப் படாதே-கையில்
உள்ளது போது முறுதி விடாதே-மதி 66

எல்லாங் கைகூடி வராதே-நமக்
கில்லாவழகைக்கண் ணாடி தராதே-மதி 67

எவராலு மேயிசை யாதே-செய்த
அவனசையாம லணுவசை யாதே-மதி 68

ஈனராலும் கா யாதே-சிறு
பூனைபோலிருந்து நீ புலிபோற் பாயாதே-மதி 69

கண்டெடுத்த பொருளை நீயே-சொந்த
பண்டக்காரரைத் தேடிப் பரிந்தளிப்பாயே-மதி 70

கள்வர்கைப் பொருளைவாங் காதே-வாங்கும்
உளவரில்லா விட்டாற் களவேது மாதே-மதி 71

அநியாய வட்டி வாங் காதே-வாங்கில்
இனியகை முதலும்போம் ஏக்கம் நீங்காதே-மதி 72

அளவு நிறையைக்குறைக் காதே-ஒரு
சுளகாலே யானையை நீ மறைக்காதே-மதி 73

அகவிலை தன்னையேற் றாதே-நாளும்
தகவே செல்லாப்பணந் தன்னை மாற்றாதே-மதி 74

புண்ணியஞ் செய்யக்கூ சாதே-இந்த
மண்ணிலிருந்து வழக் கோரம் பேசாதே-மதி 75

நடக்குஞ் சந்த்ராதித்தர் மாதே-தெற்கு
வடக்காகுலு நீ வார்த்தை தப்பாதே-மதி 76

ஒன்றுக்கு மஞ்சிநில் லாதே-பாலைக்
கன்றுக் கில்லாமற் கறக்கச் சொல்லாதே-மதி 77

தீயார்சொல்லைப் பொறுப் பாயே-யெட்டிக்
காயென்று சொன்னாற் கசக்குமோ வாயே-மதி 78

தீயென்று சொன்னால்வாய் வேமோ-கெடு
வாயொன்றொருவர் சொல்லில் வாழ்வெல்லாம்—
போமோ-மதி 79

புகழு மிகழும்வாய்க் காற்று-இதில்
மகிழ்வும் வருத்தமும் கொள்ளாமல் மாற்று-மதி 80

சதிகாரர் வலையிற் படாதே-கல்வி
மதியில்லாதவனுக்கு வாழ்க்கைப்படாதே-மதி 81

குணவா னெளியனா னாலும்-அவன்
மணவாளனாவது மாசெல்வம்போனாலும்-மதி 82

புகழுடையோனை விடாதே-துஷ்டன்
மகராசனானாலு மாலையிடாதே-மதி 83

அடக்கம் பொறுமைதயை சாந்தம்-என
நடக்கும் நற்குணங்களே நாரிக்குப் பாந்தம்- 84
மதியிது மதியிது பெண்ணே—புண்ய
வதியல்ல வோநல்ல மகராசி கண்ணே

---

## கணவன் பத்தி

புருசன்மே லொழியாத பத்தி-உள்ள
தருமதேவதைக்கல்லோ சகலமுஞ் சித்தி-மதி 85
கர்த்தாவே முதல்தெய்வம் மானே-பின்பு
பர்த்தாவல் லாலுண்டோ பாக்கியந்தானே-மதி 86
துரைமகளானாலும் பாரி-கொண்ட
உரியவனுக்கவ ளூழியக்காரி-மதி 87
காதலன் பக்ஷமே லக்ஷம்-குணம்
ஏதுமில்லாதவ ளெட்டி விருக்ஷம்-மதி 88
ஆவித்துணைவன்மேற் கோபம்-செய்யும்
பாவியைக் கண்ணாலே பார்த்தாலும் பாபம்-மதி 89
புருஷன் நல்வார்த்தைதட் டாதே-முட்டும்
எருதுபோல் நீசண்டைக் கிடுப்புக்கட்டாதே-மதி 90
தேகமுஞ் சீவனும் போலே-கொண்ட
மாகணவனுடன் வாழ்வது மேலே-மதி 91
செய்தநன்றி மற வாதே-பர்த்தா
வைதாலு மடித்தாலும் வாய்திறவாதே-மதி 92
கணவன் மேற்பகை மூர்க்கம்-செய்யில்
குணமாகப் பேசிக் குலாவுதல் மார்க்கம்-மதி 93

அருந்துணை வன்றனைத் தூண்டு-அவன்
திருந்தும்படி தினந் தேவனை வேண்டு-மதி 94

மாமிமேல் வன்மங்காட் டாதே-உன்றன்
சாமிக்கு மாமிக்குஞ் சண்டை மூட்டாதே-மதி 95

தலைவன் நெஞ்சைக்கரைக் காதே-மாமி
தலைமேலே நீமிள காயரைக்காதே-மதி 96

நாத்திமேற் கச்சைகட் டாதே-வெகு
சாத்திரமாயவள் தலையை வெட்டாதே-மதி 97

தலையணை மந்திரந் தீது-கெட்ட
கலகக் காரிகளுக்குக் கட்டம் போகாது-மதி 98

வீட்டுக் கதிபதி நீயே-வெளி
நாட்டுக்கதிபதி யுன் னையகன் சேயே-மதி 99

மதியிது மதியிது பெண்ணே—புண்ய
வதியல்ல வோநல்ல மகராசி கண்ணே.

---

## கற்பு

கற்பு நிலையேசிங் காரம்-அது
தப்பினோ ரழகு சவ அலங்காரம்-மதி 100

சீவன்போற் கற்பைக்காப் பாற்று-யார்க்கும்
சாவு தலைமேலே சாமியைப் போற்று-மதி 101

அரைக்காசுக் கழிந்திட்ட கற்பு-நூறு
மரக்காற்பொன் கொடுத்தாலும் வருமோ—
நீசெப்பு-மதி 102

அன்னிய னழகனா னாலும்-கற்பின்
மின்னிடையார்க்கவன் விஷநாகம் போலும்-மதி 103

கணவன் குரூபி யானாலும்-கொண்ட
மணமகளுக்கவன் மன்மதன் போலும்-மதி 104

பேரைக் கெடுப்பவள் பெண்டோ-இந்த
ஊரைவாய் மூட வுலைமூடி யுண்டோ-மதி 105

ஏராங்கள் பேசிக் கெடாதே-புவி
அரசனை நம்பிப்புரு சனைக் கைவிடாதே-மதி 106

வாசற்படி கட வாதே-பிறர்
ஆசைப்பட வெளியி லாய் நடவாதே-மதி 107

சிற்றின்பந்தா னரை நொடியே-வரும்
தூற்றமும் பழிகளுங் கோடிபொற் கொடியே- 108

மதியிது மதியிது பெண்ணே—புண்ய
வதியல்ல வோநல்ல மகராசி கண்ணே.

---

## பாலரை வளர்த்தல்

மக்களுக் கோரம்பண் ணாதே-உன்றன்
மங்களத்தி பிள்ளைக்குச் சதிகளெண் ணாதே-மதி 109

பலபிள்ளை பெற்றென்ன பாக்யம்-நன்மை
இல்லையெனில் மலடியா யிருப்பது யோக்யம்-மதி 110

புத்திரர்க் கன்புபா ராட்டு-தெய்வ
பத்தியும் புத்தியும் பாலைப்போ லூட்டு-மதி 111

இளந்தையி லேகல்வி போதி-மிக
வளர்ந்தபின் அழுதாலும் வருமோநன்னீதி-மதி 112

இளக்காரம் பாலர்க்குத் தீமை-பின்பு
வளர்த்தகடா மார்பிற் பாய்ந்ததொப்பாமே- 113

மதியிது மதியிது பெண்ணே—புண்ய
வதியல்ல வோநல்ல மகராசி கண்ணே.

## அனைவருக்கும் உதவுக

ஆருக்குஞ் செய்யுப காரம்-பல
ஊருக்கும் நல்லவட் குண்டோ விகாரம்-மதி 114

ஈயும் பிச்சையைத் தடுக்காதே-உன்னைப்
பேயென்றொருவர் சொல்லப் பேரெடுக்காதே-மதி 115

துக்க முள்ளோரை நீ தேற்று-வரும்
அக்குருடர் முடவர் பசியைநீ யாற்று-மதி 116

தாய்போ லெளியரைத் தாங்கு-வெறும்
வாயுற வும்மன வைரமும் நீங்கு-மதி 117

பிணியுடை யோரைநீ தேடு-கட்டத்
துணியுடன் காய்கறி சோறு நீபோடு-மதி 118

பாத்திர மறிந்திடு பிட்சை-தப்புத்
தோத்திரஞ் செய்வோரை துரத்துதல் சிட்சை-மதி 119

புத்தியில் லார்க்குநீ போதி-தெய்வ
பத்தியில் லார்க்குநீ படிப்பித்தல் நீதி-மதி 120

நன்மையினுற்குறை யேது-பெருந்
தின்மைசெய் தோர்க்கும்நீ செய்யாதே தீது-மதி 121

பூமியி லேழைபோல் வேடம்-கொண்டு
சாமியே வருவர்நீ தள்ளுதல் தோடம்-மதி 122

நரக மோட்சங்கொண்டு வருவார்-தீனர்
தருவோர்க் கொன்றீவார் தரார்க்கொன்று
தருவார்-மதி 123

பல்வகை ஏழைகள் நிமித்தம்-அத்தன்
செல்வரைப் படைத்தனன் செகத்தில் ப்ரசித்தம்-
மதி 124

யாசகர்களை யுப சரியே-சவர்க்க
வாசலில் தொண்டைமானுந் தோட்டியுஞ்சரியே- 125

மதியிது மதியிது பெண்ணே-புண்ய
வதியல்ல வோநல்ல மகராசி கண்ணே.

---

## ஞானம்

பூதல வாழ்வெல்லாம் பொய்யே-இங்கே
ஏதுமில்லாம லிறப்பது மெய்யே-மதி 126

எத்தனை பேர்புவி யாண்டார்-முன்னம்
அத்தனை பேர்களும் ஐயையோ மாண்டார்-மதி 127

பாட்டனார் பூட்டனா ரெங்கோ-போக
மாட்டோ மென்றாலும் மரணம் நம்பங்கே-மதி 128

பூமியே நாடக சாலை-இதிலெ
சாமிதந்தாரே சகலர்க்கும் வேலை-மதி 129

வாவென்று தேவன்கை யோலை-வந்தால்
கோவென் றழுதாலுங் கூடுவோ மேலை-மதி 130

ஆவியென்ப தொரு மூச்சு-இது
மேவி யொடுங்கினால் வேறென்ன பேச்சு-மதி 131

எட்டிப்போ போவென்னும் வீடு-கையைக்
கொட்டிவா வாவென்று கூப்பிடுங் காடு-மதி 132

பாழுடல் மாமிச மூட்டை-இது
வீழப் பலசெந்து வுக்கு நல் வேட்டை-மதி 133

தம்பியு டல்புகை யோட்டம் இதை
நம்பியி ருக்குமே நாய்நரிக் கூட்டம்-மதி 134

தங்கமும் வெள்ளியு மண்ணே-என்றும்
மங்காத மோட்சத்தின் வாழ்வைநீ யெண்ணே-மதி 135

தனமிருந் தாலிற வோமோ-தூங்கும்
நனவிற்கண் டவாழைக் காய்கறிக் காமோ-மதி 136

இலைபோல வயிறெரு சாணே-பொருள்
மலைமலை யாய்ச்சேர்த்து வைக்குதல் வீணே-மதி 137

நவமணி பலவகைக் கல்லே-இந்தப்
புவன சுகங்களெல் லாஞ்சிறு புல்லே-மதி 138

ஆஸ்தியுன் கூடவ ராதே-கட்டிக்
காத்திருந் தாலுமுன் கையிலி ராதே-மதி 139

உண்பது காற்படி சோறு-பூதம்
எண்பது போல்வேலி யேனிரு நூறு-மதி 140

இருக்குமி டமுழந் தானே-நாலு
தெருக்களி லும்பல வீடுக ளேனே-மதி 141

பிழைப்புக் குரியபிண்டந் துண்டம்-அன்றிப்
பழிப்புக் கிடமிலையோ பலபல பண்டம்-மதி 142

நகையில்லாக் காதுகே ளாதோ-பல
வகைப்பட்டி ல்லாவுடல் வளர்ந்துநில் லாதோ-மதி 143

குச்சுவீ டின்பங்காட் டாதோ-பெரு
மச்சுவீட்டி லேதுன்பம் வரமாட் டாதோ-மதி 144

பணங்கண்டால் நமனஞ்சு வானோ-நல்ல
குணமாகப் பணக்கார ருடன்கொஞ்சு வானோ-மதி 145

தோலு மெலும்புஞ் சரீரம்-இதை
மேலே மினுக்குவ தாலென்ன சாரம்-மதி 146

செட்டிதட் டான்செக்கா ளேலே-வந்த
ஒட்டழ கன்றிஉள் ளதுவெறுந் தோலே- 147

மதியிது மதியிது பெண்ணே—புண்ய
வதியல்ல வோநல்ல மகராசி கண்ணே.

---

## பாவம்

மாற்றுவாய் பாவத்தை நீயே-நல்ல
காற்றுள்ள போதேநீ தூற்றிக்கொள் வாயே-மதி 148

அகங்காரம் மோகம் உலோபம்-பகை
மிகுங்கோபம் பேருண்டி சோம்புதல் பாபம்-மதி 149

மண்ணிலுண் டார்க்கொல்லும் நஞ்சு-நெஞ்சில்
எண்ணிடக் கொல்வது பாவமே யஞ்சு-மதி 150

எவரையும் பாவம் விடாதே-நிலம்
அவரை விதைக்கத் துவரை கொடாதே-மதி 151

பாவஞ்செய் யவிரும்பில் அம்மா-ஆதி
தேவனரு ளொழிந்து தியங்குவாய் சும்மா-மதி 152

தீதுசெய் தால்நன்மை தருமோ-வேம்பை
நீதான் விதைக்கக் கரும்புவ ருமோ-மதி 153

தையலே யுலகங்கண் ணடி-நாம்
செய்வனை,ய யெயது செய்யு மே தேடி-மதி 154

வைவாரை வையுமே யுலகம்-தீமை
செய்வாருக் கேயது செய்யுமே கலகம்-மதி 155

தன்வினை தனைச்சுடும் மயிலே-பாம்பை
முன்வளர்த் தவர்க்கமு தீயுமோ குயிலே-மதி 156

இங்குமே துட்டிக் கிரகம்-மானே
அங்குமே பாவத்துக் கவியாத நரகம் 157

மதியிது மதியிது பெண்ணே—புண்ய
வதியல்ல வோநல்ல மகராசி கண்ணே.

---

## புண்ணியம்

புண்ணியஞ் செய்யலாம் நாளை-என
எண்ணி யிராதே இது நல்ல வேளை-மதி 158

புண்ணியம் பாவமல் லாது-இந்த
மண்ணில்நம் மிடமொன்றும் வந்துநில் லாது-மதி 159

மெய்மையி லேதருஞ் சோதி-செய்யும்
செய்கைக ளோநீ தினம்பரி சோதி-மதி 160

தர்மத்தைப் பாவம்வெல் லாதே-துட்ட
காமத்துக் கஞ்சிக் கலங்கிநில் லாதே-மதி 161

அகந்தைகள் செய்யப் படாதே-பிறர்
புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும் புண்யம்வி டாதே-மதி 162

நற்குரு வேமனச் சாட்சி-அதன்
சொற்படி நடந்தாற் சுகநிலை யாட்சி-மதி 163

மேலழ கேகுண வழகு-வெறுந்
தோலழ காலென்ன சுகுணத்திற் பழகு-மதி 164

உத்தம குணமேயா பரணம்-தங்கக்
கொத்து நகைகளெல்லாங் கோதையே திரணம்-மதி 165

ஆரியக் கூத்தாடி ஞலும்-நல்ல
காரியத் திற்கண்ணை வைப்பாய்மென் மேலும்-மதி 166

புண்ணிய மெவர்க்கு மஞேக்யம்-உயர்
விண்ணினும் மண்ணினும் வேறுண்டோ பாக்யம்-மதி 167

சிட்டரைத் துட்டரும் புகழ்வார்-பெருந்
துட்டரைத் துட்டரும் துதியாம லிகழ்வார்-மதி 168

இவ்வுல கத்தினுங் கண்யம்-தரும்
அவ்வுல கத்தையு மடைவிக்கும் புண்யம்-மதி 169

அருமையா நான்பெற்ற மாதே-வாழ்த்து
திருவேத நாயகன் சேவடிப் போதே 170

மதியிது மதியிது பெண்ணே—புண்ய
வதியல்ல வோநல்ல மகராசி கண்ணே.

# கீர்த்தனைகள்

## பெண் பார்க்கத் தூதனுப்புதல்

உசேனிராகம்] [ஆதிதாளம்

பல்லவி

நல்லபெண்ணைப் பார்நீ தூதா (நல்ல)

அநுபல்லவி

அல்லடா கேளிந்தப் பூமியின் மேலே
ஆயிரங் காலத்துப் பயிராகை யாலே (நல்ல)

சரணங்கள்

அதிகபேச்சுக்காரி பெரும் வம்பி
ஆயிரமானாலும் அவள்வேண்டாந் தம்பி
நிதநித மூரெல்லாம் நீட்டுவாள் கம்பி
நிச்சய மவளாகாள் நீயென்சொல் நம்பி (நல்ல) 1

எழுத்துவா சகம்அறி யாதவள் மட்டி
ஏதுமறி யாதவள்சுரண்டுவாள் சட்டி
கழுத்திலே யவளுக்குத் தாலியைக் கட்டிக்
காரிய மில்லைஅது காசுக்கு நட்டி (நல்ல) 2

அழகுங்கு ணமுமுள்ள வள்நல்ல சோடு
அழகில்லை யாயினுங் குணத்தையே தேடு
பழகுநற் குணமில்லா அழகியின் வீடு
பாம்பு புலிகரடி வாழ்ந்திடுங் காடு (நல்ல) 3

வீட்டுவேலைதெரி யாதவள் வேம்பு
மினுக்கும் அவள்குலுக்கு மேவெறும் வீம்பு
கூட்டுநற் குணமில்லாக் கொடியவள் பாம்பு
குலத்தைக் கெடுக்கவந்த கோடாலிக் காம்பு (நல்ல) 4

நகைகள் தரித்துமஞ்சள் வாடைகள் பூசி
நாடெங்குந் தெரியவே நகைத்துக்கை வீசி
சொகுசுட னடப்பவ ளாயிரந் தாசி
சும்மாவந் தாலுமவள் வேண்டாஞ் சீச்சீ (நல்ல) 5

தேவதா பத்தியில் லாதவள் கள்ளி
திருட்டுக்கும் புரட்டுக்கு மவளொரு பள்ளி
தாலில் புருடன்குடிக் கவள்பெருங் கொள்ளி
சனியனை விலக்குவாங் காமல்நீ தள்ளி (நல்ல) 6

உடைமைக ளுடன்பணங் காசின்மே லிச்சை
உள்ளவள் சண்டைக்குக் கட்டுவாள் கச்சை
இடைவி டாமலிவ ளாற்கெடும் லச்சை
இவளைக்கொள் ளுவதிலும் எடுக்கலாம் பிச்சை
(நல்ல) 7

சந்ததங் கணவன்மே லொழியாத பத்தி
சாந்தம் பொறுமை தயைதானம் நற்புத்தி
எந்த வேளையு முடலாத்தும சுத்தி
இல்லா தவளவள் கழுத்துக்குக் கத்தி (நல்ல) 8

நல்லவ ளேழையா னாலுந் தொடாதே
நானூறு போனாலும் நீபின்னி டாதே
பொல்லா தவள்கையிற் காட்டிக்கொ டாதே
புலியைக் கொண்டுவந்தென்னைத் தெருவில்வி
டாதே (நல்ல) 9

சகல காரியங்களுந் தெரிந்தவள் சலாக்யம்
தரித்திர தசையிலு மவள்பெரும் பாக்கியம்
இகபர மிரண்டுக்கு மவள்நல்ல யோக்கியம்
என்று சொன்னான்வேத நாயகன் வாக்யம் (நல்ல) 10

---

## தூதன் பெண் பார்த்துவந்து சொல்லுதல்

[சௌராஷ்டிரராகம்] [அடதாளசாப்பு

பல்லவி

பஞ்சவர்ணக் கிளிபோ லொருபெண்ணை நான்
பார்த்து வந்தேன் சுவாமி

அநுபல்லவி

கொஞ்சமுஞ் சந்தேக மில்லாமலே அந்தக்
கோல மயிலைநீர் கொள்ளும்—அநு
கூலம் வந்ததென்று துள்ளும்—நல்ல
காலங் கவலையைத் தள்ளும் (பஞ்ச)

சரணங்கள்

பூரணச் சந்திரன் போலுமு கத்துக்குப்
பூமியி லுண்டோசமானம்—தெய்வப்
பூவையர் சுந்தரம் வேண்டில் அவளிடம்
போய்வாங்க வேண்டுமே தானம்—அந்த
நாரிகண் வாய்செவி மூக்குக்கு வமையை
நாட்டுவ துமதி யீனம்—அவள்
நடையழ குக்குஞ்ச டையழ குக்குமே
நானென்சொல் வேனுப மானம்—அந்த
மானின்சொல் லோதேவ கானம்—இடை
தானுண்டென் பதனு மானம்—நாறு
மீனங்கண் ணெனிலவ மானம் (பஞ்ச) 1

பாக்யவ தியவள் பக்கத்தி ருந்தாலும்
பாவமெல் லாம்பறந் தோடும்—அவள்
பால்வடி யுமுகம் பார்த்தாலும் போதும்சௌ
பாக்யம்வந் துவிளை யாடும்—திரு
வாக்கால வள்மழை பெய்யென்றாற் பெய்யுமே
வர்ணிக்க யாராலே கூடும்—கிட்டி
வந்தது மக்குத்துரந்தர யோகம்
வருத்தத்தை நீர்தள்ளிப் போடும்—இனிக்
கருத்தி லவளையே நாடும்—நல்ல
பொருத்தம்ஆ னந்தக்கூத் தாடும் (பஞ்ச) 2

வெள்ளியுந் தங்கமும் அள்ளிக்கொ டுத்தாலும்
வேறொரு வர்முகம் பாராள்—நல்ல
மேன்மைத்து ரைகளா னாலும் வீட்டு
வேலைக்குப் பின்னிட்டுச் சோராள்—நிதந்
தள்ளிநீர் வைத்தடித் தாலுங்கை நோகுமே
சாமியென் றுதொழுஞ் சீராள்—பெற்ற
தாய்தகப் பனழைத் தாலும்உம் மைவிட்டுச்
சற்றும்பி ரிந்திட நேராள்—பழு
தற்றந வமணி நேராள் நாளுங்
குற்றமுள் ளோர்சபை சேராள்—செய்த
நற்றவத் தாலன்றி வாராள் (பஞ்ச) 3

காரியம் பார்ப்பவள் கணக்குமெ ழுதுவள்
காய்கறி யாக்கவுங் கெட்டி—அவள்
கைபட்டால் வேம்புங்க ரும்பல்ல வோருசி
கண்டுநீர் மண்டுவீர் சட்டி—அவள்
ஊரிலே மாமியார் நாத்திமார் எல்லாம்
உவந்திடு கற்கண்டுக் கட்டி—தினம்
ஓயாவி ருந்துவந் தாலுஞ்ச லியாமல்

உன்னைச்சொல் வாள்அன்னங் கொட்டி—அந்த
வண்ணக்கு யிலைநீர் கிட்டி—இரு
கண்ணிற்கண் டாற்படுந் திட்டி—துரைப்
பெண்ணைக் கொள்ள வென்ன அட்டி (பஞ்ச) 4

சிந்தாமல் மங்காமல் வீட்டுப்பொ ருள்களைச்
சீவன்போற் காக்குநிர் வாகி—தினம்
செலவுகு றைத்துவ ரும்படி யில்மிச்சம்
சேர்த்துவைக் குமதி யூகி—தினம்
கந்தமு றவேதன் வீட்டையுந் தன்னையுங்
கனசுத்தஞ் செய்நாக ரிகி—காணும்
கனவில் நனவிலெப் போதுந்தெய் வத்தை
கணவனை த்யானிக்கும் ஸ்நேகி—நகை
மனம்விரும் பாதவி வேகி—சாந்த
குணமுடை யகன த்யாகி—நல்ல
உணர்வுடை யவுப யோகி (பஞ்ச) 5

ஆபத்து வேளையி லறிவுசொல் மந்த்ரி
அரும்பிணிக் கவளோர்சஞ் சீவி—துன்பம்
அணுகும்போ தாறுதல் தரித்ரகா லத்தில்
அருநிதி யாம்அந்தத் தேவி—உம்மைப்
பாபத்தில் வீழாமற் போதிக்குஞ் சத்குரு
பாடவும் வல்லமே தாவி—தெய்வ
பத்திநற் புத்தியி ரக்கம்பொ றுமை
பரவிய சற்குண வாவி—பர
புருஷருக் கவள்பச்சை நாவி—அவள்
பெருமைக்கோர் குறைசொல்வோன் பாவி (பஞ்ச) 6

சங்கீதம் பாடியும் இங்கிதம் பேசியுந்
தாள்பிடித் துந்துயர் தீர்ப்பாள்—நாளும்
தன்வேலைக் காரர்ப லரிருந் தாலுஞ்

சகலமுந் தன்கண்ணுற் பார்ப்பாள்—வீட்டில்
அங்குமிருப் பாள்பின் னிங்குமிருப் பாள்—உம்
அண்டையிலுங் கட்டிக் காப்பாள்—உமக்
கற்பவ ருத்தமில் லா மற்க வலைகள்
அத்தனை யுந்தலை யேற்பாள்—திருச்
சித்தமென் னவென்று கேட்பாள்—மொழி
புத்தமு தைச்செவி வார்ப்பாள்—உம்மை
உத்தம மார்க்கத்தில் சேர்ப்பாள் (பஞ்ச) 7
நீர்மகிழ்ந் தால்,அவள் தான்மகிழ் வாள்—துன்பம்
நீர்கொள்ளில், அவட்கும்வி சாரம்—அன்னம்
நீருண்ணில், அவள்பசி தீரும், இருவர்க்கும்
நிச்சய மேகச ரீரம்—இந்த
ஊரில்நீ ரில்லாத போதுறங் காள்அன்னம்
உண்ணுள்;பண் ணுளலங் காரம்—நீர்
ஊமைகு ருடரா னுலுஞ்செய் வாளுமக்
குரிமையாய் ராசோப சாரம்—ஆனல்
பரமாத ருடனீர் சஞ்சாரம் செய்யில்
வருமவ ளுடையகிட் டூரம்—அதற்
கொருநாளு மிலைபரி காரம் (பஞ்ச) 8
பாவம்நீர் செய்யச்சொன் னுலுஞ் செய்யாள்—வேறே
பண்ணுளு மக்கப சாரம்—பெறும்
பாலர்க்கு நல்வழி காட்டித்தி னமும்
படிப்பிப்பாள் வேதாந்த சாரம்—வந்து
தாவு மெளியவர்க் கில்லையென் னுமலே
தாய்போற்செய் வாளுப காரம்—செல்வந்
தாழினும் ஏழைக்குத் தானுண்ணு மன்னத்தைத்
தந்து,மெ லியாள் சரீரம்—தம
யந்தியு மேநமஸ் காரஞ்செய் யும்

சுந்தரி சீலம்விஸ் தாரம்—உமக்
கந்தமின் னேநல்ல தாரம் (பஞ்ச) 9

பாயும்ப டுக்கையு மாகநோய் கொண்டாலும்
பர்த்தாவே லைக்குப்பின் வாங்காள்—உந்தம்
பக்ஷமொன் றேகோடி லக்ஷமென் றேயெண்ணிப்
பலதுன்பம் வந்தாலும் ஏங்காள்—பெற்ற
தாயும், பிதாவும் நிகர்வேத நாயகன்
தாமரைப் பாதத்தை நீங்காள்—நல்ல
சத்யநி ரந்தரை; புத்தியின் மந்திரி:
சட்டக் குடித்தனப் பாங்காள்—வேலை
முட்ட முடியுமுன் றூங்காள்—என்றுங்
கெட்டவ ளென்றுபேர் வாங்காள்—உமக்
கிட்டமுள் ளாள்;பழி யோங்காள் (பஞ்ச) 10

---

## தங்களைப் படிப்பிக்கும்படி பெண்கள் வேண்டுதல்

**ராகம் - நாதநாமக்கிரியை]** **[தாளம் - ஆதி**

பல்லவி

வித்தையைப் படிப்பியுங்கள்—தயைசெய்து
வித்தையைப் படிப்பியுங்கள்.

அநுபல்லவி

உத்தம வான்களே சத்தியபி மான்களே
உங்கட்குக் கண்களான பெண்களா மெங்களுக்கு
**(வித்தை)**

சரணங்கள்

திருத்தமா வேலைகளெல் லாமுடிப்போம்—வேலை
தீர்ந்தபின் புத்தகங்க ளேபடிப்போம்

வருத்தம்நீர் படக்கண் டால்மனந் துடிப்போம்—கீத
வண்ணங்கள் பாடிக் கொண்டுகோல் பிடிப்போம்—பாட
மாட்டோமோ வீணை
மீட்டோமோ நயங்
காட்டோமோ சுகம்
ஊட்டோமோ நல்ல (வித்தை) 1

வரவுசெல வின்கணக் கெழுதிவைப்போம்—பல
வகைவகை யுடுப்புக ளுமக்குத் தைப்போம்
பரவும் பலதொழில் நீர்பண்ண வொப்போம்—நல்ல
பக்ஷணங் கறிகளுஞ் செய்யத் தப்போம்—நாங்கள்
படியோமோ இருள்
விடியோமோ மருள்
முடியோமோ அருள்
பிடியோமோ நல்ல (வித்தை) 2

வாணியும் நீரும் ஒரு கோத்திரமா—அவள்
வரப்பிரசாதம் உமக்குமாத் திரமா
வீணி லவட்கெங்கண் மேல்க்ஷாத் திரமா—நாங்கள்
மெய்ஞ்ஞான மார்க்கத்துக் காகப்பாத் திரமா—உம்மை
வெல்லோமோ கல்வி
கல்லோமோ கவி
சொல்லோமோ புத்தி
இல்லோமோ நல்ல (வித்தை) 3

கொஞ்சம்நீர் கோபம் செய்யில், அஞ் சிடுவோம்—எங்கள்
குற்றம் பொறுக்கச் சொல்லிக்கெஞ் சிடுவோம்
தஞ்சம தாக உமைநம் பிடுவோம்—உம்மேல்
சாகித்தியம் செய்து தினம்கும் பிடுவோம்—நாங்கள்
தாழ்ந்தோமே துயர்
ஆழ்ந்தோமே உம்மைச்

சூழ்ந்தோமே காலில்
வீழ்ந்தோமே நல்ல (வித்தை) 4

அடித்தாலு மிகழ்ந்தா லுங்கதி நீரே—உம்மை
அன்றி எங்களுக் கினித்துணை யாரே
படித்தாற் பிழைத்துப்போ வோம்பெரி யோரே—இந்தப்
பஞ்சைகள் முகம்பா ருந்துரை மாரே—உங்கள்
பதம்பூண்டோம் அபி
மதம்நீண்டோம் உங்கள்
இதந்தாண்டோம் அசங்
கதம்வேண்டோம் நல்ல (வித்தை) 5

படியாத ஆண்களு டனே நேசம்—சற்றும்
பண்ணநீர் சம்மதி யீர்லவ லேசம்
மடமுறு மெங்களு டன்சக வாசம்—செய்ய
மட்டுமு மக்கில்லை யோசங் கோசம்—இது
மதிமோசம் வரும்
அதிகாசம் மணம்
பதிபாசம் அற
இதிகாசம் உடன் (வித்தை) 6

வித்தையில் லாப்புரு டன்செய்கை யைப்பாரும்—அந்த
விதமல்ல வோபடி யாமட வாரும்
உத்தமி யையே விரும்புவீர் நீரும்—கல்வி
உணராவிட் டாற்குண மெப்படிச் சேரும்—இதை
ஓரீரோ முகம்
பாரீரோ துயர்
தீரீரோ தயை
கூரீரோ நல்ல (வித்தை) 7

படித்தால் மிருகம்போல் நாள்கழிப் போமோ—என்றும்
பரபுரு ஷர்முகத் தில்விழிப் போமோ
அடித்தாலு முகங்கோ ணிச்சுழிப் போமோ—கல்லா
தவர்கணவ ராஞலும்பழிப் போமோ—பல

அணிவேண்டாம் நல்ல
துணிவேண்டாம் நவ
மணிவேண்டாம் காமப்
பிணிவேண்டாம் நல்ல (வித்தை) 8

உத்யோகந் தந்தாலு மொருகை பார்ப்போம்—தினம்
உதவிசெய் துங்கள் தொழில்களைத் தீர்ப்போம்
பத்தி யாய்க்குடித் தனந்தலை யேற்போம்—கல்வி
பாலர்க்குப் போதித்து நல்வழி சேர்ப்போம்—எங்கள்

பதிநீரே சர்வ
நிதிநீரே தினம்
கதிநீரே கன
மதிநீரே நல்ல (வித்தை) 9

இரவில்நீர் தூங்கின பின்நாம் படுப்போம்—நீங்கள்
எழுமுன் எழுந்துவே லைகளைத் தொடுப்போம்
தரும வதிகளென் றுபெய ரெடுப்போம்—நாங்கள்
சந்ததம் வேதநா யகனை அடுப்போம்—மிகத்

தழையோமோ கல்வி
நுழையோமோ உமை
அழையோமோ சிவன்
பிழையோமோ நல்ல (வித்தை) 10

ராகம் - மோகனம்] [தாளம் - ஆதி

பல்லவி

கேளும்—புமான்களே—கிருபைவைத்
தாளும் சீமான்களே

அநுபல்லவி

நாளுங் கதியில்லா எங்கள்மேல் வர்மமோ
தாளுறுந் தூசிபோல் தள்ளுதல் தர்மமோ (கேளும்)

சரணங்கள்

காலைக்கு மாலைக்கு மூலைக்குள் எங்களை
ஆலைக் கரும்புபோல் தேய்த்தீர்—பாக
சாலைக்கும் மன்மத லீலைக்கும் மேவின
வேலைக்கும் எங்களை மாய்த்தீர்
மூலைக்கல்வி நாங்கள் வாசித்தா லாபத்தோ
மூடப்பெண் கொள்வீரு மக்குப்பெ ரும்பித்தோ
ஓலைக்கி ரந்தங்க ளுங்கள்பாட் டன்சொத்தோ
உமக்கென்ன காணுந் தலைமேற்றலை பத்தோ (கேளும்) 1

ஆதியிற் பெண்ணாலே மேதினி யோர்களுண்
டான வகைமறந் தீரோ—பெண்
சாதி புருடனிற் பாதியென் னமனு
நீதியை யுந்துறந் தீரோ
பாதியு டலைப்ப றக்கவி டலாமோ
பாவபுண் ணியந்தெரி யாமற்கெ டலாமோ
நீதியில் லாதெம்மை நிந்தித் திடலாமோ
நிந்தித்தும்பின் னெங்களை நீர்தொட லாமோ (கேளும்) 2

காரிய ரைஒரு காரிய மில்லா
கடைப்பிண மென்றெண்ணி னீரே—தேவர்

ஊரிற்பெண் கள்கொண்ட சீரினை யாகிலும்
உற்றுப் பாரு மைய மாரே
பாரி தனைநாவில் வைத்தான் பிதாமகன்
பாகஞ் சிரம்வைத்தான் சிவன்மா சுகன்
மார்பில் வைத்தான் ஹரி பெண்திருடன் குகன்
மங்கை தேடிச்சந்தி வந்தான் கரிமுகன் (கேளும்) 3

உங்கட் குதவியா யெங்களைத் தேவனுண்
டாக்கிய தையறி யீரோ—செல்வ
மங்கையுடன் கல்வி நங்கைமு தலானோர்
மாதரென் றுகுறி யீரோ
எங்களை யல்லாமல் நீங்கள் உதித்தீரோ
ஏறிய காயத் திருந்து குதித்தீரோ
அங்கப்பா லுண்ணமல் தேகம் உதித்தீரோ
அடிமையென் றெங்கள் தலையில் விதித்தீரோ (கேளும்) 4

போதக யூரோப்பு மாதர்களைக்கண்டு
பொங்கிப் பொருமைகொண் டோமே—என்றும்
பேதமில் லாஇந்தி யாதனில் நாங்கள்
பிறந்தென்ன லாபங்கண் டோமே
நாதக் கல்விக்கு நகை எந்த மூலையே
நாங்கள் விரும்போம் நவரத்ன மாலையே
வேதநா யகன்செய் பெண்மதி மாலையே
வேண்டினேம் தாரும் விடோம்உங்கள் காலையே
(கேளும்) 5